
சமூக அரசியல்
ஆரம்ப நூல் வரிசை

# கம்யூனிசம் என்றால் என்ன?

ஹா. சபிரோவ்



சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

ஹா. சபிரொவ்

# கம்யூனிசம் என்றால் என்ன?

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன், எம். ஏ.

நூல் வரிசையின் பதிப்பாசிரியர் குழு:
எஃப். எம். வோல்கவ் (தலைமைப் பதிப்பாசிரியர்),
ஈ. எஃப். குப்ஸ்கி (துணைப் பதிப்பாசிரியர்),
எஃப். எம். புர்லாட்ஸ்கி, வி. டி. ஸோதவ், வி. வி. கிரபிவின்,
யூ. என். பொபோவ், வி. வி. ஸோபலெவ், எஃப். என். யூர்லொவ்

ABC социально-политических знаний

**Сабиров Х.**

ЧТО ТАКОЕ КОММУНИЗМ?

*на тамильском языке*

ABC of Social and Political Knowledge

**Sabirov Kh.**

WHAT IS COMMUNISM?

*in Tamil*

© Progress Publishers, 1987

© தமிழ் மொழிபெயர்ப்பு, முன்னேற்றப் பதிப்பகம், 1989

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$C\frac{0301050000—496}{014(01)—89}$ 310—89

**ISBN 5—01—001467—X**

## பொருளடக்கம்


முன்னுரை . . . . . . . . . . . . . . . . 7

அத்தியாயம் ஒன்று
பூர்விக கம்யூனிசமும் அது அழிக்கப்பட்டதன் சமூக விளைவுகளும் . . . . . . . . . . 10

பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பும் அதன் கம்யூனிசக் கூறுகளும் . . . . . . . . 10

குலமரபு அமைப்பின் தகர்வும் அதன் சமூக விளைவுகளும் . . . . . . . . . . . 20

பூர்விக கம்யூனிசத்தின் வரலாற்றுப் பாத்திரம் 28

அத்தியாயம் இரண்டு
16, 17ஆம் நூற்றாண்டுகளில் கம்யூனிச சமூகங்களைப் பற்றிய கற்பனைகள் . . . . . 35

மகிழ்ச்சியும் நீதியும் கோலோச்சும் சமூகத்தைத் தேடிய முயற்சிகள் . . . . . . . 35

தாமஸ் மோரின் ''உட்டோப்பியா'' . . . . 43

தோமஸோ கம்பனேல்லாவின் ''சூரிய நகரம்'' 50

ஜெரார்டு வின்ஸ்டன்லி—இங்கிலாந்தின் முதலாளித்துவப் புரட்சியின் கற்பனாவாத கம்யூனிஸ்டு . . . . . . . . . . . . . 60

அத்தியாயம் மூன்று
18ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சுக் கற்பனா வாத கம்யூனிசம் . . . . . . . . . . . . . 65

ஜான் மெல்யே . . . . . . . . . . . . . . 65
காப்ரியேல் பொன்னோ டெ மாப்லீ . . . . . 69
மொரெல்லி . . . . . . . . . . . . . . . 74
பாபெஃபும் பாபுவிசமும் . . . . . . . . . 79

அத்தியாயம் நான்கு
விஞ்ஞான கம்யூனிசத்தின் நேரடியான முன்னோடிகளின் சோஷலிசக் கற்பனைத் தத்துவங்கள் . . . . . . . . . . . . . . . . . 91

அன்ரீ குலோட் டெ சான்-சிமோன் . . . . 92
ஷார்ல் ஃபூரியே . . . . . . . . . . . . . 101
ராபர்ட் ஓவன் . . . . . . . . . . . . . . 112

அத்தியாயம் ஐந்து
விஞ்ஞான கம்யூனிசத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சியில் முக்கியமான கட்டங்களும் 126

கற்பனாவாத கம்யூனிசத்தில் ஏற்பட்ட நெருக்கடியும் விஞ்ஞான கம்யூனிசத்தைப் படைப்பதற்குரிய முன்தேவைகளின் உருவாக்கமும் . . . 126
மார்க்சும் எங்கெல்சும் கற்பனாவாதமாக இருந்த கம்யூனிசத்தை விஞ்ஞானமாக மாற்றுகிறார்கள் . . . . . . . . . . . . . . 131
பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தலைவர்களும் தத்துவாசிரியர்களுமான மார்க்சும் எங்கெல்சும் . 150

லெனின்—மார்க்ஸ், எங்கெல்சினுடைய தலை சிறந்த சீடர் . . . . . . . . . . . 165
லெனினியமும் இன்றைய சகாப்தமும் . . . . 183

அத்தியாயம் ஆறு
சோஷலிசப் புரட்சியும் சோஷலிச நிர்மாண மும் . . . . . . . . . . . . . . 197

புதிய ரகத்தைச் சேர்ந்த சமூகப் புரட்சி என்ற முறையில் சோஷலிசப் புரட்சி . . . . . . . 197
முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டம்—சோஷலிசப் புரட்சியின் தொடர்ச்சியும் முடிவுநிலையும் . . . . . . 208
முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழித் தலும் சோஷலிச உற்பத்தி முறையைப் படைத் தலும் . . . . . . . . . . . . . . . 216
வர்க்க மற்றும் தேசிய இன உறவுகளை மாற்றியமைத்தல் . . . . . . . . . . 221
நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும், அறிவு உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையி லான வேறுபாடுகளை ஒழித்தல் . . . . . 229
கலாசாரப் புரட்சி . . . . . . . . . . 234
முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டத்தின் விளைவுகள் . . . . 235

அத்தியாயம் எழு
சோஷலிசம்—புதிய ரகத்தைச் சேர்ந்த சமூகம் . . . . . . . . . . . . . 241

உழைக்கும் மக்களின் சமூகம் . . . . . . 241
உழைக்கும் மக்களுக்கான சமூகம் . . . . . 249

உழைக்கும் மக்களால் நிர்வகிக்கப்படுகின்ற சமூகம் . . . . . . . . . . . . . . . . 255
சோஷலிசத்தின் சர்வதேச சாராம்சம் . . . . 265

அத்தியாயம் எட்டு
சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்துக்கு . . 270

முடிவுரை . . . . . . . . . . . . . . 278

சொற்றொடர் விளக்கம் . . . . . . . . . . . 284

## முன்னுரை

நம் காலத்தின் பல்வேறு சோஷலிசப் போதனைகளில் விஞ்ஞான ரீதியில் மெய்யான ஒரே தத்துவம் சோஷலிசம், கம்யூனிசத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவமாகும். இப்புத்தகத்தின் ஆசிரியர் இத்தத்துவத்தின் அடிப்படையில் ''கம்யூனிசம் என்றால் என்ன?'' என்னும் கேள்விக்கு பதிலளிக்கிறார்.

விஞ்ஞான கம்யூனிசம் சூனியத்திலிருந்து தோன்றிவிடவில்லை. கற்பனாவாத சோஷலிசமும் கம்யூனிசமும் (அதாவது விஞ்ஞான ரீதியாக இல்லாத மற்றும் பல வழிகளில் விசித்திரமான சோஷலிச மற்றும் கம்யூனிசக் கருத்துகள்) வளர்ச்சியடைந்த ஒரு காலகட்டம் அதற்கு முன் இருந்தது, இது ஒரு சில நூற்றாண்டுகளுக்கு நீடித்தது; அதைச் சேர்ந்த மாபெரும் சிந்தனையாளர்கள் பல்வேறு கம்யூனிச, சோஷலிசத் தத்துவங்களை உருவரையாகக் கூறினார்கள்.

ஆரம்பகால கற்பனாவாத கம்யூனிசத்தின் ஆசிரியர்களுடைய நூல்களில் ''கம்யூனிசம்'' என்ற சொல் இடம் பெறவில்லை. 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கற்பனாவாதிகள் தமது நூல்களில் அச்சொல்லை முதன்

முதலாகப் பயன்படுத்தினார்கள்; ''சோஷலிசம்'' என்னும் சொல் 1830க்களில் உபயோகிக்கப்பட்டது. இந்த இரண்டு சொற்களும் முதலில் விருப்பப்படி வேறுபடுத்திக் கொள்ளப்பட்டன; ஏனென்றால் வெவ்வேறு ஆசிரியர்கள் அவற்றுக்கு வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுத்தார்கள். மார்க்சும் எங்கெல்சும் மட்டுமே இக்கருத்துகளைக் கறாரான விஞ்ஞான முறையில் விளக்கினார்கள்; முதலாளித்துவத்துக்கு பதிலாக ஏற்படுகின்ற கம்யூனிச சமூக-பொருளாதார அமைப்பின் வளர்ச்சியில் இரண்டு கட்டங்கள் என்று அவற்றை வரையறுத்தார்கள்.

கம்யூனிசக் கருத்துகள் மூன்று கட்டங்களின் வழியாக வளர்ச்சியடைந்தன. முதலாவது, கற்பனாவாத சோஷலிசக் கட்டம்; இரண்டாவது, மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்னர் விஞ்ஞான கம்யூனிசம் வளர்ச்சியடைந்த கட்டம்; அக்டோபர் புரட்சி மூன்றாவது கட்டத்தை ஆரம்பித்து வைத்தது. இக்கட்டத்தில் சோஷலிசம், கம்யூனிசத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவம் முதலில் தனியொரு நாட்டிலும் பிறகு பல நாடுகளிலும் நடைமுறையாக்கப்பட்டு உலக சோஷலிச அமைப்பு உருவாக்கப்பட்டது.

மூன்றாவது கட்டத்தின் போது இந்த நாடுகள் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைத் தமது துருவ நட்சத்திரமாகக் கொண்டு முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்தை நோக்கிப் பயணம் செய்கின்றன. முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்தை நோக்கிய புரட்சிகர மாற்றம் நடைபெறும் பொழுதும் சோஷலிச சமூகத்தை நிர்மாணித்து அபிவிருத்தி செய்யும் அனுபவத்திலும் இத் தத்துவம் வளர்ச்சியடைகிறது.

சோஷலிசம் அல்லது பகுதியளவான கம்யூனிசம் மனிதகுலத்தின் மூன்றிலொரு பகுதிக்கு வரலாற்று எதார்த்த

மாக இருக்கிறது. எஞ்சிய மனித சமூகம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுதல் இன்று உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் அடிப்படையாக இருக்கிறது.

அத்தியாயம் ஒன்று

# பூர்விக கம்யூனிசமும் அது அழிக்கப்பட்டதன் சமூக விளைவுகளும்

## பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பும் அதன் கம்யூனிசக் கூறுகளும்

**மனிதனின் தோற்றமும் மனிதக் கூட்டத்தின் வாழ்க்கையும்.** மனித சமூகத்தின் இருத்தலும் வளர்ச்சியும் உற்பத்தி மற்றும் புனருற்பத்தியின் இரண்டு ரகங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன: உழைப்புக் கருவிகளைக் கொண்டு வாழ்க்கைச் சாதனங்களை (உணவு, உடை, வீடு) உற்பத்தி செய்தல், மனிதனை உற்பத்தி செய்தல். பிந்தியது வரலாற்று ரீதியில் வளர்ச்சியடைகின்ற குடும்ப வடிவங்களில் நடைபெறுகிறது. பூமியில் மனிதன் மற்றும் சமூகத்தின் தோற்றத்தின் வரலாற்று ரீதியான நிகழ்வுப் போக்கைப் புரிந்து கொள்வதில் இது மிகவும் முக்கியமான அம்சமாகும்.

மனிதக் குரங்கின் இனத்திலிருந்து மனிதன் வளர்ச்சியடைந்திருக்கிறான் என்பதை மாபெரும் பிரிட்டிஷ் இயற்கை விஞ்ஞானியான சார்ல்ஸ் டார்வின் (1809—1882) தன்னுடைய பரிணாமத் தத்துவத்தின் மூலமாக நிரூபித்தார்; ஆனால் சமூகங்களைப் படைத்து அவற்றில் வாழ்கின்ற தகுதி கொண்டவனாக மனிதன் வளர்ச்சியடைந்தது என் என்பதை அவருடைய தத்துவம் விளக்கவில்லை. எங்கெல்ஸ் **மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப்**

**படியில் உழைப்பின் பாத்திரம்** என்னும் நூலில் இதை விளக்குகிறார். உழைப்பே மனிதனைப் படைக்கிறது, பூர்விக மனிதர்களிடையில் உழைப்புச் செயல்முறையின் போது சமூகப் பிணைப்புகளும் உறவுகளும் தோன்றின என்பதை அவர் நிரூபித்தார்.

பூர்விக மனிதன் உழைப்பின் மூலம், முகிழ்த்துக் கொண்டிருந்த சமூகக் காரணிகள் மூலம் நீண்ட, பரிணாமக் கட்டத்தைக் கடந்து வந்தான். சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன்பு, பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பு அதன் வளர்ச்சியின் உச்சத்தை எட்டிய பொழுது அவன் அறிவுடைய மனிதன் **(Homo sapiens)** ஆனான்.

முதல் மனிதர்கள் பூர்விக மனிதக் கூட்டங்களில் கூடி வாழ்ந்தார்கள். உணவைச் சேகரித்தலும் வேட்டையாடுதலும் (சுவீகரிக்கின்ற பொருளாதாரம்) அவர்களுடைய முக்கியமான தொழிலாக இருந்தன. பூர்விகமான முறையில் கூராக்கப்பட்ட அல்லது சாதாரணக் கம்புகள், கற்கள் மற்றும் பிராணிகளின் எலும்புகள் அவர்களுடைய கருவிகளாக இருந்தன.

இக்கட்டத்தில் கூட்டு வாழ்க்கை பூர்விக சமூக வாழ்க்கையின் அடிப்படையான ஸ்தாபனக் கோட்பாடாக இருந்தது. பூர்விக மனிதர்களின் கூட்டுச் சமூகத்தில்தான் கருவிகளைத் தயாரிக்க முடியும், பயன்படுத்த முடியும், அபிவிருத்தி செய்ய முடியும். கூட்டு உழைப்பு பூர்விகமான கூட்டுறவின் வடிவத்தை (பெரிய மிருகங்களைப் பொறி வைத்துப் பிடிப்பதைப் போல) அடைந்தது. உற்பத்தி நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்த பொழுது பால் மற்றும் வயதின் அடிப்படையில் இயற்கையான உழைப்புப் பிரிவினை ஏற்பட்டது. மனிதர்கள் ஆரம்பத்தில் வேட்டையாடினார்கள்; பிற்காலத்தில் மீன் பிடித்தார்கள். பெண்கள் வீட்டைக் கவனித்துக் கொண்டார்கள், குழந்தைகளை

வளர்த்தார்கள், கிழங்குகள், பழங்கள், கொட்டைகளைச் சேகரித்தார்கள். கிழவர்கள் கருவிகளைத் தயாரித்தார்கள். பால் மற்றும் வயதை அடிப்படையாகக் கொண்ட இயற்கையான உழைப்புப் பிரிவினை கூட்டுறவை ஊக்குவித்து கூட்டு உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தியது.

பொதுக் குடியிருப்பு பூர்விக மனிதர்களுடைய வாழ்க்கையின் பொருளாதார மற்றும் சமூக அடிப்படையாக இருந்தது. உணவுப் பொருட்களைச் சேகரிக்கின்ற மற்றும் வேட்டையாடுகின்ற பிரதேசம், குடியிருப்பு, படகுகள், மீன் பிடிக்கின்ற வலைகள், இதரவை பொதுச் சொத்தாக இருந்தன. உழைப்புக் கருவிகள் குலத்துக்கு முந்திய கூட்டுச் சமூகத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கிடையில் பிரிக்கப்பட்டன; இக்கருவிகள் கூட்டு உழைப்பில் பயன்படுத்தப்பட்டன. சில முதலாளித்துவப் பொருளியலாளர்கள் கூறுவதைப் போல அவை தனியுடைமையின் ஒரு வடிவம் அல்ல. உணவு சேகரித்தலில், கூட்டு அல்லது தனிப்பட்ட வேட்டையில் கிடைத்த உணவுப் பொருட்கள் எல்லோருக்கும் சம அளவில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பூர்விக மனிதக் கூட்டத்தில் சமூகப் பிணைப்புகளும் உறவுகளும் மெதுவாக, ஒவ்வொரு படியாக வளர்ச்சியடைந்தன. மனிதர்களைப் புனருற்பத்தி செய்தல் சமூக வரையளவுகளினால் இன்னும் ஒழுங்குப்படுத்தப்படவில்லை; அவர்களுடைய பாலியல் உறவுகள் முறையான இயல்பைக் கொண்டிருக்கவில்லை.

**பூர்விகக் கூட்டுச் சமூகமும் தாய்வழிக் குலமும்.** பூர்விக மனித சமூகம் மிகவும் மெதுவாக வளர்ச்சி அடைந்து கொண்டிருந்தது. சுமார் 60,000 ஆண்டுகளுக்கு முன்னர், பிந்திய கற்காலத்தின் ஆரம்பத்தில், ஒப்புநோக்கில் சுதந்திரமான குழுக்களைக் கொண்ட பூர்விக மனிதக் கூட்டத்

துக்கு பதிலாகத் தாய்வழிக் குல அமைப்பு ஏற்பட்டது. ஆக, கூட்டு வாழ்க்கையின் உயிரியல் ரீதியான ஒழுங்கியக்கிகள் மறைந்து குல அமைப்பின் சமூகப் பொறியமைவுகள் ஏற்பட்டன. மனித சமூகம் முழுமையாக உருப்பெற்றது.

எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்னும் நூலில் தாய்வழிக் குலத்தை நுணுக்கமாக வர்ணித்தார்.

பெண்கள் குலத்தின் தலைமையைப் பெற்று தாய்வழிச் சமூகம் தோன்றியது என்? உணவு சேகரித்தல் அன்றாட வேலையாக, ஆண்களின் வேட்டையைக் காட்டிலும் நம்பகமான உணவு மூலத் தோற்றுவாயாக இருந்தபடியால் பெண்கள் பொருளாதார வாழ்க்கையில் தலைமையான இடத்தைப் பெற்றது அதற்குக் காரணமாகும்.

சிறு குழுக்களாக வாழ்ந்த பூர்விக மனிதப் பிறவிகள் விலங்குலகத்திலிருந்து பிரிந்து வந்த பொழுதும் அவர்களுடைய வாழ்க்கையில் சமூகக் காரணிகளின் பாத்திரம் அதிகரித்ததனாலும் அவர்கள் வரைமுறையற்ற பாலுறவுகளின் தீய விளைவுகளை உணரத் தொடங்கினார்கள். இது ஒரு நீண்ட வரலாற்றுப் போக்கின் ஆரம்பத்தைக் குறித்தது. அக்கட்டத்தில் மனிதர்களின் பாலியல் வாழ்க்கை கட்டுப்படுத்தப்பட்டு ஒழுங்குப்படுத்தப்பட்டது; இந்த நிகழ்ச்சிப் போக்கு ஒருதார குடும்பத்தின் உருவாக்கத்தில் முடிவடைந்தது.

குலத்துக்கு முந்திய அமைப்பிலிருந்து குலமரபு அமைப்புக்கு மாறிய கட்டத்தில் குழு மண வடிவத்தில் குடும்பம் தோன்றுகிறது. தாயும் மகனும், சகோதரர்களும் சகோதரிகளும் மற்றும் இதர நெருக்கமான உறவினர்களும் அத்தகைய குடும்பத்திற்குள்ளாக இனிமேல் பாலுறவு கொள்ள முடியாது. இத்தகைய குடும்பங்களுக்கு வெளியிலும் ஆண்கள், பெண்களின் மண குழுக்கள் இருந்தன. இப்படிப்பட்ட

நிலைமையில் ஒரு குழந்தையின் தாயாரை மட்டுமே குறிப்பிட்டுச் சொல்ல முடியும், தகப்பனார் யார் என்று சொல்ல முடியாது. ஆகவே சொத்துரிமைக்கு ஒரே சாத்தியமான, மிகவும் உசிதமான வடிவமாகப் பெண்வழிச் சொத்துரிமை இருந்தது.

அடிப்படையான சமூக அலகாகக் குடும்பம் இருக்கவில்லை, ஒற்றைத் தாயார் வழி வந்த குலம் அப்படிப்பட்ட அலகாக இருந்தது. குழு மணத்தின் வடிவத்தில் குடும்பம் சமூக அமைப்புக்கு அடிப்படையாக முடியாது, ஏனென்றால் கணவர்கள் மற்றொரு குலத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் அந்தக் குறிப்பிட்ட தாய்வழிக் குலத்தின் உறுப்பினர்கள் அல்ல. ஒவ்வொரு தலைமுறையின் பெண்வழிச் சேய்கள் குலத்தில் இருந்தனர்.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் உழைப்புச் செயல் விரிவடைந்ததும் பூர்விக சமூகத்தை, சுவீகரிக்கின்ற ரகத்தைச் சேர்ந்த பொருளாதார அமைப்பிலிருந்து புனருற்பத்தி ரகத்துக்கு மாற்றின. இந்த மாற்றம் பெண்ணின் பாத்திரத்தைக் குறைத்தது, தாய்வழிச் சமூகத்திலிருந்து (தாய்வழிக் குலம்) தந்தைவழிச் சமூகத்தை நோக்கிய (தந்தைவழிக் குலம்) மாற்றத்தைக் குறித்தது.

**பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பின் சிகரம் என்ற முறையில் தந்தைவழிக் குலம்.** உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் ஏற்பட்டுக் கொண்டிருந்த அடிப்படையான, குண ரீதியான மாற்றங்கள் தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தைவழிச் சமூகத்துக்கு மாற்றத்தைப் பிரதானமாக நிர்ணயித்தன. கால்நடை வளர்ப்பு இனக்குழுக்கள் தனியாகப் பிரிக்கப்பட்ட பொழுது சமூகத்தில் முதல் தலைமையான உழைப்புப் பிரிவினை ஏற்பட்டது. அதன் விளைவாக நிலத்தைப் பயிரிடுவதிலிருந்து (இது முதலில் பூர்விகமான

முறையில் நிலத்தைக் கொத்தி விதைகளைப் போடுவதாக இருந்தது) கால்நடை வளர்ப்பு (காட்டு கால்நடைகளைப் பிடித்துப் பழக்கி வீடுகளில் வளர்த்தல்) பிரிக்கப்பட்டது. நிலம், விதைகள், வீட்டு மிருகங்கள் ஆகியவை உற்பத்திச் சாதனங்களாயின.

இக்காலகட்டத்தில் மனிதன் அதிகமான உலோகங்களை (செம்பு, வெண்கலம் மற்றும் இரும்பு) உபயோகிப்பதற்கும் அவற்றைக் கொண்டு கருவிகள், ஆயுதங்கள் மற்றும் ஆபரணங்களைச் செய்வதற்கும் கற்றுக் கொண்டான். கலப்பையும் வண்டியும் ஏற்கெனவே வெண்கல யுகத்தில் தயாரிக்கப்பட்டிருந்தன.

நன்கு வளர்ச்சியடைந்து கொண்டிருந்த உற்பத்திச் சக்திகள் உற்பத்தி உறவுகளை—உடைமை உறவுகள், உழைப்பு, பரிவர்த்தனை மற்றும் வினியோகத்தின் ஒழுங்கமைப்பை—அபிவிருத்தி செய்தன. பெரும்பாலும் உறவு நிலையிலிருந்த கூட்டுச் சமூகங்களுக்கு இடையில் எப்பொழுதாவது நடைபெற்ற பரிவர்த்தனைக்கு பதிலாக குறிப்பிட்ட பொருட்களை விசேஷமாக உற்பத்தி செய்கின்ற கூட்டுச் சமூகங்களுக்கு இடையில் முறைப்படியான பரிவர்த்தனை ஏற்பட்டது.

உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட வளர்ச்சி முற்றிலும் புதிய நிகழ்வைத் தோற்றுவித்தது. கூட்டுச் சமூகங்கள் தமது அன்றாட நுகர்வுக்கு அவசியமானதைக் காட்டிலும் அதிகமான பொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கின. கூடுதல் அல்லது உபரிப் பொருள் இப்படித் தோன்றியது. உபரிப் பொருளை சேமிக்க முடியும் அல்லது மறுவினியோகம் செய்ய முடியும்.

இக்காலகட்டத்தில் குழு மண முறை மறைந்து ஒருதார மண முறை வந்தது. முதலில் நெருக்கமான உறவினர்களுக்கு இடையிலும் பின்னர் நெருக்கமில்லாத உறவினர்

களுக்கு இடையிலும் திருமணங்கள் தடை செய்யப்பட்டன; ஆகவே குழு மண முறை மறைந்து, ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரே திருமண முறையாக ஒருதார மண முறை வந்தது. இத்திருமண வடிவம் ஒரு புதிய அம்சத்தைப் பிரதிநிதித்துவம் செய்தது: அங்கீகரிக்கப்பட்ட தாயாருக்குப் பக்கத்தில் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்ட தகப்பனாரும் இருந்தார். அவர் கால்நடைகளுக்கு உடைமையாளராகவும் இருந்தார். அவை உழைப்புக் கருவியாகவும் உணவுப் பொருளின் தோற்றுவாயாகவும் இருந்தன. எனினும் தாயுரிமையின்படி ஒரு குழந்தை தகப்பனாருடைய சொத்துக்கு வாரிசாக முடியாது, ஏனென்றால் தகப்பனார் குழந்தையின் குலத்தைச் சேர்ந்தவரல்ல. ஆண்கள் பொருளாதார ரீதியில் செல்வாக்குப் பெற்ற பொழுது நெடுங்காலமாக்க கடைப்பிடிக்கப்பட்ட மரபுரிமையைத் தமது குழந்தைகளுக்குச் சாதகமாக மாற்றினார்கள். இது தாய்வழிக் குலத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்துக்கு மாபெரும் அடியாக இருந்தது.

தாய்வழிக் குலத்துக்கு பதிலாகத் தந்தைவழிக் குலம் ஏற்பட்டது மனித சமூகத்தின் வாழ்க்கையில் ஏற்பட்ட மிகத் தீவிரமான புரட்சிகளில் ஒன்று என்று எங்கெல்ஸ் எழுதினார். மரபுவழியும் சொத்துரிமையும் பெண்வழியில் நடைபெற்ற சமூக அமைப்புக்கு பதிலாக ஆண்வழியில் மரபு வம்சமும் தந்தைவழியில் சொத்துரிமையும் கணக்கிடப்படுகின்ற சமூக அமைப்பு ஏற்பட்டது இந்தப் புரட்சியின் சாராம்சம் ஆகும். "தாயுரிமை தூக்கியெறியப்பட்டது **பெண்ணினம் உலக வரலாற்று ரீதியில் பெற்ற தோல்வி** ஆகும். ஆண் வீட்டிலும் அதிகாரம் செலுத்தினான்; பெண் கீழே இறக்கப்பட்டாள், அடிமைப்படுத்தப்பட்டு மனிதனுடைய

காம இச்சைப் பொருளாக, குழந்தைகளைப் பெறுகின்ற வெறும் கருவியாக மாற்றப்பட்டாள்.'' *

ஆக, இந்தப் புரட்சி மிகவும் தீவிரமான சமூக விளைவு களைக் கொண்டிருந்தது. அது ஒருதார மணக் குடும்பத் துக்கு வழி வகுத்தது, தனியுடைமையின் உருவாக்கத்தை விரைவுபடுத்தியது, வர்க்கங்கள் மற்றும் அரசின் தோற் றத்தை ஊக்குவித்தது. தந்தைவழிக் குலத்துக்கு மாறு தல் பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பை வலுப்படுத்த வில்லை, அதன் தகர்வுக்கே வழி வகுத்தது. மனிதகுலம் அநாகரிக நிலையிலிருந்து நாகரிகத்தை நோக்கி முன் னேறத் தொடங்கியது.

**பூர்விகப் பொதுவுடைமைக் கூட்டு சமூகம்.** பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பின் கம்யூனிச இயல்பு துல் லியமாக எப்படி வெளிப்பட்டது? பூர்விக சமூகத்தில் தனியுடைமை மற்றும் அதன் விளைவான மனிதனை மனிதன் சுரண்டல் இல்லை. பூர்விக மக்கள் தொடக்க காலத்தில், குறிப்பாக அவர்களுடைய சமூக வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் உபயோகித்த கருவிகள் மிகவும் குறை வான உற்பத்தித் திறனையே கொண்டிருந்தன. மக்களின் கூட்டு வேலைகளில் மட்டுமே அவற்றைத் திறமையுடன் பயன்படுத்த முடியும் (உதாரணமாக, குழுக்களாகச் சேர்ந்து வேட்டையாடுதல், நிலத்தைக் கூட்டாக உழுதல், வீடுகளில் வளர்க்கப்படுகின்ற பிராணிகளைக் காட்டு மிருகங்களிட மிருந்து பாதுகாத்தல், இதரவை). கருவிகளின் தன்மையும் அவற்றின் கூட்டு உபயோகமும் தனியுடைமையை இய லாமற் செய்தன, பொது, கூட்டுச் சமூக உடைமையை பூர்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 11, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1988, பக்கம் 94.

விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பின் பொருளாதார அடிப்ப டையாகச் செய்தன.

பூர்விகக் கூட்டுச் சமூகங்களின் உற்பத்திச் சக்திகள் (பூர்விகமான கருவிகளை உபயோகப்படுத்துவது) சமூக இயல் பைக் கொண்டிருந்தன. அவை கூட்டு நடவடிக்கையின் மூலம் வளர்ச்சி அடைந்தன, உழைப்பின் சமூக அமைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தன. உற்பத்தி ரீதியான மற் றும் இதர சமூக உறவுகள் தனியார் இயல்பைக் கொண் டிருக்கவில்லை, கூட்டு இயல்பைக் கொண்டிருந்தன. பூர் விக மனிதன் தனியாக இருக்கும் பொழுது இயற்கைச் சக்தி கள் மற்றும் காட்டு மிருகங்களுக்கு முன்னால் பாதுகாப்பற் றவனாக இருந்தான். பூர்விக மக்களின் பலம் அவர்களு டைய எண்ணிக்கையில் இருந்தது. குழுக்களாக இருக்கும் பொழுது மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு உயிர்பிழைக்க முடிந்தது, அதன் மூலம் குல அமைப்பு மேலும் வளர்ச்சி அடைந்தது.

குல அமைப்பில் எல்லாப் பொருளாயத மதிப்புகளும் சம மாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டன. கூட்டுச் சமூகத்தின் ஒவ் வொரு உறுப்பினரும் தொடர்ந்து வாழத் தேவையான பொருட்கள் கூட்டாக உற்பத்தி செய்யப்பட்டன. பூர்விக மான, குறைந்த உற்பத்தித் திறனைக் கொண்ட கருவிகள், உபரி உற்பத்திப் பொருட்கள் இல்லாமை, அற்பமான உழைப்புப் பிரிவினை ஆகிய காரணங்களினால் அவை சமமாக மட்டுமே பகிர்ந்து கொள்ளப்பட முடியும்.

எங்கெல்ஸ் தன்னுடைய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்னும் நூலில் குலமரபு அமைப் பில் மனிதர்களின் வாழ்க்கைக்குரிய கம்யூனிச அம்சங் களை வர்ணித்தார்; இவ்வமைப்பு வெகுளித்தனமாக இருந் தாலும் அது அற்புதமானது என்று எழுதினார். இரா ணுவம், போலீஸ், நீதிபதிகள், சிறைகள், வீங்கிப் போன,

சிக்கலான அரசாங்கப் பொறியமைவு ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற அரசு இந்த அமைப்புக்கு அவசியமல்ல; ஏனென்றால் பூர்விகப் பொதுவுடைமைக் கூட்டுச் சமூகங்களின் உறுப்பினர்கள் சுரண்டல், ஒடுக்குமுறை, செல்வர்கள் மற்றும் ஏழைகள், சலுகை உடையோர் மற்றும் எவ்விதச் சலுகையும் இல்லாதவர்கள், மேலதிகாரம் ஆகிய கருதுகோள்களை அறியாதவர்கள். அங்கே அடிமைகள் இல்லை; எல்லோரும் சமமானவர்களாக, சுதந்திரமானவர்களாக இருந்தார்கள்.

பொதுவுடைமைக் கூட்டுச் சமூகம் நோயாளிகளையும் முதிய உறுப்பினர்களையும் பராமரித்தது. நிலம் இனக்குழுவின் பொது உடைமையாக இருந்தபடியால் சில குடும்பத்தினர் ஒன்றுசேர்ந்து உழைத்தனர். சிறு நிலங்கள் குறுகிய காலத்துக்கு மட்டுமே தனிப்பட்ட உடைமையாக இருந்தன.

குலத்தின் பேரவைக் கூட்டங்கள், மூத்தோர் கவுன்சில், சமமான உரிமைகளும் கடமைகளும், மொத்தமாக குலத்தின் மற்றும் தனித்தனியாக உறுப்பினர்களுடைய நலன்களைப் பாதுகாத்தல் ஆகியவை பூர்விக ஜனநாயகமாகும். எல்லோரும் கூட்டு சமூகத்தின் விவகாரங்களில் நேரடியாகப் பங்கெடுத்து முடிவு செய்வதற்கு அது உதவியது. கூட்டுச் சமூகத்தின் உறுப்பினர்களின் ஒழுக்கத்திலும் நடத்தையிலும் ஆணவம், பேராசை, பொறாமை, சுயநலம், செல்வத்தைத் திரட்டுகின்ற வெறி கிடையாது. குலங்களுக்கு (இனக்குழுக்களுக்கு) உள்ளேயும் குலங்களுக்கு இடையிலும் எழுகின்ற தகராறுகள் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரும் பங்கெடுக்கின்ற கூட்டங்களில் தீர்க்கப்பட்டன. இரத்தப் பழி வாங்கும் சண்டைகள் அபூர்வமாக நடந்தன.

பூர்விக சமூகம் இலட்சிய சமூகம் அல்ல; அது மனித குலத்தின் குழந்தைப் பிராயத்துப் புராதன, நயமில்லாத

கம்யூனிச வடிவம். அது சமூக வளர்ச்சியில் அழியுமாறு விதிக்கப்பட்டது. வரலாற்று ரீதியில் எதிர்காலம் இல்லாத குலமரபு அமைப்பு காலப் போக்கில் சமூக முன்னேற்றத்துக்குத் தடையாக இருந்தது.

மனித சமூகத்தின் வரலாற்றில் முதல் கட்டம், ஒரு சமூக-பொருளாதார அமைப்பிலிருந்து மற்றொன்றுக்கு, எதிர்காலத்தில் மெய்யான கம்யூனிசத்தை சாதிப்பதற்கு முன்னேற்றத்தைத் தொடங்கியது என்ற முறையில் பூர்விக கம்யூனிசம் நமது கவனத்தைக் கவர்கிறது.

## குலமரபு அமைப்பின் தகர்வும் அதன் சமூக விளைவுகளும்

**தனியுடைமையின் தோற்றம்.** பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பு தகர்ந்ததன் பிரதான விளைவாக உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமை தோன்றி நிலைபெற்றது. தனியுடைமை நிலவிய கடந்த ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் வெவ்வேறு நோக்குகளிலிருந்து அது விமர்சிக்கப்பட்டிருக்கிறது, கண்டனம் செய்யப்பட்டிருக்கிறது. மறுமலர்ச்சிக் காலத்து மனிதாபிமானிகள் அதை விமர்சித்தார்கள், 18ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சுக் கற்பனாவாத கம்யூனிஸ்டுகள் அதை நிராகரித்தார்கள், 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்த கற்பனாவாத சோஷலிஸ்டுகள் அதை விமர்சன ரீதியில் பகுப்பாய்வு செய்தார்கள்.

தனியுடைமை என்பது உண்மையில் என்ன என்ற கேள்விக்கு விடை காண்பதற்கு முற்போக்கான சிந்தனையாளர்கள் அடிமை உடைமைச் சமூகத்தின் காலத்திலிருந்து இடைவிடாமல் முயற்சி செய்தார்கள். அது வரலாற்று ரீதியில் தற்செயலாக ஏற்பட்டு விட்டது, அது மனிதனுடைய இயல்புடனும் அறிவுடனும் பொருந்தாத திரிபு

என்று சிலர் கருதினார்கள்; அது திருடுதல், யுத்தத்தில் அடிக்கப்பட்ட கொள்ளையின் விளைவு என்று வேறு சிலர் கூறினார்கள்; நிலத்தில் வேலி அமைத்து, இது என்னு டைய நிலம், எனக்கு மட்டுமே இது உரிமை என்று கூறிய வர்களுடைய சூழ்ச்சியின் விளைவு என்று இன்னும் சிலர் கூறினார்கள். சில தத்துவஞானிகள் தனியுடைமையை நிராகரித்தார்கள்; உடைமை கட்டுப்படுத்தப்பட வேண்டும், அது நியாயமான முறையில் பங்கீடு செய்யப்பட வேண்டும் என்று வேறு சிலர் கோரினார்கள். தனியுடைமை உள் ளார்ந்த, புனிதமான மனித உரிமை என்று பல்விதமான வாதங்களின் மூலம் நியாயப்படுத்துவதற்கும் அதைப் பாது காப்பதற்கும் முயல்பவர்களும் இருந்தார்கள். ஆனால் மார்க் சிய-லெனினியத்தால் மட்டுமே தனியுடைமை என்னும் மர்மத்தை விளக்க முடிந்தது. பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பு மற்றும் அதன் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி யின் தர்க்க ரீதியான, தவிர்க்க முடியாத விளைவாகத் தனி யுடைமை தோன்றியது. இயற்கைச் சக்திகளை எதிர்த்துச் சமாளிப்பதற்கு, உயிர்பிழைத்திருப்பதற்கு, உணவு சேகரிப்பதற்கு, பிற்பாடு பிழைப்புச் சாதனங்களை (உணவு, உடை, குடியிருப்பு) உற்பத்தி செய்வதற்கான அவசியம் கல், எலும்பு, மரம், உலோகத்தைக் கொண்டு கருவிகளைச் செய்வதில் இன்னும் முற்போக்கான முறைகளைக் கண்டு பிடிக்குமாறு பூர்விக மனிதனைத் தூண்டியது. கால்நடை களை வளர்த்த இனக்குழுக்கள் நிலத்தை உழுது பயிரிட்ட இனக்குழுக்களிலிருந்து பிரிந்தன. கால ஓட்டத்தில் பல் வேறு தொழில்கள் உருவாயின. பரிவர்த்தனை வளர்ச்சி யடைந்து பணம் உருவெடுத்த பொழுது அதிகமாகப் பணம் வைத்திருந்தவர்களின் பொருளாதார செல்வாக்கு அதி கரித்தது. கால்நடை வளர்ப்பினாலும் புதிய உழைப்புக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டதாலும் உழைப்பின் உற்

பத்தித் திறன் தீவிரமாக அதிகரித்ததன் விளைவாக உபரி உற்பத்திப் பொருள் ஏற்பட்டது; அது படிப்படியாக செல்வத்தைத் திரட்டுகின்ற தோற்றுவாயாக மாறியது.

இந்த வளர்ச்சிகள் குல உறுப்பினர்களுக்கு இடையில் உடைமை வேறுபாடுகளைத் தோற்றுவித்தன. புதிய நிலைமைகளின் விளைவாக தனிக் குடும்பம் கூட்டுச் சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்க விரும்பவில்லை; ஏனென்றால் இப்பொழுது குடும்பம் தனித்து வாழ முடியும். கால்நடை வளர்ப்பு, இரும்பு தயாரித்தல், உலோக வேலை, நெசவு, தானிய விவசாயம் ஆகியவை கூட்டுச் சமூகத்தை விட்டு வெளியேறுவதற்கும் குலத்துக்குச் சொந்தமான கால்நடை மற்றும் கருவிகளில் ஒரு பகுதியைக் கைப்பற்றுவதற்கும் பொருளாயதத் தூண்டுதலாக இருந்தன. ஆக, குலத்துக்குச் சொந்தமான கால்நடையின் ஒரு பகுதி ஒரு குறிப்பிட்ட குடும்பத்தின் அல்லது இன்னும் துல்லியமாகச் சொல்வதென்றால் குடும்பத் தலைவன் என்ற முறையில் கணவனின் உடைமையாக மாறியது. கால்நடை மந்தை மட்டுமன்றி குடும்பத்தின் உறுப்பினர்களும் கணவனின் தனி அதிகாரத்தின் கீழ் வந்தனர். தந்தைவழிக் குடும்பத்தில் அடிமைகளும் இருந்தார்கள் (யுத்தக் கைதிகள் கொல்லப்படவில்லை, அவர்கள் அடிமைகளாக்கப்பட்டார்கள், ஏனென்றால் அவர்கள் உபரிப் பொருளை உற்பத்தி செய்ய முடியும்). அக்குடும்பம் குடும்பத் தலைவன் என்ற முறையில் தகப்பனாருடைய தனி அதிகாரத்தைப் பிரதிபலித்தது.

தந்தைவழி உரிமை நிறுவப்பட்டு குழந்தைகள் பரம்பரை வழியாகச் சொத்தைப் பெற முடிந்தது குடும்பத்துக்குள் செல்வக் குவிப்புக்குச் சாதகமாக அமைந்தது, குலத்துக்கு எதிராக குடும்பத்தைப் பலப்படுத்தியது. மாறும் காலகட்டத்தில் கூட்டுச் சமூகம் மேய்ச்சல் நிலம்,

எல்லா தரிசு நிலம், கருவிகளில் சிலவற்றை இன்னும் உடைமையாக வைத்திருந்தது. அவை படிப்படியாகத் தனியுடைமையாக மாறின அல்லது குடும்ப சமூகங்களுக்கு இடையில் அவ்வப்பொழுது மறுவினியோகம் செய்யப்பட்டன.

ஆக, தனியுடைமையின் தோற்றம் பொருளாதாரத் துறையில், குலமரபு அமைப்பின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் அமைந்திருப்பது தெரிய வரும். அதன் தோற்றத்தின் விளைவாக மனிதனை மனிதன் சுரண்டுவது ஏற்பட்டு, அது தன் பங்கிற்கு முரணியல்பான சமூக-பொருளாதார அமைப்புகளைத் தோற்றுவித்தது.

அது முதல், வரலாற்றுப் போக்கில் ஒன்றுக்கு பதில் மற்றொன்றாகத் தோன்றிய தனியுடைமையின் மூன்று வடிவங்களின் அடிப்படையில் அமைந்த வர்க்கப் பகை முரணியல்பான சமூக-பொருளாதார அமைப்புகளின் (அடிமை உடைமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ அமைப்புகளின்) வரலாறு தொடங்கியது, ஆனால் முதலாளித்துவத்திற்குள்ளாகவே தனியுடைமையை ஒழிப்பதற்கான நிலைமைகள் தோன்றி வளர்ச்சியடைகின்றன.

**வர்க்கங்களின் தோற்றம்.** தனியுடைமை தோன்றியதைத் தொடர்ந்து பகை முரணியல்பான வர்க்கங்கள் தோன்றின. சுரண்டலைச் சித்தாந்த ரீதியில் ஆதரிப்பவர்கள் இந்தப் பிரச்சினையை விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி செய்வதில் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் இருப்பதை மறுப்பதற்கு அல்லது அதன் உண்மையான சாராம்சத்தைத் திரித்துக் கூறுவதற்கு எண்ணற்ற புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள்.

மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனின் இந்த சமூக

நிகழ்வுகளைப் பற்றிய விஞ்ஞான ரீதியான தத்துவத்தைப் படைத்தார்கள்.

''வர்க்கங்கள் என்பவை வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமூகப் பொருளுற்பத்தி அமைப்பில் அவை வகிக்கும் இடத்தாலும், உற்பத்திச் சாதனங்களுடன் அவற்றுக்குள்ள உறவாலும் (மிக பெரும்பாலும் இது சட்டத்தால் நிலைநிறுத்தப்பட்டு வரையறுக்கப்பட்டிருக்கிறது), உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் அவற்றுக்குள்ள பாத்திரத்தாலும், ஆகவே சமூகச் செல்வத்தில் அவற்றின் செயலாட்சிக்கு உட்படும் பங்கின் பரிமாணங்களாலும், இந்தப் பங்கை அவை சுவாதீனமாக்கிக் கொள்ளும் முறையினாலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் பெரும் மக்கள் பகுதிகளாகும். வர்க்கங்களானவை சமூகப் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட ஓர் அமைப்பில் தாம் வகிக்கும் வெவ்வேறு இடங்களின் காரணமாய் ஒன்று மற்றொன்றின் உழைப்பைக் கைப்பற்றிக் கொள்ள முடியும்படியான மக்கள் பகுதிகளாகும்'' என்று லெனின் எழுதினார். *

வர்க்கங்களின் தோற்றமும் அவற்றின் இடைச்செயலின் தன்மையும் வரலாற்று ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி முறைகளில் பொதிந்திருக்கின்றன என்பது பெறப்படும். பூர்விக சமூகத்தின் உற்பத்தி முறை வர்க்கங்கள் தோன்றுதலையும் சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள் என்னும் பிரிவினை சமூகத்தில் ஏற்படுவதையும் தவிர்த்தது. உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமை குலத்தின் உறுப்பினர்கள் எல்லோரும் அவற்றின் பால் சம அளவான உறவுகளைக் கொண்டிருப்பதை, அவர்கள் உழைப்பில் கட்டாய

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி **9**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், **1982**, பக்கங்கள் **312—313.**

மாகப் பங்கெடுப்பதை, கூட்டு உழைப்பில் உற்பத்தி செய்யப் பட்ட பொருட்களும் வாழ்க்கைச் சாதனங்களும் சமமாக வினியோகம் செய்யப்படுவதை உத்தரவாதம் செய்தது. பூர்விக கம்யூனிசத்தில் வர்க்கங்களும் வர்க்க வேறுபாடுகளும் இடையாது. அது வர்க்கமற்ற சமூகமாக இருந்தது.

பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்புக்குரிய உற்பத்தி முறை வளர்ச்சியடைந்த பொழுது தோன்றிய புதிய காரணிகள் குல அமைப்பின் தகர்வுக்கு, கூட்டுச் சமூக உடைமைக்கு பதிலாகத் தனியுடைமை தோன்றுவதற்கு, அடிமைகள், அடிமை உடைமையாளர்கள் என்னும் வர்க்கங்கள் தோன்றுவதற்கு வழி வகுத்தன. யுத்தக் கைதிகள் மட்டுமன்றி குலத்தின் முந்திய உறுப்பினர்களும் கூட அடிமைகளாக் கப்பட்டார்கள்; கூட்டுச் சமூகங்களுக்குள் செல்வர்களும் ஏழைகளும் தோன்றினார்கள். சமூக ரீதியில் ஓரினத் தன்மை கொண்ட குல அமைப்புக்கு பதிலாக அடிமைகள், அடிமை உடைமையாளர்கள், சுதந்திர விவசாயிகள், கைவினைஞர்கள், வர்த்தகர்கள் மற்றும் வட்டி வாங்குபவர்களைக் கொண்ட அடிமை உடைமைச் சமூகம் ஏற்பட்டது.

சமூகம் பகை முரணியல்பான வர்க்கங்களாக (சுரண்டப் படுபவர்கள் மற்றும் சுரண்டுபவர்கள்) பிரிந்ததும் தனியுடைமை தோன்றியதும் தர்க்க ரீதியான, தவிர்க்க முடியாத நிகழ்வுப் போக்குகள் ஆகும். அது முதல் வர்க்க சமூகங்களின் வரலாறு தொடங்கியது.

உற்பத்திச் சாதனங்களின் பால் சம உறவைக் கொண்டிருக்கின்ற உழைக்கும் மக்களை மட்டும் கொண்ட சமூகம் மறுபடியும் வர்க்கமற்றதாக மாறும். அந்த சமூகத்தில் உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடைமையாக இருக்கும். இது கம்யூனிசத்தின் சோஷலிசக் கட்டத்தின் முடிவு நிலையில் நடைபெறும்.

**அரசின் தோற்றம்.** தனியுடைமை ஒரு மக்கட் குழு மற்றொரு மக்கட் குழுவைச் சுரண்டுவதற்கும் பூர்விக சமூகம் அடிமைகள் வர்க்கம், அடிமை உடைமையாளர்கள் வர்க்கம் என்று பிரிவதற்கும் இட்டுச் சென்றது. இந்த சமூக-பொருளாதார மாற்றங்களின் தவிர்க்க முடியாத விளைவாகத் தான் அரசு உருப்பெற்றது.

சமூக உறவுகளின் இயல்பு தீவிரமாக மாற்றமடைந்தது. கூட்டுச் சமூக உடைமையையும் கூட்டுச் சமூகத்தைச் சேர்ந்த சுதந்திரமான, சம உரிமைகளைக் கொண்ட உறுப்பினர்களின் கூட்டு உழைப்பையும் அடிப்படையாகக் கொண்ட பூர்விகக் குலமரபு உறவுகள் தனியுடைமை உறவுகளினால் அழிக்கப்பட்டன; அடிமைகள் அடிமை உடைமையாளர்களால் சுரண்டப்பட்டார்கள். பூர்விகப் பொதுவுடைமை சமூகங்களின் குல அமைப்பு, வளர்ச்சியடைந்து கொண்டிருந்த சுரண்டல் உறவுகளுடன் பொருந்தவில்லை.

தனியுடைமையும் பரிவர்த்தனையும் தோன்றிய பொழுது இரத்த உறவுப் பிணைப்புகளின் முந்திய முக்கியத்துவம் மறைந்தது. பொருளாயத உற்பத்தியின் வளர்ச்சியினால் பல்வேறு குலங்களின் பிரதிநிதிகள் ஒரு குறிப்பிட்ட தொழிலின் (கால்நடை வளர்ப்பு, உழவுத் தொழில், கைத்திறன் தொழில்கள், வர்த்தகம், இதரவை) சுற்றுவட்டத்திற்குள் நெருங்கிய தொடர்பு கொள்ளத் தொடங்கினார்கள். மற்ற கூட்டு சமூகங்களிலிருந்து வந்த புதியவர்கள் குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள குலத்தின் ஆட்சி உறுப்புகளுக்கு அடிபணிய மறுத்தார்கள். ஆகவே முன்பு எந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் குறிப்பிட்ட வட்டாரத்தில் வசிக்கின்ற மக்களுடைய சமூக விவகாரங்களை நிர்வகிப்பதற்குப் புதிய உறுப்புகளை நிறுவ வேண்டிய அவசியம் தோன்றியது; கூட்டிணைக்கும் குலக் கோட்பாடு மறைந்து பிரதேசக் கோட்பாடு பிறந்தது.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வெவ்வேறு குலங்களைச் சேர்ந்த மக்கள் மட்டுமன்றி, வெவ்வேறு சமூக அந்தஸ்தை (செல்வர் மற்றும் ஏழை) கொண்ட மக்களும் வசிக்கத் தொடங்கினார்கள். குலத்தின் மேற்குடியினர் பல்வேறு முறைகளின் மூலம் (யுத்தத்தில் கொள்ளையடித்தல், கூட்டுச் சமூக நிலங்களையும் மேய்ச்சல் நிலங்களையும் கைப் பற்றுதல், ஏழ்மையடைந்த உறவினர்களைச் சுரண்டுதல், இதரவை) தம்முடைய செல்வத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். அவர்கள் கூட்டுச் சமூகத்தில் விசேஷமான நிலையை வகிக்கின்ற பொழுது அதன் நிர்வாக உறுப்புகளை (பேரவைக் கூட்டம், மூத்தோர் கவுன்சில், இதரவை) செல்வர்களுடைய நலன்களுக்கு உதவுகின்ற முறையில் தகவமைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள். சமூகம் வர்க்கங்களாகப் பிளவுபட்ட பொழுது அடிமை உடைமையாளர்கள் என்னும் பொருளாதார ரீதியில் சக்தி வாய்ந்த வர்க்கம் தன்னுடைய சொந்த நலன்களைப் பாதுகாப்பதற்கு அரசைத் தோற்றுவித்தது.

அரசு என்பது சமூகத்தின் அரசியல் அமைப்பு, பொருளாதார ரீதியில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் ஆட்சி உறுப்பு ஆகும். சுரண்டல் அரசு பின்வரும் இரண்டு அம்சங்களில் குல அமைப்பிலிருந்து வேறுபடுகிறது: மக்கள் பிரதேசக் கோட்பாட்டில் பிளவுபடுகிறார்கள்; அரசு ஆட்சியதிகாரம் மக்களிடமிருந்து பிரிந்து அவர்களின் மேல் நிற்கிறது. தண்டனை உறுப்புகள், இராணுவம், போலீஸ் ஆகியவை இப்படிப்பட்ட அரசின் முக்கிய ஆட்சிக் கருவிகளாகும். இவை சுரண்டல் வர்க்கங்களையும், அவற்றின் நலன்களையும் செல்வங்களையும் பாதுகாக்கின்றன. மனித வரலாற்றில் அடிமையுடைமை, நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ அரசுகள் சுரண்டல் அரசு வடிவங்கள் ஆகும்.

சோஷலிச அரசு முதலில் தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் கூட்டாளிகளாக இருந்த, நகரங்களையும் கிராமங் களையும் சேர்ந்த இதர உழைக்கும் மக்களின் அரசாக இருக்கிறது. சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற பொழுது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசு அனைத்து மக்களின் அரசாக வளர்ச்சி அடைகிறது. சோஷ லிசம் மேலும் அபிவிருத்தி அடைகின்ற பொழுது அத னிடத்தில் கம்யூனிச சுயநிர்வாக முறை ஏற்படுகிறது.

### பூர்விக கம்யூனிசத்தின் வரலாற்றுப் பாத்திரம்

**பூர்விக கம்யூனிசம் மனிதகுலத்தின் பொற்காலம் என்று கூறலாமா?** இக்கேள்விக்கு சில வரையறைகளுக்கு உட்பட்டு முடியாது என்று பதிலளிக்க வேண்டும். வரலாற்றின் அரு ணோதய காலத்தில் மனிதகுலத்தின் பொற்காலத்தைப் பற்றிய கட்டுக்கதை பல நூற்றாண்டுகளாக நிலவி வந்திருக் கிறது. மனிதகுலத்தின் நீண்ட வளர்ச்சிக் காலத்தில் இக் கட்டுக்கதை கவிதை, சமயக் கூற்று, இயற்கையான, ஆனந்த மான பூர்விக வாழ்க்கை முறையைப் பற்றிய தத்துவம், மனிதன் மற்றும் இயற்கையின் ஒருமையைப் பற்றிய கருது கோள் என்னும் பல்வேறு வடிவங்களைப் பெற்றிருக்கிறது. பூர்விகத் தந்தைவழிக் குல அமைப்பை இலட்சியப்படுத் துதல் என்னும் ஒரே மூலம் இவ்வடிவங்கள் எல்லா வற்றுக்கும் வளமூட்டியது.

இத்தொல்கதை தனியுடைமை நிறுவப்படுதல், சமூகம் வர்க்கங்களாகப் பிரிதல், செல்வர்கள், ஏழைகள் என்னும் உடைமை வேறுபாடுகள் வளர்ச்சியடைதல், பிறரைச் சுரண்டி வாழ்கின்ற சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற பெரும்பான்மையினர் இருத்தல் ஆகிய மாற்றங்களுடன் தொடர்புடையதாகும். சமூகத்தின் வாழ்க் கைக்குள் ஊடுருவி அதன் ஆதிக்கால மரபுவழிப்பட்ட ஒழுங்கு

முறையை அழித்த புறநிலையான தீமையின் விளைவு என்று கருதப்பட்ட துன்பம் அந்த ஒழுங்குமுறையை இலட்சியப்படுத்துவதற்குத் தூண்டியது.

இந்த இலட்சியப்படுத்தலை அடுத்து நிகழ்காலத்தை, அதன் வறுமை, துன்பம், முதுகொடியப் பாடுபட்டாலும் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்களைக் கூடப் பெற முடியாத நிலை ஆகியவற்றை நிராகரித்தல் தொடர்கிறது. பொற்காலத்தில் முற்றிலும் வேறுவிதமான நிலைமை இருந்ததாகக் கருதப்பட்டது. மனிதன் உழைக்க வேண்டியதில்லை, இயற்கை ஏராளமான கனிகளைக் கொடுத்தது. மக்கள் கவலையில்லாமல் சுகவாழ்க்கை நடத்தினார்கள். எல்லாப் பொருட்களும் ஏராளமாக இருந்தபடியால் மக்கள் பொறாமைப்படவில்லை, அவர்கள் போராட வேண்டியதில்லை. பூமி சொர்க்கத்தைப் போல இருந்தது. இத்தகைய திரைச் சீலையில்தான் சமனாக்கும் கம்யூனிசத்தைப் பற்றிய கட்டுக்கதைகளும் தத்துவங்களும் தீட்டப்பட்டன.

பொற்காலத்தைப் பற்றிய கட்டுக்கதையிலிருந்து மனிதனுடைய ஆனந்தமான, இயற்கையான வாழ்க்கையைப் பற்றி பல்வேறு தத்துவங்கள் தோன்றின. இவை மனித இயல்பின் பொதுவான, நிரந்தரமான அம்சங்கள் என்று சொல்லப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டன. பூர்விகக் காட்டுமிராண்டி வாழ்ந்த நிலை இயற்கையானது என்றும், நிலவிய சமூக நிலைமைகள் இந்த இயற்கை நிலையிலிருந்து விலகியிருந்த திரிபுகள் என்றும் கருதப்பட்டது. எனவே மனிதகுல வளர்ச்சியின் தொடக்க நிலையில், அது இயற்கைக்கு மிகவும் நெருக்கமாக இருந்த காலத்தில் நிலவிய அமைப்புதான் இயற்கையான அமைப்பு என்று கருதப்பட்டது.

தந்தைவழிச் சமூகத்தை இலட்சியப்படுத்தியது பேரானந்த நிலையை முயற்சியின்றி அடைகின்ற சாத்தியம்,

மனைவியர் பொதுவுடைமையாக இருத்தல், மனிதனுக்கு எவ்விதமான பொருட்கள் சொந்தமாக இருக்க முடியாது என்பதை வற்புறுத்தல், இதரவை பற்றி கம்யூனிச சிந்தனை வரலாற்றில் தவறான, சில சமயங்களில் பிற்போக்கான கருத்துகளை விதைத்தது. நுகர்வாளர் கம்யூனிசத்தின் பல்வேறு ரகங்களில், மனிதர்களின் சமத்துவம் வினியோகத்தை சமப்படுத்துதல் என்று பெரும்பாலும் முன்வைக்கப்பட்டது.

இனிமேல் பொற்காலத்துக்குத் திரும்ப முடியாது, ஆகவே மனிதகுலம் தனியுடைமை நிலவுவதை சகித்துக் கொள்ள வேண்டும் என்று சில சிந்தனையாளர்கள் கூறினார்கள்.

மனித சமூகத்தின் வாழ்க்கையில் நெடுங்காலத்துக்கு முன்பே மறைந்து விட்ட, ஆனந்தமயமான கடந்த காலம் என்ற அர்த்தத்தில் கம்யூனிசத்தைப் பற்றிய கருத்து மொத்தத்தில் எதிர்மறையான பாத்திரத்தை வகித்தது. அக்கருத்து வலிமையற்று இருந்ததால் எழுச்சியூட்டுகின்ற சமூக இலட்சியம் என்ற முறையில் தோல்வியடைந்தது. சில சமயங்களில் அது சமூக அவநம்பிக்கையின் மூலத் தோற்றுவாயாக இருந்தது. எனினும் இந்தக் கருத்து ஆக்கபூர்வமான ஒரு அம்சத்தைக் கொண்டிருந்தது: பொற்காலத்தைப் பற்றிய பல்வேறு பார்வைகளும் அன்றைக்கிருந்த தீமைகள் எல்லாவற்றுக்கும் தனியுடைமையே காரணம் என்று கூறின, சமூக ரீதியிலும் தனிமுறையிலும் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத நிபந்தனையாக கம்யூனிசம் முன்வைக்கப்பட்டது.

பொற்காலம் மறைந்து விட்டதைப் பற்றி மனிதகுலம் வருந்த வேண்டியதில்லை. கூட்டுக் குல அமைப்பிலிருந்து அடிமை உடைமை அமைப்புக்கு மாறியது பின்னோக்கி

வைக்கப்பட்ட காலடியல்ல, தரங்குறைந்து விட்டதன் சின்னமுமல்ல. அந்த சமயத்தில் அந்த மாற்றம் மனிதகுலத்தைக் காட்டுமிராண்டி மற்றும் அநாகரிக நிலையிலிருந்து நாகரிக நிலைக்குக் கொண்டு வந்தது. மனித சமூக வளர்ச்சியின் சிகரமாக கம்யூனிசம் இருக்கும்; அதுதான் மனித குலத்தின் உண்மையான பொற்காலமாகும்.

**பூர்விக கம்யூனிசமும் சமூக முன்னேற்றமும்.** பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பைப் பற்றி இன்று அதிகமான அக்கறை தோன்றியிருக்கிறது. மனிதகுலத்தின் ஏறுமுக வளர்ச்சியில் இந்த அமைப்பின் வரலாற்று ரீதியான இடத்தை நிர்ணயிக்க வேண்டும், இந்த அமைப்பின் எச்சங்களைச் சரியாக மதிப்பிட வேண்டும் என்னும் விருப்பமே அதற்குக் காரணம். பல்வேறு காரணங்களினால் வரலாற்று வளர்ச்சியில் பின்தங்கி விட்ட சில மக்களினங்களில் இந்த எச்சங்களை இன்றும் காண முடியும்.

பூர்விக கம்யூனிசம் மனித சமூகத்தின் வளர்ச்சியில் தவிர்க்க முடியாத ஆரம்பக் கட்டமாகும். அது (மிகவும் பூர்விகமான நிலையில்) மக்கள் தனியுடைமை, சுரண்டல், வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம், அரசு ஆகியவை இல்லாமல் வசிக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டியது. பூர்விக கம்யூனிசம் சமூக உடைமை, கூட்டாண்மை, சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம், இதர பல கம்யூனிஸ்ட் மரபுகளைத் தோற்றுவித்தது. அவை வரலாற்றுப் போக்கில் அழிந்து விடவில்லை; புதிய, குண ரீதியான மட்டத்தில் மெய்யான சோஷலிசத்தில் வெளிப்படுகின்றன.

முதலாளித்துவ சித்தாந்திகள் பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பின் சாராம்சத்தைத் திரிக்கிறார்கள். அவர்கள் அதன் கம்யூனிச அம்சங்களை, குறிப்பாக முக்கியமான அம்சமாகிய உற்பத்திச் சாதனங்களின் கூட்டுச் சமூக உடை

மையை அலட்சியம் செய்கிறார்கள். உதிரியான தனிநபர்கள், தமக்குள் பரிவர்த்தனை உறவுகளை நிறுவிக் கொண்ட தனியுடைமையின் சொந்தக்காரர்கள் மனித சமூகத்தின் வரலாற்றைத் தொடங்கி வைத்தார்கள் என்று நிரூபிப் பதற்கு அவர்கள் முயல்கிறார்கள். முதலாளித்துவத்தின் ஆதரவாளர்கள் எதைக் கூறிய போதிலும், வரலாற்று வளர்ச்சி பூர்விக கம்யூனிசத்தின் கூட்டுச் சமூக உடைமை யுடன் ஆரம்பமாயிற்று. அதன் பிறகு தனியுடைமை வடி வங்கள் அடுத்தடுத்து ஏற்பட்டு சோஷலிச நாடுகளில் இன்று நிறுவப்பட்டுள்ள சமூக, சோஷலிச உடைமைக்கு வழி வகுத் தன.

பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பு கடந்த காலத்துக்கு மட்டும் சொந்தமானதல்ல; அதன் எச்சங்கள் இன்று கூட லத்தீன் அமெரிக்காவின் தொலைவுப் பகுதிகளில் (உதா ரணமாக, பிரேஸில் நாட்டில்), ஆஸ்திரேலியாவில், சில பசிபிக் தீவுகளில், சில ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இருக்கின்றன. இயற்கைப் பொருளாதாரம், கூட்டுச் சமூக நிலவுடைமையின் எச்சங்கள், இனக்குழுப் பிரிவினைவாதம் (தனித்திருத்தல்), குலமரபு ஒருமைப்பாட்டின் எச்சங்கள், குலத் தலைவர்களின் பரம்பரை ஆட்சி ஆகியவை இந்த எச்சங்களில் அடங்கும். அவை மரபுவழிப்பட்ட கூட்டாண் மையையும் பரஸ்பர உதவியையும் கொண்டிருக்கின்றன.

ஏகாதிபத்திய அரசுகள் தம்முடைய காலனிகளில் நில விய குலமரபு உறவுகளை செயற்கையாகப் பாதுகாத்தன; சார்பு நாடுகளின் மக்கள்தொகையில் பெரும்பான்மையின ரைத் தாங்கள் ஈவிரக்கமின்றிச் சுரண்டுவதை ஆதரிப்ப தற்குக் குலங்களின் மேற்குடியினர் குழுக்களை உபயோகப் படுத்திக் கொண்டன.

சில ஆப்பிரிக்க அரசுகளில் அறிஞர்களும் அரசியல் வாதிகளும் கூட்டுச் சமூகப் பொருளாதாரத்தின் அடிப்படை

யில் விவசாயத்தை மாற்றுவதற்கு இப்பொழுது முயன்று வருகிறார்கள். அவர்கள் கூட்டுச் சமூக சோஷலிசத் தத்துவத்தை, அதாவது கூட்டு வாழ்க்கை அமைப்பின் எச்சங்களை உபயோகிப்பதன் மூலம் சோஷலிசத்துக்கு முன்னேறுவதைப் போதிக்கிறார்கள். இத்தகைய முயற்சிகள் பயனற்றவை என்பதை எதார்த்தம் நிரூபித்து விட்டது. வரலாற்று ரீதியில் காலாவதியான மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு சோஷலிசத்தை நோக்கி முன்னேற முடியாது. அது தவிர, கூட்டு வாழ்க்கை அமைப்பின் எச்சங்கள் கடந்த காலத்தின் குறியடையாளமான கம்யூனிச அம்சங்களாக இல்லாதிருக்கின்றன. குலத்தலைவர்கள் தம்முடைய சுரண்டல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவற்றை உபயோகிப்பது வாடிக்கையாக இருக்கிறது.

அதே சமயத்தில் பின்தங்கிய நாடுகள் முதலாளித்துவக் கட்டத்தைத் தவிர்த்து சோஷலிசத்துக்கு முன்னேறுகின்ற மாறும் கட்டத்தில் கூட்டுச் சமூக நிலவுடைமை, கூட்டு வேலை, பரஸ்பர உதவி, இதர மரபுகளை உபயோகப்படுத்திக் கொள்ள முடியும். சோவியத் யூனியனின் வட கோடியிலும் மத்திய ஆசியாவிலும் உள்ள மக்களினங்களைப் பொறுத்தமட்டில் ஜாரிச காலத்திலிருந்து பெறப்பட்ட பூர்விகக் கூட்டு வாழ்க்கை உறவுகளின் எச்சங்களை உபயோகப்படுத்துவதில் பெற்றிருக்கின்ற அனுபவம் இதை நிரூபிக்கிறது. குலமரபு உறவுகளை சோஷலிச உறவுகளாக மாற்ற வேண்டுமென்றால் அவற்றைத் திறமையுடன் பயன்படுத்திக் கொள்வது அவசியம் என்பதை இந்த அனுபவம் சுட்டிக்காட்டுகிறது. மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியில் வெற்றியடைந்த ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் வட கோடி, மத்திய ஆசியாவைச் சேர்ந்த மக்களினங்கள் தம்முடைய பொருளாதாரங்களையும் கலாசாரத்தையும் வளர்க்கவும் பெண்



3—1184

களின் சமத்துவத்தை நிறுவவும் தேசிய பொருளாதார, அரசு, கட்சி ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கவும் உதவியது.

பின்தங்கிய மக்களினங்கள் சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதற்கு குலமரபு உறவுகளைப் பயன்படுத்திய சோவியத் அனுபவம் சோஷலிசத் திசையமைவுப் பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கின்ற, புதிதாகச் சுதந்திரம் பெற்ற அரசுகளுக்குப் பயன்படும்.

அத்தியாயம் இரண்டு

# 16, 17ஆம் நூற்றாண்டுகளில் கம்யூனிச சமூகங்களைப் பற்றிய கற்பனைகள்

## மகிழ்ச்சியும் நீதியும் கோலோச்சும் சமூகத்தைத் தேடிய முயற்சிகள்

**கம்யூனிச சமூகங்களைப் பற்றிய கற்பனைகளின் மூலமும் ஆரம்பக் கட்டங்களும்.** அடிமை உடைமைச் சமூகம் வளர்ச்சியடைந்த பொழுது நீதியான சமூகத்தை வர்ணிக்கின்ற கற்பனைகள் தோன்றுவதற்குரிய புறவயமான நிலைமைகள் படிப்படியாக உருப்பெற்றன. அடிமைகளுக்கும் அடிமை உடைமையாளர்களுக்கும், நசித்து விட்ட சுதந்திர விவசாயிகளுக்கும் வர்த்தக வட்டிக்கடைக்காரர்களுக்கும், லும்பன் பாட்டாளி வர்க்கத்துக்கும் அடிமை உடைமை அரசுக்கும் இடையில் வர்க்கப் பகைமைகள் தீவிரமடைந்தது இக்கற்பனைகளின் வளர்ச்சியை ஊக்குவித்தது. கீழ் வர்க்கங்களின் இயக்கம் எல்லோரும் மகிழ்ச்சியோடிருக்கின்ற நீதியான சமூகத்தைப் பற்றிய இலட்சியங்களை விவரித்த முதல் வெகுளித்தனமான கம்யூனிசக் கற்பனைகள் தோன்றுவதற்கு அடிப்படையை ஏற்படுத்தியது.

அடிமை முறையின் சித்தாந்திகள் சம்பவங்களின் போக்கினால் கலவரமடைந்து அடிமை உடைமை அமைப்பைப் பாதுகாப்பதற்கும் ஸ்திரப்படுத்துவதற்கும் வழிமுறைகளைத் தேடினார்கள். அடிமை உடைமை அமைப்பை

ஓரளவுக்கு மாற்றியமைத்து, அதாவது சமூக மோதல்களைத் தீவிரப்படுத்துகின்ற நிகழ்வுகளை அந்த அமைப்பிலிருந்து அகற்றி அதை வலுப்படுத்துகின்ற சமூக கற்பனைகள் தோன்றுவதற்கு இது வழி வகுத்தது. பண்டைய கிரீசில், பிரயாணக் கட்டுரையின் வடிவத்தில் எழுதப்பட்டிருந்த ஜம்பூலின் கம்யூனிசக் கற்பனை உலகம், இலட்சிய அரசைப் பற்றிய பிளாட்டோவின் வர்ணனை இரண்டு போக்குகளுக்கும் சிறந்த உதாரணங்களாகும்.

தானும் தன்னுடைய தோழர்களும் பல வீரசாகசங்களுக்குப் பிறகு சென்றடைந்த தீவைப் பற்றி, மகிழ்ச்சியுடனும் சுதந்திரமாகவும் மக்கள் வசித்த தீவைப் பற்றி ஜம்பூல் எழுதினார். அந்தத் தீவில் வசித்த மக்களுடைய வாழ்க்கையைப் பற்றி அவர் எழுதியிருப்பது பூர்விகமான கூட்டு வாழ்க்கை அமைப்பைப் பற்றிய இலட்சிய வடிவமான சித்திரமாக இருக்கிறது. மனிதகுலத்தின் பொற்காலத்தைப் பற்றிய கட்டுக்கதைகளில் சொல்லப்படுவதைப் போல இயற்கை வாரி வழங்குகின்ற வசதிகள் சமூக நலத்துக்கு முன் நிபந்தனையாக இருக்கின்றன. தேவையான எல்லாமே அத்தீவில் நன்கு விளைந்தாலும் மக்கள் மிதமாகவும் சிக்கனமாகவும் வாழ்கிறார்கள். அவர்கள் ஆரோக்கியமானவர்களாக, மிகவும் வலிமையானவர்களாக, நீண்ட ஆயுளைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள்; அவர்களுக்கு நோய் ஏற்படுவதில்லை, **150** வயது வரை வாழ்கிறார்கள். அவர்களிடம் பொறாமையோ, பகைமையோ கிடையாது; அவர்கள் பணத்தைச் சேமிப்பதில்லை.

சுமார் **400** மக்களைக் கொண்ட குல சமூகங்கள் அந்தத் தீவில் சமூக வாழ்க்கையின் அடிப்படையாக இருக்கின்றன. இச்சமூகங்கள் சுதந்திரமானவை, எந்த மத்திய அதிகாரத்துக்கும் உட்பட்டவை அல்ல. இக்குல சமூகத்தில் எல்லோரும் தலைவருக்குப் பணிந்து நடக்கிறார்கள். உணவு

தேடுதலும் உற்பத்தி நிகழ்வும் கூட்டாண்மை, கம்யூனிச முறைகளில் நடைபெறுகின்றன. ஜம்பூலின் கம்யூனிசக் கற்பனை அடிமை உடைமை அமைப்பை எதிர்த்த தற் சிந்தனையான வடிவமாகும்.

இரேக்கத் தத்துவஞானியான பிளாட்டோ (உத்தேசமாக கி. மு. 427—347) தன் காலத்திய சமூக உறவுகளைக் குறை கூறினார். செல்வத் திரட்சி தீங்கானது, உடைமை வேறு பாடுகள் சமூகத்தின் ஒற்றுமையை அழிக்கும் என்று அவர் கருதினார். வர்த்தக, வட்டி உறவுகள்தான் உடைமை வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன என்று அவர் கருதிய படியால் வர்த்தகர்களையும் வட்டிக்கடைக்காரர்களையும் கண்டித்தார்.

பிளாட்டோவின் இலட்சிய **அரசில்** (அவருடைய புத்த கங்களில் ஒன்று இத்தலைப்பைக் கொண்டிருந்தது) அடிமை முறை இருந்தாலும் அங்கே வறுமை, செல்வ வளம் என் னும் முனைக் கோடிகள் இல்லை. அரசு அறிவு மிக்கோரால் (தத்துவஞானிகள், அறிஞர்கள்) ஆட்சி செய்யப்பட்டது; அடி மை உடைமை ஜனநாயகமும் செல்வர்கள் ஆட்சியும் அதனு டன் ஒரே அளவுக்குப் பொருந்தா. தன் காலத்தில் ஆட்சி செய்த அடிமை உடைமை வர்க்கத்துக்கு முன்னால் எல் லோரும் சிக்கனமாக வாழ வேண்டும் என்னும் கருத்தை பிளாட்டோ முன்வைத்தார். அவர் புரட்சிகர நட வடிக்கையைத் தீவிரமாக எதிர்த்தார், அடிமை உடைமை முறையை ஆதரித்தார். பிளாட்டோவின் தத்துவம் ஒரு கம்யூனிசக் கற்பனை அல்ல என்ற போதிலும் 16 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த கற்பனாவாதிகள் அவ ருடைய கருத்துகளில் அரிய அம்சங்களைக் கண்டனர்.

**தொடக்க காலக் கிறிஸ்துவ சமயத்தில் கம்யூனிசக் கருத்து களின் அம்சங்கள் இருந்தனவா?** இக்கேள்வி இன்றும் அக்

கறையைத் தூண்டுகிறது. தற்பொழுது பல மத வட்டாரங்கள் பல்வேறு காரணங்களுக்காக கிறிஸ்துவ சமயத்தைக் கம்யூனிசத்துடன் இணைப்பதற்கு இட்டுச் செல்கின்ற கருத்துகளைப் பரப்பி வருகிறார்கள். ஏசு கிறிஸ்து முதல் கம்யூனிஸ்ட் என்று வர்ணிக்கப்படுகிறார்; அவருடைய போதனை கம்யூனிசப் போதனை என்று பிரகடனம் செய்யப்படுகிறது. ஏசு கிறிஸ்துவும் அவருடைய திருத்தூதர்களும் இன்றைய கம்யூனிஸ்டுகளைப் போல செல்வர்களை எதிர்த்தார்கள், ஏழைகளை ஆதரித்தார்கள், மக்கள் எல்லோரும் சமம் என்று போதித்தார்கள் என்று கூறப்படுகிறது. கம்யூனிஸ்டுகளைப் போல அவர்கள் தனிச்சொத்துடைமையை எதிர்த்தார்கள், பொது உடைமையைப் போற்றினார்கள். தொடக்க காலக் கிறிஸ்துவ சமூகங்கள் கம்யூனிஸ்ட் கம்யூன்களுக்கு உதாரணமாக சித்திரிக்கப்படுகின்றன.

கிறிஸ்துவ சமயத்தை விஞ்ஞான கம்யூனிசத்துடன் இணைப்பதற்கு முயல்வது ஆதாரமற்றதாகும். கிறிஸ்துவ திருத்தூதர்கள், ஏழைகளுக்கு உதவுங்கள் என்று செல்வர்களைக் கேட்டுக் கொண்டதுடன் நின்று விட்டார்கள். செல்வர்கள் மீது கிறிஸ்துவ சமயத்தின் தாக்குதல்கள் கம்யூனிசத் தன்மை கொண்டவையல்ல. கிறிஸ்துவ சமயம் உடைமை ஏற்றத்தாழ்வை, சுரண்டலை, ஒடுக்குமுறையைக் கொண்ட சமூக அமைப்பை ஒழிப்பதற்கு ஒருபோதும் முயலவில்லை.

திருத்தூதர்களுடைய சமூகங்களின் கம்யூனிசம் கம்யூனிசக் கருத்துகளின் வளர்ச்சியின் மீது ஒரு வகையான தாக்கத்தைக் கொண்டிருந்தது. கிறிஸ்துவ சமயம் தோன்றுவதற்கு முன்பே நுகர்வாளர் கம்யூனிசக் கருத்துகளும் நுகர்வாளர் சமூகங்களும் தோன்றி விட்டன. தொடக்க காலக் கிறிஸ்துவ சமயம் பிரதானமாக ஏழைகளையும் ஒடுக்கப்பட்ட பகுதியினரையும் ஈர்த்தது. திருச்சபையின்

திசையமைவு எப்படியிருப்பினும், செல்வக் குவிப்பை யும் செல்வர்களையும் கிறிஸ்துவ சமயம் எதிர்த்ததை ஒடுக்கப்பட்டவர்கள் தம்முடைய சமூக எதிர்ப்பை வெளிக் காட்டுவதற்கு உபயோகித்துக் கொண்டார்கள். இது ஒரு முற்போக்கான நடவடிக்கை ஆகும்.

காலப் போக்கில் மதகுருக்களிடம் ஏராளமான செல்வம் சேர்ந்தது; அவர்கள் சுரண்டும் வர்க்கத்தின் ஒரு பகுதி யாக மாறினார்கள். சுரண்டல்காரர்கள் இப்பொழுது திருச் சபையில் ஆதிக்கம் செலுத்தினார்கள். தொடக்க காலக் கிறிஸ்துவ சமயத்தின் கருத்துகளின் வளர்ச்சியின் மூலத் தோற்றுவாயாக அது இருந்தது முடிவடைந்தது.

தொடக்க காலக் கிறிஸ்துவ சமயத்தின் கருத்துகள் இன்றும் முற்போக்கானவையா? இல்லை. கிறிஸ்துவ சம யம் ஒருபோதும் கம்யூனிசக் கருத்துகளைப் போதிக்கவில்லை, ஆதரிக்கவுமில்லை. தொடக்க காலக் கிறிஸ்துவ சமயத்தின் கம்யூனிசக் கூறுகளில் சில வரலாற்று ரீதியில் காலாவதி யாகி விட்டன; அவற்றைச் செயற்படுத்த முடியாது. உழைக் கின்ற பெருந்திரளான மக்கள் விஞ்ஞான கம்யூனிச நிலை களுக்கு மாறுவதை அவற்றால் தாமதப்படுத்த மட்டுமே முடியும்.

கிறிஸ்துவ மதக் கருத்துகளுக்கும் கம்யூனிசக் கருத்து களுக்கும் இடையிலான உறவை மார்க்சிய-லெனினிய ஆசான்கள் சரியாக வரையறுத்தனர். உதாரணமாக, எங் கெல்ஸ், ஆரம்பக்கால கிறிஸ்துவ மதத்தின் முற்போக்கு அம்சங்களைச் சுட்டிக்காட்டினார்; ஒடுக்கப்பட்ட, பங்கிழந்த மக்கள் சுரண்டல், தனியுடைமை, சமூக உரிமையின்மை, ஒடுக்குமுறை ஆகியவற்றிற்கு எதிராக நியாயமாக எழுப்பும் குரலின் எதிரொலியை இதில் கண்டார்.

19ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் தோன்றிய கிறிஸ்துவ சோஷலிசத்தின் மீதும் கவனம் செலுத்திய எங்

கெல்ஸ், இது பாட்டாளி வர்க்க சோஷலிசத்துடன் பொருந்தி வராது என்று சுட்டிக்காட்டினார். இரண்டும் அடிமையிலிருந்தும் வறுமையிலிருந்தும் எதிர்காலத்தில் விடுதலை கிட்டும் என்று பறைசாற்றுகின்றன. கிறிஸ்துவ மதம் இந்த விடுதலையை மேலுலக வாழ்க்கையில் தேடுகிறது. பாட்டாளி வர்க்க சோஷலிசமோ இதை நம் உலகில், முதலாளித்துவ சமூகத்தை சோஷலிச அடிப்படைகளில் மாற்றியமைப்பதில் காணுகிறது. கிறிஸ்துவ சோஷலிசக் கருத்துகள் இன்றும் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன. சாராம்சத்தில் இவை சமூக சீர்திருத்தவாதத் தன்மையை உடையவை.

ஆரம்பக்கால கிறிஸ்துவ மதம், அதில் காணப்பட்ட ஒரு சில கம்யூனிச அம்சங்களைப் பற்றி நாம் மேலே கூறியவை மற்ற மதங்களுக்கும், உதாரணமாக, இஸ்லாம், புத்த மதங்களுக்கும் பொருந்தும். இன்று ஒருசில முஸ்லீம் நாடுகளில் "இஸ்லாம் சோஷலிசம்" என்றழைக்கப்படுவதன் பல்வேறு வகைகள் பிரசாரம் செய்யப்படுகின்றன; சாராம்சத்தில் இவை முஸ்லீம்களின் மதத் தனித்துவத்தை முன்வைக்கின்றன. இதற்கும் விஞ்ஞான கம்யூனிசத்திற்கும் தொடர்பேயில்லை.

இதனால், எந்த ஒரு மதத்தின் முற்போக்குப் பிரமுகர்களுடனும் ஒத்துழைக்கவோ தொடர்பு கொண்டிருக்கவோ கம்யூனிஸ்டுகள் விரும்பவில்லை என்று பொருளாகாது. அவர்களுடன் ஒத்துழைக்கவும் (உதாரணமாக, சமாதான போராட்டத்தில்) ஒளிவுமறைவற்று பேசவும் கம்யூனிஸ்டுகள் பாடுபடுகின்றனர். தம் விஞ்ஞான போதனையை மூடி மறைக்காத கம்யூனிஸ்டுகள் அதே நேரத்தில் இதை யார் மீதும் வலுக்கட்டாயமாகத் திணிப்பதில்லை.

**நிலப்பிரபுத்துவ சகாப்தத்தில் கம்யூனிசக் கருத்துகளும் இயக்கங்களும்.** மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அடிமை

முறையை அகற்றிய நிலப்பிரபுத்துவ அமைப்பு சுமார் ஆயிரம் ஆண்டுகள் நிலவியது.

நிலப்பிரபுத்துவ சகாப்தத்தில் விவசாயிகளின் எழுச்சிகளும் போர்களும், நகர கீழ் வர்க்கத்தினருடைய சமூகக் கலகங்களும் சமயத் தன்மையைக் கொண்டிருந்தது குறியடையாளமாகும். கம்யூனிசக் கருத்துகள் கிறிஸ்துவ மரபுகள் மற்றும் கிறிஸ்துவ சமய உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைந்தன; பெரும்பாலும் அவை கிறிஸ்துவ சமயத்துக்கு மாறானவையாகக் கருதப்பட்டன. இதற்கு இரண்டு சந்தர்ப்பங்கள் காரணமாகும்: முதலாவதாக, நிலப்பிரபுத்துவ அமைப்பின் கீழ் எல்லா சமூகக் குழுக்களும் சமய உலகக் கண்ணோட்டத்தின் சுற்றுவட்டத்திற்குள் இருந்தன; இரண்டாவதாக, திருச்சபையில் ஏற்கெனவே நன்கு வேரூன்றிய கோட்பாட்டு ரீதியான விதிமுறைகளும், ஒழுங்கு முறைகளும் தார்மிக அளவுகோல்களும் இருந்தன, இவற்றை எல்லோரும் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

எனினும் அதிகார பூர்வமான சமயம், அதாவது திருச்சபை நகர கீழ் வர்க்கத்தினருடைய சமூக விருப்பார்வங்களைப் பூர்த்தி செய்யத் தவறியது. ஒரே சமயத்தில் சமயத் தன்மையும் முரண் சமயத் தன்மையும் (திருச்சபை எதிர்ப்பு) கொண்ட கம்யூனிசக் குறுங்குழுக்கள் தோன்றுவதற்குத் தொடங்கின. அவற்றின் கருத்துகள் திருச்சபையின் வறட்டுக் கோட்பாடுகளிலிருந்து வேறுபட்டிருந்தன. இக்குறுங்குழுக்கள் சமயம் சாராத மற்றும் சமய அதிகாரிகளால் கடுமையாக ஒடுக்கப்பட்டன.

நிலப்பிரபுத்துவ சகாப்தத்தின் கம்யூனிசக் கற்பனைகளில் உண்மையான கிறிஸ்துவ சமயத்துக்கு திருச்சபை அவசியமல்ல, ஏனென்றால் அதன் சாராம்சம் ஒரு நபர் கடவுளுடன் நேரடியாக தொடர்பு கொள்வதிலும் அவ

ருடைய சித்தத்துக்குத் தன்னை ஒப்படைப்பதிலும் அடங்கி யிருக்கிறது என்று போதிக்கப்பட்டது. மத்தியகால கம்யூனிஸ்டுகள் தொடக்க காலக் கிறிஸ்துவ சமூகங்களை இலட்சியப்படுத்தினார்கள்; பிரதானமாக, கூட்டு வாழ்க்கைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நுகர்வாளர் கம்யூனிசக் கருத்துகளைப் போதித்தார்கள். அவர்கள் சமூகத்தை முழுமையாகப் புனரமைக்கின்ற கருத்தை ஒருபோதும் கூறவில்லை; சிறு அளவிலான, சுய பூர்த்தியுள்ள கம்யூனிசக் கூட்டுச் சமூகம் அவர்களுடைய இலட்சியமாக இருந்தது.

மத்தியகால கம்யூனிஸ்டுகள் ஆட்சியதிகாரத்தையும் அரசையும் அராஜகவாத நோக்கிலிருந்து பார்த்தார்கள்; அரசு மற்றும் அரசு நிறுவனங்கள் "உலகத் தீமை" என்று நிராகரித்தார்கள், அவற்றில் பங்கெடுப்பது பாவம் என்று கருதினார்கள். தீவிரமான சமூக நெருக்கடிக் காலங்களில், பொதுவான புரட்சிகர நிலைமையின் தாக்கத்தின் கீழ் மட்டுமே நிலப்பிரபுத்துவ சகாப்தத்தின் கம்யூனிசம் புரட்சிகர இயக்கம் என்ற வடிவத்தை அடைந்தது. ஒப்புநோக்கில் சமூக அமைதி நிலவிய காலகட்டங்களில் மத்தியகால கம்யூனிஸ்டுகள் பிரச்சாரம், தனிப்பட்ட உதாரணத்தின் மூலம் சமூகத்தைப் புனரமைக்கின்ற கருத்தைப் பின்பற்றினார்கள். அது தொடக்க காலக் கிறிஸ்துவ சமயத்தின் சமாதான அராஜகவாத மரபுகளுடன் முழுமையாகப் பொருந்தியிருந்தது.

நிலப்பிரபுத்துவ சகாப்தம் கம்யூனிசக் கருத்துகளை மட்டுமன்றி எண்ணற்ற நுகர்வாளர் கம்யூன்களையும் கண்டது. இக்கம்யூன்கள் வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு நிலைமைகளில், வெவ்வேறு காலங்களில் தோன்றின. 15ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் செக்கில் நடைபெற்ற

ஹஸ்ஸைட் யுத்தத்தின் போது அமைக்கப்பட்ட டபோர் கம்யூன் இப்படிப்பட்ட ஒரு உதாரணமாகும்.

ஜெர்மனியின் மதச் சீர்திருத்த இயக்கம் (16ஆம் நூற்றாண்டு) விவசாயிகள் யுத்தமாக வளர்ச்சியடைந்தது; அதில் நகர கீழ் வர்க்கத்தினரது சித்தாந்தியான தாமஸ் முன்செர் முன்னணியிலிருந்தார். அவர் தீவிரமான புரட்சிக்காரர்; தொடக்க கால கிறிஸ்துவ சமயக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட கம்யூனிசக் கருத்துகளைப் போதித்தார். விவசாயிகள் யுத்தம் தோல்வியடைந்த பிறகு (1526) ஆனபாப்டிசம் என்று சொல்லப்பட்ட சமய கம்யூனிஸ்ட் இயக்கம் ஜெர்மனியில் விரிவாகப் பரவியது. ஆனபாப்டிஸ்டுகள் சோஷலிசக் கருத்துகளுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்யாவிட்டாலும் அவர்கள் தமது செய்முறை நடவடிக்கைகளின் காரணமாக சோஷலிச வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஒடுக்குமுறைக் காலங்களில் அவர்கள் நுகர்வுத் தன்மையைக் கொண்ட தமது கம்யூனிச சமூகங்களை நிறுவினார்கள்.

16ஆம் நூற்றாண்டில் கிறிஸ்துவ கம்யூனிசமும் நிலப்பிரபுத்துவ சகாப்தத்தின் கம்யூனிஸ்ட் இயக்கமும் தணிந்தன. அதன் பிறகு கம்யூனிசக் கருத்துகளின் வளர்ச்சி முதலாளித்துவத்தின் தோற்றம், வளர்ச்சியுடன் இணைந்திருந்தது. அது முதல் விஞ்ஞான கம்யூனிசத்தின் சித்தாந்த மற்றும் தத்துவார்த்த முன்நிபந்தனைகளைப் படைக்கும் நிகழ்ச்சிப் போக்கு தொடங்கியது.

### தாமஸ் மோரின் "உட்டோப்பியா"

**தாமஸ் மோரும் அவருடைய காலமும்.** தாமஸ் மோர் எழுதிய **உட்டோப்பியா** என்னும் புத்தகம் 1516இல் வெளி

யிடப்பட்டது. அதன் பிறகு இப்புத்தகம் பல முறை பதிப்பிக்கப்பட்டது.

தாமஸ் மோர் (1478—1535) லண்டன் நகரத்தைச் சேர்ந்த கைவினைஞருடைய பேரன், அவர் தகப்பனார் ஒரு வழக்குரைஞர். தாமஸ் மோரும் வழக்குரைஞராக இருந்தார். அவர் தம் காலத்தின் தலைசிறந்த பிரமுகர். அவர் பாராளுமன்றத்தில் (காமன்ஸ் சபை) உறுப்பினராகவும் அதன் சபாநாயகராகவும் இருந்தார்; அரசருக்கு முக்கியமான ராஜியப் பணிகளை நிறைவேற்றினார். எட்டாவது ஹென்ரி நயவஞ்சகமான அரசர், சர்வாதிகாரி. தாமஸ் மோர் அவரிடம் லார்டு சான்சலராக இருந்தார். மோர் தன்னுடைய சமய, அரசியல் நம்பிக்கைகளில் உறுதியாக இருந்தார்; அவர் மீது அரச துரோகக் குற்றம் சாட்டப்பட்டு 1535 ஜூலை 6இல் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

தாமஸ் மோர் நிலப்பிரபுத்துவ பண்ணையடிமை முறையில் நெருக்கடியின் முதல் அறிகுறிகள் உருப்பெற்ற காலத்தில், முதலாளித்துவ உறவுகளும் முதலாளித்துவத்தின் அடிப்படையான வர்க்கங்களும் (முதலாளி வர்க்கம் மற்றும் பாட்டாளி வர்க்கம்) நிலப்பிரபுத்துவ சமூகத்திற்குள் தோன்றிய பொழுது வாழ்ந்தார். அது மூலதனத்தின் ஆதித்திரட்சிக் காலம், நிலப்பிரபுத்துவப் பொருளாதாரம் மேன்மேலும் சந்தை மற்றும் பண்ட-பண உறவுகளுக்குள் இழுக்கப்பட்டு பணக்கார வர்த்தகர்கள் தொழில்முனைவர்களாக மாறிக் கொண்டிருந்த காலம். அவர்கள் சுதந்திரமான கைவினைஞர்களைப் பொருளாதார ரீதியில் அடிமைப்படுத்தி கூலியுழைப்பை அடிப்படையாகக் கொண்ட முதல் தொழில்பட்டறைகளை நிறுவினார்கள்.

பெருந்திரளான விவசாயிகள் தம்முடைய நிலத்தை இழந்து கொண்டிருந்தார்கள்; நிலப்பிரபுக்கள் அவர்களை நிலத்திலிருந்து விரட்டிய வேகம் வர்த்தக மற்றும்

தொழில்துறை மூலதனத்தின் வளர்ச்சியைக் காட்டிலும் அதிகமாக இருந்தபடியால், வாழ்க்கைக்குரிய எல்லாச் சாதனங்களும் பறிக்கப்பட்டு வறுமையும் பசியுமாக ஓடி வந்த எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியவில்லை.

தாமஸ் மோர் இந்தப் பரிதாபகரமான மக்களிடம் அனு தாபம் காட்டியதுடன் இந்த நிலைமையிலிருந்து விடுபட ஒரு வழியைக் கண்டுபிடிப்பதற்கு முயன்றார். அவர் இலட்சிய பூர்வமான அரசின் மாதிரியைத் தயாரித்தார். அவர் எழு திய **உட்டோப்பியா** எதிர்கால சமூகத்தைப் பற்றிய விசித்திர மான படைப்பு. அது வேறுவிதமாக இருக்க முடியாது. ஏனென்றால் இப்பிரச்சினையை விஞ்ஞான ரீதியாக அணுகு வதற்கு இன்னும் காலம் வரவில்லை.

மோர் ஒருவருக்கும் தெரியாத ஒரு நாட்டுக்குப் பிர யாணம் செய்கிறார் **உட்டோப்பியாவில்.** இது அக்காலத்தில் செய்யப்பட்ட மாபெரும் பூகோளக் கண்டுபிடிப்புகளின் உணர்ச்சியுடன் பொருந்தியிருக்கிறது. அதன் முக்கியப் பாத் திரமான ரஃபயீல் ஹித்லோடெய் அனுபவம் நிறைந்த மாலுமி, தத்துவஞானி. அவர் தன்னுடைய கடற்பய ணங்களையும் உட்டோப்பியா தீவில் பார்த்த அரசையும் பற்றிப் பேசுகிறார். ரஃபயீல் ஹித்லோடெய் தாமஸ் மோரின் கருத்துகளை எடுத்துரைப்பது இயற்கையே.

**உட்டோப்பியாவின்** முதல் பகுதியில் மோர் இங்கிலாந் தில் நிலவிய சமூக அமைப்பை விமர்சிக்கிறார். இந்த விமர் சனம் இங்கிலாந்துக்கு மட்டும் உரியதல்ல; மொத்த ஐரோப் பாவுக்கும் உரியது. ஏனென்றால் அது பொதுவில் நிலப் பிரபுத்துவ எதேச்சாதிகார ஆட்சிமுறைகளின் குறைகளை எடுத்துக்காட்டியது.

ரஃபயீல் ஹித்லோடெய் எதேச்சாதிகார முடியாட்சியைக் கண்டித்தார். அரசர்கள் ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கடைப் பிடித்து அந்நிய நாடுகள் மீது படையெடுக்கிறார்கள். இந்த

யுத்தங்கள் அந்நிய நாடுகளை அழிப்பது மட்டுமன்றி சொந்த நாட்டு மக்களையும் அழிக்கின்றன. மக்கள் ஏழைகளாக இருந்தால் அவர்கள் பொறுமையாக இருப்பார்கள், சட்டம், ஒழுங்குமுறைக்கு உத்தரவாதம் ஏற்படும் என்னும் கருத்தை அவர் எதிர்த்தார். இதன் எதிரிடையே உண்மை என்று அவர் கருதினார். வறுமை எப்பொழுதும் கலவரங்களுக்கு வழி வகுக்கிறது, நிலவுகின்ற அமைப்பின் மீது அதிருப்தியுள்ளவர்கள்தான் புரட்சிக்கு அதிகமாகப் பாடுபடுவார்கள். மூலதனத்தின் 'ஆதித்திரட்சிச் சகாப்தத்திலிருந்தும் வர்த்தக மற்றும் தொழில்துறை மூலதனம் நிலப்பிரபுத்துவ உறவுகளில் ஊடுருவியதிலிருந்தும் விளைந்த புதிய சமூகத் தீமைகளை தாமஸ் மோர் கண்டார்.

நிலப்பிரபுக்கள் அதிக லாபத்தைப் பெற விரும்பி விவசாயத்திலிருந்து ஆடு வளர்ப்புக்கு மாறிய பொழுது விவசாயிகள் அழிந்தார்கள், அவர்களிடமிருந்து நிலம் பறிக்கப்பட்டு மேய்ச்சல் நிலமாக மாற்றப்பட்டது. "உங்கள் ஆடுகள் இயற்கையில் சாதுவானவை; அவற்றை சுலபமாக கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்; ஆனால் அவை இப்பொழுது ஆட்களைச் சாப்பிடுகின்றன, கிராமங்களை மட்டுமல்ல, நகரங்களையே சூறையாடுகின்றன" என்று ஹித்லோடெய் கூறுகிறார். *

அரசு செல்வர்களின் எதேச்சாதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பதிலாக சட்டத்தின் முழு வலிமையுடன் ஏழைகளைத் தாக்குகிறது. அவர்கள் செய்த தொழிலிலிருந்து விரட்டப்பட்டு ஊர்சுற்றிகளாக, திருடர்களாக மாறும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அரசு என்பது

---

* *"Utopia" by Sir Thomas More in Ideal Commonwealths,* New York, P. F. Collier & Son, 1901, p. 12.

செல்வர்களின் சதிகார அமைப்பு, அவர்கள் அதன் வலிமையைத் தங்களுடைய சொந்த நலனுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்று மோர் வர்ணித்த பொழுது அரசின் சுரண்டல் மற்றும் வர்க்க இயல்பைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் நெருங்கி வந்தார். தனியுடைமை தலைமை வகிப்பதே எல்லா சமூகத் தீமைகளுக்கும் காரணம் என்று அவர் கருதினார்.

தனியுடைமை இருக்கின்ற பொழுது நீதியையும் சமூக நலத்தையும் அடைய முடியாது என்று மோர் கருதினார். தனியுடைமையினால்தான் சிலர் செல்வர்களாக இருக்கிறார்கள், பெரும்பான்மையினர் ஏழைகளாக இருக்கிறார்கள். செல்வர்கள் கொள்ளைக்காரர்கள் கௌரவம் இல்லாதவர்கள்; ஏழைகள் அடக்கமானவர்கள், எளிமையானவர்கள். ஏழைகள் தமக்காக உழைப்பதில்லை, சமூகத்துக்காக உழைக்கிறார்கள். தனியுடைமையை முழுமையாக ஒழித்தால் மட்டுமே சமூகத் தீமைகளை ஒழிக்க முடியும், நீதியான சமூக அமைப்புக்கு வழி வகுக்க முடியும் என்றார் மோர்.

தனியுடைமையை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்கு எதிராகப் பொதுவுடைமையை அடிப்படையாகக் கொண்ட அமைப்பை முதன்முதலாக வற்புறுத்தியவர் தாமஸ் மோர் அல்ல; ஆனால் சமத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில், தனியுடைமை இல்லாமல் சமூக உற்பத்தியை எப்படி அமைப்பது என்று முதலில் எடுத்துக்காட்டியவர் அவரே.

**உட்டோப்பியாவின் கம்யூனிச அமைப்பு.** உட்டோப்பியா தீவில் பொருளாதார அமைப்பு சமூக உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்ற கைவினைஞர்களின் குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு

தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற குடும்பங்கள் சமூகத்தின் அடிப்படையான பொருளாதார அலகுகளாக இருக்கின்றன. தகப்பனார் செய்கின்ற தொழிலுக்கு பதில் வேறு தொழிலைக் கற்றுக் கொள்ள விரும்புகின்ற குழந்தைகள் மற்றொரு குடும்பத்தில் சேர்கின்றனர். கைவினைஞனின் குடும்பப் பட்டறையை அரசு அதிகாரிகள் மேற்பார்வை செய்கிறார்கள். குடும்பம் தான் உற்பத்தி செய்த எல்லாப் பொருட்களையும் அரசிடம் ஒப்படைக்கிறது. உட்டோப் பியாவில் நாட்டுப்புற மக்கள் சமூகம் என்பது அநேகமாக இல்லை; விவசாயம் நகர மக்கள் செய்யும் வேலையாக இருக்கிறது. ஒவ்வொரு நகரத்தின் அருகிலும் விவசாயத் துக்கென்று தனிப் பிரதேசம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவ சாயக் காலத்தில் நகர மக்கள் வயல்களில் வேலை செய் கிறார்கள்; அது முடிந்ததும் நகரங்களுக்குத் திரும்பி தங்களுடைய முக்கியமான தொழிலை மேற்கொள் கிறார்கள்.

உட்டோப்பியாவின் குடிமக்கள் சுதந்திரமானவர்கள்; தனி யுடைமையும் சுரண்டலும் அவர்களுக்குத் தெரியாது. அவர் களுடைய உழைப்பு கூட்டாண்மை, கூட்டு வாழ்க்கைக் கோட் பாடுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது, எனவே தொழிற் பிரிவுகளிலும் விவசாயத்திலும் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்தும் எல்லோருக்கும் சொந்தம். மோர் தன்னுடைய **உட்டோப்பியாவில்** தேவைக்குத் தக்கபடி வினி யோகம் செய்வதை அறிமுகம் செய்கிறார்.

உட்டோப்பியாவின் அரசியல் அமைப்பு எப்படிப்பட்டது? செனெட் தலைமையான அரசு உறுப்பு ஆகும். அது தனிப் பட்ட பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்பட்ட எல்லாப்பொருட் களையும் கணக்குப் பார்த்து, அவசியப்படுகின்ற பொழுது (சில பிரதேசங்களில் விளைச்சல் இல்லாமல் பஞ்சம் ஏற் படுதல், இதரவை) அவற்றை மறுவினியோகம் செய்கிறது.

அங்கே நிலம் பொதுச் சொத்தாக இருக்கிறது. அரசு தொழிலாளர்களை ஒரு பிரதேசத்திலிருந்து மற்றொரு பிரதேசத்துக்கு மாற்றுகிறது, அந்நிய நாடுகளுடன் வர்த்தகம் செய்கிறது. ஆனால் அங்கே மத்தியப்படுத்தப்பட்ட, திட்டமிடப்பட்ட பொருளாதாரம் கிடையாது. உற்பத்தியை ஒழுங்கமைக்கும் உறுப்பாக அரசு அல்ல, நகரமே இருக்கிறது. மோரின் அரசு நகரங்களின் சம்மேளனத்தைப் போன்றதாகும்.

உட்டோப்பியாவில் எல்லா அதிகாரிகளும் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். குடும்பத் தலைவர்கள் கீழ்நிலை அதிகாரிகளை (சிஃபொகிராண்டுகளை) தேர்ந்தெடுக்கிறார்கள்; அக்கீழ்நிலை அதிகாரிகள் உயர்நிலை அதிகாரிகளை (த்ரேனிபர்களையும் அரசுத் தலைவரையும்) தேர்ந்தெடுக்கிறார்கள். மோரினுடைய ஜனநாயகக் கருத்துகளை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு, அது எதேச்சாதிகாரம் வலுப்பட்டுக் கொண்டிருந்த காலம், மேலேயிருந்து அதிகாரிகளை நியமிப்பது அக்கால மரபு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மோரின் புத்தகத்தில் முன்வைக்கப்பட்ட ஜனநாயகக் கல்வி அமைப்பு **16**ஆம் நூற்றாண்டில் நிலவிய நிலைமையிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது. அங்கே இரு பாலாரையும் சேர்ந்த எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வியும் தொழிற் பயிற்சியும், விவசாயத்தில் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டன.

அங்கே குடிமக்கள் எல்லாவற்றிலும் மிதமாக நடந்து கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கையை நடத்துகிறார்கள். பணம் அல்லது சொந்தச் சொத்து அங்கே இல்லை, ஆடம்பரமும் சுகபோகமும் இல்லை. உட்டோப்பியாவின் அரசியல், பொருளாதார அமைப்பு இயன்றவரை மிகவும் சிறப்பானது, ஏனென்றால் அது நியாயமானது, மக்களின் அன்

றாட வாழ்க்கைக்கு உசிதமானது, இயற்கையின் விதிகளுக்குப் பொருத்தமானது என்று மோர் கருதினார். தாமஸ் மோரின் ஜீவாதாரமான தார்மிக நெறி, மனிதனின் ஆரோக்கியமான, இயற்கையான வேட்கைகளைப் பூர்த்தி செய்ய அவர் முனைந்தது அவர் காலத்துக்கு மாபெரும் புரட்சிகர முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன.

தாமஸ் மோர் சோஷலிச சமூகத்தைப் பற்றிய முதல் ஒருங்கிணைந்த மாதிரியைப் பிற்காலத் தலைமுறையினருக்கு வழங்கிய சிந்தனையாளர். அதில் உள்ளுறையாக இருந்த கற்பனாவாத அம்சங்கள் அனைத்தும் 15, 16ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இங்கிலாந்தின் பொருளாதார வளர்ச்சியின் குறைவான மட்டத்தைப் பிரதிபலித்தன. தாமஸ் மோர் முதலாளித்துவ சமூகத்தின் ஆரம்பக் கட்டத்தில், அதன் முதல் காலடிகளைப் பார்த்து தனியுடைமைக் கோட்பாடுகளை விமர்சனம் செய்ததுடன் அவற்றுக்கு எதிராக சமூக சமத்துவ, பொதுவுடைமைக் கோட்பாடுகளை நிறுத்தினார். ''மிகவும் சிறந்த'' சமூகத்தைப் பற்றிய இந்த மாதிரியின் ஆசிரியர் அதை அமுலாக்க முடியாது என்பதைத் தன்னுடைய காலத்தைச் சேர்ந்த வேறு எவரையும் காட்டிலும் மிக நன்றாக அறிந்திருந்தார்; சோஷலிசம் அக்காலத்தில் ஒரு கனவாகத்தான் இருந்தது.

### தோமஸோ கம்பனேல்லாவின் ''சூரிய நகரம்''

**தோமஸோ கம்பனேல்லாவின் சமூகத் தத்துவஞானத்தின் மூலத் தோற்றுவாய்.** டொமினிக்கன் பிரிவைச் சேர்ந்த துறவியான தோமஸோ கம்பனேல்லா எழுதிய **சூரிய நகரம்** என்னும் புத்தகம் 1623இல் வெளியிடப்பட்டது. தாமஸ் மோரின் **உட்டோப்பியா** வெளிவந்து சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு சமூகத்தை கம்யூனிச ரீதியில் மாற்றி

ய்மைப்பதற்கு ஒரு புதிய திட்டம் வெளியாயிற்று. மறு மலர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த மாபெரும் மனிதாபிமானி யான எராஸ்மஸ் தாமஸ் மோரின் ஆன்மிக குருவாக இருந்தார். தாமஸ் மோர் எராஸ்மசின் வீட்டில் வசித்த பொழுது **உட்டோப்பியாவை** எழுதினார். ஆனால் கம்ப னேல்லா இத்தாலியின் மிகவும் பயங்கரமான சிறையில் தனிக் கொட்டடியில் அடைக்கப்பட்டிருந்த பொழுது **சூரிய நகரம்** என்னும் நூலை எழுதினார். கம்பனேல்லா (1568—1639) திருச்சபை நீதிமன்றத்தினால் (Inquisition) தண் டிக்கப்பட்டுத் தன்னுடைய வாழ்க்கையில் 27 ஆண்டுகளை நேபிள்ஸ் சிறைகளிலும் பிற்காலத்தில் ரோம் சிறையிலும் கழித்தார்.

தோமஸோ கம்பனேல்லா என்பவர் யார்? ஸ்பெயின் முடியாட்சியும் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை நீதி மன்றமும் அவரைத் தண்டித்தது ஏன்?

தோமஸோ கம்பனேல்லா கலாப்ரியாவில் ஸ்டிலோ என் னும் சிறிய நகரத்தில் 1568 செப்டெம்பர் 5இல் பிறந்தார். அவருடைய தகப்பனார் ஏழை, கல்வியறிவில்லாத செருப் புத் தைக்கும் தொழிலாளி. ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன், இளம் பருவத்திலேயே அசாதாரணமான நினை வாற்றலும் திறமைகளும் வாய்க்கப் பெற்ற ஒருவன் அறி வைப் பெறுவதற்கு அன்று ஒரே வழிதான் இருந்தது. துறவியாக மாறுவதுதான் அந்த ஒரே வழி. கம்பனேல்லா தன்னுடைய பதினைந்தாம் வயதில் டொமினிக்கன் துறவி யானார். அவர் பல விஞ்ஞானங்களைக் கற்றார்.

கம்பனேல்லா அறிஞர், சமூகத் தத்துவஞானி, அர சியல்வாதி என்ற முறையில் தத்துவத்திலும் நடைமுறை யிலும் பிளேப்ஸ் எதிர்ப்பை (ஏழ்மையடைந்து கொண் டிருந்த விவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் உருவாகிக் கொண்டிருந்த நகரப் பாட்டாளிகளின் எதிர்ப்பை) வெளி

யிட்டார். அவர்கள் மனிதத் தன்மையற்ற வர்க்க, அந்நிய ஒடுக்குமுறையை எதிர்த்தார்கள். சமூகத்தின் இந்த அடுக்கு களின் நலன்களை வெளியிடுகின்ற பொழுது அவர் தேசிய எல்லைகளுக்கு அப்பால் சென்று உலகம் முழுவதையும் மாற்றுவதற்குரிய செயல்திட்டத்தை முன்வைத்தார். கம்ப னேல்லாவின் கற்பனைச் சமூகத் தத்துவம், அநீதியையும் ஏற்றத்தாழ்வையும் எதிர்த்து இந்த அடுக்குகளின் எதிர்ப் பின் சக்தியையும் (உக்கிரமான, தன்னியல்பான எழுச்சிகள், கலகங்களை நடத்தக் கூடிய திறமையையும்) ஆதிக்கம் செலுத்துபவர்களுக்கு அவர்கள் கீழ்ப்படிதலையும், நியாய மான சமூகத்தைப் பற்றி அவர்களுடைய உணர்ச்சிகரமான கனவையும் அதே சமயத்தில் வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்த முதலாளித்துவத்துக்கு முன்னால் அவர் களுடைய பலவீனத்தையும் வரலாற்று ரீதியாக விதிக்கப் பட்டிருக்கும் அழிவையும் பிரதிபலித்தது.

இத்தாலியில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் உள்ள மக்களுடைய வாழ்க்கையை நீதி, மனிதாபிமான அடிப்ப டையில் மாற்றுகின்ற அமைப்பைத் தயாரிக்கும் மாபெரும் கடமையை கம்பனேல்லா மேற்கொண்டார். அவர் இந்தப் புதிய சமூகத்தை **சூரிய நகரம்** என்னும் நூலில் வர்ணித் தார். கம்பனேல்லாவுக்கும் மோருக்கும் என்ன வேறுபாடு என்றால் கம்பனேல்லா இத்தகைய சமூகத்தைப் படைப்பது சாத்தியம் என்று கருதியதுடன் தன்னுடைய தொலை நோக்குடைய திட்டங்களை நிறைவேற்றுவதில் உணர்ச்சிகர மான போராளியாக இருந்தார்.

மதிநுட்பமும் கல்வியறிவும் உடைய அரசர்கள், தனிப் பட்ட பலனைக் கருதாமல் குடிமக்களின் நலத்தில் அக் கறையுள்ள அரசர்கள் இயற்கை, புனித நூல்களின் மொழி யைப் புரிந்து கொண்ட இறையியலாளர்கள் ஆகியோரால் தன்னுடைய செயல்திட்டத்தில் விரித்துரைக்கப்பட்ட முக்கிய

மான மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என்று கம்ப னேல்லா கூறினார். அவர் தன்னுடைய விண்ணப்பங்களை ஸ்பெயின், பிரெஞ்சு அரசர்கள், இத்தாலியின் அரசர்கள், போப் தலைமை தாங்கிய கத்தோலிக்க திருச்சபையின் அதி காரிகளுக்கு அனுப்பிய பொழுது தன்னுடைய சொந்த இலட்சியங்களுடன் முரண்படுகின்ற புகழ்ச்சி வாசகங்களைச் சேர்த்துக் கொண்டதற்கு இதுவே காரணம். இந்த ஆபத் தான துறவி முன்மொழிகின்ற சீர்திருத்தங்கள் தங் களுடைய தனியுரிமைகளுக்கு எதிராக இருப்பதுடன் தாங் கள் பாதுகாப்பளித்த சமூக நிறுவனங்களுக்கும் எதிரான வை என்பதை திருச்சபை அதிகாரிகளும் அரசர்களும் விரைவாக உணர்ந்தார்கள். ரோமன் கத்தோலிக்கத் திருச்ச பையும் ஸ்பானிய முடியாட்சியும் கம்பனேல்லாவை ஒடுக் கியது வியப்பல்ல; ஏனென்றால் அவர்கள் கம்பனேல்லா வைத் தம்முடைய சமரசப்படுத்த முடியாத எதிரியாகக் கருதினார்கள், அவரைச் சிறையில் அடைத்தார்கள்.

இந்த இளம் துறவி தன்னுடைய சொந்த நகரமான ஸ்டிலோவில் ஸ்பெயின் அரசருக்கு எதிரான சதியை அமைத் துத் தன்னுடைய அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். அவர் ஸ்பானிய நுகத்தடியிலிருந்து இத்தாலியை விடு விப்பதைப் பற்றி மட்டும் சிந்திக்கவில்லை, தன்னுடைய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு நீதி, சமத்துவத்தின் அடிப்ப டையில் உலகத்தை மாற்றுவதில் முதலாவதாக இருக்க வேண்டும், மனிதகுலத்துக்கு உதாரணமாக இருக்க வேண் டும் என்றும் சிந்தித்தார். 1599இல் சதிகாரர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார்கள். இரண்டு ஆண்டுச் சிறைவாசம், ஆன்மிக, உடலியல் சித்திரவதைக்குப் பிறகு கலகக்காரரும் புரட்சிக்காரருமான கம்பனேல்லா உலகத்தை மாற்றுவதற்குத் தன்னுடைய திட்டங்கள் சரியானவை

என்று இன்னும் அதிகமாக நம்பினார். அவர் **சூரிய நகரம்** என்னும் நூலை எழுதத் தொடங்கினார்.

**சூரிய நகர மக்களின் அரசும் அவர்களுடைய வாழ்க்கை முறையும்.** இப்புத்தகம் அன்று நிலவிய அமைப்பின் அநீதியைத் துணிகரமாக எதிர்த்தது, கூட்டு வாழ்க்கைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட புதிய சமூக அமைப்பை வர்ணித்தது.

கம்பனேல்லா சிக்கலான, முரண்பாடான அறிஞர், சிந்தனையாளர். அவருடைய மேதாவிலாசம் நிறைந்த ஊகங்கள் மத்தியகால ஏட்டுப்புலமைப் பரம்பரியத்துடன் இணைந்திருக்கின்றன, விண்ணக சகுனங்கள் மற்றும் மனித நடவடிக்கையை இயக்கக் கூடிய மந்திரத்தின் மீதான நம்பிக்கையுடன் இணைந்திருக்கின்றன. பைபிளில் சொல்லப்பட்டுள்ள ஆரூடங்கள், மத்தியகாலப் புனிதர்களின் மறை வெளிப்பாடுகள், தொன்மைக் காலத்தவர்களின் முன்னறிவிப்புகள் தீவிரமான மாற்றத்தின் அவசியத்தையும் தவிர்க்க முடியாத தன்மையையும் நிறுவியிருப்பதாக அவர் கருதினார். அதே சமயத்தில் இந்த பூமியில் வாழ்க்கையின் இருண்ட நிலை, தாய்நாட்டின், அதன் துர்ப்பாக்கியசாலிகள் மற்றும் ஏழைகளின் எதிர்காலத்தைப் பற்றிய அக்கறை மாற்றம் அவசியம் என்பதை வலியுறுத்துவதாக அவர் கருதினார். கம்பனேல்லா தன்னுடைய அரசியல், இலக்கிய நடவடிக்கையில் சுயநலம், ஏற்றத்தாழ்வு, அரசர்களின் கொடுங்கோன்மை, மக்களினங்களுக்கு மத்தியில் சண்டை ஆகியவற்றுக்கு எதிராக பாடுபட்டிருந்தார்; எல்லா சமூக, அரசியல் முரண்பாடுகளுக்கும் காரணமாகிய தனியுடைமையைக் கண்டித்தார்.

**உட்டோப்பியாவைப்** போல **சூரிய நகரமும்** உரையாடலின் வடிவத்தில் இருக்கிறது. மற்ற கற்பனாவாதிகளின்

நூல்களைப் போல இங்கும் ஒரு கடற்பயணியைச் சந்திக் கிறோம். ஜெனோவாவைச் சேர்ந்த அந்தக் கடற்பயணி யாரும் அறியாத ஒரு நாட்டைக் கண்டுபிடிக்கிறார். அங்கே இலட்சிய சமூக அமைப்பைக் கொண்ட அரசைக் காண்கிறார்.

சூரிய நகரத்தில் சமூக ஏற்றத்தாழ்வுக்குக் காரணமாகிய தனியுடைமை ஒழிக்கப்பட்டிருக்கிறது. அங்கே எல்லாப் பொ ருட்களும் மக்களின் பொது உடைமையாக இருக்கின்றன. கூட்டுச் சமூகத்தில் ஒவ்வொருவரும் ஒரே சமயத்தில் பணக் காரராகவும் ஏழையாகவும் இருப்பதாக கம்பனேல்லா கூறு கிறார். அவர்களிடம் எல்லாம் இருப்பதால் அவர்கள் பணக் காரர்கள், அவர்களிடம் எந்த உடைமையும் இல்லாதபடி யால் அவர்கள் ஏழைகள். ஆகவே அவர்கள் பொருட்களுக் குச் சேவை செய்யவில்லை; பொருட்கள் அவர்களுக்குச் சேவை செய்கின்றன.

சூரிய நகர மக்கள் ஒரு நபருக்கு ஒரு மனைவி என்னும் கொள்கையைப் பின்பற்றவில்லை; ஏனென்றால் அவர்களு டைய மனைவியர் பொதுவில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது உடைமை பொது என்பதற்கு உத்தரவாதமளிக்கின்ற, பாதுகாப்பளிக்கின்ற, ஆதரவளிக்கின்ற சாதனம், குழந்தை கள் பிறப்பதை அரசு கட்டுப்படுத்துகின்ற சாதனம் என்கிறார் கம்பனேல்லா. ஒருதாரக் குடும்ப முறையே தனியுடைமை யின் மூலத் தோற்றுவாய் என்று கம்பனேல்லா கருதினார். மேலும் அத்தகைய குடும்ப முறை இல்லாததும் பொது மனைவியர் முறை நிலவியதும் எல்லாக் குழந்தைகளையும் அரசு வளர்த்துக் கல்வி கற்பிக்கின்ற விளைவை ஏற்படுத் தும் என்று அவர் கருதினார்.

கம்யூனிச அரசாகிய சூரிய நகரத்தில் எல்லோரும் உழைக்கிறார்கள். அங்கே சோம்பேறிகள் கிடையாது, பிறர் உழைப்பைச் சுரண்டுபவர்கள் கிடையாது. எல்லா வகையான வேலைகளும் எல்லோரிடையிலும் திறமைக்கு ஏற்பவும் வினி யோகம் செய்யப்படுகின்றன. அதே சமயத்தில் எந்த

வேலையும் தகுதிக் குறைவானதல்ல. உணவு விடுதியில், சமையலறையில் வேலை செய்வது, நோயாளிகளுக்கு உதவி செய்வது, இதரவை அகௌரவமான தொழில் என்று யாரும் கருதவில்லை. அங்கே உழைப்பு சாபக்கேடு அல்ல, அது மிகவும் கௌரவமான, மதிப்புக்குரிய செயலாக, ஒரு நபருடைய தகுதிக்கு அளவுகோலாக இருக்கிறது. அருங் கலைகளைக் கற்ற, கைத்திறன் தொழில் நிபுணர்கள் முதல் ரகத்தைச் சேர்ந்த பிரபுக்களாக கௌரவிக்கப்படு கிறார்கள். "அதிகமான அருங்கலைகளில் தேர்ச்சி உடைய வர்களை இன்னும் மேன்மையானவர்களாகக் கருதுகிறார் கள்."* நாளொன்றுக்கு நான்கு மணி நேர வேலை விதிக் கப்பட்டது. எல்லோரும் உழைத்ததும் புதிய தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் பயன்படுத்தப்பட்டதும் வேலை நேரத்தைக் குறைப்பதை சாத்தியமாக்கியது. மோரின் **உட் டோப்பியாவில்** இந்த அம்சம் இல்லை.

தனிப்பட்ட குடும்பம் என்பது இல்லாத இந்த நாட்டில் வாழ்க்கை கூட்டு முறையில் நடைபெறுகிறது. எல்லாக் குடிமக்களும் பொதுக் கட்டிடங்களில் வசிக்கிறார்கள், தமது இருப்பிடத்தை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள், பொது உணவு விடுதிகளில் உண வருந்துகிறார்கள். அவர்களுக்குத் தேவையான எல்லா வற்றையும் அரசு கொடுக்கிறது, ஒருவரும் தன்னுடைய தேவையைக் காட்டிலும் அதிகமாகப் பெற்றுக் கொள்ளாத படி அரசு பார்த்துக் கொள்கிறது, குடிமக்கள் அணிகின்ற உடைகளின் ரகத்தையும் தன்மையையும் அரசு ஒழுங்குப் படுத்துகிறது. எல்லோரையும் சமப்படுத்துகின்ற முறையில் விநியோகம் நடைபெறுகிறது. உள்நாட்டில் பணத்தை உப

* *The "City of the Sun" by Thomas Campanella in Ideal Commonwealths,* New York, P. F. Collier & Son, 1901, p. 165.

யோகிக்க முடியாது, வெளிநாட்டு வர்த்தகத்துக்கு மட்டுமே அதைப் பயன்படுத்த முடியும்.

சூரிய நகரத்தின் அரசியல் அமைப்பு குடியாட்சிக் கோட்பாட்டை "அறிஞர்களின் ஆட்சியுடன்" இணைக்கிறது. குடியாட்சி பல அம்சங்களில் சம்பிரதாயத் தன்மையைக் கொண்டிருக்கிறது. இருபது வயதைக் கடந்த எல்லாக் குடிமக்களும் மாபெரும் கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். அக்கவுன்சில் மாதத்துக்கு இரண்டு முறை தவறாமல் கூடுகிறது. மாபெரும் கவுன்சில் ஆலோசனை உறுப்பாக மட்டுமே இருக்கிறது. அதிகாரிகள் தம்முடைய கடமையை நிறைவேற்ற வேண்டிய முறையை அது விவாதிக்கிறது, அப்பதவிகளுக்கு நபர்களை முன்மொழியும்; ஆனால் தேர்ந்தெடுக்காது. மாபெரும் கவுன்சில் கூட்டங்களில் குடிமக்கள் எவ்விதமான குறைகளைப் பற்றியும் தமது கருத்துகளைக் கூறலாம். குடிமக்களுடைய கருத்தின்படி அதிகாரிகள் நீக்கப்படுகிறார்கள் என்று கம்பனேல்லா பொதுப்படையாகக் கூறுவதுடன் நின்று விடுகிறார்; அப்படி நீக்குகின்ற நடவடிக்கை முறையை அவர் விளக்கவில்லை; அத்துடன் உயர்மட்டத் தலைவர்களை நீக்க முடியாது என்றும் கூறுகிறார். அதே சமயத்தில் அவர் நுணுக்கமான விவரங்களுடன் "அறிஞர்களின் ஆட்சியை" வர்ணிக்கிறார்; அந்த அமைப்பு மதகுருத் தன்மையைக் கொண்டிருக்கிறது. விஞ்ஞானம் மற்றும் சமயத்தின் ஒருமையைப் பிரதிபலித்த உயர்நிலை மதகுருக்கள் அரசை நடத்துவார்கள்.

சூரியன் என்னும் பெயருடைய தலைவர் கூட்டு சமூகத்துக்குத் தலைமை தாங்குவார். அவருக்கு மூன்று துணைத் தலைவர்கள் இருப்பார்கள்: வலிமை (இராணுவ விவகாரங்களுக்குப் பொறுப்பாளர்), அறிவு (விஞ்ஞானங்களுக்குப் பொறுப்பாளர்), அன்பு (உணவு, உடை, பிறப்பு விகிதம், கல்விக்குப் பொறுப்பாளர்). ஆயுட் காலப் பதவிகளுக்குத்

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற இந்தத் தலைவர்கள் மற்ற எல்லா அதிகாரிகளையும் தேர்ந்தெடுப்பார்கள், உண்மையில் நியமிப்பார்கள். அதிகாரிகளைக் கொண்ட சிறிய கவுன்சில் அவர்களது நியமனத்தை அங்கீகரிக்கும்.

சூரிய நகரத்தில் அரசியல் ஆட்சி மதகுருக்களின் அமைப்புடன் இணைந்திருக்கும். தலைவர் தலைமை மதகுருவாக இருப்பார். உயர்நிலை அதிகாரிகள் மதகுருக்களாக இருப்பார்கள்.

இலட்சிய அரசில் சமயத்தை வைத்திருந்த கம்பனேல்லா அது சமூகத்தை ஒன்றுசேர்க்கின்ற மந்திர சக்தி என்று கருதினார். பெருந்திரளான மக்கள் மீது தாக்கம் செலுத்துவதற்குரிய வேறு எந்த சக்தியையும் அவரால் கற்பனை செய்ய முடியவில்லை.

தோமஸோ கம்பனேல்லா தன்னுடைய கம்யூனிசக் கருத்துகளை சமூக வளர்ச்சியைப் பற்றிய விதிகளிலிருந்து (அக்காலத்தில் இந்த விதிகளைப் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை) அல்லது கிறிஸ்துவ சமயத்தின் மறை வெளிப்பாடுகளிலிருந்து பெறவில்லை; ஆனால் தத்துவஞானச் சிந்தனைகளிலிருந்து, மனித அறிவின் ஆற்றலிலிருந்து பெற்றார். அவர் சூரிய நகரத்தை கடவுள் அருளிய அரசு என்று கருதவில்லை; தன் சமகாலத்தவர்கள் ஒரு கூட்டு வாழ்க்கைச் சமூகத்தை நிறுவ முடியும் என்று அவர் கருதினார்.

கிராம, நகர ஏழை மக்களின் நலன்களை வெளியிட்டவர் என்ற முறையில் கம்பனேல்லாவின் கருத்துகளும் நடவடிக்கைகளும் அவர்களுடைய சிறந்த அம்சங்கள், பலவீனமான அம்சங்கள் ஆகிய இரண்டையும் பிரதிபலித்தன. அவர் ஒடுக்குமுறையை எதிர்ப்பது மேலேயிருந்து அருளுதவி வரும் என்னும் நம்பிக்கையுடன் சேர்ந்திருக்கிறது; கலகம் செய்தவர் என்ற முறையில் அவரு

டைய புரட்சிகரமான கருத்துகள் மாற்றம் அவசியம் என்று ஆட்சியாளர்களை நம்பச் செய்வதற்கான முயற்சியுடன் சேர்ந்திருக்கிறது; அவருடைய விஞ்ஞான ஆதரவைத் தொடர்ந்து "இயற்கையான சமயத்தைப்" பற்றிய கூற்று வருகிறது, பொதுவுடைமை அறைகூவல் சமய ஆட்சியுடன் இணைந்திருக்கிறது.

கம்பனேல்லா முதலாளித்துவத் தன்னலம், ஆணவத்தை எதிர்த்து தனிமனிதனை அரசின் தொடர்ச்சியான கட்டுப்பாட்டிலும் வைக்கிறார். பிறப்பு, பொருளாயத வசதிகளை அடிப்படையாகக் கொண்ட காதலை நிராகரிக்கின்ற பொழுது அவர் தனிப்பட்ட காதலைப் புறக்கணிக்கிறார்; கல்வியின் பொது இயல்பின் மீது மாபெரும் கவனத்தைக் குவித்த பொழுது குடிமக்களின் அன்றாட வாழ்க்கை புலமை மிக்க உயர் மதகுருக்களின் ஆணைகளின்படி நடைபெற வேண்டும் என்கிறார். சூரிய நகரத்தின் மக்கள் குழுக்களாகச் சேர்ந்து வேலை செய்வது மட்டுமன்றி ஒன்றாகவே உண்கிறார்கள், உறங்குகிறார்கள். அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைகள் ஆட்சியாளர்களுடைய ஆணைகள், கிரகங்களின் சின்னங்களுடன் முழுமையாகப் பொருந்தியிருக்கின்றன. கம்பனேல்லா உளவாளிகள் இருக்க வேண்டும் என்றார்; சமய ஒற்றுமையில் அக்கறை கொண்டிருந்தார்; திருச்சபைக்கு எதிரான குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்றார். ஆக, நீதி மற்றும் அறிவு பூர்வமான சமூகத்தைப் பற்றிய அவருடைய கனவு "பாசறைக் கம்யூனிசத்தின்" சில அம்சங்களைக் கொண்டிருந்தது.

அதே சமயத்தில் கம்பனேல்லா பல கம்யூனிசக் கொள்கைகளைத் துல்லியமாக வகுத்தளிப்பதிலும் மேதாவிலாசமான ஊகங்களை முன்வைப்பதிலும் வெற்றி பெற்றார். தனியுடைமையும் சுரண்டலும் ஒழிப்பு, கட்டாயப்

பொது உழைப்பு, உற்பத்தி, வினியோகத்தின் பொது அமைப்பு, உழைப்பின் மூலம் மக்கள் கல்விப் பயிற்சி பெறுதல், சமூக வாழ்க்கையில் விஞ்ஞானத்தின் பாத்திரம், மக்களுக்குக் கல்வி, யுத்தங்களுக்கும் தகராறுகளுக்கும் முடிவு கட்டுதல் ஆகியவை பற்றிய அவருடைய கருத்துகள் **சூரிய நகரம்** முந்நூறு ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் நிலைத்திருப்பதற்கு உதவின.

### ஜெரார்டு வின்ஸ்டன்லி— இங்கிலாந்தின் முதலாளித்துவப் புரட்சியின் கற்பனாவாத கம்யூனிஸ்டு

**ஜெ. வின்ஸ்டன்லி—டிகர்களின் (தோண்டுபவர்களின்) சித்தாந்தி.** ஜெ. வின்ஸ்டன்லி (1609—1652க்குப் பிறகு மரணம்) தாமஸ் மோர், தோமஸோ கம்பனேல்லாவிடமிருந்து வேறுவிதமான கம்யூனிச சமூகத்தைக் குறித்து கற்பனையைக் கொண்டிருந்தார். அவர் கிறிஸ்துவ சமயக் கருத்துகளையும் பகுத்தறிவுக் கருத்துகளையும் இணைத்து கம்யூனிச முறையிலான கற்பனைச் சமூகத்துக்கு மற்றொரு உதாரணத்தைப் படைத்தார்.

வின்ஸ்டன்லி லங்காஷயரில் பிறந்தார். அவருடைய தகப்பனார் சாதாரண வர்த்தகர். அவர் முறையாகப் படிக்கவில்லை; தன்னுடைய தகப்பனாரைப் போல துணிகளை விற்பனை செய்து வந்தார். அவர் திவாலானபடியால் நாட்டுப்புறத்துக்குச் சென்று குடியேறினார். அங்கே டிகர்களின் இயக்கத்தில் சேர்ந்தார். சிறிது காலத்துக்குப் பிறகு வின்ஸ்டன்லி இந்த இயக்கத்தின் தலைவரானார். அந்த இயக்கம் 17ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்துப் புரட்சியின் மிகவும் ஜனநாயக அணியாக இருந்தது.

முதலாம் சார்ல்ஸ் சிரச்சேதம் செய்யப்பட்டு நாட்டில்

குடியரசு அமைக்கப்பட்ட பிறகு **1649**இன் வசந்த காலத்தில் டிகர்கள் ஒரு இயக்கமாகத் தோன்றினார்கள். சர்ரே மாவட்டத்தில், லண்டனின் அருகில், காலியாகக் கிடந்த பொது நிலத்தில் கிராம ஏழைகளைக் கொண்ட சிறு குழு குடியிருப்புகளைக் கட்டியது. அங்கே அவர்கள் சாகுபடி செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் ''தோண்டுபவர்கள்'' **(Diggers)** என்று அழைக்கப்பட்டார்கள். அந்த இயக்கமும் அதே பெயரைப் பெற்றது. ஆனால் அந்த இயக்கம் வலிமையானதல்ல. அதைப் பாராளுமன்றம், குடியரசு அதிகாரிகள், நிலக்கிழார்கள், ஸ்தல விவசாயிகள் ஆகியோர் எதிர்த்தார்கள். **1650**இன் வசந்த காலத்தில், நிறுவப்பட்டு ஒரு ஆண்டுக் காலத்துக்குப் பிறகு சர்ரே கம்யூன் கலைக்கப்பட்டது.

சர்ரே கம்யூன் இருந்த பொழுது **(1649—1650)** வின்ஸ்டன்லி எழுதிய பிரசுரங்கள் டிகர்களின் முக்கியமான நிலைகளை விளக்கின: பொது நிலத்தைக் கூட்டாக விவசாயம் செய்வது சுதந்திர மக்களின் உரிமை; நிலம் பொதுவில் வைக்கப்பட்டுக் கூட்டாக விவசாயம் செய்யப்பட்டு அதன் பலன்கள் பொது உடைமையாக இருக்கின்ற எல்லா இடங்களிலும் நீதியும் சுதந்திரமும் நிலவும். பொது நிலம் குறிப்பிட்ட அளவில் இருந்தாலொழிய கம்யூனிச மாற்றம் வெற்றி பெற முடியாது என்று வின்ஸ்டன்லி கருதினார். அப்பொழுது நிலத்தில் அரசருடைய நிலம், திருச்சபை நிலம் மற்றும் கிராம சமூக நிலம் அடங்கும். அதைக் குடியரசு நிலம் என்று அவர் கூறினார். இவ்விஷயத்தில், தனியுடைமையாக இருந்த நிலத்தைப் பறிமுதல் செய்வதை நிராகரித்த வின்ஸ்டன்லி, புதிய சமூகம் குடியரசு நிலத்தில் தான் நிறுவப்படும் என்று கருதினார்.

வின்ஸ்டன்லி எழுதிய மிகவும் முதிர்ச்சியடைந்த, மிகவும் பிரபலமான பிரசுரம் **சுதந்திரத்தின் விதி** **(1652)** என்

பதாகும். அதில் ஆசிரியர் எதிர்கால சமூகத்தைப் பற்றி விவரமான வர்ணனையைக் கொடுத்தார்.

**சுதந்திரத்தின் விதி.** இங்கிலாந்தில் அது ஒரு மாறும் கால கட்டம். புரட்சியில் பங்கெடுத்த ஏழை மக்கள் தங்களுடைய நிலையை உயர்த்த முடியும் என்னும் நம்பிக்கையை இன்னும் இழந்து விடவில்லை. புரட்சியின் மூலம் அதிகமாகப் பலனடைந்த நடுத்தரப் பிரபுக்குலமும் முதலாளி வர்க்கமும் பிற்போக்காக மாறிக் கொண்டிருந்தன, குடியரசு முறையை ஒழிப்பதற்கு வேகமாகப் பாடுபட்டுக் கொண்டிருந்தன.

வின்ஸ்டன்லியின் பிரசுரம் தனியுடைமை, வர்த்தகம், பணம் ஆகியவை ஒழிக்கப்பட்டுள்ள புதிய சமூகத்தை, சுதந்திரக் குடியரசை நிர்மாணிப்பதற்குரிய திட்டத்தைக் கொடுக்கிறது. உடைமை வேறுபாடுகளை ஒழிக்க வேண்டும், ஏனென்றால் மற்றவர்களுடைய உழைப்பின் பலன்களை சுவீகரிப்பதனால் அந்த வேறுபாடுகள் தோன்றுகின்றன என்று அவர் கருதினார்.

சுதந்திரக் குடியரசில் வர்த்தகமோ, பணமோ கிடையாது என்பதால் ஆரம்ப உற்பத்தி அலகான குடும்பம் தான் உற்பத்தி செய்த எல்லாவற்றையும் பொதுக் கிட்டங்கிகளில் கொடுத்து விடும்; அங்கிருந்து தன்னுடைய உற்பத்திக்கும் நுகர்வுக்கும் அவசியமானவற்றை இலவசமாகப் பெறும். நுகர்வின் தனித் தன்மை நீடிக்கும். சுதந்திரக் குடியரசில் (மோர் **உட்டோப்பியாவில்** வர்ணித்த) பொது உணவு விடுதிகள், விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவை இருக்கமாட்டா. வின்ஸ்டன்லி குடும்ப அலகுடன் நின்று விடாமல் அதிக விரிவாக உழைப்பின் அமைப்பை வர்ணித்தார். குழந்தைகள் தொழிற் கல்வி பெறுகின்ற பொதுப் பட்டறைகளை அவர் வர்ணித்தார்; அவற்றில் வேலை செய்கின்ற

குழந்தைகள் சமூகத்துக்குப் பயனுள்ள உறுப்பினர்களாக வளர்ச்சி அடைவார்கள். பொதுப் பட்டறைகளைப் பற்றிய கருத்து எதிர்கால சமூகத்தைப் பற்றிய வின்ஸ்டன்லியின் திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வின்ஸ்டன்லி தன்னுடைய முந்திய பிரசுரங்களைப் போலன்றி, **சுதந்திரத்தின் விதியில்** சமூக உற்பத்தியை ஒழுங்குப்படுத்துவதற்கு, பல்வேறு வரம்புமீறல்களுக்கு எதிராக அதன் அடிப்படையான கோட்பாடுகளைப் பாதுகாப்பதற்கு ஒரு திட்டவட்டமான சமூக ஆட்சியின் அவசியத்தை ஒத்துக்கொள்கிறார்.

சுதந்திரக் குடியரசின் அரசியல் அமைப்பு முறை முரணில்லாத ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் இருக்கும். எல்லா அதிகாரிகளும் ஒரு ஆண்டுக் காலப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தலைமையான சட்டமியற்றும் அதிகாரம், நிர்வாக அதிகாரம் தலைமையான பொருளாதார நிர்வாகம் ஆகியவை நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும். அந்த நாடாளுமன்றமும் ஒரு ஆண்டுக் காலப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படும். உள்நாட்டு யுத்த காலத்தில் அரச மரபை ஆதரித்தவர்கள், புரட்சியால் பறிமுதல் செய்யப்பட்ட உடைமைகளைக் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்து லாபமீட்டியவர்கள், இதரர்களுக்கு வாக்குரிமை கிடையாது.

கடவுளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதே உண்மையான சமயம் என்று வின்ஸ்டன்லி கருதியபடியால் அவர் கற்பனை செய்த குடியரசில் திருச்சபை இருக்காது, மதகுருக்களும் இருக்க மாட்டார்கள், எனவே பள்ளிக்கூடங்களில் கல்வி மதச் சார்பு இல்லாத தன்மையைக் கொண்டிருக்கும். இளம் குடிமக்கள் பொது அறிவு, மொழிகள், விஞ்ஞானங்கள், வரலாற்றைப் பயிலுவர். கல்வி பயனுள்ள

உழைப்புடன் இணைக்கப்படுமாதலால் அவர்கள் உண்மையான ஒழுக்கநெறிக் கல்வி, சமூகத்துக்குப் பயன்படக் கூடிய தொழிலில் திறமை ஆகியவற்றைப் பெறுவர்.

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கற்பனாவாத கம்யூனிசம் வின்ஸ்டன்லி எழுதிய **சுதந்திரத்தின் விதி** என்னும் நூலில் மிகவும் உயர்ந்த தத்துவ நிலையை எட்டியது. அவருடைய போதனை, நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவச் சுரண்டலுக்கு ஒடுக்கப்பட்ட, அழிந்து போன பெருந்திரளான மக்களுடைய தன்னியல்பான எதிர்ப்பை வெளியிட்டது; ஆனால் வின்ஸ்டன்லி முன்வைத்த இலட்சியம் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கிலச் சமூகத்தின் பொருளாயத நிலைமைகளில் மூலவேர்களைக் கொண்டிருக்கவில்லை.

16, 17ஆம் நூற்றாண்டுகளில் கற்பனாவாத கம்யூனிசம் மூலதனத்தின் ஆதித்திரட்சியின் நிலைமைகளையும் ஆரம்பகால முதலாளித்துவத்தின் குறியடையாளமான சுரண்டல் வடிவங்களையும் பிரதிபலித்தது. அது பெருந்திரளான மக்கள் பாட்டாளி வர்க்கமாதல் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆரம்பக் கட்டம், பாட்டாளிகள் வர்க்கமாக இன்னும் வளர்ச்சி பெறாத கட்டம். ஆகவே கம்யூனிசக் கற்பனைகள் இலட்சிய சமூகத்தைப் பற்றிய விசித்திரமான காட்சியாகத் த்விர்க்க இயலாதபடி இருந்தன. அதற்கு மிகச் சிறந்த மூன்று உதாரணங்களாக தாமஸ் மோரின் **உட்டோப்பியா,** தோமஸோ கம்பனேல்லாவின் **சூரிய நகரம்,** ஜெரார்டு வின்ஸ்டன்லியின் **சுதந்திரத்தின் விதி** ஆகியவற்றைக் குறிப்பிட முடியும்.

அத்தியாயம் மூன்று

# 18ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சுக் கற்பனாவாத கம்யூனிசம்

## ஜான் மெல்யே

**ஜான் மெல்யே—புரட்சிகர விமர்சகர், ஒடுக்கப்பட்டவர்களின் காவலர்.** 18ஆம் நூற்றாண்டு கற்பனாவாத கம்யூனிசத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தைக் குறித்தது; நிலப்பிரபுத்துவ சமூகத்திற்குள் முதலாளித்துவ உறவுகளின் கூடுதலான வளர்ச்சியை அது அடிப்படையாகக் கொண்டிருந்தது.

இக்காலத்தில் கம்யூனிசக் கருத்துகள் கற்பனைப் பிரயாண நாவல்கள் என்ற வடிவத்தைக் காட்டிலும் கம்யூனிசத் தத்துவங்களின் முதல் உதாரணங்களாக இருந்தன. 18ஆம் நூற்றாண்டில் பிரான்சில் நிலப்பிரபுத்துவ எதேச்சாதிகார ஆட்சிக்கு எதிராக மாபெரும் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி வெடித்த காலத்தில் அவை தோன்றின.

ஜான் மெல்யே (1664—1729) என்னும் பெயர் கொண்ட கிராமப் பாதிரியார் கற்பனாவாத கம்யூனிசத்தில் ஒரு புதிய கட்டத்தை நிறுவினார். அவர் தன்னுடைய வாழ்க்கையின் கடைசி ஆண்டுகளில் ஒரு விரிவான நூலை எழுதினார். அந்த நூலைப் பாதுகாப்பதற்காக, அது தன் சமயக் குழாத்தினருக்கு எழுதப்பட்ட உயில் என்று கூறி ஒரு



5—1184

கௌரவ நீதிபதியிடம் ஒப்படைத்தார். **உயில்** என்ற பெயரில் தான் அது சமூகத் தத்துவஞானத்தில் இடம் பெற்றிருக் கிறது, அதன் புரட்சிகரமான உள்ளடக்கத்திற்காக, போர்க் குணமிக்க நாத்திகவாதத்துக்காகக் கண்டனம் செய்யப் பட்டிருக்கிறது. பிரெஞ்சுப் புரட்சிக்கு 60 ஆண்டுகளுக்கு முன்பு மரணமடைந்த ஜான் மெல்யே சித்தாந்த ரீதியில் அதற்கு எழுச்சியூட்டினார்.

மெல்யே நிலப்பிரபுத்துவ உறவுகளையும் அரசருடைய எதேச்சாதிகாரத்தையும் தார்மிக அறவியல் நிலை யிலிருந்து விமர்சனம் செய்தார்; ஏனென்றால் சண்டை, பொறாமை, பொய்மை, அநீதி, போலித்தனம், கொடுங் கோன்மை, எல்லா விதமான தீமைகள் மற்றும் துன் பங்களுக்கு அவை காரணம் என்று அவர் கருதினார்.

எல்லா அரசர்களுமே கொடுமையானவர்கள், அவர்கள் எப்பொழுதுமே மக்களினங்களை ஒடுக்கினார்கள்; ஆனால் அத்தகைய நிலைமை மனித இயல்புக்கு மாறானது என்று அவர் கருதினார். எல்லா மனிதர்களும் பிறப்பில் சமம், நல்ல முறையில் வாழ்வதற்கும் சுகங்களை அனுபவிப் பதற்கும் அவர்கள் சம உரிமைகளைக் கொண்டிருக்கிறார் கள், தமக்கு அவசியமான எல்லாவற்றையும் பெறுவதற்கு சமூக ரீதியில் உபயோகமான வேலையைச் செய்கின்ற பொழுது இயற்கையான சுதந்திரத்துக்கும் பூமி தரும் நலன்களில் தனக்குரிய பகுதியை அனுபவிப்பதற்கும் சம உரிமை உள்ளவர்கள் என்று மெல்யே வலியுறுத்தினார்.

அரசருடைய அதிகாரத்தினால் பிரதிநிதித்துவம் செய் யப்பட்ட அரசு, நிலவுகின்ற அமைப்பைப் பாதுகாப்பதற்கு நேரடியாக வன்முறையைப் பயன்படுத்துகிறது. எனினும் திருச்சபையின் ஆன்மிக அடக்குமுறை இன்னும் அதிக பயங்கரமானது. ஏனென்றால் மதகுருக்களின் சாமர்த்திய மான பொய்களால் ஏமாற்றப்பட்ட மக்கள் வலியவர்களும்

செல்வர்களும் தங்கள் கழுத்தில் நுகத்தடியை மாட்டுவதை விருப்பத்தோடு குனிந்து ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஜான் மெல்யே தனியுடைமைக்கு உண்மையான எதிரியாக இருந்தார். தனியுடைமையும் செல்வத்தை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற நிலையும் இருக்கும் பொழுது ஒவ்வொருவரும் எந்த முறையிலும் அச்செல்வத்தை இயன்றவரை அதிகமாகப் பெறுவதற்கு முயல்கிறார், ஏனென்றால் பேராசையைத் தணிக்க முடியாது; அது மனிதனுடைய தீய குணங்கள் எல்லாவற்றையும் தூண்டுகிறது.

அப்படியானால் கொடுங்கோன்மை மற்றும் அநீதியை யார் எதிர்க்க வேண்டும், எப்படி எதிர்க்க வேண்டும்? கொடுங்கோன்மை, தீமை, அநீதியின் சுமையைத் தாங்கிக் கொண்டிருப்பவர்கள்தான் போராட வேண்டும் என்று மெல்யே முடிவு செய்தார். ஆனால் அத்தகைய போராட்டத்துக்கு அவர்கள் இன்னும் தயாராகவில்லை; அவர்கள் பிரமைகளால் கட்டப்பட்டிருக்கிறார்கள்; அந்த வலையைக் கிழித்தெறிய முடியாத அளவுக்கு அறியாமையில் மூழ்கியிருக்கிறார்கள். ஒடுக்கப்பட்டு வறுமைப்பட்டிருக்கின்ற பெருந்திரளான மக்களுக்கு அறிவூட்டி அவர்களை ஒன்று சேர்த்தலே அதை அகற்றுவதற்கு ஒரேயொரு வழி என்று அவர் கருதினார். மக்களை சமய மூடநம்பிக்கைகளிலிருந்து விடுவித்து, ஆட்சியாளர்கள் மீது வெறுப்பையும் இகழ்ச்சியையும் அவர்களிடம் தூண்டி கொடுங்கோலாட்சியைத் தூக்கியெறியக் கூடிய நிலைக்கு அவர்களைக் கொண்டு வருவது அறிவுடையவர்களின் கடமை என்று அவர் கருதினார்.

**நீதியான சமூகத்தைப் பற்றி ஜான் மெல்யேயின் கருத்து.** ஒடுக்கப்பட்டவர்கள், துர்ப்பாக்கியசாலிகள், குறிப்பாக, கிராம

ஏழை மக்கள் எத்தகைய சமூக அமைப்புக்குப் போராட வேண்டும் என்ற கேள்விக்கு பதிலளிக்கின்ற முறையில் மெல்யே ஒரு வகையான கூட்டு வாழ்க்கை, சமப்படுத்து கின்ற கம்யூனிசத்தை வர்ணித்தார். நீதியான சமூகத்தைப் பற்றிய அவருடைய கருத்து அவருக்குப் பழக்கமான, கூட்டுச் சமூக மரபுகளும் கூட்டுச் சமூக நிலவுடைமையின் எச் சங்களும் நிலவிய கிராம எதார்த்தத்தின் தாக்கத்தில் உருப்பெற்றிருந்தது.

அவருடைய இலட்சியம் கம்யூன். தனியுடைமை ஒழிக்கப் படுவது மக்களுடைய உண்மையான மனித இயல்பை மாற்று கின்ற எல்லாத் தீமைகளிலிருந்தும் மக்களை விடுவிக் கும், சகோதர அன்பு என்னும் புதிய உறவு தோன்றும். சமூக உடைமை ஏற்படுகின்ற பொழுது பூமியில் உள்ள எல் லாச் செல்வங்களையும் அவற்றின் பலன்களையும் மக்கள் கூட்டாக அனுபவிப்பார்கள், அவற்றைப் பயன்படுத்துவதில் எல்லோருக்கும் சம உரிமைகள் இருக்கும். மெல்யேயின் இலட்சிய சமூகம் கிராம சமூகங்களின் தொகுதியாக இருக் கும். அவை சமாதானத்தைப் பாதுகாப்பதற்கும் பரஸ்பர உதவி பெறுவதற்கும் ஒன்றியங்களாக இணையும். இல்லை யென்றால் அவை நலம் பெற முடியாது. எவ்விதமான திட்டத்துக்கும் உட்பட்ட ஒற்றை தேசிய பொருளாதார அமைப்பைப் பற்றிய கருத்தை அவருடைய **உயிலில்** பார்க்க முடியாது.

நீதியான சமூகத்தைப் பற்றிய மெல்யேயின் கருத்து அதிகமான விவசாய, குட்டி முதலாளி வர்க்க இயல்பை, வெகுளித்தனமான கற்பனாவாதத் தன்மையைக் கொண் டிருந்தது.

பெரும்பான்மையினருடைய துன்பத்துக்கும் பிறரைச் சுரண்டுகின்ற சிறுபான்மையினருடைய செல்வத்துக்கும் முந் தியவர்களுடைய அறியாமை, எளிதில் ஏமாறும் தன்மை,

பிந்தியவர்களுடைய மதிநுட்பம், ஆணவம், பேராசை ஆகியவையே காரணம் என்று அவருடைய தத்துவம் கூறி யது. மதம் என்பது மக்களுடைய சமூக வாழ்க்கை அவர்க ளின் மனங்களில் தாறு மாறாக பிரதிபலிப்பது என்பதற்கு மாறாக அது வெறும் மோசடிச் சாதனம் என்பதாக மட்டுமே அவர் பார்த்தார். மக்களுக்கு அறிவூட்டி, அவர் களுடைய பிரமைகளை அகற்றி, எதேச்சாதிகார ஆட்சியா ளர்களின் பால் வெறுப்பை, இகழ்ச்சியை ஏற்படுத்தினால் புரட்சி வரும் என்று அவர் கருதினார்.

மதத்துக்கு எதிரான போராட்டத்தைப் பெருந்திரளான மக்கள் ஒடுக்கப்படுதலுக்கு எதிரான போராட்டத்துடன் இணைத்தவர்களில், தன்னுடைய பொருள்முதல்வாத, நாத்திகக் கருத்துகளுடன் உழைக்கும் மக்களை அறை கூவியழைத்த முதல்வர்களில் ஒருவர் ஜான் மெல்யே. நிலவுகின்ற வெறுக்கத் தக்க சமூக அமைப்பை புரட்சி கரமான முறையில் ஒழித்து அதனிடத்தில் கம்யூனிச உறவு களைக் கொண்ட அமைப்பை ஏற்படுத்துமாறு அவர் பெருந்திரளான மக்களை அறைகூவியழைத்தார்.

### காப்ரியேல் பொன்னோ டெ மாப்லீ

**முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் சித்தாந்த அடிப்ப டையும் கா. மாப்லீயின் இயற்கைக் கம்யூனிசத் தத்துவ மும்.** மாபெரும் பிரெஞ்சு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்றது. அறிவியக்கத்தின் மேதாவிலாசம் நிறைந்த தத்துவஞானி களான ருஸ்ஸோ, டிட்ரோ, ஹோல்பாஹ், இதரர்கள் அப் புரட்சிக்கு சித்தாந்த ரீதியில் உத்வேகமூட்டினார்கள். எல்லா மக்களும் இயற்கையில் சமமானவர்கள், மனிதனுடைய மகிழ்ச்சி பகுத்தறிவையும் நீதியான முறையில் அமைக்கப்

பட்ட சமூகத்தையும் பொறுத்தது என்ற அறிவியக்கவாதிகளின் தத்துவஞானக் கருத்துகள் கம்யூனிசக் கருத்துகளின் வளர்ச்சி மீது தாக்கம் செலுத்தின என்று மார்க்சும் எங்கெல்சும் **புனிதக் குடும்பம் (1845)** என்னும் நூலில் முதன்முதலாக சுட்டிக்காட்டினார்கள். உதாரணமாக, பெரிய உடைமையின் நிலப்பிரபுத்துவ மற்றும் இதர ரகங்களை எதிர்த்த ரூஸ்ஸோ செல்வர்களும் ஏழைகளும் இல்லாத சமூக அமைப்பை நிறுவுவதற்குப் பாடுபட்டார். சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கு இடையிலும் செல்வத்தை சமமான முறையில் பங்கீடு செய்கின்ற கற்பனாவாதத் தத்துவத்தை அவர் முன்வைத்தார். தனிப்பட்ட உழைப்பை அடிப்படையாகக் கொண்ட சிறு வீதத் தனியுடைமை புதிய சமூக அமைப்புக்கு அடிப்படையாக இருக்கும் என்று அவர் கூறினார். தனியுடைமை எந்த வடிவத்தில் நிலவினாலும் அதை அடிப்படையாகக் கொண்டு சமூக ஏற்றத் தாழ்வை அகற்ற முடியாது என்பதை அவர் உணரத் தவறினார்.

ரூஸ்ஸோ, இதர அறிவியக்கவாதிகளின் கருத்துகள் முதலாளித்துவ சமூகத்தின் எல்லைகளுக்கு அப்பால் போகவில்லை. அவை வளர்ந்து கொண்டிருந்த முதலாளி வர்க்கத்தின் பல்வேறு குழுக்களின் நலன்களையும் விருப்பார்வங்களையும் ஏதாவதொரு சித்தாந்த வடிவத்தில் வெளியிட்டன. அதே சமயத்தில் அவர்களின் முற்போக்கான கருத்துகள் கம்யூனிசக் கற்பனைத் தத்துவங்களை விரித்துக் கூறவும் பரப்பவும் வழி வகுத்தன. அறிவியக்கவாதிகளின் வலிமையான தாக்கத்துக்கு உட்பட்டிருந்த மாப்லீ கம்யூனிசக் கற்பனைத் தத்துவங்களைப் படைத்தவர்களில் ஒருவராவார்.

காப்ரியேல் பொன்னோ டெ மாப்லீ **(1709—1785)** ஒரு மதகுரு. அவர் பிரபுக் குடும்பத்தில் பிறந்தவர்; முதலில்

எசு சபைக் கல்லூரியிலும் பிறகு சமயக் கல்லூரியிலும் படித்தார். செல்வாக்குடைய உறவினர்களது உதவியினால் வெளிவிவகார அமைச்சரவையில் ஒரு பதவியில் நியமிக்கப் பட்டார்; ஆனால் குறைந்த வசதிகளைக் கொண்டு எளி மையான வாழ்க்கை நடத்த விரும்பிய காரணத்தால் சிறிது காலத்துக்குப் பிறகு அந்தப் பதவியிலிருந்து வில கினார். அவர் இலக்கிய ஆராய்ச்சி செய்தார்; வரலாறு, தத்துவஞானம், சட்டம் ஆகியவற்றைக் கற்றார். அரசியல் சிந்தனையாளர் என்று ஐரோப்பா முழுவதிலும் பிரபலம டைந்தார்.

மிகவும் முந்திய காலமாகிய அடிமை உடைமைக் காலத் தில் தோன்றிய பொற்காலத் தொல்கதையை மாப்லீ தனக் குரிய முறையில் மாற்றியமைத்து இயற்கைக் கம்யூனிசத் தத்துவத்தை உருவாக்கினார். அறிவியக்கத் தத்துவ ஞானத்தின் மற்ற பிரதிநிதிகளைப் போலவே மாப்லீ மனி தனுடைய இயற்கையான உரிமை மற்றும் மனிதாபிமான இயல்பு என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண் டார். அறிவியக்கத்தின் முதலாளி வர்க்கப் பிரதிநிதிகள் நிலப்பிரபுத்துவ அமைப்பைக் கண்டனம் செய்வதற்கு, அதை அகற்றப் போகின்ற முதலாளித்துவ அமைப்பை நியா யப்படுத்துவதற்கு இத்தத்துவத்தைப் பயன்படுத்தினார் கள்; ஆனால் மாப்லீ இத்தத்துவத்தைக் கொண்டு தன் னுடைய கம்யூனிசக் கற்பனைச் சமூகத்தை நிர்மாணித்தார்.

கம்யூனிச அமைப்புதான் மக்களின் தொன்மையான, இயற்கையான வாழ்க்கை முறை, அது இயற்கையுடன் முழுமையாகப் பொருந்தியிருக்கிறது என்று அவர் கூறி னார். எல்லா மக்களும் சமம் என்பது இயற்கையின் உத் தேசம், இயற்கை மக்கள் எல்லோருக்கும் ஒரே விதமான உறுப்புகளையும் தேவைகளையும் கொடுத்திருக்கிறது, பூமி யின் வளங்களைப் பொதுவான முறையில் உபயோ

இக்குமாறு அளித்திருக்கிறது என்று அவர் கூறினார். இயற்கையான நிலையில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் வேறுபாடு கிடையாது, ஆணவம், பேராசை ஆகியவை கிடையாது. உரிமைகளிலும் கடமைகளிலும் எல்லோரும் சமமாக இருக்கிறார்கள்.

**மாப்லீயின் கம்யூனிச இலட்சியமும் மனிதகுலத்தின் எதிர் காலத்தைப் பற்றி அவருடைய அவநம்பிக்கையும்.** மாப்லீ தனியுடைமையையும் அதை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தையும் தீவிரமாக விமர்சித்தார். தனியுடைமையை எவ்வளவு நியாயமான முறையில் விநியோகம் செய்தால் கூட அது காலப் போக்கில் உடைமை ஏற்றத்தாழ்வுக்கும் சமூகம் வர்க்கங்களாகப் பிரிந்து நிற்பதற்கும் சமூகத்தில் ஒழுங்குமுறை நிலவுவதற்கு இன்றியமையாத நல்ல குணங்கள் தீய குணங்களாகத் தரங்கெடுவதற்கும் இட்டுச் செல்லும் என்று அவர் கூறினார். உடைமை வேறுபாடுகள் மக்களைச் சோர்வடையச் செய்கின்றன, சமூகக் கேடான ஆசைகளைத் தூண்டுகின்றன, மக்களிடம் மூடநம்பிக்கைகளையும் பிரமைகளையும் நிரப்புகின்றன, ஆணவத்துக்கும் சுய நலத்துக்கும் வழி வகுக்கின்றன என்று மாப்லீ கருதினார். செல்வர்கள் எப்பொழுதும் கற்பனையான தேவைகளையே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் ஏழைகள் தங்களுடைய மிகவும் ஜீவாதாரமான தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய இயலாமலிருக்கிறார்கள். தொழிலாளி அபரிமிதமான பொருட்களை உற்பத்தி செய்கிறான், ஆனால் அவன் மனதில் ஆழமான வேதனை இருக்கிறது; ஏனென்றால் அவன் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் குறைவான உணவுதான் கிடைக்கிறது, அந்த உணவுகூட மறு நாள் அவனுக்குக் கிடைக்குமா என்பது அவனுக்குத் தெரியாது.

இந்த நிலைமையை ஒழிப்பதற்கு கம்யூனிச அமைப்பை நிறுவுவதே மிகச் சிறந்த வழி என்று மாப்லீ கருதினார். மனிதகுலத்தின் துன்பங்களைப் பற்றிச் சிந்திக்கின்ற பொழுது யாருமே இல்லாத ஒரு தீவில் குடியரசை நிறுவ வேண்டும் என்னும் கருத்து தனக்குத் தோன்றியதாக அவர் எழுதினார். அந்தக் குடியரசில் வசிக்கின்ற மக்கள் அனைவரும் சகோதரர்கள்; தமக்கென்று சொந்தமாக எதுவும் இல்லாதிருப்பது அங்கே அடிப்படைச் சட்டமாக இருக்கும். ஒவ்வொரு குடிமகனும் தான் உற்பத்தி செய்த எல்லாவற்றையும் பொது உடைமை என்ற முறையில் பொதுக் கடைகளில் ஒப்படைப்பார். அதிகாரிகள் இப்பொதுக் கருவூலத்திலிருந்து குடிமக்களுக்கு அவசியமான எல்லாவற்றையும் வினியோகிப்பார்கள். அவர்கள் உழைப்பையும் சமூக உறுப்பினர்களுக்கு இடையில் பகிர்ந்து அளிப்பார்கள். எல்லோருடைய நலத்திலும் அக்கறை காட்டுதல், உழைப்பிற்குக் கௌரவம் அளித்தல் ஆகியவை ஊக்கமளிக்கின்ற முக்கியமான அம்சங்களாகும். இலட்சியக் குடியரசில் சட்டங்கள் குடிமக்கள் வேலை செய்ய உத்வேகமளிக்கும், பொதுச் சொத்தைப் பற்றி அக்கறை, மரியாதையை வளர்க்கும். இன்றுள்ள சமூகம் இயற்கை நிலையைச் சேர்ந்த சமூகமாக மாற முடியாது என்று மாப்லீ கருதினார். இயற்கையான நிலையின் சாதகங்களை மக்கள் உணர்ந்தவுடனே அத்தகைய சமூகத்தை நிறுவ முடியும், ஏனென்றால் கூட்டு வாழ்க்கை முறை மனித இயல்புடன் பொருந்தியிருக்கிறது, அத்தகைய சமூகத்தை அமைக்க மக்கள் விரும்புவார்கள் என்று சிலர் நினைக்கிறார்கள்; ஆனால் இது இயற்கையான மனிதர்களுக்கு மட்டுமே உண்மை ஆகும்; ஏற்றத்தாழ்வை அடிப்படையாகக் கொண்ட அமைப்பில் வளர்ந்த மனிதர்களுக்கு உண்மையல்ல என்று அவர் கூறினார். சமூக உடைமை தகர்ந்து தனி

யுடைமை தோன்றியதும் மக்கள் அதன் விளைவுகளி னால் நிரந்தரமாகத் துன்பப்படும்படி விதிக்கப்பட்டார்கள். சமூகம் பகைமையான நலன்களைக் கொண்ட வர்க்கங் களாகப் பிரிந்திருக்கிறது; அத்தகைய சமூகத்தில் எல் லோருக்கும் பொருந்துகின்ற ஒழுங்குமுறை என்பது இருக்க முடியாது. இத்தகைய நிலைமைகளில் மறுபடியும் சமத் துவத்தை ஏற்படுத்துவது மனித சக்திக்கு அப்பாற்பட் காரியமாகும். சமத்துவத்தை ஏற்படுத்துவதற்குச் செய்யப் படுகின்ற எல்லா முயற்சிகளும் ஒழிக்கப் போகின்ற வேற்று மைகளைக் காட்டிலும் பேரளவான கலவரங்களைத் தூண் டும். கம்யூனிச இலட்சியக் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கு எந்தவிதமான சாத்தியக் கூறுகளும் இல்லை என்று மாப்லீ கருதுகிறார். ஆகவே மக்களால் கம்யூனிசத்தை அடைய முடியாது என்ற அவநம்பிக்கையான முடிவுக்கு மாப்லீ வந்தார்; தனியுடைமையைப் பாதுகாத்துக் கொண்டு உடை மையில் சமத்துவத்தை உருவாக்கக் கூடிய சீர்திருத்தங் களை நிறைவேற்ற முயல்வதைத் தவிர வேறெதையும் செய்ய முடியாது என்றார்.

மாப்லீயை முரணில்லாத கம்யூனிஸ்ட் என்று கருத முடியாது என்ற போதிலும் இயற்கைக் கம்யூனிசத்தைப் பற்றிய அவருடைய தத்துவமும் கம்யூனிச அமைப்பின் சாதகங்களையும் தனியுடைமையை அடிப்படையாகக் கொண்ட அமைப்பின் பாதகங்களையும் பற்றிய அவரு டைய வாதமும் கம்யூனிசக் கருத்துகள் பரவுவதை ஊக்கு வித்தன.

### மொரெல்லி

**சுய உணர்வு இல்லாத கம்யூனிசத்திலிருந்து உணர்வுடைய கம்யூனிசத்துக்கு சமூகம் மாறுதல்.** மொரெல்லி முக்கிய

மான பிரெஞ்சுக் கற்பனாவாத கம்யூனிஸ்ட். அவருடைய நூல்கள் கம்யூனிசக் கருத்துகளின் வரலாற்றில் நிரந்தர மான இடத்தைப் பெற்றிருக்கின்றன. அவர் பிறந்த தேதி யோ, இறந்த தேதியோ தெரியவில்லை; அவருடைய வாழ்க் கையைப் பற்றி அநேகமாக ஒரு விவரமும் கிடையாது. ஒருவேளை மொரெல்லி என்பது புனைபெயராகவும் இருக்கலாம்.

மனித சமூகத்தின் வரலாறு சுய உணர்வில்லாத கம்யூ னிசத்திலிருந்து, மக்கள் இயற்கை விதியைப் பின்பற்றி இயற்கையான வாழ்க்கையை நடத்தியதிலிருந்து ஆரம்ப மாகிறதென்று மொரெல்லி கூறினார். அவர்களுக்குத் தனியுடைமையைப் பற்றித் தெரியாது; நிலமும் அதன் விளைபொருட்களும் எல்லோருக்கும் சொந்தமாக இருந் தன. ஆகவே அங்கே ஏற்றத்தாழ்வு இல்லை, செல்வர் களோ, ஏழைகளோ இல்லை. அது மனிதகுலத்தின் பொற் காலம்.

பூர்விக கம்யூனிசம் என்னும் இயற்கையான நிலை ஏன் மறைந்தது? மக்கள் இயற்கையிலிருந்தும் அதன் கோரிக் கைகளிலிருந்தும் ஏன் விலகினார்கள்? தனியுடைமை அமைப்பு ஏன் தோன்றியது? இக்கேள்விகளுக்கு பதிலளிக் கின்ற பொழுது மொரெல்லி ஆன்மிக, பௌதிகக் காரணங் களை வெளியிட்டார். மனித அறிவின் பலவீனம் ஆன்மிக காரணமாகும்; ஏனென்றால் மக்கள் கூட்டு வாழ்க்கை நடத்திய பொழுது அதுதான் சாத்தியமான அளவுக்கு மிகச் சிறந்த அமைப்பு என்பதை அவர்கள் உணரவில்லை. இது இயற்கைக் கம்யூனிச அமைப்பின் தகர்வுக்கு இட்டுச் சென்றது என்று மொரெல்லி கூறினார்.

பௌதிகக் காரணமும் (மக்கள்தொகைப் பெருக்கமும் அதன் விளைவுகளும்) பூர்விக கம்யூனிசத்திலிருந்து வில கியதில் முக்கியப் பங்காற்றியது. மக்கள் அதிக எண்ணிக்கை

யில் இல்லாத பொழுது அவர்கள் தந்தைவழிக் குடும் பங்களில் வாழ்ந்தார்கள், தகப்பனார்களின் இயற்கையான, மிதமான அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள். அவர் கள் குடும்ப பாசம், அன்பு ஆகிய விதிகளுக்கு உட்பட் டிருந்தார்கள். எழுத்து வடிவிலான சட்டங்கள் தேவைப் படவில்லை. மக்கள்தொகை பெருகப் பெருக சட்டங்களை யும் அரசு நிறுவனங்களையும் படைப்பது அவசியமாயிற்று. மனித சமூகத்தின் வரலாற்றில் இது மிகப்பெரிய தவறு என்று மொரெல்லி கூறினார். சட்டங்களைப் படைத்தவர் கள் கூட்டு வாழ்க்கை அமைப்பின் சாதகங்களை உணராமல் செயல்பட்டார்கள். இச்சட்டங்கள், எல்லோருக்கும் மகிழ்ச்சி, சமத்துவம், நலத்தை அளித்த இயற்கையான விதிகளை அகற்றின. தனியுடைமையை ஏற்படுத்திய சட்டங்கள் மனித சமூகத்தை இயற்கையிலிருந்து முற்றாக முறித்துக் கொண்டு, சமூகப் பேரழிவுகள் தோன்றுவதற்கு வழி வகுத்தன.

தனியுடைமை அமைப்பு பகுத்தறிவுக்குப் பொருந்தாது என்று மொரெல்லி கருதினார். சுய உணர்வில்லாத பொற் காலத்திலிருந்து உணர்வு பூர்வமான காலத்துக்கு மாறு வதற்கு, கடந்த காலத்தின் சுய உணர்வில்லாத கம்யூ னிசத்திலிருந்து எதிர்காலத்தின் உணர்வு பூர்வமான கம்யூ னிசத்துக்கு முன்னேறுவதற்கு மனிதகுலம் ஆயிரக்கணக் கான சோதனைகளைக் கடந்து வர வேண்டியிருக்கும்.

**''இயற்கைச் சட்டம்''—அறிவு பூர்வமான கம்யூனிசக் கற் பனைச் சமூகம்.** மொரெல்லி **இயற்கைச் சட்டம் அல்லது இயற்கை விதிகளின் உண்மையான தன்மை** என்னும் தலைப்பைக் கொண்ட தன்னுடைய முக்கியமான நூலில் பகுத்தறிவுக்குப் பொருத்தமான முறையில் படைக்கப்பட்ட கம்யூனிச அமைப்பை முன்வைத்தார். அவர் மூன்று புனித

மான சட்டங்களின் வடிவத்தில் கம்யூனிச அமைப்பின் அடிப்படையான கோட்பாடுகளை வகுத்தளித்தார்:

—தனியுடைமையை ஒழித்தலும் சமூக உடைமையை நிறுவுதலும்;

—வாழ்வதற்கும் வேலை செய்வதற்கும் உரிமை;

—எல்லாக் குடிமக்களும் தங்கள் திறமைக்கேற்ப பொது நலத்துக்குப் பாடுபட வேண்டும் என்னும் கடமை.

மொரெல்லி எதிர்கால கம்யூனிச அமைப்பை நாடு தழுவிய மத்தியப்படுத்தப்பட்ட பொருளாதார கம்யூனாகக் கண்டார். அது ஒற்றைப் பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் வளர்ச்சி அடைகிறது; இத்திட்டம் பொருளாயதச் செல்வத்தின் உற்பத்தியையும் வினியோகத்தையும் ஒழுங்குப்படுத்துகிறது. தனக்கு முந்தியவர்களைப் போல மொரெல்லி ஒருவருடைய தேவைகளுக்குத் தக்கபடி வினியோகம் செய்வதைப் பொது விதியாக முன்வைத்தார். ஆனால் அவருடைய இலட்சிய சமூகத்தில் சட்டங்கள் செல்வப் பெருக்கத்தைத் தடை செய்கின்றன, மிதமான நுகர்வை வலியுறுத்துகின்றன. அவை இம்முறையில், தேவைகளுக்குத் தக்கபடி வினியோகம் செய்கின்ற கோட்பாட்டைக் குறுகிய அளவில் அமுலாக்குகின்றன.

தாமஸ் மோர் எழுதிய **உட்டோப்பியாவில்** குடும்பம் உற்பத்தி அலகாக இருந்தது, தகப்பனார் உற்பத்தியின் அமைப்பாளராக இருந்தார்; ஆனால் மொரெல்லியின் புதிய சமூகத்தில் ஃபோர்மன் தலைமை தாங்கிய பட்டறை உற்பத்தி அலகாக இருக்கிறது. இரண்டும் வெவ்வேறு அணுகுமுறைகள். இவை உற்பத்தி வளர்ச்சியில் கைத்தொழில், பட்டறை என்னும் இரண்டு கட்டங்களைப் பிரதிபலிக்கின்றன.

மோரினுடைய குடும்பத்திலிருந்து வேறுபட்டிருக்கின்ற மொரெல்லியின் குடும்பம் சமூகத்தின் அரசியல் அமைப்

பின் அடிப்படை அலகாக இருக்கிறது. மொரெல்லி தனிப் பட்ட திருமணம் என்னும் கருத்தமைப்பை ஏற்றுக் கொள் கிறார், ஆனால் அது கண்டிப்பான சட்டங்களால் ஒழுங்குப் படுத்தப்படுகிறது. சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் திருமணம் செய்து கொள்ள வேண்டும்; பத்து ஆண்டுகள் திருமண வாழ்க்கை நடத்திய பிறகுதான் திருமண ரத்து அனுமதிக்கப்படும். கூடா ஒழுக்கம் கடுமையாக தண்டிக்கப்படுகிறது. அரசின் ஸ்திர நிலைமை தனிப்பட்ட குடும்பத்தின் ஸ்திர நிலைமை யைப் பொறுத்திருப்பதால் இந்த நடவடிக்கைகள் அவசிய மாக இருக்கின்றன.

மொரெல்லியின் தத்துவத்தின்படி நாடு நகரங்களாக, நகரங்கள் டிரைபஸ்களாக, டிரைபஸ்கள் குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. குடும்பத் தலைவர் டிரைபஸ், நகரம் அல்லது நாட்டின் தலைவராக முடியும். அவருக்கு மட்டுமே அரசியல் உரிமைகள் உண்டு. குடும்பத் தலைவர் கள் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதில்லை, அவர்கள் ஒவ் வொருவரும் ஏறுமுக வரிசைப்படி பொதுப் பதவிகளை வகிக்கிறார்கள். மொரெல்லி முன்மொழிந்த அரசியல் மற் றும் அரசு அமைப்பு ஒரு வகையான தந்தைவழி ஜனநாய கமாகும். அது விசேஷமான முறையில் தந்தைவழி அமைப் பை மாற்றி விரிவுபடுத்துகிறது. எல்லோரும் மாறி மாறிப் பொதுப் பதவிகளை வகித்தல், எவ்விதமான தேர்தலும் முற்றிலும் இல்லாதிருத்தல் ஆகிய முறைகளைக் கொண்டு இது நிறைவேற்றப்படுகிறது. மிகவும் சிறந்த அறிவாளி களைத் தேர்ந்தெடுக்கின்ற முறை சமத்துவக் கோட்பாட்டை மீறுதல், ஏனென்றால் எல்லோரும் சமம் என்னும் கோட்பாடு அமுலாக்கப்படுகின்ற சமூகத்தில் எல்லோருமே சம அளவுக்கு அறிவாளிகளாக இருக்க வேண்டும் என்பது மொரெல்லியின் கருத்தாகும்.

ஜான் மெல்யே சமூகத்தை கம்யூனிச அடிப்படையில் பலவந்தமாக மாற்ற வேண்டும் என்றார்; ஆனால் மொரெல்லி அந்த இலட்சியத்தை சமாதான பூர்வமாக அடைய முடியும் என்று கருதினார். கல்வி வளர்ச்சியினால் சீக்கிரமாகவோ, தாமதமாகவோ கடந்த காலத் தவறுகளைத் திருத்துவது சாத்தியம், பிறகு மனிதகுலம் கூட்டு வாழ்க்கை என்னும் கருத்தை உணர்வு பூர்வமாக எற்றுக் கொள்ளும் என்று அவர் கற்பனை செய்தார். ஆக, மொரெல்லி, கம்யூனிசம் என்பது மேலேயிருந்து செய்யப்படுகின்ற சீர்திருத்தங்களின் மூலம் அறிமுகம் செய்யப்படும் என்று கருதினார். அவரால் தன்னுடைய தத்துவத்துக்கு சமூக அடிப்படையைக் கொடுக்க முடியவில்லை; கம்யூனிச இலட்சியம் நிறைவேற்றப்படுவதில் அவருடைய நம்பிக்கை அறிவின் வலிமையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டிருந்தது.

மொரெல்லி **17, 18**ஆம் நூற்றாண்டின் முதலாளித்துவ சமூகச் சிந்தனைக் கொள்கைகளை, அதாவது பகுத்தறிவுவாதம், இயற்கை சட்டம், சமூக உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, முந்திய பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கத்தின் இன்னும் விஞ்ஞான ரீதியில் நிறுவப்படாத சமூக விருப்பார்வங்களைத் தன்னுடைய கம்யூனிசக் கற்பனைத் தத்துவத்தில் பிரதிபலிக்க முயன்றார். கற்பனாவாதி என்ற முறையில் மொரெல்லியின் பங்களிப்பு இதுவே.

### பாபெஃபும் பாபுவிசமும்

**புரட்சிக்குப் பிந்திய பிரான்சும் பாபுவிசமும்.** கிராக்கஸ் பாபெஃபும் அவருடைய ஆதரவாளர்களும் கற்பனாவாத கம்யூனிசத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்தார்கள். பிரெஞ்சுப் புரட்சியின் (1789—1794) சித்

தாந்த, அரசியல், சமூக-பொருளாதார விளைவுகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் பாபுவிசத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

புரட்சியின் முற்பொழுதில், நிலப்பிரபுத்துவம் மற்றும் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான மக்களுடைய போராட்டத்தின் தலைவனாக, வழிகாட்டியாக பிரெஞ்சு முதலாளி வர்க்கம் முன்னணிக்கு வந்தது. புரட்சியின் ஆரம்பக் கட்டங்களைப் போல இக்கட்டத்திலும் உழைக்கும் மக்களுடைய நலன்களுக்கும் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் இடையில் தெளிவான பிரிவினை இன்னும் ஏற்படவில்லை.

புரட்சியின் போது முதலாளி வர்க்கத்தில் கூர்மையான அடுக்கு நிலை தோன்றியது: பெரிய முதலாளி வர்க்கமும் நடுத்தர முதலாளி வர்க்கமும் தம்முடைய வர்க்க நலன்கள் பூர்த்தியடைந்த உடனே புரட்சியின் எதிரிகளாகவும் பிற்போக்கு, எதிர்ப்புரட்சிச் சக்திகளாகவும் மாறின. நகர, கிராமக் குட்டி முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலித்த ஜாக்கோபின் சர்வாதிகாரத்தின் பொழுது (1793—1794) புரட்சி அதன் உச்சக்கட்டத்தை அடைந்தது. ஜாக்கோபின் சர்வாதிகாரத்தின் வீழ்ச்சி புரட்சி முடிவடைந்து விட்டதைக் குறித்தது. அதனை அகற்றிய பெரிய முதலாளி வர்க்கத்தின் டைரெக்டரியில் எதிர்ப்புரட்சி பயங்கர ஆட்சி நிலவியது, பெருந்திரளான உழைக்கும் மக்களின் நிலைமைகள் வேகமாக மோசமடைந்தன. நெப்போலியன் போனப்பார்ட்டின் பேரரசு ஆட்சி நிறுவப்படுவதற்கு வழியமைக்கப்பட்டது. இவையனைத்தும் சமூக மோதல்களையும் வர்க்கப் போராட்டத்தையும் கம்யூனிச உணர்ச்சிகள் மறுபடியும் ஏற்படுவதையும் தீவிரமாக்கியது. பெருந்திரளான உழைக்கும் மக்களிலிருந்து தனிவகையான சமூகக் குழு என்ற முறையில் முந்திய பாட்டாளி வர்க்கம் சித்தாந்த

ரீதியில் பிரிவது வர்க்கப் போராட்டத்தின் தாக்கத்தின் கீழ் ஆரம்பமாயிற்று.

உழைக்கின்ற பெருந்திரளான மக்களிடையில் அரசியல் வகைப்படுத்தல் அவர்களது அரசியல் தலைவர்கள் மத்தியில் அதற்குப் பொருத்தமான வகைப் படுத்தலைக் கொண்டு வந்தது. புரட்சியின் விளைவுகளைப் பற்றி அதிருப்தியுற்ற இடதுசாரி அணி, மிகவும் முரணில்லாத குழுக்கள் எல்லா சமூகத் தீமைகளையும் ஒழிப்பதற்கு ஒரே தீவிரமான வழி, பாட்டாளி வர்க்கமாக்கப்பட்டிருந்த பெருந்திரளானவர்கள் வரவேற்கின்ற ஒரே கோஷம் என்ற முறையில் கம்யூனிசத்துக்கு வந்தன. பாபுவிச இயக்கம் இந்த நிகழ்வுப் போக்கின் அரசியல் பிரதிபலிப்பு ஆகும். பாபெஃபும் அவருடைய சகாக்களும் தொழிலாளர்களின் தெளிவற்ற சமூக விருப்பார்வங்களை எடுத்துக் கூறுவதற்கும் தத்துவ மற்றும் செய்முறை வடிவத்தில் அதற்கு ஸ்தாபன விளக்கத்தைக் கொடுப்பதற்கும் முயன்றார்கள்.

கிராக்கஸ் பாபெஃப் (அவருடைய உண்மையான பெயர் பிரான்சுவா நோயெல்) **(1760—1797)** பிரான்சின் வடக்குப் பகுதியில் பிறந்தார். விவசாயிக் குடும்பத்தில் பிறந்த அவருடைய தகப்பனார் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர். பாபெஃப் தன்னுடைய **16**ஆம் வயதிலிருந்து உழைத்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார். **1780**க்களின் மத்தியிலிருந்து அவர் சமத்துவவாதத்தையும் பிற்பாடு கம்யூனிசக் கருத்துகளையும் பரப்புவதற்குத் தொடங்கினார். பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டவுடனே பாபெஃப் பிரபலமான ரோமானியத் தலைவர்களான கிராக்கஸ் சகோதரர்களின் பெயரைத் தனக்குச் சூட்டிக் கொண்டு புரட்சிகரப் போராட்டத்தில் சுறுசுறுப்பாகப் பங்கெடுத்தார். அவர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் கைது செய்யப்பட்டுச் சிறையில்



6—1184

அடைக்கப்பட்டார். டைரெக்டரிக்கு எதிராக எழுச்சியை அமைப்பதற்கும் புதிய சமூக அமைப்பை நிறுவுவதற்கும் ‘‘சமமானவர்களின்’’ சங்கம் என்னும் இரகசிய ஸ்தாபனத்தை பாபெஃப் அமைத்தார். ஒரு துரோகி காட்டிக் கொடுத்ததால் பாபெஃப் கைது செய்யப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

பாபெஃப், அவருடைய ஆதரவாளர்களின் புரட்சிகர, கம்யூனிசப் போதனை வழக்கமாக பாபுவிசம் என்று சொல்லப்படுகிறது. புரட்சிக்கு முந்திய பிரெஞ்சுக் கற்பனாவாத கம்யூனிஸ்டுகளின், குறிப்பாக மொரெல்லியின் கருத்துகள் பாபுவிசத்தின் மீது அதிகமான தாக்கத்தைச் செலுத்தின. அதே சமயத்தில் புரட்சிக்கு முந்திய பிரெஞ்சுக் கற்பனாவாதக் கம்யூனிசத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது பாபெஃப், அவருடைய ஆதரவாளர்களின் கம்யூனிசக் கருத்துகள் பல புதிய அம்சங்களைக் கொண்டிருந்தன.

பாபெஃப்வாதிகளின் கம்யூனிசப் பிரசாரம் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதைப் பற்றித் தம்முடைய கருத்துகளை சிறு குழுக்களுக்கு மத்தியில் பரப்புவதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை; பெருந்திரளான மக்கள் கம்யூனிசத்தை ஆதரித்து திடீர்ப்புரட்சி செய்வதற்கு ஒரு சாதனமாகவும் அது இருந்தது. புரட்சிக்கு முந்திய சித்தாந்திகளின் கம்யூனிசத்துக்கும் பாபுவிசத்துக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு இதில்தான் அடங்கும்.

கம்யூனிசப் போதனை வரலாற்றில் முதல் தடவையாக பாபெஃப்வாதிகள் (எதிர்கால சமூக அமைப்பைப் பற்றிய அடிப்படையான உருவரையுடன்) ஒரு பக்கத்தில் ஏழை மக்களுடைய நிலையை அபிவிருத்தி செய்கின்ற, மறு பக்கத்தில் எதிர்ப்புரட்சி சக்திகளின் எதிர்ப்பை நசுக்கக் கூடிய பிரத்யேகமான சில நடவடிக்கைகளையும் தயாரித்தார்கள். புரட்சி வெற்றியடைந்த பிறகு அரசு அமைப்பை எப்படி

அமைக்க வேண்டும் என்னும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முதலில் முயற்சி செய்தவர்கள் பாபெஃப்வாதிகளே. அவர்கள் ஜாக்கோபின் சர்வாதிகாரத்தைப் போன்ற புரட்சிகர சர்வாதிகாரத்தைப் பற்றிய கருத்தை முன்வைத்தார்கள்.

சமூகத்தின் ஒரு பகுதி (கொள்ளைக்காரர்கள்) மறு பகுதிக்கு எதிராக சூழ்ச்சி செய்தது, பெருந்திரளான மக்களுடைய அறியாமையினால் அந்தச் சூழ்ச்சி வெற்றியடைந்ததன் விளைவாகவே தனியுடைமையும் ஏற்றத்தாழ்வுகளும் தோன்றின என்று பாபெஃப் விளக்கினார். இது புரட்சிக்கு முந்திய கம்யூனிஸ்டுகளிடமிருந்து வித்தியாசமான விளக்கமாகும். இப்படிப்பட்ட வாதத்தின் விளைவாக பாபெஃப்வாதிகள் மாப்லீ, மொரெல்லி அடைந்தவற்றிலிருந்து வேறுவிதமான முடிவுகளை அடைந்தார்கள்: புதிய சமூக அமைப்பை உருவாக்குவதற்குப் பெருந்திரளான மக்களுக்கு அறிவூட்டுவது மட்டும் போதாது; அதற்கு ஒரு புரட்சிகரமான போராட்டம் அவசியம்.

**சமத்துவ மக்களின் குடியரசு—கம்யூனிச சமூகத்தின் இலட்சியம்.** சமத்துவ மக்களின் குடியரசு என்று பாபெஃப்வாதிகளால் சொல்லப்பட்ட கம்யூனிச 'சமூகம் புரட்சியின் விளைவாகத் தோன்றும். அங்கே பெரிய அளவில் கம்யூனிசப் பொருளாதாரக் கம்யூன் நாடு தழுவிய அளவில் நிறுவப்படும். கம்யூனுடைய தலைமை உறுப்புகள் மக்கள்தொகையைக் கண்காணித்து, அதன் தேவைகளை நிர்ணயித்து, பல்வேறு உற்பத்தி நடவடிக்கைகளில் தொழிலாளர்களை ஈடுபடுத்தும். தேசிய கம்யூனின் உறுப்பினர்களுக்கு அவசியமான எல்லாவற்றையும் கொடுத்து, எல்லோருக்கும் சமநிலையான வளத்தை அளிப்பது கம்யூன் உற்பத்தியின் நோக்கமாக இருக்கும். எனவே உற்பத்தியை மேற்பார்வை

செய்வதற்கும் விரிவுபடுத்துவதற்கும் விசேஷ உறுப்புகள் இருக்கும். எந்தத் தொழிலும் அவசியமானதைக் காட்டிலும் கூடுதலாகவோ, குறைவாகவோ உற்பத்தி செய்யாமல் அவை கண்காணிக்க வேண்டும்; மக்கள்தொகையின் அதிகரிப்பைக் கணக்கிலெடுத்துக் கொண்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவில் உற்பத்தி மட்டம் இருக்க வேண்டும்.

உற்பத்திப் பொருட்களின் வினியோகத்தில் சமத்துவம், சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருடைய அறிவு மற்றும் உடலியல் திறமைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு உழைப்பின் முழுமையான சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். உழைப்பில் சமத்துவம் என்பது ஆரோக்கியமான எல்லாக் குடிமக்களும் உழைப்பு நடவடிக்கையில் கட்டாயமாகப் பங்கெடுத்தலையும் வேலைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுதலையும் குறிக்கும் என்பது பாபெஃப்வாதிகளுடைய கருத்தாகும். தன்னுடைய குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான எல்லாவற்றையும் அளிப்பதற்குத் தன்னுடைய உழைப்பு பயன்படுகிறது என்னும் நம்பிக்கை ஒவ்வொரு குடிமகனும் உழைப்பதற்குத் தூண்டுதலாக இருக்கும். புதிய இயந்திரங்களைப் புகுத்துவதைப் பற்றி யாரும் அஞ்ச மாட்டார்கள்; ஏனென்றால் வேலை சமமாகப் பிரித்தளிக்கப்படுகின்ற பொழுது அது வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்தாது; அதற்கு பதிலாக ஒவ்வொருவரும் செய்கின்ற வேலையின் அளவைக் குறைப்பதற்கு உதவும்.

சமத்துவமான உரிமைகளைக் கொண்ட சமத்துவமான உழைக்கும் மக்களின் குடியரசு பாபெஃப்வாதிகளின் அரசியல் இலட்சியமாகும். தன்னுடைய உறுப்பினர்கள் மத்தியில் முழுமையான சமத்துவத்தை ஏற்படுத்தியுள்ள சமூ

கத்தில் நேரெதிரான நலன்கள் இருக்க முடியாது என்று அவர்கள் நம்பினார்கள். அத்தகைய சமூகத்தில் எல்லோரும் விருப்ப பூர்வமாக சட்டங்களைக் கடைப்பிடிப்பார்கள், நியாயமான பிரேரணைகளுக்கு எதிர்ப்பு இருக்காது. அரசியல் அமைப்பில் நலன்கள், சித்தம் மற்றும் நடவடிக்கையின் ஒருமை வெற்றி பெறும்.

குடியரசின் அரசியல் அமைப்பின் ஜனநாயக இயல்பிற்கும் ஸ்திர நிலைமைக்கும் உத்தரவாதமளிக்கின்ற சில நடவடிக்கைகளை பாபெஃபும் அவருடைய ஆதரவாளர்களும் கூறினார்கள். பெருந்திரளான மக்கள் அதிகாரிகளின் நடவடிக்கைகளை விவாதிப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் ஏற்ற முறையில் "கண்டனக் கூட்டங்கள்" என்று சொல்லப்படுகின்ற கூட்டங்கள் நடத்தப்பட வேண்டுமென்று அவர்கள் முன்மொழிந்தார்கள். ஒரு நபருடைய முந்திய பணி மக்களால் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே அவர் நிர்வாகப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட முடியும். குடியரசின் கொள்கைகளைப் பகிரங்கமாக எதிர்த்த நபர்கள் அரசு உறுப்புகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சபைகளில் பங்கெடுக்க முடியாது.

சமத்துவ மக்களின் குடியரசில் தனியுடைமை, எல்லோருக்கும் தீங்கு செய்கின்ற போட்டி, சுரண்டுபவர்கள் மற்றும் சுரண்டப்படுபவர்கள், செல்வர் மற்றும் ஏழை, எஜமானன் மற்றும் அடிமை, ஆட்சியாளர்கள் மற்றும் மக்கள் என்னும் பிரிவினை இருக்க மாட்டா. குடியரசிலுள்ள எல்லாக் குடிமக்களின் கூட்டு முயற்சிகளும் எல்லோருக்கும் நல்வாழ்க்கையை அமைத்துத் தருவதை நோக்கிச் செலுத்தப்படும். மக்களுக்கு இடையிலான உறவுகளில் நீதி, விசுவாசம், நேர்மை, வாய்மை ஆகியவை நிலவும்.

பாபெஃபின் கம்யூனிசக் கற்பனைத் தத்துவத்தில் நயமில்லாத, யாந்திரிகமான சமத்துவவாதமும் துறவு

வாழ்க்கையும் நிலவும்; ஏனென்றால் அங்கே அன்றாட வாழ்க்கை மிகையான அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டு எளிமைப்படுத்தப்பட்டிருக்கிறது, அங்கே நுகர்வின் அளவு குறைக்கப்படுவதற்கு சிபாரிசு செய்யப்படுகிறது. அந்தக் குடியரசின் உற்பத்தி சிறு அளவுக் கைத்தொழில் உற்பத்தியின் அளவைக் காட்டிலும் கூடுதலாக இருக்காது; பாபெஃப்வாதிகள் தொழில்துறை வளர்ச்சியின் அளவைக் குறைத்து மதிப்பிட்டார்கள் என்பது தெளிவு. அவர்களில் சிலர் இலட்சிய சமூகத்தில் மதத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்; அறிவு, விஞ்ஞானம், கலை ஆகியவற்றைக் குறைத்து மதிப்பிட்டார்கள். பாபெஃப்வாதிகள் வாழ்க்கை, உழைப்பு மற்றும் நடத்தையில் மக்களுடைய தனித்தன்மைகளை நிராகரித்து பூர்விக சமத்துவத்தைப் போதித்தார்கள். எதார்த்தத்தில் பாபெஃபின் சமத்துவம் மனித ஆளுமையின் வளர்ச்சிக்குத் தீங்கு செய்திருக்கும், அதன் ஆன்மிக இயல்புகளை அழித்திருக்கும். எனினும் கம்யூனிச சிந்தனை வளர்ச்சியில் பாபெஃப்வாதிகள் அறிமுகப்படுத்திய புதிய கருத்துகளை நாம் குறைவாக மதிப்பிடவில்லை என்பதைக் குறிப்பிடுவோம்.

**மக்கள் புரட்சியும் கம்யூனிச சமூகத்தை அமைக்கின்ற வழிமுறைகளும்.** பாபெஃபும் அவருடைய ஆதரவாளர்களும் ஒரு அங்ககமான, புரட்சிகரத் தத்துவத்தைப் படைப்பதற்கு முயன்றார்கள். புரட்சி என்பது செல்வர்களுக்கும் (பட்ரீஷியர்கள்) சாமான்யர்களுக்கும் (பிளெபியன்கள்) பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்ற போராட்டத்தின் தர்க்க ரீதியான விளைவுதான் என்று அவர்கள் கருதினார்கள். பெருந்திரளான மக்களுக்கு அறிவூட்டுவதனால் மட்டும் புதிய சமூக அமைப்பை உருவாக்க முடியாது, புரட்சியி

னால்தான் அதை உருவாக்க முடியும்; கல்வி அந்தப் போராட்டத்தின் நிபந்தனைகள், வழிமுறைகளில் ஒன்றாக இருக்கும் என்று அவர்கள் கருதினார்கள். புத்தகங்களும் தத்துவ அறிவின் இதர மூலாதாரங்களும் எவ்வளவு முக்கியமாக இருந்தாலும் அவற்றைக் காட்டிலும் கடுமையான வாழ்க்கை நிலைமைகளின் மூலமாகவே மக்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள் என்று அவர்கள் கருதினார்கள்.

பெரும்பான்மையான மக்கள் சகித்துக் கொள்ள முடியாத நிலைமைகளில் வைக்கப்படுகின்ற பொழுது, தனியுடைமை உரிமையின் தீங்கான விளைவுகள் முனைக் கோடியை எட்டுகின்ற பொழுது, பொதுச் செல்வத்தின் ஒட்டுமொத்தத்தை சிறுபான்மையினர் சுவீகரித்துக் கொள்கின்ற பொழுது, பெரும்பான்மையினருக்கு உடைமையாக எதுவுமே இல்லாத பொழுது ஒடுக்குபவர்களை எதிர்த்து ஒடுக்கப்படுபவர்கள் வழக்கமாகக் கிளர்ந்தெழுகிறார்கள் என்பது பாபெஃப்வாதிகளின் கருத்தாகும்.

சமத்துவ மக்கள் எதிர்பார்க்கின்ற, தயாரிக்கின்ற புரட்சி நடுவழியில் நின்று விடாது. ஒடுக்குமுறை, மூடநம்பிக்கை, தப்பெண்ணங்களை அடிப்படையாகக் கொண்ட பழைய ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும்; ஆட்சியிலிருந்து தூக்கியெறியப்பட்டவர்கள் மீண்டும் ஆட்சியை அபகரிப்பதற்கு வாய்ப்பளிக்கக் கூடாது.

புரட்சிகர சக்திகள் பெருந்திரளான மக்களுடைய முழு ஆதரவைப் பெற்றிருந்தால் மட்டுமே அவை ஆட்சியில் இருக்கும், சமூக மாற்றத்துக்கான தம்முடைய திட்டங்களை அமுலாக்கும். புரட்சிகர சக்திகள் ஏழை மக்களுக்கு இலவசமாக ரொட்டி வழங்கும், எதிர்ப்புரட்சிக்காரர்களின் வீடுகளையும் அவற்றிலுள்ள பொருட்களையும் ஏழை மக்களுக்குக் கொடுக்கும், ஏழை மக்கள் அடமானம் வைத்திருந்த எல்லாப் பொருட்களையும் அவர்களிடம் திரும்ப

ஒப்படைக்கும், சதிகாரர்கள், மக்களின் எதிரிகளுடைய உடைமையை நாட்டின் பாதுகாப்பாளர்கள், ஏழை மக்களிடம் வினியோகிக்கும்.

ஒரு புரட்சிகர சர்வாதிகாரம் எல்லா எதிரிகளையும் ஈவிரக்கமின்ற நசுக்க வேண்டும், புரட்சிகரப் பயங்கரத்தைக் கடைப்பிடிப்பதற்குப் பின்வாங்கக் கூடாது என்பதை பிரெஞ்சுப் புரட்சியின் அனுபவம் பாபெஃப்வாதிகளுக்குக் கற்பித்தது. முடிவில் செல்வர்கள் உடைமை பறிக்கப் படுதல் புரட்சிக்கு விரோதமான சக்திகளுக்கு எதிரான பயங்கர அமைப்பின் ஒரு பகுதி என்று அவர்கள் கருதினார்கள்.

முதலாளித்துவ சமூகத்திலிருந்து சமூக வாழ்க்கையின் கம்யூனிச வடிவங்களுக்கு முன்னேறுவதில் புரட்சிகர ஆட்சியை ஒரு சாதனமாக பாபெஃப்வாதிகள் கருதியதில் அவர்களுடைய வரலாற்று முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. எனினும் உடனடியான, சர்வப்பொதுவான முறையில் தனிப்பட்ட உடைமையாளர்களின் சொத்தைப் பறித்தல் சாத்தியம் என்று அவர்கள் கருதவில்லை. புரட்சி முடிந்த உடனே கம்யூனிசக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தேசிய கம்யூனை நிறுவுவதற்கு அவர்கள் உத்தேசித்தார்கள். அதனிடம் புரட்சியின் எதிரிகளின் உடைமையும் கூட்டு சமூகங்களின் நிலமும் தரிசு நிலமும் ஒப்படைக்கப்படும். கம்யூன் தன்னுடைய பொருளாதார பலத்தினாலும் சமூக-பொருளாதார சாதகங்களினாலும் நிலத்திலும் தொழிலிலும் தனியார் உடைமையை ஒழித்து கம்யூனிச வாழ்க்கை முறைக்கு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்பது பாபெஃபின் திட்டமாகும். அதே சமயத்தில் பெருஞ்செல்வங்கள் மட்டுமே ஒழிக்கப்படும், சிறு உடைமையாளர்கள், கடைக்காரர்களின் நிலை பாதுகாக்கப்பட்டு வலுப்படுத்தப்படும் என்று பாபெஃப் கூறினார்.

கம்யூனிச சிந்தனையின் பிற்கால வளர்ச்சி பாபெஃபின் கற்பனாவாத கம்யூனிசத்தின் பல அம்சங்களை நிராகரித் தது. பாபெஃப்வாதிகளின் கம்யூனிசக் கருத்துகள் துறவு வாழ்க்கையிலும் நயமற்ற சமத்துவவாதத்திலும் தோய்ந் திருந்தன. அவர்கள் சமூகத்தின் வர்க்கக் கட்டமைப்பு குறித்து முற்றிலும் பூர்விகமான கருத்துகளைக் கொண் டிருந்தார்கள், பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத் திரத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. சமூகப் புரட்சி யின் அடிப்படையான பிரச்சினைகளை அவர்கள் சரியான முறையில் எடுத்துக் கூறி அவற்றைத் தீர்ப்பதை இது தடுத் தது. பொதுவில் பெருந்திரளான மக்கள், அதாவது அவர்களுடைய கருத்துப்படி ஏழைகள், பிளெப்ஸ் புரட் சியை நிறைவேற்றுவார்கள் என்று அவர்கள் கற்பனை செய்தார்கள்.

ஆரம்பகால கம்யூனிசப் போதனைகளைப் பற்றி எங் கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: "நவீனப் பாட்டாளி வர்க்கத்தின் அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சி பெற்ற முன்னோடியாக இருந்த வர்க்கத்தினது சுயேச்சையான கொந்தளிப்புகளும் ஒவ்வொரு பெரிய முதலாளித்துவ இயக் கத்தின் போதும் ஏற்படவே செய்தன."* பாபெஃபின் இயக்கம் இத்தகையது என்று எங்கெல்ஸ் கருதினார். "இன்னும் வளர்ச்சி பெறாத ஒரு வர்க்கத்தின் இந்தப் புரட்சிகர எழுச்சிகளுக்கு இசைவான தத்துவார்த்த விளக் கங்களும் முன்வைக்கப்பட்டன: பதினாறாவது, பதினேழா வது நூற்றாண்டுகளில், இலட்சிய சமுதாய நிலைமைகள் பற்றிய கற்பனாவாதச் சித்திரங்கள்; பதினெட்டாவது நூற் றாண்டில் மெய்யான கம்யூனிசத் தன்மை வாய்ந்த தத்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** தொகுதி 10, பக்கம் 54.

துவங்கள் (மொரெல்லியும் மாப்லீயும்). சமத்துவத்துக்கான கோரிக்கை இனி அரசியல் உரிமைகளுக்கு மட்டுமானதாக வரம்பிடப்படவில்லை, தனியாட்களது சமுதாய நிலைமைகளுக்கும் உரியதாக விரிவாக்கப்பட்டது. ஒழிக்கப்பட வேண்டியவை வர்க்கத் தனிச்சலுகைகள் மட்டுமல்ல, வர்க்கப் பாகுபாடுகளே ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று கோரப்பட்டது... ஸ்பார்ட்டானியக் கடுமை வாய்ந்ததுமாகிய ஒரு கம்யூனிசமே இந்தப் புதிய போதனையின் முதலாவது வடிவம்.'' *

* **அதே நூல்,** பக்கங்கள் 54—55.

அத்தியாயம் நான்கு

# விஞ்ஞான கம்யூனிசத்தின் நேரடியான முன்னோடிகளின் சோஷலிசக் கற்பனைத் தத்துவங்கள்

19ஆம் நூற்றாண்டின் முதல் முப்பதாண்டுகளின் போது அன்ரீ சான்-சிமோன், ஷார்ல் ஃபூரியே, ராபர்ட் ஓவன் ஆகியோருடைய போதனைகளின் விளைவாக கம்யூனிச மற்றும் சோஷலிச சிந்தனை குண ரீதியில் புதிய அம்சங்களைப் பெற்றது. இம்மூவரும் கற்பனாவாத சோஷலிசத்தின் தற்சிந்தனையான அமைப்புகளை வளர்த்தார்கள். அவை விஞ்ஞான கம்யூனிசத்துக்கு நேரடியான தத்துவ மூலத் தோற்றுவாய்களாக இருந்தன. வளர்ச்சியடைந்து கொண்டிருந்த முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் இன்னும் முழுமையாக வெளிப்படாத நிலையில் அதை நுணுக்கமாகவும் துணிகரமாகவும் விமர்சனம் செய்ததில் அவர்களது வரலாற்றுப் பங்களிப்பு இருக்கிறது. "இம்மூவருக்கும் பொதுவானது ஒன்று உண்டு. இவர்களில் எவரும் இதற்குள் வரலாற்று வளர்ச்சியால் தோற்றுவிக்கப்பட்டு விட்ட பாட்டாளி வர்க்கத்தின் நலன்களது பிரதிநிதியாய் முன்வரவில்லை. பிரெஞ்சு அறிவியக்கவாதிகளைப் போலவே இவர்களும் குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தை முதலில் விடுவிக்கப் போவதாகச் சொல்லாமல் உடனடியாக

வே மனிதகுலம் அனைத்தையுமே விடுவிக்கப் போவதாகக் கூறிக் கொள்கின்றனர்'' என்று எங்கெல்ஸ் எழுதினார். *

**அன்ரீ குலோட் டெ சான்-சிமோன்**

**மனித சமூகத்தின் வரலாற்றையும் எதிர்காலத்தையும் பற்றி சான்-சிமோன்.** அன்ரீ குலோட் டெ சான்-சிமோன் (1760—1825) பாரிசில் பழைய பிரபுக் குடும்பத்தில் பிறந்தார். பிரபலமான கலைக்களஞ்சியவாதியும் தத்துவஞானியும் கணித மேதையுமான டலம்பேர் அவருடைய ஆசிரியர்களில் ஒருவர். அவர் இளம் வயதிலேயே பிரெஞ்சு அறிவியக்கத்தின் பிரதிநிதிகள் எழுதிய நூல்களைப் படித்தார். பிரெஞ்சுப் புரட்சியின் ஆரம்ப ஆண்டுகளின் போது சான்-சிமோன் சுதந்திரம், அரசியல் சமத்துவம் பற்றிய கருத்துகளைப் போற்றினார். அவர் ஒரு கவுண்ட்; ஆனால் அந்தப் பட்டத்தைத் துறந்து மக்களுடன் தன்னுடைய தொடர்பை எடுத்துக் காட்டுகின்ற முறையில் பெனோம் (வெகுளி) என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார். புரட்சியின் விளைவுகளைப் பற்றி அவர் வெகு விரைவில் ஏமாற்றமடைந்தார். அவர் வர்த்தகத்தில் ஈடுபட்டு எல்லாப் பணத்தையும் இழந்தார். அவர் தமது கடைசி இருபது ஆண்டுகளில் தற்செயலாகக் கிடைத்த வருமானங்கள், நண்பர்களின் உதவியைக் கொண்டுதான் உயிர்வாழ்ந்தார். ஆனால் இப்படி வறுமையில் வாடிய காலகட்டத்தில்தான் அவர் தன்னுடைய தத்துவஞான ஆராய்ச்சியில் பெரும் பகுதியைச் செய்தார்.

சான்-சிமோன் ஒரு புதிய சமூக அமைப்புக்கு தத்துவஞான அடிப்படையை வளர்ப்பதற்கு முயற்சி செய்தார். அவர் அதைத் ''தொழில்துறை அமைப்பு'' என்று கூறி

* **அதே நூல்,** பக்கம் 55.

னார். முதலாளித்துவ அறிவியக்கவாதிகளிலிருந்து வேறு பட்ட முறையில், முந்திய சமூக-பொருளாதார அமைப்புடன் ஒப்பிடுகின்ற பொழுது ஒவ்வொரு புதிய சமூக-பொருளா தார அமைப்பும் புறநிலையில் முற்போக்கானது என்னும் தத்துவத்தை அவர் உருவாக்கினார். இயற்கையைப் பொறு த்தமட்டில் பொருள்முதல்வாதியாக இருந்த சான்-சிமோன் சமூகப் பிரச்சினைகளை ஆராய்கின்ற பொழுது கருத்து முதல்வாதியாக இருந்தார். வரலாறு என்பது பகுத் தறிவின் அடிப்படையில் ஒரு சமூக அமைப்புக்கு பதிலாக மற்றொன்று ஏற்படுகின்ற ஏறுமுக வளர்ச்சி என்று அவர் கருதினார்.

மாபெரும் கற்பனாவாதியான சான்-சிமோன் வர லாற்றைப் பற்றிய கருத்துமுதல்வாத அணுகுமுறையை பொருள்முதல்வாத இயல்பைக் கொண்ட மேதாவிலாசம் நிறைந்த ஊகங்களுடன் இணைத்துக் கொண்டார். பொரு ளாதார நிலைமைகள்தான் அரசியல் நிறுவனங்களுக்கு அடிப்படையாகும், உடைமை உறவுகளைப் பொறுத்துதான் சமூக-அரசியல் வடிவங்கள் ஏற்படுகின்றன என்பதை உணர்வதற்கு அவர் மிகவும் நெருங்கி வந்தார். சமூக வாழ்க்கையில் உற்பத்தி வகிக்கின்ற முக்கியமான பாத்திரத் தை அவர் சுட்டிக்காட்டினார்; முதலாளித்துவ சமூகத்தின் வர்க்கக் கட்டமைப்பைப் புரிந்து கொள்வதற்கு நெருங்கி வந்தார்.

**வர்க்கங்கள் மற்றும் வர்க்கப் போராட்டத்தைப் பற்றி.** ஒரு சமூக அமைப்புக்கு பதிலாக மற்றொரு அமைப்பு ஏற்படு கின்ற மனித சமூகங்களில் வர்க்கப் போராட்டம் பொதுவான அம்சமாக இருக்கிறது என்றார் சான்-சிமோன். பிரெஞ்சுப் புரட்சி மாபெரும் பொருளாதார, அரசியல் மற்றும் சித் தாந்த மாற்றங்களினால் ஏற்பட்டது, அது பிரபுக்கள், முத

லாளிகள், உடைமை இல்லாதவர்கள் ஆகிய வர்க்கங்களுக்கு இடையில் நடைபெற்ற போராட்டம் என்னும் மிக முக்கிய மான முடிவுக்கு சான்-சிமோன் வந்தார். இதைப் பற்றி அவர் **ஜினீவா வாசியின் கடிதங்கள்** என்னும் தன்னுடைய முதல் நூலில் எழுதினார். எங்கெல்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''பிரெஞ்சுப் புரட்சியை... பிரபுவம்சம், முத லாளி வர்க்கம் மற்றும் உடைமை இல்லாதவர்களிடையி லான ஒரு வர்க்கப் போராக அங்கீகரிப்பது என்பது 1802ஆம் ஆண்டிலேயே மிகவும் கருத்து வளமிக்கதான கண்டுபிடிப் பாகும்.'' *

அதே சமயத்தில் சான்-சிமோன் வர்க்கங்களையும் வர்க்கப் போராட்டத்தின் இயல்பையும் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. வர்க்கங்களின் சமூக சாராம்சத்தையும் அவற்றின் தோற்றத்தையும் அவர் தெளிவாகப் புரிந்து கொள்வதற்குத் தவறினார். சமூகத்தில் வர்க்கப் பிரி வினைக்குத் திட்டவட்டமான அளவுகோல்கள் அவருடைய நூல்களில் இல்லை. உடைமை உறவைப் பொறுத்து ''உடைமை உள்ளவர்கள்'' மற்றும் ''உடைமை இல்லாத வர்கள்'' என்றும் உற்பத்தியின் பாலுள்ள உறவைப் பொறுத்து ''நுகர்வாளர்கள்'' மற்றும் ''உற்பத்தியாளர் கள்'' என்றும் அவர் மக்களைப் பிரித்தார். தொழிலதிபர் கள் என்னும் வர்க்கத்தில் உற்பத்தி, அதனுடன் உறவுள்ள துறைகளில் ஈடுபட்டுள்ள எல்லா மக்களும் அடங்குவர் என்று அவர் விரிவாக்கிக் கொண்டார்.

நிலப்பிரபுத்துவ சமூகத்தை அகற்றுகின்ற சமூகத்தில் உடைமை உள்ளவர்களுக்கும் உடைமை இல்லாதவர்களுக்

---

* பி. எங்கெல்ஸ், **டூரிங்குக்கு மறுப்பு**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப் பகம், 1979, பக்கங்கள் 449—450.

கும் இடையிலான வேறுபாட்டையும் அவர்களுக்கு இடையிலான போராட்டத்தையும் சான்-சிமோன் பார்த்தார். அவர் உடைமை இல்லாதவர்களுக்குப் பாட்டாளிகள் என்னும் பெயரைச் சூட்டினார், ஆனால் அவர்களை ஒரு சுயேச்சையான வர்க்கம் என்று கருதவில்லை; தொழில்துறை வர்க்கத்துக்குள் இருக்கின்ற உடைமை இல்லாதவர்கள் குழு என்று மட்டுமே கருதினார்.

**எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற சமூகத்தின் இலட்சியம் என்ற முறையில் தொழில்துறை அமைப்பு.** தொழில்துறை அமைப்பைப் பற்றிய கருத்து சான்-சிமோனுடைய தத்துவ ஞான பாரம்பரியத்தின் அடிப்படைக் கல்லாக இருக்கிறது. எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற இலட்சிய சமூகத்தைப் பற்றி அவருடைய கருத்தை அது எடுத்துரைக்கிறது. தொழில்துறை அமைப்பை நோக்கிய சமூக-அரசியல் ரீதியான மாற்றம் அதிகாரத்தை நிலப்பிரபுத்துவ மற்றும் இடைநிலை சமூகக் குழுக்களிடமிருந்து தொழிலதிபர்கள், விஞ்ஞானிகளிடம் சேர்ப்பிக்கும் என்று அவர் கருதினார்.

அவருடைய தொழில்துறை அமைப்பில் பொதுவான பொருளாதாரத் திட்டம் இடம்பெற்றிருக்கிறது. வங்கிகள் பொருளாதாரத்தைத் திட்டமிடுதலில் விசேஷமான பாத்திரத்தை வகிக்கின்றன, ஏனென்றால் அவை பொருளாயத மதிப்புகளை வினியோகம் செய்கின்றன. இந்த அணுகுமுறையின் காரணமாக சான்-சிமோன் எதிர்கால சமூக அமைப்பை ஒரு சங்கம் என்று கூறினார்; ஆனால் இந்தச் சங்கம் உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமையைக் குறிக்கவில்லை. சான்-சிமோன் தனியுடைமையை ஒழிப்பதையோ, மூலதனத்தைப் பறிமுதல் செய்வதையோ ஆதரிக்கவில்லை. அரசு, தொழிலதிபர்களின் நடவடிக்கைகளை ஒரு பொதுவான திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட

அளவுக்கு மட்டுமே கீழ்ப்படுத்த வேண்டும் என்று அவர் கருதினார்.

தொழில்துறை அமைப்பு மக்களின் அதிகப் பெரும் பான்மையினருக்கு, பிரதானமாக பாட்டாளி வர்க்கத் தினருக்கு அதிகமான நலம் பயக்கும் என்று சான்-சிமோன் உறுதியாகக் கருதினார், எனினும் அதிகமான எண்ணிக்கையைக் கொண்ட இந்த வர்க்கத்தினுடைய நலத்தை உயர்த்துவதற்கு செய்முறை நடவடிக்கைகள் எதையும் முன்வைக்கவில்லை; எதிர்கால சமூகத்தைப் பற்றிய அவருடைய வர்ணனையில் பாட்டாளி வர்க்கத்தின் தேவைகளுடன் நேரடியான தொடர்புடைய ஒரேயொரு விஷயத்தை மட்டுமே குறிப்பிடுகிறார்: உழைப்பு சர்வப் பொதுவானதாக, எல்லோரும் செய்ய வேண்டியதாக இருக்கும்.

எதிர்கால சமூகத்தில் விஞ்ஞானம் உற்பத்தியுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கும். இதுவும் திட்டமிட்ட பொருளாதாரமும் உழைப்பின் உற்பத்தித் திறனைக் கணிசமாக உயர்த்தும். சான்-சிமோனுடைய இலட்சியப்படுத்தப்பட்ட கருத்தில் தொழில்துறை அமைப்பு சுரண்டலை ஒழிக்கும்; ஏனென்றால் தொழில்முனைவர்கள் கூலியுழைப்பினால் படைக்கப்பட்ட பொருளாயத மதிப்பு களை சுவீகரித்துக் கொள்ள மாட்டார்கள்; அவர்கள் மிக வும் கௌரவமான, சிக்கலான வேலையைச் செய்வதற் குரிய சன்மானமாக லாபம் இருக்கும். இது உண்மையில் கற்பனாவாதமே. ஏதோ ஒரு அதிசயத்தினால் தனியு டைமை மற்றும் தனியார் தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில் மனிதனை மனிதன் சுரண்டுவது இருக்காது.

தொழில்துறை அமைப்பு அதிகார பணியை அடிப்படை யாகவே மாற்றும். முந்திய சமூகங்களில் பெரும்பான்மை

யினர் கல்வியறிவில்லாதவர்களாக இருந்தார்கள் (அவர்களுடைய கட்டுப்பாடில்லாத நடவடிக்கைகள் சமூகத்தின் ஒற்றுமைக்கு, அதன் இருத்தலுக்குக் கூட ஆபத்தாக இருந்தன); ஆகவே அதிகாரிகள் மக்கள் தொகையில் பெரும்பான்மையினரைத் தமது கட்டுப்பாட்டுக்கு உட்படுத்த வேண்டியிருந்தது, அவர்களுடைய நலன்களை சிறுபான்மையினருடைய நலன்களுக்குக் கீழ்ப்படுத்த வேண்டியிருந்தது. சிறுபான்மையினர் பெரும்பான்மையினரைத் தடுப்பதற்குத் தம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தினார்கள்; பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை நிரந்தரமாக எதிர்த்தார்கள்.

அவருடைய காலத்தில் பெரும்பான்மையினர் அறிவு ரீதியாகவும் தார்மிக ரீதியாகவும் போதிய அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கின்றனர், ஆகவே அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இனிமேல் கிடையாது என்று சான்-சிமோன் கருதினார். அவருடைய தொழில்துறை அமைப்பில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பது எல்லோருடைய பொறுப்பாகவும் இருக்கும். வழிகாட்டுதல் மக்களுக்கு அல்ல, பொருட்களுக்கே; அரசாங்க இயந்திரத்துக்கு பதிலாக ஏற்படுகின்ற நிர்வாக அமைப்பு மனிதகுலத்தின் நலன்களுக்காக உலகம் முழுவதிலும் கலாசாரத்தைப் பரப்புவதை அடிப்படைக் கடமையாகக் கொண்டிருக்கும். விஞ்ஞானிகள், கலைஞர்கள், தொழிலதிபர்கள் நிர்வாகத்தைப் பிரதிநிதித்துவம் செய்வார்கள். முன்பு இராணுவத்துக்கும் போலீசுக்கும் செலவிடப்பட்ட நிதி தொழில்துறைக்கு, அறிவு வளர்ச்சிக்கு, ஓய்வு நேரப் பொழுதுபோக்குகளுக்கு செலவிடப்படும்.

**சான்-சிமோனின் புதிய கிறிஸ்துவம்.** சான்-சிமோனின் கருத்துமுதல்வாதக் கருத்தின்படி அறிவும் நாகரிகமும்



7 1184

தொழில்துறை அமைப்பின் சித்தாந்த அடிப்படைகளை, புதிய தத்துவஞானத்தை அமைப்பதற்குரிய வளர்ச்சி நிலையை அடைகின்ற பொழுது அந்த அமைப்பு வெற்றி பெறும். அத்தத்துவஞானம் சாதாரண மக்களின் அறிவுக்குத் தக்கபடி தகவமைக்கப்படும், அதாவது கடவுளின் வெளிப்படுத்தல்கள் என்ற வடிவத்தில் எடுத்துக் கூறப்படும். அதனால்தான் அவருடைய நூல்களில் தர்க்க ரீதியான விளக்கங்களும் கடவுகளின் வெளிப்படுத்தல்களும் கலந்திருக்கின்றன. மரபுவழிப்பட்ட கிறிஸ்துவ சமயம் நிலப்பிரபுத்துவத்துடன் சேர்ந்து காலாவதியாகி விட்டது என்று அவர் கருதினார். கத்தோலிக்க, புரோட்டஸ்டேன்ட் சமயங்களும் திருச்சபைகளும் கடவுளின், ஏசுநாதரின் கொள்கைகளுக்கு, மக்கள் சகோதர பாசத்தில் வாழ வேண்டும் என்னும் முக்கியமான கொள்கைக்கு துரோகம் செய்து விட்டன என்று அவர் கூர்மையாக விமர்சனம் செய்தார். மதகுருக்களும் மதச் சார்பற்ற அதிகாரமும் செல்வர்களைப் பாதுகாப்பதையும் ஏழைகளை ஒடுக்குவதையும் நோக்கமாகக் கொண்ட, கடவுட் தன்மைக்கு எதிரான ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதை அவர் கண்டார். அன்றைய கிறிஸ்துவ சமயத்துக்கு மாறான முறையில் புதிய கிறிஸ்துவம் மதச் சார்பற்ற அதிகாரத்தைக் கீழ்ப்படுத்தி, கிறிஸ்துவ ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக உறவுகளின் அமைப்பை நிறுவும்; மிகவும் ஏழை வர்க்கத்தின் வாழ்க்கையை முன்னேற்றுகின்ற உயர்ந்த இலட்சியத்தை நோக்கி சமூகத்தைச் செலுத்தும். மக்கள் இப்பூமியில் தங்களுடைய வாழ்க்கையின் போது மனித இனத்தின் நலத்தை உயர்த்துவதற்குப் பாடுபட வேண்டும்.

புதிய கிறிஸ்துவம் புத்தாக்கம் செய்யப்பட்ட சமயம் என்ற முறையில் எல்லா நாடுகளுக்கும் நிரந்தரமான சமாதானத்தை அளிக்கும், மனிதகுலத்தின் நன்மைக்குப்

பாதகமான முறையில் சொந்த நன்மைக்குப் பாடுபடுகின்ற எந்த நாட்டையும் எதிர்த்து மற்ற நாடுகளை ஒன்றுசேர்க்கும்.

சான்-சிமோன் சகலவிதமான அரசியல் போராட்டங்களையும் எதிர்த்தார்; சமூகத்தை மாற்றியமைக்கின்ற சக்தி என்ற முறையில் அற உணர்ச்சியை ஆதரித்தார்.

**சான்-சிமோனின் கற்பனைச் சமூகத் தத்துவம்.** சான்-சிமோனின் சமூகப் போதனையை சோஷலிசக் கற்பனைத் தத்துவம் என்று முழுமையாக சொல்ல முடியாது; ஏனென்றால் அவர் தன்னுடைய இலட்சிய சமூகத்தில் தனியுடைமை, வர்க்கங்கள் (தொழில்முனைவர்கள் மற்றும் பாட்டாளிகள்), லாபம் ஆகியவற்றைப் பாதுகாத்தார். உற்பத்திச் சாதனங்களைப் பகுதியளவுக்கு கூட சமூகமயமாக்குதலைப் பற்றி அவர் எழுதவில்லை, அவருடைய தொழில்துறை அமைப்பு பல அம்சங்களில் அரசு முதலாளித்துவத்தைப் போன்றதே. தொழில்முனைவர்களின் சொந்த நலன்களை சமூகத்தின் நலன்களுக்குக் கீழ்ப்படுத்துதல் வெறும் எண்ணமே; ஏனென்றால் அவர் தொழில்முனைவர் வர்க்கத்தை ஆளும் வர்க்கம் என்று பிரகடனம் செய்கிறார். முடிவில் தொழில்முனைவர்களின் நலனே "பொது" நலனாகக் கருதப்படும் என்பதே இதன் பொருளாகும்.

சான்-சிமோனுடைய போதனை ஆரம்பத்திலிருந்து கடைசிவரை கற்பனாவாதமாக, முதலாளித்துவ அமைப்பின் அடிப்படைகளை மாற்றாமல் அதன் அராஜகத்தை ஒழிக்கின்ற முயற்சிகளைப் பொறுத்தமட்டில் எதார்த்தத் தன்மை இல்லாததாக இருக்கிறது. அவர் முதலாளி வர்க்கத்தை (அதை அவர் தொழிலதிபர்கள் என்று குறிப்பிட்டார்) அதிகமான அறிவுடைய வர்க்கம், தேசிய நலன்களின் பாதுகாவலன் என்று வர்ணித்து இலட்சியப்படுத்துகிறார்; அது கூலியுழைப்பைச் சுரண்டுகின்ற வர்க்கம்

என்பதைப் பார்க்கத் தவறினார்; தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்துதல், தொழிலதிபர்கள், அறிவுஜீவிகளின் தார்மிக முயற்சிகளின் மூலம் பாட்டாளி வர்க்கத்தினரை அவர்களுடைய வறுமை, துன்பத்திலிருந்து விடுவிப்பதன் சாத்தியம் ஆகியவை குறித்த அவருடைய திட்டங்களில் கூலியுழைப்பு முறையை இலட்சியப்படுத்தி நிரந்தரமாக்கினார். அவர் கீழ் அடுக்குகளின் புரட்சிகர நடவடிக்கைகள் குறித்து அஞ்சினார்; பாட்டாளி வர்க்கம் எதுவுமே செய்யக் கூடாது, தன்னுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பைத் தங்களுடைய இயற்கையான தலைவர்களாகிய தொழில்முனைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கருதினார்.

எனினும் சான்-சிமோனின் கற்பனைச் சமூகத் தத்துவத்தில் சோஷலிசப் போக்குகளைக் காண முடியும். உழைப்பின் சமூகத் திட்டத்தைப் பற்றிய கருத்து, அரசை உற்பத்தியின் நிர்வாகமாக மாற்றுதல், உழைப்பை எல்லோருக்கும் கடமையாகச் செய்தல், திறமைகளின் படிவரிசை அமைப்பு, அதிகமான எண்ணிக்கையுள்ள வர்க்கத்துக்கு ஆக அதிகமான நன்மைக் கோட்பாடு ஆகிய கருத்துகள் இவற்றில் அடங்கும். அவருடைய போதனையில் மேற்கூறியவையும் இதர கருத்துகளும் சோஷலிச சிந்தனையின் வளர்ச்சியின் மீது அதிகமான தாக்கம் செலுத்தின.

மக்கள் மத்தியிலும் உலக நாடுகள் மத்தியிலும் ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் வாழ்க்கையின் அடிப்படைக் கோட்பாடாக இருக்கின்ற சமூகமாக தொழில்துறை அமைப்பு இருக்கும்; அங்கே செல்வர்களும் ஏழைகளும் இருக்க மாட்டார்கள், தனி நபர்கள், நாடுகளின் மகிழ்ச்சி மனிதகுலத்தின் மகிழ்ச்சியுடன் இணைந்

திருக்கும் என்பது சான்-சிமோனுடைய போதனையாகும். ஆனால் மார்க்சுக்கு முந்திய இதர சோஷலிஸ்டுகளைப் போல சான்-சிமோன் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை உணரத் தவறினார். சமூக மாற்றம் குறித்த அவருடைய திட்டங்கள் தொழிலாளி வர்க்கத்துக்கு அல்ல, செல்வர்களுக்கும் அறிவுஜீவிகளுக்கும் உரித்தானவை.

சான்-சிமோனுடைய சமூகக் கருத்துகள் ஒன்றுக்கொன்று பொருந்தாமலும் முரண்பாடுள்ளதாகவும் இருந்த போதிலும் அவர் சமூக சிந்தனை, சோஷலிச இயக்கத்தின் வரலாற்றில் முக்கியமான பாத்திரத்தை வகித்தார்.

### ஷார்ல் ஃபூரியே

**வரலாற்றைப் பற்றி ஃபூரியேயின் கருத்துகளும் முதலாளித்துவ சமூகத்தைப் பற்றி அவருடைய விமர்சனமும்.** மேதாவிலாசம் நிறைந்த பிரெஞ்சுக் கற்பனாவாத சோஷலிஸ்டான ஷார்ல் ஃபூரியே (1772—1837) ஒரு வர்த்தகருடைய மகனாகப் பிறந்தார். அவர் பள்ளிப் பருவத்திலேயே மிகவும் புத்திசாலியாக இருந்தார்; பூகோளம், மொழிகள், இசை, கவிதை, ஓவியம் ஆகியவற்றை அக்கறையுடன் கற்றார்; கல்லூரிப் பட்டம் பெற்ற பிறகு தாயாருடைய விருப்பத்தின்படி வர்த்தகத்தில் ஈடுபட்டார், ஆனால் அவர் அத்தொழிலை வெறுத்தார். எனினும் அவர் பிற்காலத்தில் முதலாளித்துவ சமூகத்தை நுணுக்கமாகவும் கூர்மையாகவும் விமர்சிப்பதற்குத் தேவையான விரிவான விவரங்கள் இந்த அனுபவத்தின் போது அவருக்குக் கிடைத்தன. சான்-

சிமோனைப் போல ஃபூரியேயும் ஏழையாக மரணமடைந்தார்.

19ஆம் நூற்றாண்டின் முதற்பாதியைச் சேர்ந்த தற்சிந்தனையுள்ள சிந்தனையாளரான ஷார்ல் ஃபூரியே விரிவான பாரம்பரியத்தை விட்டுச் சென்றிருக்கிறார்; ஆனால் அவரது எல்லாக் கருத்துகளும் சம அளவான மதிப்பைக் கொண்டிருக்கவில்லை. அவருடைய அமைப்பில் முற்போக்கும் மேதாவிலாசமும் நிறைந்த கருத்துகள் பழமைவாத—சில சமயங்களில் பிற்போக்கான—கருத்துகளுடன் நெருக்கமாக இணைந்திருக்கின்றன. இது அநேகமாக வேறெந்த அமைப்பிலும் கிடையாது.

ஃபூரியேயின் அமைப்பு கடவுள், பருப்பொருள், கணிதம் என்னும் மூன்று நிலையான கொள்கைகளை அங்கீகரிப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அவை ஒன்றுசேர்ந்து நிரந்தர நீதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. கடவுள் உயிரற்ற, வடிவமற்ற பருப்பொருளிலிருந்து பிரபஞ்சத்தைப் படைப்பதனால் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறார். அவர் பிரபஞ்சத்தை வளர்க்கின்ற திட்டத்தைக் கொண்டிருக்கிறார். அவருடைய தெய்விகத் திட்டத்தின்படித்தான் இயற்கையிலும் சமூகத்திலும் எல்லாம் நடைபெறுகின்றன. இயக்கத்தைப் பற்றிய கணித விதிகளின் காரணமாக, பருப்பொருளிலிருந்து கடவுள் படைத்த பிரபஞ்சம் ஒத்திசைவான அமைப்பாக இருக்கிறது. தன்னுடைய படைப்பின் பொது நோக்கத்தின்படியும் கணித விதிகளின்படியும் கடவுள் பிரபஞ்சத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் அவற்றுக்குரிய தனி விதிகளை அளித்திருக்கிறார்.

இந்த சமூக விதியை, கடவுளின் திட்டத்தைக் கண்டறிகின்ற கௌரவம் தனக்குக் கிட்டியிருப்பதாக ஃபூரியே கூறினார். மனிதகுலம் தன்னுடைய போதனையைப் பின்

பற்றினால் முழுமையான ஒத்திசைவை எளிதில் அடைந்து விடும் என்று அவர் கூறினார்.

முதலாளித்துவ அமைப்பு, அதன் சமூக-பொருளாதார அடிப்படை, அரசியல் வடிவங்கள், சித்தாந்த, தார்மிகக் கொள்கைகளைப் பற்றிய விமர்சனம் ஃபூரியேயின் நூல்களில் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது.

நாகரிகத்தின் வளர்ச்சி உழைப்புக் கருவிகளை உடைமையாகக் கொண்டிருந்த நபர்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறது, மூலதனம் சிறுபான்மையினரது கரங்களில் குவிந்து, உற்பத்தியைப் பெரிதாக்குதல் ஒருவகையில் அவசியமாக இருந்தாலும் அது சமூகப் பேராபத்தாக மாறுகிறது என்று அவர் கூறினார். மூலதனக் குவிப்பு சமூகம் முதலாளிகளடங்கிய சிறு குழுவினரின் தயவை எதிர்பார்க்கும்படி செய்கிறது; பெருந்திரளான மக்களை சுரண்டுவதைத் தீவிரப்படுத்துவதற்கு அக்குழு தன்னுடைய நிலைகளைப் பயன்படுத்துகிறது. ஆகவே உழைக்கும் மக்களுடைய நிலை வேகமாக நலிவுறுகிறது என்றார் ஃபூரியே. உழைக்காவிட்டால் பட்டினி கிடக்க நேரிடும் என்பதற்காக உழைக்கின்ற கூலித் தொழிலாளி உழைப்பையே வெறுக்கிறான்; அதை சித்திரவதையென்று, நரகமென்று கருதுகிறான். அவனுடைய சொற்ப ஊதியம் ஒன்றுதான் அவனுடைய உடைமை; அதிகமான நபர்கள் உழைக்க வருவதால் அதுவும் படிப்படியாகக் குறைந்து விடுகிறது. ஒரு நாட்டின் தொழில்துறை அதிகமாக வளர்ச்சியடைகின்ற அளவுக்குத் தொழிலாளர்களின் நிலை அதிகமாக மோசமடைகிறது. நிலவுகின்ற அமைப்பில் பெருந்திரளான மக்கள் மீது தனியுடைமை கொடுங்கோன்மை செலுத்துகிறது, மொத்த சமூக அமைப்பும் பகை முரண்பாடுகளைக் கொண்டிருக்கிறது என்று ஃபூரியே வலியுறுத்தினார்.

ஃபூரியே முதலாளித்துவ அரசியல் சட்டங்களில்

அளிக்கப்படுகின்ற உரிமைகள், சுதந்திரங்களின்—முதலாளி வர்க்க சித்தாந்திகள் அவற்றைப் பாராட்டுகிறார்கள்—போலித்தன்மையை விமர்சனம் செய்து அம்பலப்படுத்தினார். ஒரே சரியான உரிமை என்ற முறையில் வேலைக்கு உரிமையின் தலையான முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார். முதலாளித்துவத்தின் ஆதரவாளர்கள் மனித உரிமைகளைப் பற்றிப் பேசுகின்ற பொழுது வேலைக்கு உரிமையைப் பற்றிப் பேசுவதில்லை, ஏனென்றால் முதலாளித்துவத்தின் கீழ் அதை மெய்யாகவே அமுலாக்க முடியாது, அந்த உரிமை இல்லாமல் மற்ற உரிமைகளால் பயனில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

ஃபூரியே முதலாளித்துவ சமூகத்தைக் கூர்மையாக விமர்சனம் செய்த போதிலும் அதன் வர்க்க இயைபைப் பற்றி அவர் தெளிவில்லாத கருத்தையே கொண்டிருந்தார். 18ஆம் நூற்றாண்டின் சோஷலிஸ்டுகளைப் போல அவர் சமூகத்தை செல்வர், ஏழை என்று பிரித்தார்.

முதலாளித்துவத்திலுள்ள சுதந்திர வர்த்தக அமைப்பின் அராஜகம் ஒரு திட்டமிட்ட அமைப்புடன் முற்றிலும் பொருந்தாது என்று ஃபூரியே கருதினார். சுதந்திர வர்த்தகத்தில் ஒவ்வொருவரும் தன்னுடைய சொந்த நலன்களைப் பற்றியே அக்கறை எடுத்துக் கொள்வார், சமூகத்தைப் பற்றி ஒருவரும் கவலைப்பட மாட்டார். சமூக நலன்களும் தனிப்பட்ட நலன்களும் ஒன்றுக்கொன்று எதிராக இருக்கின்றன; நிலவுகின்ற அமைப்பு தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையில் ஒரு யுத்தத்தை நடத்துகிறது என்று அவர் கூறினார்.

ஃபூரியே அன்றைய அரசியல் அமைப்பையும் அதன் அடிப்படையான கருத்துகளையும் கண்டனம் செய்தார். அரசியல் மற்றும் சித்தாந்த அம்சங்கள் பொருளாதார உறவுகளைச் சார்ந்திருப்பதை அவர் பல உதாரணங்களின்

மூலம் விளக்கினார். பொருளாதார நெருக்கடிகள் அரசியல் துறையில் அரசியல் அநீதிகள் என்னும் வடிவத்தில் பிரதி பலிக்கின்றன என்று அவர் கருதினார். அரசு உழைக்கின்ற பெருந்திரளான மக்களுக்குப் பாதகமான முறையில் தனிச் சலுகை கொண்டோரையும் செல்வர்களையும் ஆதரிக்கிறது, உழைக்கும் மக்களை அடிமைப்படுத்துகிறது என்று அவர் கருதினார்.

இந்த மாபெரும் கற்பனாவாதி முதலாளித்துவ நாகரி கத்தின் அகங்காரம் நிறைந்த அறநெறியையும் விமர்சனம் செய்தார். துறவு வாழ்க்கைக்காக, மனித உணர்ச்சிகளை நசுக்குவதற்காக கிறிஸ்துவ அறநெறியை நிராகரித்தார். இந்த உலகத்தில் துன்பத்தை அனுபவித்தால் மறு உலகத் தில் இன்பத்தைப் பெற முடியும் என்னும் கருத்தை, அதாவது அன்று நிலவிய தீமையை நியாயப்படுத்துகின்ற கிறிஸ்துவக் கொள்கையை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

பெண்களின் விடுதலையை ஆதரித்த ஒருசில சோஷ லிஸ்டுகளில் ஃபூரியேயும் ஒருவர். சமூக முன்னேற்றம் பெண்கள் விடுதலையை நேரடியாக சார்ந்திருக்கிறது என்று அவர் கூறினார். எங்கெல்ஸ் இதைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்: ''எந்தவொரு சமுதாயத்திலும் பெண் களுக்குக் கிட்டியுள்ள விடுதலையின் தரம் பொது விடு தலையின் தரத்துக்கு இயற்கையான அளவுகோலாகும்.'' *

ஃபூரியே முதலாளித்துவத்தையும் அதன் சித் தாந்திகளையும் பற்றிச் செய்த கடுமையான விமர்சனம் சமூக நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்குரிய தத்துவ ரீதியான முன்நிபந்தனைகளின் வளர்ச்சியில் முக்கியமான

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** தொகுதி 10, பக்கம் 65.

பாத்திரத்தை வகித்தது. மார்க்சும் எங்கெல்சும் தங்களுடைய நூல்களில் இந்த விமர்சனத்தை அடிக்கடி உபயோகித்தார்கள். ஃபூரியே முதலாளித்துவத்தைத் துணிவுடன் விமர்சித்த போதிலும் அதன் தீமைகளின் அடிப்படைக் காரணத்தைப் புரிந்து கொள்ளத் தவறினார். நாகரிகத்தில் தீமைகள், கேடுகள், பெருந்துன்பங்கள் இருப்பதற்காக அவர் தத்துவஞானிகளையும் பொருளியலாளர்களையும் திரும்பத் திரும்பக் குற்றம் சாட்டினார்; ஆனால் உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள பகை முரணியல்புதான் அதற்கு முதற் காரணம் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை; நாகரிகத்தில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சர்வப்பொது இணக்க அமைப்பை ஏற்படுத்துவதில் நம்பிக்கை வைத்தார், வர்க்கப் போராட்டத்திலும் புரட்சியிலும் அவர் நம்பிக்கை வைக்கவில்லை.

**ஃபூரியேயின் சமூக இணக்கம்—சோஷலிசக் கற்பனைத் தத்துவத்தின் ஒரு ரகம்.** நாகரிக நிலைக்குப் பின்னர் வரவிருக்கின்ற எதிர்கால சமூகத்தை ஃபூரியே "சமூக அமைப்பு" அல்லது "சமூக இணக்கம்" என்று கூறினார். அவர் அதைக் குறிப்பிடுவதற்கு "சோஷலிசம்", "கம்யூனிசம்" என்னும் சொற்களைப் பயன்படுத்தவில்லை. எனினும் அவருடைய சமூக அமைப்பு கற்பனாவாத சோஷலிசத்தின் ஒரு ரகம் என்று கூறலாம்.

இந்த எதிர்கால சமூகம் மனித உணர்ச்சிகள் என்னும் பொறியமைவினால் ஒழுங்குப்படுத்தப்படும் என்று அவர் கருதினார். அவர் அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார்: 1) பொருளாயத அல்லது புலனுணர்ச்சிகள் (சுவை, ஸ்பரிசம், காட்சி, கேட்டல், முகர்தல்); 2) பிணைப்பு உணர்ச்சிகள் (நட்பு, காதல், புகழார்வம், குடும்பப் பற்று); 3) வினியோக உணர்ச்சிகள் (போட்டி அல்லது சூழ்ச்சி செய்கின்ற உணர்ச்சி, பல்வகைமை, படைப்பு நடவடிக்கைக்கான

உணர்ச்சி). இவற்றில் மூன்றாவது பிரிவு தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கிறது. வினியோக உணர்ச்சிகளின் கூட்டு நடவடிக்கை இணக்கத்துக்கு வழி வகுக்கிறது.

ஒரு நபருடைய இயல்பான விருப்பார்வங்களுடன் பொருந்துகின்ற முறையில் உழைப்பு அமைக்கப்பட்டால் வினியோக உணர்ச்சிகள் முழுமையாக வளர்ச்சி அடையும் என்பது ஃபூரியேயின் கருத்தாகும். அது அவர்களுக்கு உழைப்பைப் பற்றி உடலியல் சார்ந்த மற்றும் ஆன்மிக திருப்தியைக் கொடுக்கும், உழைக்கும் மக்களை உத் வேகப்படுத்தும். வினியோக உணர்ச்சிகளின் மொத்த தொகுதியும் திருப்தியடைந்தால் உழைப்பின் ஒவ்வொரு ரகமும் சார்புநிலையில் சுதந்திரமான உழைப்பு அலகாகும்; அது வரிசை **(série)** எனப்படும்; அத்தகைய வரிசைகளின் எண்ணிக்கை குறிப்பிட்ட சமூகத்திலுள்ள தொழில்களின் எண்ணிக்கையுடன் பொருந்தி நிற்கும்.

உழைப்பு இணையம் அல்லது ஃபலான்ஜ் **(phalange)** ஃபூரியேயின் இணக்கமான சமூகத்தில் முக்கியமான அலகாகும். ஃபலான்ஜ் என்பது பிரதானமாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மற்றும் நுகர்வுச் சங்கமாகும், அதில் கால் பகுதி உழைப்பு மட்டுமே தொழில் துறைத் தன்மையைக் கொண்டிருக்கும். அதன் எல்லா உறுப்பினர்களும் தமது சொந்த விருப்பார்வங்களுக்குத் தக்கபடி உழைப்பார்கள். உழைப்பு வரிசைகளுக்கு, அதாவது உழைப்பு ரகங்களுக்குத் தக்கபடி உழைப்பு அமைக்கப்படும். உதாரணமாக, தோட்டத் தொழிலாளர்கள், கால்நடை வளர்ப்பவர்கள், நெசவாளர்கள், இதர வரிசைகள் இருக்கும்.

ஒவ்வொரு மனிதனிடமும் சில உணர்ச்சிகளும் விருப்பார்வங்களும் இருத்தல் அவன் ஒரு வேலை நாளின் போது ஒரு உழைப்பு வரிசையிலிருந்து மற்றொரு வரிசைக்கு

பாத்திரத்தை வகித்தது. மார்க்சும் எங்கெல்சும் தங்களுடைய நூல்களில் இந்த விமர்சனத்தை அடிக்கடி உபயோகித்தார்கள். ஃபூரியே முதலாளித்துவத்தைத் துணிவுடன் விமர்சித்த போதிலும் அதன் தீமைகளின் அடிப்படைக் காரணத்தைப் புரிந்து கொள்ளத் தவறினார். நாகரிகத்தில் தீமைகள், கேடுகள், பெருந்துன்பங்கள் இருப்பதற்காக அவர் தத்துவஞானிகளையும் பொருளியலாளர்களையும் திரும்பத் திரும்பக் குற்றம் சாட்டினார்; ஆனால் உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலுள்ள பகை முரணியல்புதான் அதற்கு முதற் காரணம் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை; நாகரிகத்தில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சர்வப்பொது இணக்க அமைப்பை ஏற்படுத்துவதில் நம்பிக்கை வைத்தார், வர்க்கப் போராட்டத்திலும் புரட்சியிலும் அவர் நம்பிக்கை வைக்கவில்லை.

**ஃபூரியேயின் சமூக இணக்கம்—சோஷலிசக் கற்பனைத் தத்துவத்தின் ஒரு ரகம்.** நாகரிக நிலைக்குப் பின்னர் வரவிருக்கின்ற எதிர்கால சமூகத்தை ஃபூரியே "சமூக அமைப்பு" அல்லது "சமூக இணக்கம்" என்று கூறினார். அவர் அதைக் குறிப்பிடுவதற்கு "சோஷலிசம்", "கம்யூனிசம்" என்னும் சொற்களைப் பயன்படுத்தவில்லை. எனினும் அவருடைய சமூக அமைப்பு கற்பனாவாத சோஷலிசத்தின் ஒரு ரகம் என்று கூறலாம்.

இந்த எதிர்கால சமூகம் மனித உணர்ச்சிகள் என்னும் பொறியமைவினால் ஒழுங்குப்படுத்தப்படும் என்று அவர் கருதினார். அவர் அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார்: 1) பொருளாயத அல்லது புலனுணர்ச்சிகள் (சுவை, ஸ்பரிசம், காட்சி, கேட்டல், முகர்தல்); 2) பிணைப்பு உணர்ச்சிகள் (நட்பு, காதல், புகழார்வம், குடும்பப் பற்று); 3) வினியோக உணர்ச்சிகள் (போட்டி அல்லது சூழ்ச்சி செய்கின்ற உணர்ச்சி, பல்வகைமை, படைப்பு நடவடிக்கைக்கான

உணர்ச்சி). இவற்றில் மூன்றாவது பிரிவு தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கிறது. வினியோக உணர்ச்சிகளின் கூட்டு நடவடிக்கை இணக்கத்துக்கு வழி வகுக்கிறது.

ஒரு நபருடைய இயல்பான விருப்பார்வங்களுடன் பொருந்துகின்ற முறையில் உழைப்பு அமைக்கப்பட்டால் வினியோக உணர்ச்சிகள் முழுமையாக வளர்ச்சி அடையும் என்பது ஃபூரியேயின் கருத்தாகும். அது அவர்களுக்கு உழைப்பைப் பற்றி உடலியல் சார்ந்த மற்றும் ஆன்மிக திருப்தியைக் கொடுக்கும், உழைக்கும் மக்களை உத் வேகப்படுத்தும். வினியோக உணர்ச்சிகளின் மொத்த தொ குதியும் திருப்தியடைந்தால் உழைப்பின் ஒவ்வொரு ரக மும் சார்புநிலையில் சுதந்திரமான உழைப்பு அலகாகும்; அது வரிசை **(série)** எனப்படும்; அத்தகைய வரிசைகளின் எண்ணிக்கை குறிப்பிட்ட சமூகத்திலுள்ள தொழில்களின் எண்ணிக்கையுடன் பொருந்தி நிற்கும்.

உழைப்பு இணையம் அல்லது ஃபலான்ஜ் **(phalange)** ஃபூரியேயின் இணக்கமான சமூகத்தில் முக்கியமான அல காகும். ஃபலான்ஜ் என்பது பிரதானமாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மற்றும் நுகர்வுச் சங்கமாகும், அதில் கால் பகுதி உழைப்பு மட்டுமே தொழில் துறைத் தன்மையைக் கொண்டிருக்கும். அதன் எல்லா உறுப்பினர்களும் தமது சொந்த விருப்பார்வங்களுக்குத் தக்கபடி உழைப்பார்கள். உழைப்பு வரிசைகளுக்கு, அதா வது உழைப்பு ரகங்களுக்குத் தக்கபடி உழைப்பு அமைக்கப் படும். உதாரணமாக, தோட்டத் தொழிலாளர்கள், கால்நடை வளர்ப்பவர்கள், நெசவாளர்கள், இதர வரிசைகள் இருக்கும்.

ஒவ்வொரு மனிதனிடமும் சில உணர்ச்சிகளும் விருப் பார்வங்களும் இருத்தல் அவன் ஒரு வேலை நாளின் போது ஒரு உழைப்பு வரிசையிலிருந்து மற்றொரு வரிசைக்கு

மாறிக் கொள்வதை சாத்தியமாக்குகிறது; அது பல்வகைமையில் அவனுடைய நாட்டத்தையும் பூர்த்தி செய்கிறது. வரிசைகளின் அமைப்புக்குள் பொது நலன்கள், பரஸ்பர ஆதரவு என்னும் அடிப்படையில் உழைப்புக் குழுக்கள் அமைக்கப்படும். குழுக்களாகப் பிரிக்கப்படுதலும் இக்குழுக்களுக்கு உள்ளே உழைத்தலும் பிணைப்பு உணர்ச்சிகள், வினியோக உணர்ச்சிகள் ஆகிய இரண்டும் திருப்தியடைவதை ஊக்குவிக்கும். சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவில் மனதுக்குப் பிடித்தமான வேலையைச் செய்தல் உடலியலிலும் ஆன்மிக ரீதியிலும் ஒரு மனிதருக்குத் திருப்தி அளிக்குமாதலால் அவர் உற்சாகம் என்னும் மிகவுயர்ந்த உணர்ச்சியினால் தூண்டப்படுவார். அப்பொழுது உழைப்பு ஒரு படைப்பு நடவடிக்கையாக மாறும். எல்லா உணர்ச்சிகளையும் முழு அளவில் ஊக்குவித்தலும் திருப்தி செய்தலும் அவற்றின் இயற்கையான ஒன்றுசேர்தலாகிய இணக்கத்துக்கு இட்டுச் செல்லும். ஆகவே உழைப்பு இணையத்தின் ஒவ்வொரு உறுப்பினருடைய சொந்த நலன்களும் சமூகத்தின் நலன்களுடன் இணைந்து விடும்.

சமூகத்தின் எல்லா வர்க்கங்களும் உழைப்பு இணையத்தில் சேர்ந்தவுடனே அவர்கள் ஒரே நலன்களால் பிணைக்கப்படுவார்கள், பரஸ்பர வெறுப்பு மறைந்து விடும், வேலையின் கவர்ச்சியினால் அவர்கள் ஈர்க்கப்படுவார்கள் என்று ஃபூரியே நம்பினார். ஏழைகள் இனிமேல் கூலி உழைப்புச் சுமையினால் துன்பமடைய மாட்டார்கள்; செல்வர்கள் உடலுழைப்பை இகழ மாட்டார்கள், அதில் அவர்கள் பங்கெடுப்பார்கள். எங்கும் இணக்கம் நிலவுகின்ற சூழலில் வர்க்கப் பகைமை மறைந்து விடும் என்று அவர் நம்பினார். ஃபூரியேயின் மிகையான கற்பனாவாத அமைப்பு இப்படி வர்ணிக்கப்பட்டது.

உழைப்பு இணையத்தில் சமூக உழைப்பின் உற்பத்திப்

பொருளின் வினியோக முறை அதற்குள் பாதுகாக்கப்பட்ட வர்க்கப் பிரிவினையைப் பாதுகாத்து உறுதிப்படுத்துகிறது. எல்லா சமூக வருமானங்களும் மூன்று பகுதிகளாகப் பிரிக் கப்படும்: $^4/_{12}$ பங்கு முதலாளிகளுக்கு லாப ஈவாகத் தரப்படும், $^3/_{12}$ பங்கு திறமைக்கு சன்மானமாக அளிக் கப்படும், $^5/_{12}$ பங்கு உழைப்புக்குக் கூலியாகக் கொடுக் கப்படும். தொழிலாளர்கள் உள்பட உழைப்பு இணையத் தின் ஒவ்வொரு உறுப்பினரும் பங்குதாரர்களாக இருக்க முடியும், லாப ஈவுகளைப் பெற முடியும்.

உழைப்பு இணையத்தில் வருமான வினியோகம் உழைப்புப் பிரிவினையின்மீது தாக்கம் செலுத்தும்: அதிக வருமானம் உள்ளவர்களான முதலாளிகள் சுலபமான, ஆனால் குறைவான வருமானத்தைக் கொண்ட வேலை களைச் செய்வார்கள்; உழைப்பைத் தவிர வேறெதையும் தர முடியாத ஏழைகள் அதிகமான வருமானமுள்ள ஆனால் கவர்ச்சியில்லாத, கடுமையான வேலைகளைச் செய்வார் கள்.

உழைப்பு இணையத்தின் நுகர்வில் சமத்துவம் இருக் காது. அதன் குடியிருப்புகளும் பொது உணவு விடுதிகளும் வெவ்வேறு தரங்களைக் கொண்டிருக்கும், கட்டண விகி தங்களும் வெவ்வேறாக இருக்கும். உயர்ந்த தரமுடைய குடியிருப்புகள், உணவு விடுதிகளைச் செல்வர்கள் மட்டுமே பயன்படுத்தக் கூடியவர்களாக இருப்பார்கள்.

சொந்த வீட்டுப் பொருளாதாரத்தைக் கொண்டிருக் கின்ற குடும்பம் என்னும் பொருளாதார அலகு உழைப்பு இணையத்தில் இருக்காது. குழந்தைகள் வளர்ப்பும் குடும்பப் பொறுப்பாக இருக்காது. ஒத்திசைவான அமைப்பு பெண்களுக்கு முழு விடுதலை அளிக்கும்; அவர்கள் உழைப்பு இணையத்தில் சம உரிமைகளைக் கொண்ட உறுப்பினர் களாக இருப்பார்கள். ஆண்களோடு பெண்களும் பல்வேறு

உழைப்பு வரிசைகளில் பங்கெடுப்பார்கள். குழந்தைகள் பிறந்து வாலிபர்களாக, யுவதிகளாக வளர்கின்ற வரை சமூகம் அவர்களை வளர்க்கும். அதன் மூலம் அவர்கள் சமூக உணர்ச்சிகளையும் உழைப்புத் திறமைகளையும் பெறுவார்கள்.

ஒரே தன்மையுள்ள பொருளாதார அடிப்படைகள், தொழில்துறைப் படைகளின் அமைப்பு, பொது நாணய முறை, அளவுகோல்கள், பொது மொழி, அச்செழுத்து, இதரவற்றின் மூலம் உழைப்பு இணையங்களின் உலகக் கூட்டு ஏற்பட முடியும் என்று ஃபூரியே நம்பினார்.

**ஃபூரியேயின் சோஷலிசக் கற்பனைத் தத்துவத்தின் வரலாற்று முக்கியத்துவம்.** ஃபூரியே அரசியல் போராட்டத்தையும் புரட்சியையும் வன்மையாக எதிர்த்தார். அவர் வர்க்கங்களுக்கு இடையில் சமரசத்தையும் ஒத்துழைப்பையும் போதித்தார், சமாதான ரீதியில் சமூக மாற்றத்தை வலியுறுத்தினார். இவை அவருடைய போதனையிலுள்ள அடிப்படையான குறை ஆகும். அதே சமயத்தில் அவருடைய விசித்திரமான திட்டங்களையும் கற்பனாவாதக் கருத்துகளையும் ஆராய்கின்ற பொழுது ஃபூரியேயின் மேதாவிலாசம் நிறைந்த ஊகங்களின் தொகுதி கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞான கம்யூனிசத்துக்கு மாற வழி வகுத்தது என்பதை நாம் மனதிலிறுத்த வேண்டும். எதிர்கால அரசு குடிமக்களுக்கு வேலை, கல்வி, மகிழ்ச்சிகரமான வாழ்க்கை ஆகிய உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பதைப் பற்றி அவருடைய தொலை நோக்குப் பார்வையை சோஷலிசத்தின் அனுபவம் நிரூபித்திருக்கிறது. ஒவ்வொரு தனிநபரும் குறிப்பிட்ட வேலைக்குத் திறமையைக் கொண்டிருக்கிறார் என்னும் சமூகத் தத்துவஞானத்தின் மாபெரும் உண்மையை ஃபூரியே முதன்முதலாக நிறுவினார் என்று எங்கெல்ஸ்

எழுதினார். போட்டி, ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்கு மாறுதல், வேலையை சுதந்திரமாகத் தேர்ந் தெடுத்தல் ஆகியவை பற்றி ஃபூரியே வெளியிட்ட கருத்து கள் திட்டவட்டமான அக்கறையைக் கொண்டிருக்கின்றன.

உழைப்பின் மூலம் கல்வி கற்றல், சர்வப்பொது, இலவசக் கல்வி முறை, மக்கள் சர்வாம்ச வளர்ச்சியடைவதற்குப் பயிற்சியளித்தல் ஆகியவை பற்றி அவருடைய கருத்துகள் இன்னும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. கல்வி போதனா முறை, குழந்தை வளர்ப்பு ஆகியவை பற்றி அவர் பல கருத்துகளைக் கூறினார். உழைப்பை மனிதனுடைய ஜீவாதாரமான தேவையாக மாற்ற வேண்டும், அறிவு உழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையிலுள்ள முரணி யல்பை ஒழிக்க வேண்டும் என்னும் கருத்தை அவர் கூறி னார்.

ஃபூரியேயின் சமூகத் தத்துவத்தில் பல குட்டி முத லாளி வர்க்க அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவற் றில் இணக்கத்தைப் பற்றிய அவருடைய கருத்து, உழைப் புக்கும் மூலதனத்துக்கும் இடையில் சமாதான ரீதியான ஒத்துழைப்பு, வர்க்கங்களுக்கு இடையில் சமரசம் பற்றிய கருத்து குறிப்பிடத்தக்கதாகும். முதலாளிகள் தம்முடைய வேலை செய்யாத வருமானத்தைத் தக்க வைத்துக் கொண் டிருக்கும் பொழுதே சமூக ரீதியில் பயனுள்ள உழைப்பில் ஈடுபடுவார்கள், தொழிலாளர்கள் படிப்படியாக சிறு முத லாளிகள் ஆவார்கள் என்று அவர் நம்பினார்.

அந்த மாபெரும் கற்பனாவாதத் தத்துவாசிரியர் தன் னுடைய போதனையில், பெரிய மூலதனத்துக்கு முன்பாக உதவியின்றித் தனித்து நின்ற குட்டி முதலாளி வர்க் கத்தின் விருப்பார்வங்களைப் பிரதிபலித்தார். அவருடைய கருத்துகள் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பாட்டாளி வர்க்கத்தின்—அது குட்டி முதலாளி வர்க்க உணர்ச்சி

களைத் தன்னிடமிருந்து அகற்றவில்லை, தன்னுடைய சொந்த வர்க்க நலன்களை இன்னும் உணரவில்லை— நிலையையும் பிரதிபலித்தன.

எதிர்கால நீதியான சமூகத்தைப் பற்றி ஃபூரியேயின் ஊகங்களின் காரணமாக, சான்-சிமோனைப் போல அவரும் ''சோஷலிசத்தின் பிதாக்களில் ஒருவர்'' என்று மார்க்ஸ் கூறினார்.

### ராபர்ட் ஓவன்

**மனிதன், சமூகத்தைப் பற்றி ஓவனின் போதனை.** ராபர்ட் ஓவன் (1771—1858) 1830க்களில் வாழ்ந்த மூன்றாவது தலைசிறந்த கற்பனாவாத சோஷலிஸ்ட் ஆவார். தொழில் துறைப் புரட்சி நடைபெற்ற காலத்தில், இயந்திரங்கள் பயன் படுத்தப்பட்டதை அடுத்து பெரிய அளவுத் தொழில்துறை உற்பத்தி அதிகரித்த பொழுது, சமூகம் முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கத்தினர் என்று வேகமாகப் பிரிவினை அடைந்த பொழுது, கைவினைஞர்கள் மற்றும் சிறு வர்த்த கர்களுடைய வாழ்க்கை நிலைமைகள் தீவிரமாக நசித்த பொழுது, சமூக முரண்பாடுகள் ஆழமடைந்த பொழுது, இங்கிலாந்தின் உழைக்கும் மக்கள் மத்தியில் புரட்சிகர உணர்ச்சிகள் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த காலத்தில் அவருடைய உலகக் கண்ணோட்டமும் சமூக-அரசியல் கருத்துகளும் உருப்பெற்றன.

ராபர்ட் ஓவன் ஒரு குட்டி முதலாளி வர்க்கக் குடும்பத்தில் பிறந்தார். அவர் பள்ளியில் நன்கு படித்தார். பிறகு இரண்டு ஆண்டுகள் ஆசிரியரின் உதவியாளராகப் பணி யாற்றினார். அவர் தன் பத்தாவது வயதில் லண்டன் மாநகரத்தில் ஒரு வர்த்தக நிறுவனத்தில் சிப்பந்தியாக இருந்தார். அவருக்கு இருபது வயதான பொழுது நெசவுத்

7—1184

தறிகளை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைக்கு உரிமையாளராக இருந்தார்.

அறிவு பூர்வமான அணுகுமுறையின் மூலம் தொழிலதிபர்களைப் பாதிக்காத முறையில் தொழிலாளர்களுடைய நிலையை அபிவிருத்தி செய்ய முடியும் என்று நம்புகின்ற முதலாளி வர்க்கப் பரோபகாரியாகவே ஆரம்பத்தில் ஓவன் செயலாற்றினார். பிற்காலத்தில் கற்பனாவாதம் என்று நிரூபிக்கப்பட்ட இந்தக் கருத்தை அமுலாக்குவதற்கு அவர் முயற்சி செய்தார்; நியூலனார்க் என்னுமிடத்தில் அவர் கூட்டு உடைமையாளராக இருந்த பெரிய பஞ்சாலையில் சில சீர்திருத்தங்களைச் செய்தார். அவர் தொழிலாளர்களுக்கு நல்ல உணவு கிடைக்கும்படி செய்தார், முன்மாதிரியான பள்ளிக்கூடத்தை நிறுவினார், அத்துடன் தொழிலாளர் குழந்தைகளுக்கு மழலையர் பள்ளியையும் காப்பகங்களையும் ஆரம்பித்தார், உடல்நலமில்லாத தொழிலாளர்களுக்கு உதவி நிதியையும் ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் ஏற்பட்ட சாதகமான விளைவுகளினால் உத்வேகம் பெற்ற ஓவன் மனிதாபிமான பாக்டரி சட்டம் என்னும் கருத்தை முன்வைத்தார். அவர் நாடாளுமன்றத்தில் தொழிலாளர்களுக்குச் சாதகமான சில மசோதாக்களை, குறிப்பாக குழந்தைகளின் உழைப்பைக் கட்டுப்படுத்துகின்ற மசோதாவை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்தார். வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவதற்கு அவசியமாக என்ன நடவடிக்கைகள் வேண்டும் என்னும் விவாதத்தில் அவர் அக்கறையுடன் பங்கெடுத்தார். உழைப்புக் கம்யூன்களை அமைத்தல் இந்த இலட்சியம் நிறைவேறுவதற்கு ஒரு வழி என்று அவர் கூறினார்.

முதலாளித்துவத்தின் கீழ் வாழ்க்கையின் கடுமையான எதார்த்தம் ஓவனுக்கு உண்மையை விளக்கியது. அவர் முன்முயற்சியெடுத்த மசோதாக்களை நாடாளுமன்றமும்

உடைமையாளர்களும் கடுமையாக எதிர்த்தார்கள். முதலாளித்துவ சமூகத்தின் சுற்றுவட்டத்துக்குள் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளைத் தீர்க்க முடியாது என்பதை அவர் படிப்படியாக உணர்ந்தார். அவர் முடிவில் முதலாளித்துவத்தை நிராகரித்து கம்யூனிசக் கருத்துகளை ஏற்றுக் கொண்டார். 1820க்களின் ஆரம்பத்தில் ஓவனுடைய நடவடிக்கைகளில் அடுத்த கட்டம் தொடங்கியது. இக்கட்டத்தில் ஓவன் கம்யூனிசத் தத்துவத்தை விரித்துக் கூறினார், கம்யூனிசப் பரிசோதனைகளில் ஈடுபட்டார்.

தன்னுடைய கருத்துகள் நிறைவேற்றப்படக் கூடியவை என்பதை நிரூபிப்பதற்காக அவர் முன்மாதிரியான கம்யூனை அமைப்பதென்றும் அதற்கு நிதியுதவி செய்வதென்றும் முடிவு செய்தார். அவர் 1824இல் அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கே தன்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து "புதிய இணக்கம்" என்ற கம்யூனிசக் காலனியை நிறுவினார். ஆனால் அது தோல்வியுற்றது; முதலாளித்துவ சமூகத்திற்குள் கம்யூனிசத் தத்துவத்தைப் பின்பற்றுகின்ற சிறிய சமூகங்கள் இருக்க முடியாது என்பது மறுபடியும் நிரூபிக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் இங்கிலாந்துக்குத் திரும்பியவுடன் மற்றொரு கம்யூனை நிறுவினார். "இணக்க மன்றம்" என்னும் பெயர் சூட்டப்பட்ட அந்த கம்யூனும் தகர்ந்தது.

18ஆம் நூற்றாண்டின் அறிவியக்கப் பொருள்முதல்வாதத் தத்துவஞானமும் மூலச்சிறப்பான ஆங்கில அரசியல் பொருளாதாரமும் ஓவனுடைய போதனைகளுக்கு சித்தாந்த மூல ஊற்றுகளாக இருந்தன. எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற கம்யூனிச சமூகம் பூமியில் பகுத்தறிவையும் நிரந்தர நீதியையும் நிலைக்கச் செய்யும் என்று ஓவன் நம்பினார். அவர் இயற்கையை அறிதலில் முரணில்லாத

பகுத்தறிவுவாதியாகவும் பொருள்முதல்வாதியாகவும் இருந்தார்; அவர் நாத்திகராகவும் இருந்தார். அவருடைய கம்யூனிசக் கருத்துகளில் சான்-சிமோன், ஃபூரியே, இதர கற்பனாவாத சோஷலிஸ்டுகளின் எழுத்துக்களில் காணப்படுகின்ற இறையியல் அல்லது மாயவாதக் கூறுகள் சிறிதும் இல்லை.

சமூக விதிகள் வர்க்க வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வையும் உருவாக்கியிருப்பதால் இயற்கை விதிகள் சமூக விதிகளைக் காட்டிலும் நன்கு அமைக்கப்பட்டவை என்று ஓவன் கருதினார். மனிதனுடைய இயற்கையான உரிமைகளிலிருந்து தொடங்கிய ஓவன் வர்க்க வேறுபாடுகள், தனியுடைமை, சுரண்டல், ஒடுக்குமுறையை ஒழித்தல், சர்வப்பொது நலத்தை நிறுவுதல் இன்றியமையாதது என்று எடுத்துக்காட்டுவதற்குப் பாடுபட்டார்.

ஒரு நபருடைய குணாம்சத்தின் உருவாக்கத்தைப் பற்றிய ஓவனுடைய கருத்தமைப்பு அவருடைய தத்துவார்த்த போதனைகளுக்கும் 18ஆம் நூற்றாண்டுப் பொருள்முதல்வாதத் தத்துவஞானத்துக்கும் இடையிலுள்ள தொடர்பை வெளிப்படுத்துகிறது. ஒரு நபர் தன்னுடைய குணாம்சத்தைத் தானே உருவாக்குகிறார் என்னும் போலியான கருத்து பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே நல்லவராக அல்லது தீயவராக இருப்பது ஒரு நபருடைய சொந்த முடிவைப் பொறுத்ததே என்று மக்கள் கருதுகிறார்கள். ஆனால் ஒரு நபருடைய குணாம்சம் சூழ்நிலையினால் உருவாக்கப்படுகிறது, அச்சூழ்நிலை குறிப்பிட்ட கருத்துகளின் விளைவு ஆகும். ஆகவே ஒரு நபருடைய குணாம்சம் குறிப்பிட்ட சூழ்நிலையைப் படைத்த கருத்துகளினால் உருவாக்கப்படுகிறது. ஒரு நபருடைய குணாம்சத்தை உருவாக்குவதில் சூழ்நிலையின் நிர்ணயகரமான பாத்திரத்தைப் பற்றிய பொருள்முதல்வாதக்

கருத்து இங்கே கருத்துமுதல்வாத முறையில் விளக்கப் படுகிறது. முதலாளித்துவம் மக்களுக்குச் சோர்வூட்டுகின்ற தீங்கான சூழ்நிலையை அளித்திருக்கிறது என்று ஓவன் குறை கூறினார்; ஆனால் புதிய ஒழுக்கக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்ட சீர்திருத்தங்களின் மூலம் நல்ல சூழ்நிலையை முதலாளித்துவ சுற்றுவட்டத்துக்குள் நிறுவ முடியும் என்று ஓவன் நம்பினார். இத்தகைய கருத்துமுதல்வாத அடிப்படையின் மீது கம்யூனிசத்தைப் பற்றித் தன்னுடைய போதனைகளை நிர்மாணிப்பதற்கு ஓவன் முயற்சித்தார்.

**தனியுடைமை மற்றும் முதலாளித்துவத்தைப் பற்றிய விமர் சனம்.** 1817இல் ஓவன் தனியுடைமை, முதலாளித்துவ உழைப்புப் பிரிவினை, போட்டி என்னும் முதலாளித்துவ உறவுகளை விமர்சனம் செய்ய ஆரம்பித்தார். முந்திய சமூக உருவாக்கங்களைப் போலவே குறைபாடுகளுடைய முதலாளித்துவ சமூக அமைப்பு நிரந்தரமானதல்ல; முத லாளித்துவம் ஒரு ஒடுக்குமுறைக்கு பதிலாக மற்றொரு ஒடுக்குமுறையை ஏற்படுத்துகிறது என்று அவர் கூறினார். முதலாளித்துவ சமூகம் தொழிலாளர்கள் மத்தியில் வேலை யில்லாத் திண்டாட்டம், வறுமை, நோய் ஆகியவற்றைத் தூண்டுகிறது. அகம்பாவம் நிறைந்த சுயநலம் எல்லாத் துன்பங்களுக்கும் தீமைகளுக்கும் மூல வேராக இருக்கிறது. மக்கள் ஒருவருக்கொருவர் தனிமைப்பட்டிருக்கின்ற பொழுது சமூகத் தீமைகள் மேன்மேலும் அதிகரிக்கின்றன.

அந்த சமயத்தில் இயந்திர உற்பத்தி பெருந்திரளான மக் களின் அடிப்படையான தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு உயர்ந்த வளர்ச்சி மட்டத்தை அடைந் திருந்தது. ஆனால் தனியுடைமை நிலவிய காரணத்தால் இதைச் சாதிக்க முடியவில்லை. இங்கிலாந்தின் மாபெரும்

கற்பனாவாதியாகிய ஓவன் சமூக வாழ்க்கையின் வளர்ச்சியில் இயந்திரமும் தொழில்துறைப் புரட்சியும் வகித்த முற்போக்கான பாத்திரத்தை முழுமையாக உணர்ந்தார். முந்திய நூறு ஆண்டுகளில் தொழில்துறை உற்பத்தியில் ஏற்பட்ட மகத்தான வளர்ச்சி மனிதகுலத்தின் நிலைமைகளை அபிவிருத்தி செய்கின்ற சாதனங்களை மக்களுக்கு அளித்திருக்கிறது என்றார் ஓவன். நாடுகளுக்குப் பேராபத்தையும் துன்பத்தையும் அளிப்பது தொழில்துறை முன்னேற்றம் அல்ல, முதலாளிகள் அதைக் கையாள்கின்ற முறை அவற்றைக் கொண்டு வருகிறது.

தனியுடைமையைப் பற்றிய ஓவனுடைய துணிகரமான விமர்சனம் அது உடைமையாளர்களின் அறியாமை, பிரமைகள், அகங்காரம் ஆகியவற்றினால் ஏற்படுகிறது என்னும் வெகுளித்தனமான கருத்துடன் சேர்ந்திருந்தது. அதே சமயத்தில் தனியுடைமையை அகற்றாமல் மனிதகுலத்தின் சமூக, அறிவு மற்றும் தார்மிக முன்னேற்றத்தை ஊக்குவிக்க முடியாது என்று அவர் நுண்ணறிவுடன் கூறினார்.

திருமண உறவுகள், குடும்ப உறவுகள் தனியுடைமையினால் முடமாக்கப்படுகின்றன என்று ஓவன் கூறினார். ஒருவருக்கொருவர் இயல்பாக ஏற்படுகின்ற காதல் உணர்ச்சிக்கு பதிலாக, கேவலமான பணத்துக்காக இப்பொழுது திருமணம் நடைபெறுகிறது என்று ஓவன் வலியுறுத்தினார்.

சமூக வளர்ச்சியில் தனியுடைமை, முதலாளித்துவக் குடும்பம் ஆகியவற்றுக்கும் பிறகு சமயம் மூன்றாவது மாபெரும் கேடாகத் தோன்றியது என்று ஓவன் கூறினார். ஆதிப்பாவத்தின் காரணமாக மக்கள் நேர்மை, நன்னெறி அல்லது மகிழ்ச்சி உடையவர்களாக இருக்க முடியாது என்ற தீங்கான கருத்தை மதகுருக்கள் மக்களிடையில் பரப்பி

னார்கள் என்று ஓவன் கூறினார். தவறான கருத்துச் சூழலில் மக்களை வளர்த்த சமயத்தை ஒழிக்காமல் கம்யூனிச சீரமைப்பைச் செய்ய முடியாது. அதே சமயத்தில் வெவ்வேறு சமய நம்பிக்கைகளைக் கொண்ட மக்கள் மத்தியில் நட்புறவும் மனச்சாட்சிச் சுதந்திரமும் அவசியம் என்று ஓவன் வலியுறுத்தினார்.

இம்மாபெரும் கற்பனாவாதத் தத்துவாசிரியர் சமயத்தின் சமூக, வர்க்க இயல்பைப் புரிந்து கொள்வதற்குத் தவறினார்; மக்கள் இயற்கையையும் அதன் விதிகளையும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை, தங்களுடைய சொந்த பலத்தையும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்குரிய உரிமையையும் அறியாமல் இருக்கிறார்கள், அதனால்தான் சமயம் தோன்றி இன்றுவரை ஜீவசக்தியுடன் இருக்கிறது என்று 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சுப் பொருள் முதல்வாதிகளைப் போலவே அவர் விளக்கினார். அறிவைப் பரப்புவதன் மூலம் சமயத்தை எதிர்த்துப் போராடுவது அவருடைய செயல்திட்டமாகும்.

**உழைப்புக் கம்யூன்—ஓவனின் கம்யூனிசக் கற்பனைச் சமூகம்.** படிப்படியாக உலகம் முழுவதிலும் பரவியிருக்கின்ற சுதந்திரமான, சுயநிர்வாக உழைப்புக் கம்யூன்களின் சம்மேளனமாக எதிர்கால இலட்சிய சமூகம் இருக்கும் என்று ஓவன் கருதினார். எதிர்கால சமூகத்தின் அடிப்படை அலகுகளான இக்கம்யூன்கள் அறிவியல், உண்மை, எல்லோருக்கும் உழைப்பு, பொது முறையிலான உடைமை, குடிமக்களுக்கு சமத்துவமான உரிமைகள், கடமைகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்படும். இயற்கையின் விதிகளும் மனிதனுடைய இயற்கையான உரிமைகளும் அவற்றை ஆள்கின்ற கோட்பாடுகளாக இருக்கும். அவை மக்களுடைய உடலியல் மற்றும் தார்மிக நலத்தை ஊக்குவிக்

கும்; தனிப்பட்ட நலன்கள் சமூக நலன்களுடன் பொருந்தி நிற்கும். அறிவு உழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையில் வேறுபாடு இருக்காது. தாறுமாறான உற்பத்தி முறைக்கு பதிலாகத் திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகள் ஏற்படும். சுயநிர்வாகக் கம்யூன்களின் சுதந்திர சம்மேளனத்தில் மத்திய அதிகாரமும் இராணுவமும் இருக்காது. ஏனென்றால் யுத்தம் செய்ய வேண்டிய காரணம் இருக்காது. மனித இயல்பைப் பற்றிய போதனைக்குத் தக்கபடி செயல்படுகின்ற புதிய அமைப்பு தீமையை அகற்றி விடும், அதன் மூலம் வன்முறை, அதன் அம்சங்களாகிய தண்டனை, சிறைகளை ஒழித்து விடும்.

கம்யூன்களில் உழைப்பு எப்படி அமைக்கப்படும் என்பதை ஃபூரியே நுணுக்கமாக விவரித்தார். ஆனால் ஓவன் அப்படிச் செய்யவில்லை. கம்யூனைச் சேர்ந்த உறுப்பினர்கள் சம உரிமைகளையும் கடமைகளையும் கொண்டிருப்பார்கள், அவர்கள் பொது நலத்துக்காகப் பாடுபடுவார்கள் என்பது ஓவனுடைய தத்துவம். கம்யூன்கள் உற்பத்தியில் இயந்திரங்களை விரிவாகப் பயன்படுத்தும். விஞ்ஞானத்தின் புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துதல், இயந்திரங்களை உபயோகித்தல் ஆகியவற்றின் விளைவாக உழைப்பின் அளவு குறையும், தேவையான எல்லாப் பொருட்களையும் கம்யூனிலுள்ள உறுப்பினர்களின் தேவைகளைக் காட்டிலும் கூடுதலான அளவுகளில் உற்பத்தி செய்வது சாத்தியமாகும். விவசாயத்தில் இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்று ஓவன் தவறாகக் கருதினார். ஆகவே அது கூடாது என்றார்.

உழைப்பில் பொது அக்கறை தனிப்பட்ட அக்கறையைக் காட்டிலும் சிறந்த தூண்டுதலாக இருக்கும் என்று தலைசிறந்த கற்பனாவாதியான ஓவன் கருதினார். உறுப்பினர்

களுடைய பொதுவான அக்கறைகளுக்கும் திறமைகளுக்கும் ஏற்ற வேலைகளைக் கம்யூன் நிர்வாகம் அவர்களுக்குத் தரும்; உற்பத்திப் பொருட்கள் அவர்களுடைய தேவை களுக்குத் தகுந்த முறையில் வினியோகம் செய்யப்படும். எவருமே தன்னுடைய தேவையைக் காட்டிலும் அதிகமாக எடுத்துக் கொள்ள மாட்டார். தண்ணீர் ஏராளமாக உள்ள இடத்தில் எவரும் தண்ணீரைச் சேமிக்க மாட்டார்; அதைப் போல அங்கே செல்வத்தைத் திரட்டுவதும் பொருளற்றதாக இருக்கும்.

மனித குணாம்சத்தின் உருவாக்கத்தைப் பொறுத் தமட்டில் ஓவன் கல்வி மீது விசேஷ கவனம் செலுத்தினார். புதிய, தார்மிக உலகம் பன்முக வளர்ச்சியடைந்த, ஒன்றி ணைந்த தனிநபர்களை உருவாக்கும்; அங்கேயுள்ள அபரி மிதத்தின் காரணமாக அவர்களிடம் தன்னகங்காரம் இருக் காது. மக்கள் அறிவு பூர்வமாக உணர்கின்ற, சிந்திக்கின்ற, செயல்படுகின்ற முறையில் வளர்க்கப்படுவார்கள். ஆக, மனித இயல்பின் விதிகளைப் பற்றிய விஞ்ஞான அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகம் தவிர்க்க முடியாத படி நல்லிணக்கம் உடையதாக இருக்கும்.

புரட்சி ஏற்படக் கூடும் என்பதை ஓவன் ஒத்துக் கொண் டார்; ஆனால் புரட்சி வெடிப்பதைத் தடுக்க முடியும், உழைப் புக் கம்யூன்களின் அமைப்புக்கு சமாதான முறையில் மாற முடியும் என்று ஓவன் நம்பினார். நிலவுகின்ற சமூக அமைப்பு மனித இயல்புக்குப் புறம்பானது; அறியாமை, பிரமைகள், தவறான மற்றும் தீங்கான கொள்கைகள் அந்த அமைப்பை நிரந்தரமாக்குகின்றன என்று அவர் கருதினார். சமூகத்தை மாற்றியமைப்பதற்கு இத்தீமை களை அகற்றுதலும், விஞ்ஞானக் கருத்துகளையும் சரி யான கொள்கைகளையும் (அதாவது அவருடைய சொந்தக்

கருத்துகளை) விதைத்தலும் போதுமென்று அவர் கூறினார்.

முதலாளித்துவ அரசாங்கங்களைப் பற்றிய ஓவனுடைய கருத்துகளும் இதே கற்பனாவாதத் தன்மையைக் கொண்டிருந்தன. சமூக மாற்றங்கள் எல்லா வர்க்கங்களின் நியாயமான நலன்களைப் பூர்த்தி செய்கின்றன என்பதை முதலாளித்துவ அரசாங்கங்கள் உணர்ந்தவுடனே அவை சீர்திருத்தக் கொள்கையை அமுலாக்கும் என்று அவர் கூறினார். அறிவில்லாத ஆட்சியாளர்களுக்கு அறிவூட்ட வேண்டும் என்று அவர் கூறினார்.

அரசாங்கத்தினால் அமுலாக்கப்படுகின்ற சீர்திருத்தங்களின் மூலம் உழைப்புக் கம்யூன்களுக்கு சமாதான ரீதியான முறையில் மாறுதலைப் பற்றிய ஓவனுடைய திட்டம் வெகுளித்தனமாகவும் கற்பனாவாதமாகவும் இருந்தது மட்டுமன்றி, சில பிற்போக்கான அம்சங்களையும் கொண்டிருந்தது. ஓவன் வர்க்கப் போராட்டம், அரசியல் போராட்டம், சமூகப் புரட்சி ஆகியவற்றை எதிர்த்தார். உழைப்புக் கம்யூன்களின் அமைப்பும் இருத்தலும் புதிய கருத்துகளைப் புரிந்து கொள்வதை மட்டுமே பொறுத்திருக்கின்றன என்று அவர் கூறினார்; ஆக, உழைக்கும் மக்கள் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய அவசியத்தை அவர் மறுத்தார். அரசியல் உரிமைகளை விரிவுபடுத்துதல் சமூக அமைப்பை அபிவிருத்தி செய்யும் என்பதில் ஓவனுக்கு நம்பிக்கை இல்லை. பொதுவாக, பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மீது, குறிப்பாக சாசனவாதத்தின் வளர்ச்சியின் மீது எதிர்மறையான விளைவைக் கொண்டிருந்த அவருடைய கருத்துகள் எதார்த்தத்தில் தவறானவை.

முதலாளித்துவ சமூகத்தைக் கம்யூனிஸ்ட் திசைவழியில் திருத்தியமைப்பதற்கு அரசாங்க சீர்திருத்தங்கள்தான் ஒரே

வழி என்று ஓவன் கருதவில்லை. அவர் உற்பத்தித் துறையில் கூட்டுறவுகளை அமைத்தலையும் செலாவணித் துறையில் பரிவர்த்தனைச் சந்தைகளை அமைத்தலையும் ஆதரித்தார்; இவை ஒன்றுக்கொன்று துணையாக இருக்கும் என்று அவர் கூறினார்.

பரிவர்த்தனைச் சந்தைகளைப் பற்றிய ஓவனுடைய் கருத்து பணத்திலிருந்து பண்டங்களின் மதிப்பின் "இயற்கையான" அளவுகோலாகிய உழைப்புக்கு மாறுதலைப் பற்றிய அவருடைய கருத்துகளிலிருந்து தோன்றியது. இந்த மாற்றம் முதலாளித்துவமும் தனியுடைமையும் உடனடியாக ஒழிக்கப்பட வேண்டும் என்று கோராது, ஆனால் அவை உருவாக்குகின்ற தீமையை வேரோடு ஒழிப்பதற்கு ஒரு வழியாக இருக்கும் என்றார் ஓவன். பணத்துக்கு பதிலாக உழைப்புக் காசோலைகள் பரிவர்த்தனைச் சாதனங்களாகப் பயன்படுத்தப்படும். உழைப்பை அளவுகோலாகக் கொண்டு உற்பத்தியாளர்களுக்கு இடையில் நேரடியான பரிவர்த்தனையின் அடிப்படையில் பரிவர்த்தனைச் சந்தை செயல்படும்.

ஓவன் செயல்படுத்திய லண்டன் பரிவர்த்தனைச் சந்தை 1832 முதல் 1834 முடிய நிலவியது. ஒழுங்குபடுத்துகின்ற பாத்திரத்தை வகிக்கின்ற, போட்டியை அடிப்படையாகக் கொண்டு விலைகள் தாமாகவே உருவாகின்ற முதலாளித்துவ உற்பத்தியின் அராஜகத்தைப் பரிவர்த்தனைச் சந்தையால் ஒழிக்க முடியவில்லை.

ஓவன் பரிவர்த்தனைச் சந்தையை நிறுவியது மட்டுமன்றி, புதிதாக அமைக்கப்பட்ட தொழிற்சங்கங்களை கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையில் மாற்றுவதன் மூலம் உற்பத்தியை மாற்றியமைக்கின்ற கற்பனாவாதத் திட்டத்துக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அவருடைய திட்டத்தின்படி தொழிற்சங்கங்கள் தேசிய சங்கங்களாக (கில்டு

கள்) மாற்றப்படும்; அவை ஒவ்வொன்றும் உற்பத்தியில் அதனுடன் தொடர்புடைய ஒரு துறையை நிர்வகிக்கும். ஆக, தொழிற்சங்கங்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களாக வளர்ச்சி அடையும். சங்கங்களின் கூட்டமைப்பு நாட்டின் மொத்த உற்பத்தியையும் கவனிக்கும். இச்சங்கங்கள் எல்லாத் தொழில்துறைகளையும் நிர்வகிக்கின்ற நிலை ஏற்பட்டவுடனே அவை பரிவர்த்தனைச் சந்தைகளின் மூலம் தமக்கிடையில் பரிவர்த்தனையை அமைத்துக் கொள்ளும். இக்கூட்டுறவு அமைப்பு முதலாளித்துவச் சுற்றுவட்டத்திற்குள் அமைக்கப்படும். காலப்போக்கில் சங்கங்கள் பலம் பெற்று உழைப்புக் கம்யூன்களின் வலைப்பின்னல் ஏற்படுவதற்கு வழி வகுக்கும். ஒரு ஆண்டுக்குக் குறைந்த காலத்துக்கு இயங்கிய கூட்டுறவு அமைப்பும் தோல்வியடைந்தது. ''ராபர்ட் ஓவன் போன்ற பழைய கூட்டுறவாளர்களுடைய திட்டங்கள் விபரீதமான கற்பனைகளாய் இருந்தது என்? ஏனெனில் அவர்கள் வர்க்கப் போராட்டம், தொழிலாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல், சுரண்டும் வர்க்கத்தினுடைய ஆதிக்கத்தை வீழ்த்தல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைக் கருதாமலே அக்காலத்திய சமுதாயத்தை சமாதான வழியில் சோஷலிசமாய்த் திருத்தியமைக்கலாமெனக் கனவு கண்டனர்'' என்று லெனின் எழுதினார். *

**ஓவனுடைய போதனையின் சமூக சாராம்சம்.** ஓவனுடைய தத்துவ அமைப்பும் அவருடைய செய்முறைத் திட்டங்களும் பல முரண்பாடான அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. புறநிலையில் அவர் தொழிலாளி வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்ட பெருந்திரளான மக்களுடைய நலன்களை ஆதரித்தார்; ஆனால் அவர் சுரண்டப்படுகின்ற மக்

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** தொகுதி 12, பக்கம் 301.

களுடைய பெயரால் செயல்படவில்லை, அனைத்து மனித குலத்தின் பெயரால் செயல்பட்டார். உற்பத்தியில் மெய் யாகவே ஈடுபட்டிருக்கின்றவர்கள்தான் பொருளாயத செல் வம் அனைத்தையும் படைக்கிறார்கள் என்று அவர் கருதியது நியாயமானதே; ஆனால் சமூகத்தைத் திருத்தியமைப்பதில் ஆளும் வர்க்கங்களைச் சேர்ந்த அதிகமான செல்வாக் குள்ள நபர்கள் தீர்மானகரமான பாத்திரத்தை வகிப்பார் கள் (ஏனென்றால் அவர்கள்தான் அதிகமான கல்வியறிவு உடையவர்கள்), தொழிலாளர்களும் விவசாயிகளும் அந்தப் பாத்திரத்தை வகிக்க முடியாது என்று அவர் கரு தியது தவறாகும். ஒரு பக்கத்தில் அவர் தனியுடைமை யின் தீமைகளை அம்பலப்படுத்தினார்; மறு பக்கத்தில் தனியுடைமைக்குச் சொந்தக்காரர்கள், புதிய சமூகத்தை சமாதான முறையில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். அவருடைய போதனையில், ஒவ்வொரு மனிதனும் சமூகச் சூழலின் உற்பத்திப் பொருள் என்னும் பொருள்முதல் வாதக் கருத்து அறியாமையே புதிய சமூக அமைப்புக்கு முக்கியமான தடையாக இருக்கிறது என்னும் கருத்துமுதல் வாத அனுமானத்துடன் கலந்திருந்தது. தனியுடைமையே யுத்தம், வறுமை, துன்பம் ஆகியவற்றின் தோற்றுவாய் என்று ஓவன் கருதியது நியாயமே; ஆனால் அதே சமயத் தில் அவர் மனித சமூகத்தின் குறைகளுக்கு இறையியலா ளர்களையும் அவர்களுடைய பொய்ப் பிரசாரத்தையும் பொறுப்பாக்கினார்.

ஓவனுடைய போதனையில் பல குட்டி முதலாளி வர்க்க அம்சங்கள் இருக்கின்றன. அவருடைய சோஷலிசம் முத லாளி வர்க்கத்தை முற்றிலும் சகித்துக் கொள்வதாகவும் இயல்பாகவே மென்மையாகவும் கோழைத்தனமாகவும் சூக்குமமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தாகவும் இருக்கிறது. அது பரோபகாரத்தையும் எல்லோரி டமும் அன்பு செலுத்துதலையும் போதிக்கிறது; அது பாட்

டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தையும் புரட்சியை யும் எதிர்க்கிறது.

எனினும் மேற்கூறியவை மாபெரும் ஆங்கில சோஷ லிஸ்டின் வரலாற்றுச் சிறப்பான பங்களிப்பைக் குறைக்க வில்லை. ஏனைய தலைசிறந்த கற்பனாவாதிகளுடன் சேர்ந்து ஓவனும் முதலாளித்துவத்தை விமர்சித்தார். அந்த விமர்சனம் அவர் காலத்துக்குத் தத்ரூபமாகவும் ஆழமாக வும் இருந்தது. தத்துவார்த்த ரீதியில் போதுமான அள வுக்கு இல்லாவிட்டாலும் சோஷலிசப் புனரமைப்புத் திட்டங் களைத் தொழிலாளர் இயக்கத்துடன் இணைப்பதற்கு முயற்சி செய்த ஒரே கற்பனாவாதி ஓவனே. விஞ்ஞான கம்யூனிசத்தின் தத்துவத் தோற்றுவாயாகப் பயன்பட்ட நூல்களை எழுதிய மாபெரும் சிந்தனையாளர்களில் முதல்வராக ஓவன் கருதப்படுவது நியாயமே.

மாபெரும் சோஷலிஸ்ட் கற்பனாவாதிகளான சான்-சிமோன், ஃபூரியே மற்றும் ஓவன் சமூக வளர்ச்சிப் பிரச்சி னைகளின் பால் கருத்துமுதல்வாத அணுகுமுறையைக் கடைப்பிடித்தார்கள்; சுரண்டல் அமைப்பின் கீழ் வர்க்கப் போராட்டத்தின் பாத்திரத்தை மற்றும் புதிய சோஷலிச சமூகத்தைப் படைப்பதை நோக்கமாகக் கொண்டு அரசி யல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குத் தொழிலாளி வர்க் கம் நடத்துகின்ற போராட்டத்தின் வரலாற்று அவசியத்தை யும் விதிகளையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே அவர்கள் ஒற்றைச் சிந்தனையாளர்களாக இருக் கும்படி விதிக்கப்பட்டார்கள்; அவர்களுடைய கருத்துகள் பெருந்திரளான மக்களைக் கவர்ச்சிக்க முடியவில்லை அல் லது உலகத்தை மாற்றியமைக்கின்ற தகுதியுடைய பொரு ளாயத சக்தியாக வளர முடியவில்லை. மார்க்ஸ், எங் கெல்ஸ், லெனினது போதனை அப்படிப்பட்ட அணி திரட்டு கின்ற, மாற்றியமைக்க வல்ல சக்தியாக வளர்ச்சியடைந்தது.

அத்தியாயம் ஐந்து

# விஞ்ஞான கம்யூனிசத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சியில் முக்கியமான கட்டங்களும்

## கற்பனாவாத கம்யூனிசத்தில் ஏற்பட்ட நெருக்கடியும் விஞ் ஞான கம்யூனிசத்தைப் படைப்பதற்குரிய முன்தேவைகளின் உருவாக்கமும்

**பாட்டாளி வர்க்கம் வரலாற்றுக் களத்தில் தோன்றுகிறது.** இன்றியமையாத சமூக-பொருளாதார, வர்க்க மற்றும் தத் துவ ரீதியான முன்நிபந்தனைகள் உருவெடுக்காமல் கம்யூ னிசம் என்னும் கருத்து கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞா னமாக வளர்ச்சி அடைய முடியாது. மேற்கு ஐரோப்பா வின் முக்கியமான அரசுகளில் முதலாளித்துவம் உச்ச வளர்ச்சி அடைந்து விட்டது என்னும் முக்கியமான, நிர்ணய கரமான முன்நிபந்தனை உள்பட அத்தகைய முன்நிபந் தனைகள் 1840க்களிலேயே தோன்றியிருந்தன.

மிகை உற்பத்தியினால் ஏற்படுகின்ற பொருளாதார நெ ருக்கடிகள் அக்காலத்திலேயே வாடிக்கையாக நடைபெறத் தொடங்கி விட்டன. சுவீகரிப்பின் முதலாளித்துவ வடிவம் முதலாளித்துவ உற்பத்தியின் சமூக இயல்புடன் சமர சப்படுத்த முடியாத முரண்பாட்டு நிலைமைக்குள் நுழைந்து விட்டதை இந்த நெருக்கடிகள் நிரூபித்தன. இந்த முரண் பாட்டை சோஷலிசம் (அதாவது முதலாளித்துவத் தனியு டைமைக்கு பதிலாக சமூக உடைமை ஏற்படுதல்) மட்டுமே ஒழிக்க முடியும்.

முதலாளித்துவம் தன்னை அழிக்கின்ற சக்திகளைப்

பெற்று வளர்க்கிறது. அவை உற்பத்திச் சக்திகள், அதாவது உற்பத்திச் சாதனங்கள் மற்றும் அவற்றை இயக்குகின்ற மக்கள் ஆவர். அச்சக்திகளின் வளர்ச்சி இல்லையென்றால் முதலாளி வர்க்கம் லாபங்களைப் பெற முடியாது. ஆனால் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் அது நடைபெறுகின்ற தனியார், முதலாளித்துவ வடிவத்துக்கும் இடையிலான மோதலைத் தீவிரப்படுத்துகிறது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கையைப் பெருக்குகிறது; ஆக, முதலாளித்துவம் தனக்கு சவக்குழி தோண்டுவோனைத் தானே உற்பத்தி செய்கிறது.

1840க்களுக்குள் ஆங்கிலப் பாட்டாளி வர்க்கம் ஒரு தலைமையான சக்தியாக வளர்ச்சி அடைந்து விட்டது. தொழில் துறையின் பல பிரிவுகளில் தொழிற்சங்கங்கள் தோன்றி விட்டன. தொழிலாளர்களின் முதல் தேசிய இயக்கமான சாசனவாதம் இங்கிலாந்தில் 1838இல் தோன்றி 1842 வரை நீடித்தது. அது அரசியல் கோரிக்கைகளை, பிரதானமாக, சர்வப்பொது வாக்குரிமைக் கோரிக்கையை முன்வைத்தது.

பிரான்சில் முக்கியமான பாட்டாளி வர்க்க நடவடிக்கைகள் பல நடைபெற்றன. 1830 ஜூலை மாதப் புரட்சியின் போது பாரிஸ் நகரத்தின் உழைக்கும் மக்கள் மறுபடியும் ஏற்படுத்தப்பட்ட நிலப்பிரபுத்துவ முடியாட்சிக்கு எதிரான போராளிகளின் முதல் வரிசையில் இருந்தார்கள். அவர்கள் அரச மரபுப் படைகளை எதிர்த்து உறுதியாகப் போராடினார்கள். 1831இல் லியோனில் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலன்களுக்கு ஆதரவான முதல் தொழிலாளர் எழுச்சி நடைபெற்றது. “வாழ்வோம், உழைப்போம் அல்லது போராடுவோம், சாவோம்!” என்று எழுச்சிக்காரர்கள் முழங்கினார்கள். 1834இல் அதே நகரத்தில் மற்றொரு எழுச்சி நடைபெற்றது. இத்தடவை பொருளாதாரக் கோரிக்கைகள்

மட்டுமன்றி அரசியல் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. நாட்டில் குடியரசு நிறுவப்பட வேண்டும் என்பது அத்தகைய அரசியல் கோரிக்கைகளில் ஒன்றாகும்.

1840க்களில் ஜெர்மனியின் தொழிலாளி வர்க்கம் சமூக, அரசியல் வளர்ச்சியில் மற்ற நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்திடமிருந்து பின்தங்கி நின்றது. ஆனால் ஜெர்மனியின் தொழில்துறைப் பிரதேசங்களைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் மெய்யான அரசியல் சக்தியாக வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது; அதன் நடவடிக்கைகள் 1844இல் நாடு முழுவதிலும் எதிரொலித்த சைலீஷிய நெசவாளர்களது எழுச்சியுடன் தொடங்கின.

**கற்பனாவாத கம்யூனிசமும் 1840க்களின் தொழிலாளர் ஸ்தாபனங்களும்.** சான்-சிமோன், ஃபூரியே, ஓவனுடைய நூல்களில் உச்ச வளர்ச்சியடைந்த கற்பனாவாத கம்யூனிசம் 1840க்களில் நெருக்கடியில் சிக்கியது. முதலாளித்துவ எதார்த்தம் விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தைத் தயாரிப்பதற்கு இன்றியமையாத நிபந்தனைகளை இன்னும் பெறாமலிருந்த காலத்தில், ஆனால் முதலாளித்துவத்தை நுணுக்கமாக விமர்சனம் செய்வதற்கு, அதன் தீமைகளையும் கேடுகளையும் அம்பலப்படுத்துவதற்கு, எதிர்கால கம்யூனிசத்தின் பல கூறுகளை முன்னறிந்து கூறுவதற்குப் போதுமான விவரங்களை ஏற்கெனவே கொண்டிருந்த காலத்தில் அவர்கள் தம்முடைய கற்பனாவாத சோஷலிச, கம்யூனிச அமைப்புகளை விரித்துரைத்தார்கள். இத்தத்துவ பாரம்பரியம் இல்லையென்றால் விஞ்ஞான கம்யூனிசம் தோன்றியிருக்க முடியாது.

புதிய நிலைமைகளில் கற்பனாவாத சோஷலிசம், கம்யூனிசத்தைப் பற்றித் தோன்றிய பல்வேறு தத்துவங்களால் பாட்டாளி வர்க்கத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும்

புறக்கணிக்க முடியவில்லை. ஆனால் அவை தொழில் துறைத் தொழிலாளர்களைக் காட்டிலும், கைவினைஞர்கள் மற்றும் சிறு நிறுவனங்களில் பணியாற்றிய உழைக்கும் மக்களையே சமூக சக்திகளாக சித்திரித்தன. இவர்கள் மத்தியில் குட்டி முதலாளி வர்க்கக் கருத்துகளும் பழக்கங்களும் தப்பெண்ணங்களும் நிலவின.

பாட்டாளி வர்க்க இயக்கம் தன்னுடைய குழந்தைப் பருவத்தைக் கடந்து விட்டது. முதலாளி வர்க்கத்தை எதிர்த்து பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தில் இது முதல் கட்டம்; ஆனால் இது பெருந்திரளான தன்மையின்றி குறுங்குழுவாதத் தன்மையைக் கொண்டிருந்தது. இக்கட்டம் தவிர்க்க முடியாததாகும். பாட்டாளிகள் ஒரு வர்க்கம் என்ற முறையில் இயங்குவதற்குப் போதிய பலத்தை இன்னும் பெறவில்லை; பெருந்திரளானவர்கள் கற்பனாவாத போதனைகளைப் பற்றி அலட்சியமாக, பகைமையாகக் கூட இருந்தார்கள். கற்பனாவாதிகள் ஆரம்பித்த கழகங்கள் உண்மையில் இரகசிய சங்கங்களாகவே இருந்தன; அவை பாட்டாளி வர்க்கத்தின் பெருந்திரளான நடவடிக்கைகளை—வேலைநிறுத்தங்கள், சங்கங்கள் அல்லது அரசியல் நடவடிக்கை—எதிர்த்தன. சோஷலிச இயக்கத்தின் இத்தொடக்கக் கட்டத்தில் கைவினைஞர்களும் அரைப் பாட்டாளி வர்க்கத்தினரும் முக்கியமான பாத்திரத்தை வகித்தார்கள். அவர்கள் தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட முறைகளுக்கு அந்நியமானவர்களாக இருந்தார்கள்.

ஆனால் 1840க்களுக்கு முன்பே நிலைமை மாறி விட்டது. முதலாளித்துவம் முதிர்ச்சி அடைந்திருந்தது. அதை விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சி செய்ய முடியும். கற்பனாவாதம் என்ற நிலையிலிருந்து விஞ்ஞான தத்துவமாக கம்யூனிசத்தை மாற்றுவதற்குரிய சமூக-பொருளாதார முன்



9—1184

தேவைகள் தோன்றி விட்டன. வளர்ச்சியடைந்து கொண் டிருந்த தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்தினர் கைவினை ஞர்களையும் அரைப் பாட்டாளி வர்க்கத்தினரையும் சோஷ லிச, கம்யூனிச இயக்கத்திலிருந்து அகற்றத் தொடங்கியது. அவர்கள் கற்பனைக் கம்யூனிசத்தைப் பற்றி அதிருப்திய டைந்தார்கள். ஏனென்றால் முதலாளி வர்க்கத்தை எதிர்த்து நடைபெறுகின்ற மெய்யான போராட்டத்தில் இக்கற்பனைகளினால் அவர்களுக்கு எவ்விதமான உதவியுமில்லை. பெருந்திரளானவர்களைக் கொண்ட பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்கள் (தொழிற்சங்கங்கள், அறி வைப் பரப்புகின்ற அமைப்புகள்), தொழிலாளர் களின் பொருளாதாரப் போராட்ட முறைகளாகிய வேலை நிறுத்தங்கள் குறுங்குழுவாதத்தையும் சதித்திட்டங்களை யும் தீவிரமாக எதிர்த்தன. ஆக, கற்பனாவாத கம்யூனிசக் கட்டம் முடிவடைந்து விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் உருப் பெறுவதற்கான காலம் வந்து விட்டது.

கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானத்தை நோக்கிய இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருப்பம் முதலாளித்துவ வளர்ச்சியாலும் கம்யூனிசச் சிந்தனையின் வளர்ச்சியாலும் தயாரிக்கப்பட்டது. தொழிலாளர் மற்றும் கம்யூனிச இயக் கத்தின் வளர்ச்சியில் அது ஒரு வரலாற்றுத் தேவையாக இருந்தது. இத்தேவையைப் பூர்த்தி செய்கின்ற மாமேதை கள் தோன்ற வேண்டும் என்று இக்கட்டம் கோரியது. விஞ்ஞான கம்யூனிசத்தைப் படைத்தவர்களும் நிறுவியவர் களுமான மார்க்சும் எங்கெல்சும் வரலாற்றுக் களத்தில் தோன்றினார்கள்.

## மார்க்சும் எங்கெல்சும்

## கற்பனாவாதமாக இருந்த கம்யூனிசத்தை விஞ்ஞானமாக மாற்றுகிறார்கள்

**மார்க்சியமும் அதன் உட்பகுதியான விஞ்ஞான கம்யூனிசத்தின் உருவாக்கமும்.** கார்ல் மார்க்ஸ் 1818 மே 5இல் ஜெர்மனியில் டிரியர் என்னும் சிறிய நகரத்தில் முற்போக்கான கருத்துகளைக் கொண்ட ஒரு வழக்குரைஞரின் குடும்பத்தில் பிறந்தார். அவர் பான், பெர்லின் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ற பொழுது ஹெகலின் கருத்துமுதல்வாதத் தத்துவஞானத்திலும் அதன் இயக்கவியலிலும் அக்கறை எடுத்துக் கொண்டு அதை விமர்சனப் பகுப்பாய்வு செய்வதற்கு முயற்சித்தார். மார்க்ஸ் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பிறகு தத்துவஞானத்தையும் எதார்த்தத்தையும் ஒன்றிணைத்தார்; அவர் 1842இல் பத்திரிகையாளரானார். முதலில் *Rheinische Zeitung* ("ரைன் பத்திரிகையின்") ஆசிரியர் குழுவில் உறுப்பினராகவும் பிறகு அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார். அவர் அப்பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள் அவர் ஒரு உறுதியான புரட்சிகர ஜனநாயகவாதி என்பதை எடுத்துக்காட்டின. பத்திரிகையின் விமர்சனப் போக்கின் விளைவாக 1843ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் அது தடை செய்யப்பட்டது.

மார்க்ஸ் ஜென்னி வான் வெஸ்ட்ஃபாலன் என்னும் பெயருடைய நங்கையைத் திருமணம் செய்தார். பிரஷ்யாவில் அவருடைய நடவடிக்கைகளுக்கு இடமில்லாமற் போன படியால் மார்க்சும் அவருடைய மனைவியும் பாரிசுக்குச் சென்றார்கள். அங்கே ஜெர்மானியக் கைவினைஞர்களையும் பிரெஞ்சு உழைக்கும் மக்களையும் கொண்ட புரட்சிகர வட்டாரங்களுடன் மார்க்ஸ் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்.

புரட்சிகர ஜனநாயகவாதத்திலிருந்து கம்யூனிசத்தை நோக்கிய அவருடைய சித்தாந்த முன்னேற்றம் 1844இல் பூர்த்தியடைந்தது. அவர் ஹெகலின் கருத்துமுதல்வாத இயக்கவியலிலிருந்து தொடங்கி ஃபாயர்பாஹின் இயக்க மறுப்பியல் பொருள்முதல்வாதத்தின் வழியாக வந்து இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்னும் விஞ்ஞானத் தத்துவஞானத்தைப் படைத்தார்.

பிரெடெரிக் எங்கெல்ஸ் 1820 நவம்பர் 28இல் ஜெர் மனியில் பார்மென் என்னும் நகரத்தில் ஒரு பழமைப் பிடிப்புடைய, சமயப்பற்றுடைய பஞ்சாலை முதலாளியின் மகனாகப் பிறந்தார். எங்கெல்ஸ் இளம் வயதிலேயே மிக வும் திறமை உடையவராக இருந்தார். தகப்பனாருடைய வற்புறுத்தலின் விளைவாக அவர் 1837இல் வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டார். எங்கெல்சும் மார்க்சும் 1842இல் ***Rheinische Zeitung***இன் அலுவலகத்தில் முதல் முறை சந்தித்துக் கொண்டார்கள். எங்கெல்ஸ் அந்த ஆண்டி லேயே இங்கிலாந்திலுள்ள மான்செஸ்டர் நகரத்துக்குச் சென்று தகப்பனாருடைய முகவராகப் பணி புரிந்தார். எங்கெல்ஸ் இங்கிலாந்தின் அரசியல் முறையையும் தொழி லாளி வர்க்கத்தின் நிலைமைகளையும் ஆராய்ந்தார்; அவர் தொழிலாளி வர்க்கக் குடியிருப்புகளுக்குச் சென்றார், பாட்டாளிகளுடன் பேசினார்; அவர்களுடைய பயங்கரமான உழைப்பு, வாழ்க்கை நிலைமைகளை நேரடியாகத் தெரிந்து கொண்டார்.

எங்கெல்ஸ் மார்க்சிலிருந்து சுயேச்சையான முறையில் அதே சித்தாந்தப் பாதையைக் கடந்து வந்தார்: ஹெ கலினுடைய கருத்துமுதல்வாத இயக்கவியலிலிருந்து ஃபா யர்பாஹின் இயக்கமறுப்பியல் பொருள்முதல்வாதத்தின் வழியாக வந்து இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தை அடைந்தார், அதாவது புரட்சிகர ஜனநா



பொருள்முதல்வாதம்

யகவாதத்திலிருந்து விஞ்ஞான கம்யூனிசத்துக்கு முன் னேறினார். ஆக, இரண்டு மேதைகள் ஒருவருக்கொருவர் சுயேச்சையான முறையில் ஒரு புதிய விஞ்ஞானத்தை அணு கினார்கள். அவர்கள் பிற்காலத்தில் அந்த விஞ்ஞானத் தைக் கூட்டாக வளர்த்தார்கள்.

மார்க்சியம் சமூகச் சிந்தனையில் தனக்கு முந்திய போக்குகளிலிருந்து தனிமையில் தோன்றவில்லை. இயற் கை மற்றும் சமூகத்தைப் பற்றி மனிதகுலத்தின் அறிவில் மிகச் சிறந்த எல்லாவற்றின் முறையான வாரிசாக அது இருந்தது. மார்க்சும் எங்கெல்சும் மூலச்சிறப்பான ஜெர் மானியத் தத்துவஞானத்தின் (ஹெகலின் கருத்துமுதல் வாத இயக்கவியல் மற்றும் ஃபாயர்பாஹின் பொருள் முதல்வாதம்), மூலச்சிறப்பான ஆங்கில அரசியல் பொரு ளாதாரத்தின் (ஆடம் ஸ்மித் மற்றும் டேவிட் ரிக்கார்டோ உருவாக்கிய உழைப்பின் மதிப்புத் தத்துவம்), கற்பனா வாத சோஷலிசத்தின் (சான்-சிமோன், ஃபூரியே, ஓவன்) சாதனைகளை விமர்சன ரீதியில் திருத்தியமைத்தார்கள்; இவை மார்க்சியத்தின் தத்துவார்த்தத் தோற்றுவாய் களாகும். மார்க்சும் எங்கெல்சும் இந்தப் போதனை யைத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அனுபவத்தின் அடிப்படையில் வளர்த்தார்கள்; அதன் மூலம் அறிவின் மூன்று துறைகளில் புரட்சியை நிறைவேற்றினார்கள்.

மார்க்சும் எங்கெல்சும் உணர்வு பூர்வமாக தொழிலாளி வர்க்கத்தை ஆதரித்ததனால்தான் இந்தப் புரட்சிகர சாதனையை நிறைவேற்ற முடிந்தது. அவர்கள் பாட் டாளி வர்க்கத்தைப் புதிய சகாப்தத்தில் வளர்ச்சியடை கின்ற வர்க்கமாக மட்டும் பார்க்கவில்லை, இயற் கை மற்றும் சமூகத்தைப் பற்றி விஞ்ஞான பூர்வமான அறிவைப் பெறுவதில் அக்கறையுள்ள வர்க்கமாகப் பார்த்தார்கள். தொழிலாளி வர்க்கத்துக்கு சேவை

செய்வதன் மூலமாக மட்டுமே தாங்கள் விஞ்ஞானத்துக்கு சேவை செய்ய முடியும் என்று மார்க்சிய மூலவர்கள் உணர்ந்தார்கள். ஒரு புதிய சமூக விஞ்ஞானத்தை உருவாக்குவதற்கும் கம்யூனிசத்தைக் கற்பனாவாதம் என்ற நிலையிலிருந்து விஞ்ஞானமாக மாற்றுவதற்கும் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நிலையைக் கடைப்பிடிப்பது இன்றியமையாதது என்பதை அவர்கள் முதலில் உணர்ந்தார்கள்.

மொத்தத்தில் மார்க்சியம் என்பது கம்யூனிச விஞ்ஞானமாகும்; ஏனென்றால் அதன் உட்பகுதிகள் ஒவ்வொன்றும்—தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம் மற்றும் விஞ்ஞான கம்யூனிசம்—தன்னுடைய சொந்தப் பொருளின் சுற்றுவட்டத்திற்குள் மனித சமூகம் கம்யூனிச சமூகமாக வளர்ச்சியடைவது தவிர்க்க முடியாதது என்பதை நிறுவுகிறது. இந்த வளர்ச்சியின் சமூக-அரசியல் பிரச்சினைகளின் மொத்தத் தொகுதியுமே விஞ்ஞான கம்யூனிசம் என்று சொல்லப்படுகின்ற பொருளாகும். அது வர்க்கப் போராட்டம், சோஷலிசப் புரட்சியின் மூலமாக முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு வரலாற்று மாற்றத்தை, சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் நிர்மாணிப்பதைப் பற்றிய சமூக-அரசியல் விதிகளை, மொத்த உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கை ஆராய்கிறது.

**கம்யூனிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானமாக மாற்றுவதற்குரிய தத்துவார்த்த அடிப்படை.** மார்க்சின் இரண்டு மாபெரும் கண்டுபிடிப்புகளின் விளைவாக கம்யூனிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானமாக மாற்றுவது சாத்தியமாயிற்று. வரலாற்றுப் பொருள்

முதல்வாதம், உபரி மதிப்புத் தத்துவம் ஆகியவை மேற்கூறிய இரண்டு கண்டுபிடிப்புகளாகும். இக்கண்டுபிடிப்புகளில் எங்கெல்சின் கணிசமான பங்கும் உண்டு.

மார்க்சிய மூலவர்கள் தத்துவஞானப் பொருள்முதல்வாதத்தை ஆராயத் தொடங்கிய காலத்தில் அதன் கட்டமைப்பு அரைகுறையாக இருந்தது. அவர்களுக்கு முன்பிருந்த பொருள்முதல்வாதிகள் இயற்கையைப் பொருள்முதல்வாத ரீதியில் அறிந்து கொள்வதுடன் தங்களுடைய ஆராய்ச்சிகளை முடித்துக் கொண்டார்கள்; சமூக வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் அவர்கள் கருத்துமுதல்வாதிகளாக இருந்தார்கள். இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை இயற்கையுடன் சேர்த்து சமூகத்துக்கு விஸ்தரித்ததன் மூலம் மார்க்சும் எங்கெல்சும் பொருள்முதல்வாத அணுகுமுறையை முழுமையாக்கினார்கள்.

மனிதகுலத்தின் சமூக வாழ்க்கை எவ்விதமான ஆன்மிக சக்தியாலும் (அதைக் கடவுள், தனிமுதலான ஆன்மா, மேதைகளின் கருத்துகள் என்று எப்படிப் பெயரிட்டாலும்) நிர்ணயிக்கப்படவில்லை, பொருளாயத சக்தியினால்தான் அது நிர்ணயிக்கப்படுகிறது என்ற உண்மையை விளக்குவதில் **வரலாற்றைப் பொருள்முதல்வாத ரீதியில் அறிதலின்** சாராம்சம் அடங்கியிருக்கிறது. சமூக வாழ்க்கை அமைப்பில் சமூகத்தின் இருத்தல் மற்றும் வளர்ச்சிக்கு அடிப்படை என்ற முறையில் பொருளாயத மதிப்புகளை உற்பத்தி செய்தல் தலைமையான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. வரலாற்று வளர்ச்சியில் அடுத்தடுத்து எற்பட்ட சமூக அமைப்புகள் பொருளாயத மதிப்புகளை உற்பத்தி செய்கின்ற முறையினால் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. வரலாற்றில் ஐந்து உற்பத்தி முறைகள் இருந்திருக்கின்றன: பூர்விகக் கூட்டு வாழ்க்கை, அடிமை

உடைமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ மற்றும் கம்யூனிச உற்பத்தி முறைகள். ஒவ்வொரு உற்பத்தி முறையும் அதற்குரிய சமூக-பொருளாதார அமைப்புக்கு அடிப்படையாக அமைந்து அதன் சமூக அம்சத்தை நிர்ணயிக்கிறது. ஒவ்வொரு அமைப்பும் சமூக முன்னேற்றத்தில் பிரத்யேகமான வரலாற்றுக் கட்டமாகும். அவை கறாரான தொடர்வரிசை முறையில் ஏற்படுகின்றன. கம்யூனிச சமூக-பொருளாதார அமைப்பு மனித சமூகத்தின் வரலாற்று ரீதியில் நியதியான முன்னேற்றத்தின் விளைவாகும்.

**கம்யூனிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானமாக மாற்றுவதில் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் பங்களிப்பு என்ன?**

வரலாற்றின் எந்தத் தருணத்திலும் கம்யூனிசம் தன்னை நிறுவிக் கொள்ள முடியும், ஏனென்றால் அது ஒரு மேதை தற்செயலாகச் செய்த கண்டுபிடிப்பு என்று கற்பனாவாதிகள் கருதினார்கள். வரலாற்றுப் பொருள்முதல்வாதம் இத்தகைய தவறான கருத்துகளை நிராகரிக்கிறது. மனித சமூகத்தின் முந்திய வரலாறு அனைத்தின் விளைவே கம்யூனிசம்; முதலாளித்துவம் மட்டுமே கம்யூனிச மாற்றத்துக்குரிய உடனடியான முன்தேவைகளைப் படைக்க முடியும். கம்யூனிசம் ஒரு பேரறிஞரின் தற்செயலான கண்டுபிடிப்பு அல்ல, அது மனித சமூகத்தின் பொருளாயத, ஆன்மிக வளர்ச்சியின் இயற்கையான விளைவாகும்.

ஒரு பேரறிஞர் வரலாற்றில் எந்தக் காலத்திலும் கம்யூனிசத்தைத் தற்செயலாகக் கண்டுபிடிக்க முடியும் என்னும் தவறான நம்பிக்கை எந்தப் பேரறிஞரும் கம்யூனிசத்தின் தன்னுடைய சொந்த பாணியைக் கண்டுபிடிக்க முடியும் என்னும் தவறான முடிவுக்குத் தர்க்க ரீதியாக இட்டுச்

சென்றது. கம்யூனிசக் கற்பனையை உருவாக்கிய ஒவ்வொருவரும் தான் மட்டுமே தனிமுதலான உண்மையைக் கண்டுபிடித்திருப்பதாகவும் தன்னுடைய கருத்துகள் மட்டுமே உலகத்தை கம்யூனிச ரீதியில் மாற்றியமைக்க வழி வகுக்கும் என்றும் நம்பினார்.

சமூக வளர்ச்சியின் விதிகளைப் பற்றி எவ்விதமான அறிவுமின்றி கருத்துமுதல்வாத அடிப்படைகளின் மீது கட்டப்படுகின்ற கம்யூனிசக் கற்பனைகள் விஞ்ஞான ரீதியாக இருக்க முடியாது; அவை செய்முறை மதிப்பைக் கொண்டிருக்கவில்லை, அவை செயலுக்கு உண்மையான வழி காட்டியாக இருக்க முடியாது என்பவற்றை வரலாற்றுப் பொருள்முதல்வாதம் நிரூபிக்கிறது. வெவ்வேறு விதமான பல கற்பனைத் தத்துவங்கள் என் தோன்றின என்பதை இந்த விஞ்ஞான சாராம்சம் இல்லாமை விளக்குகிறது. மறு பக்கத்தில், சமூக வளர்ச்சியின் விதிகள், முதலாளித்துவ வளர்ச்சியின் விதிகள் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் விதிகளைப் பற்றிய அறிவை அடிப்படையாகக் கொண்ட கம்யூனிசம் செல்தகைமையையும் ஒற்றைத் தன்மையையும் கொண்டிருக்கிறது. வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தைப் படைத்த மார்க்சும் எங்கெல்சும் கம்யூனிசக் கருத்தமைப்புக்கு ஒற்றை விஞ்ஞான அர்த்தத்தைக் கொடுத்தார்கள். அவர்கள் உருவாக்கிய தத்துவம் உண்மையான கம்யூனிசத்தின் விளக்கமாக இருப்பதற்குக் காரணம் இதுவே.

கடந்த காலத்தைச் சேர்ந்த பேரறிஞர்கள் மனிதகுலத்துக்கு மகிழ்ச்சியைத் தருகின்ற முயற்சிகளில் எதிர்கால சமூகத்தைப் பற்றி நுணுக்கமான வர்ணனையைத் தருவதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால், இருக்கின்ற முன்தேவைகளைப் பற்றிய ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே எதிர்கால சமூகத்தின் பொதுவான

உருவரைகளைப் பற்றி ஆரூடம் சொல்ல முடியும்; ஏனென்றால் எதிர்காலம் நிகழ்காலத்திலிருந்து தோன்றுகிறது; நிகழ்காலம் கடந்த காலத்திலிருந்து பரிணமிக்கிறது. வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான கம்யூனிசம் எதிர்காலத்தைப் பற்றிய கற்பனாவாதமான வர்ணனைகளைக் கொண்டிருக்காது. கறாரான விஞ்ஞானச் சிந்தனையைப் பின்பற்றிய மார்க்சும் எங்கெல்சும் எதிர்கால கம்யூனிச சமூகத்தைப் பற்றி அவர்கள் காலத்திலிருந்த அறிவு அனுமதித்தவற்றை மட்டுமே வருவிக்க முடியும்.

தாங்கள் மனிதகுலம் அனைத்தையும் பிரதிநிதித்துவம் செய்வதாக கற்பனாவாதக் கம்யூனிஸ்டுகள் கருதினார்கள். இயற்கை ஆரம்பத்தில் மனிதர்களுக்கு நீதியை அளித்த பிறகு எல்லா மனிதர்களுக்கும் சமமான, ஒரே தன்மையான பண்புகளையும் குணங்களையும் அளித்திருக்கிறது என்னும் தவறான கருத்திலிருந்து இந்த நம்பிக்கை தோன்றியது. மனிதர்களிடம் இந்த ஆரம்பநிலைப் பண்புகளைத் தூண்டி விட்டால் அவை, தனியுடைமை உறவுகளினால் விதைக்கப்படுகின்ற வர்க்க வேறுபாடுகள், வர்க்கப் போராட்டம், அகங்காரம், வெறுப்பு, பகைமை ஆகியவற்றைக் காட்டிலும் அதிகமான வலிமையைக் கொண்டிருக்கும் என்று கற்பனாவாதிகள் நம்பினார்கள்.

வரலாற்றுப் பொருள்முதல்வாத அணுகுமுறை இக்கற்பனைகளையும் தவறான கருத்துகளையும் அழித்தது. பகைமுரணியல் சமூக அமைப்புகளின் வளர்ச்சியை இயக்குகின்ற சக்தி வர்க்கப் போராட்டமே என்பதை அது வெளிப்படுத்தியது. வர்க்கப் போராட்டத்தின் மூலம், சோஷலிசப் புரட்சியின் மூலமாக மட்டுமே பாட்டாளி வர்க்கம் உலகத்தைக் கம்யூனிச அடிப்படையில் புத்தாக்கம் செய்ய இயலும் என்பது இதன் அர்த்தம்.

கற்பனாவாதிகள், வரலாற்றைப் பற்றிய கருத்துமுதல் வாதப் புரிவு (அதில் மேதைகள் மற்றும் வீரர்களை வழிபடுதல்) காரணமாக, மனிதகுலத்தைக் காப்பதற்கும் உலகத்தைக் கம்யூனிச ரீதியில் புத்தாக்கம் செய்வதற்கும் தம்முடைய திட்டங்களை நிறைவேற்றுமாறு அரசர்கள், நிதியதிபர்கள் மற்றும் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதி களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள்.

மக்களே வரலாற்றை இயக்குகின்ற சக்தி, உலகத்தை கம்யூனிச முறையில் மாற்றியமைக்கின்ற நெம்புகோலாகப் பாட்டாளி வர்க்கமே பயன்பட முடியும் என்பவற்றை வர லாற்றுப் பொருள்முதல்வாதம் நிரூபித்தது. அனைத்து மனிதகுலத்துக்கும் பொதுவானதாகவும் குறிப்பாக எந்த வர்க்கத்துக்கும் பயனில்லாமலும் இருந்த கற்பனாவாதி களின் கம்யூனிசத்தை மார்க்சும் எங்கெல்சும் பாட்டாளி வர்க்க கம்யூனிசமாக மாற்றினார்கள்.

மார்க்சின் **உபரி மதிப்புத் தத்துவம்** கம்யூனிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானமாக மாற்றிய இரண் டாவது தத்துவ அடிப்படை ஆகும். அது அரசியல் பொருளா தாரத் துறையில் மார்க்ஸ் செய்த புரட்சியின் சாராம்சத் தைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. அது முதலாளித்துவ சுரண்டல் என்னும் மர்மத்துக்கு விஞ்ஞான ரீதியான தீர்வை அளித்தது.

கூலித் தொழிலாளர்கள் தங்களுடைய உழைப்பின் விலையை, அதாவது தாங்கள் தொடர்ந்து வேலை செய் வதற்கு அவசியமான ஜீவனோபாய சாதனங்களின் விலை யைக் காட்டிலும் கூடுதலாகப் படைக்கின்ற உற்பத்திப் பொருளை முதலாளிகள் சுவீகரித்துக் கொள்வதன் மூலம் முதலாளித்துவச் சுரண்டல் நடைபெறுகிறது. முதலாளி களால் சுவீகரிக்கப்பட்ட உபரி மதிப்பை மார்க்ஸ் கண்டு பிடித்தது முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளி வர்க்

கத்தின் மெய்யான நிலையையும் முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாட்டின், அதாவது உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான முரண்பாட்டின் தோற்று வாயையும் வெளிப்படுத்தியது.

கம்யூனிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞான மாக மாற்றுவதில் மார்க்ஸ் கண்டுபிடித்த உபரி மதிப்புத் தத்துவத்தின் பங்களிப்பு என்ன?

கற்பனாவாதக் கம்யூனிசம் பெரும்பாலும் சமூகத் தைக் கம்யூனிச ரீதியில் மாற்றியமைக்கின்ற ஆன்மிகக் காரணிகளைப் பற்றியதாக இருந்தது. உபரி மதிப்புத் தத் துவம், சோஷலிசத்துக்கு மாறுவதற்குரிய பொருளாயத முன்தேவைகளைப் படைத்த முதலாளித்துவப் பொருளா தாரத்தின் தீர்மானகரமான பாத்திரத்தை வெளிப் படுத்தியது.

கற்பனாவாத கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்க்கத் தினரின் நிலையைப் பற்றி வேதனைப்பட்டார்கள்; ஆனால் அவர்களுடைய வறுமையை வர்ணிக்கின்ற பொழுது அநீதி மிக்க சமூக அமைப்பினால் அவர்கள் ஒடுக்கப்பட்டு, அடி மைப்படுத்தப்பட்ட அளவை மட்டுமே பார்த்தார்கள். ஆனால் மார்க்சின் உபரி மதிப்புத் தத்துவம், முதலாளித்துவம் தொழிலாளி வர்க்கத்தைச் சுரண்டி, ஒடுக்கி, அடிமைப் படுத்துவது மட்டுமன்றி அந்த வர்க்கத்துக்குப் பலத்தையும் கொடுக்கிறது என்பதை வெளிப்படுத்தியது. முதலாளித்துவ நிறுவனங்களில் உழைக்கின்ற பாட்டாளி வர்க்கத்தினர் வர்க்கப் போராட்டம் என்னும் கண்டிப்புமிக்க கல்விக்கூடத் தில் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்; முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஒழிக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கட மையை நிறைவேற்றுவதற்கு அவர்கள் ஒருமைப்பாட் டைக் கற்கிறார்கள், அத்துடன் அரசியல் ரீதியில் முதிர்ச்சி அடைகிறார்கள்.

கற்பனாவாத கம்யூனிஸ்டுகள் மனிதனை மனிதன் சுரண்டுவதைக் கண்டனம் செய்தார்கள், ஆனால் அதன் பொறியமைவை, ஆகவே முதலாளித்துவ செல்வத்தின் மெய்யான தோற்றுவாயைப் புரிந்து கொள்ளவில்லை. உழைக்கும் மக்களின் வறுமைக்கு மூல காரணத்தை அவர்கள் உற்பத்தித் துறையில் தேடுவதற்கு பதிலாக வினியோகம், வர்த்தகத்தில் தேடினார்கள். கற்பனாவாதிகளுடைய இலட்சிய சமூகத்தில் வர்த்தகர்களுக்கும் வட்டி வாங்குபவர்களுக்கும் இடமில்லை; ஏனென்றால் அவர்கள் ஈவிரக்கமில்லாத சுரண்டல்காரர்கள் என்று கற்பனாவாதிகள் கருதினார்கள். எனினும் அவர்கள் தொழிலதிபர்களை வரவேற்றார்கள். ஆனால் முதலாளிகளே முக்கியமான சுரண்டல்காரர்கள் என்பதை உபரி மதிப்புத் தத்துவம் நிரூபித்தது. முதலாளித்துவ உற்பத்தியின் ஆழத்தில் கூலியுழைப்பை மூலதனம் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்டு உபரிமதிப்பு பிறக்கிறது, அது தொழிலதிபர்கள், வங்கியதிபர்கள், வட்டிக்காரர்கள், வர்த்தகர்கள் ஆகிய முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த பல்வேறு குழுக்களால் வினியோகப் பொறியமைவின் மூலம் சுவீகரிக்கப்படுகிறது.

சமூகம் வர்க்கங்களாகப் பிரிந்திருப்பதன் பொருளாதார அடிப்படை, வர்க்கப் போராட்டத்தின் பரிணாமம் பற்றிய அறியாமையினால் கற்பனாவாதிகள் வர்க்கங்களை சமரசப்படுத்துகின்ற உருப்படாத வழிகளைத் தேடினார்கள்; அவர்கள் வர்க்கங்களின் தோற்றம், அவற்றின் உண்மையான இயல்பைப் புரிந்து கொள்வதை அது தடுத்தது. பகையியலான வர்க்கங்களை சமரசப்படுத்த முடியாது, ஏனென்றால் முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தின் தயவில் வாழ்கிறது, ஆகவே முதலாளி வர்க்கம் சுரண்டல் சமூகத்தைப் பாதுகாக்கவும் தொழிலாளி வர்க்கம்

அதை ஒழிக்கவும் விரும்புகின்றன என்பவற்றை உபரி மதிப்புத் தத்துவம் நிரூபித்தது.

மார்க்சும் எங்கெல்சும் வரலாற்றுப் பொருள்முதல் வாதம், உபரி மதிப்புத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு கம்யூனிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானமாக மாற்றினார்கள்.

**பாட்டாளி வர்க்கக் கட்சியைப் பற்றி மார்க்ஸ், எங்கெல்சின் போதனை.** முதலாளி வர்க்கத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் நிலையின் தத்துவ வெளிப்பாடு என்ற முறையில் மார்க்சும் எங்கெல்சும் விஞ்ஞான கம்யூனிசத்தை உருவாக்கினார்கள். முதலாளித்துவ உற்பத்தி அமைப்பில் தொழிலாளி வர்க்கத்தின் புறவய நிலை அதை முதலாளித்துவத்தின் இயற்கையான சவக்குழி தோண்டுபவனாகவும் சோஷலிசத்தின் படைப்பாளியாகவும் ஆக்குகிறது.

பாட்டாளி வர்க்கம் தன்னுடைய சொந்தக் கட்சியின் தலைமையின் கீழ் மட்டுமே சுரண்டல் நுகத்தடியைத் தூக்கியெறிய முடியும். அப்படிப்பட்ட கட்சியை அமைத்தல் சாராம்சத்தில் புத்தம்புதிய பணியாக இருந்தது. கட்சி என்பது வர்க்க நிலைக்குச் சம்பந்தமில்லாதபடி மக்கள் சித்தாந்த ரீதியில் ஒன்றுபடுதல் என்பது முதலாளித்துவ-கருத்துமுதல்வாதக் கருத்து; மார்க்சும எங்கெல்சும் இந்தக் கருத்தை மறுத்து, கட்சி என்பது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் முன்னணிப்படை, அந்த வர்க்கத்தின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நலன்களைப் பிரதிபலிப்பது என்னும் தம்முடைய கருத்தை நிறுவினார்கள்.

கற்பனாவாத சோஷலிஸ்டுகள் தம்முடைய ஸ்தாபனங்களை, பிரதானமாக, கல்விகற்ற உடைமையாளர்கள்

மத்தியிலே அமைத்தார்கள்; அவர்களால்தான் சோஷலிச மாற்றத்தை நிறைவேற்ற முடியும் என்று வாதிட்டார்கள். தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்தினரைக் கொண்டே கம்யூனிஸ்ட் கட்சியின் கருப்பகுதி அமைக்கப்பட வேண்டும் என்று மார்க்சும் எங்கெல்சும் ஆரம்பமுதலே வலியுறுத்தினார்கள். பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் தனிப்பட்ட அடுக்குகளின் நலன்களை அல்ல, மொத்த வர்க்கத்தின் நலன்களையும் வெளியிட வேண்டும், பாதுகாக்க வேண்டும்; மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தில் அது வர்க்கப் போராட்டத்தின் எல்லா வடிவங்களையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அரசியல் தன்மையில்லாத சோஷலிசத்தை ஆதரித்த கற்பனாவாத சோஷலிஸ்டுகள் எல்லா பொருளாதார, அரசியல் போராட்டங்களையும் நிராகரித்தார்கள், விசித்திரமான கற்பனைத் திட்டங்களைக் கூறிப் பரவசமடைந்தார்கள். பாட்டாளி வர்க்கம் அரசியல் போராட்டத்தை நடத்த வேண்டும் என்று கூறிய மார்க்சும் எங்கெல்சும் அதை அன்றாடப் பொருளாதாரப் போராட்டத்துடனும் சோஷலிசத்துக்கான போராட்டத்துடனும் இணைத்தார்கள்.

விஞ்ஞான ரீதியான கம்யூனிசத் தத்துவத்தைப் படைத்தல், பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான, வர்க்கக் கட்சியைக் கட்டுதல், கற்பனாவாதக் கம்யூனிசம் மற்றும் சோஷலிசத்தின் எல்லா ரகங்களையும் விமர்சனம் செய்தல் என்னும் மூன்று கூறுகளைக் கொண்ட கடமையை மார்க்சியத்தின் மூலவர்கள் நிறைவேற்றினார்கள். அவர்கள் இக்கடமையை நிறைவேற்றுவதற்குத் தொடர்புக் கமிட்டிகள் என்னும் பொருத்தமான ஸ்தாபன வடிவத்தை உருவாக்கினார்கள்.

புரட்சிகர நடவடிக்கைகளுக்காக பாரிசிலிருந்து வெளி

யேற்றப்பட்ட பிறகு மார்க்ஸ் பிரஸ்ஸல்சில் குடியேறினார். அங்கே மார்க்சும் எங்கெல்சும் **1846**இல் முதல் கம்யூனிஸ்ட் தொடர்புக் கமிட்டியை அமைத்தார்கள். பல்வேறு ஐரோப் பிய நாடுகளில் அமைக்கப்பட்ட இக்கமிட்டிகள் சோஷலிஸ்ட் குழுக்களுக்கு இடையில் தகவல் தொடர்புகளை அமைத் தன. அவை கம்யூனிஸ்ட் பிரசாரத்தைப் பற்றிய பிரச் சினைகள் மீது தகவல்களைப் பகிர்ந்து கொண்டன; அன் றைய சோஷலிஸ்ட் இயக்கத்திலிருந்த தவறான கருத்து களையும் தத்துவங்களையும் விமர்சனம் செய்தன.

மார்க்சும் எங்கெல்சும் **1847**ஆம் ஆண்டின் ஆரம்பத் தில் நேர்மையாளர் சங்கத்தில் சேர்ந்தது பாட்டாளி வர்க்கத் தின் வர்க்கக் கட்சியை அமைப்பதில் முக்கியமான செய் முறை நடவடிக்கையாக இருந்தது. அவர்கள் நேர்மையா ளர் சங்கத்தில் தாக்கம் செலுத்தியதுடன் அதைத் திருத் தியமைப்பதற்கு வழிகாட்டினார்கள். அதன் முதல் காங் கிரஸ் லண்டனில் நடைபெற்றது. அங்கே அது கம்யூனிஸ்டுச் சங்கம் என்னும் புதிய பெயரைப் பெற்றது. "எல்லோரும் சகோதரர்களே!" என்னும் பழைய இலட்சிய வாசகத்துக்கு பதிலாக "உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!" என்னும் பாட்டாளி வர்க்க அகிலத்தின் கோஷம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கம்யூனிஸ்டுச் சங்கத்தின் நகல் விதி முறைகளில் முதன்முறையாக இடம்பெற்ற இந்த கோஷம் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் போர்முழக்க மாக விரைவில் மாறியது.

கம்யூனிஸ்டுச் சங்கத்தின் இரண்டாவது காங்கிரஸ் லண் டனில் **1847** நவம்பர் **29**இல் தொடங்கியது. அதன் நிகழ்ச்சி களில் ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து, போலந்து, இதர சில நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கெடுத்துக் கொண்டார்கள். விஞ்ஞான கம்யூனிசக் கருத்துகளைத் தன்னுடைய முடிவுகளில் நிறு

விய பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச காங்கிரஸ் அதுவே. முதலாளி வர்க்க ஆட்சியை ஒழித்தல், பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியை நிறுவுதல், வர்க்கப் பகைமைகளை அடிப்படையாகக் கொண்ட பழைய முதலாளித்துவ அமைப்பை ஒழித்தல், தனியுடைமை இல்லாத புதிய, வர்க்கமற்ற சமூகத்தை நிறுவுதல் ஆகியவை தன்னுடைய இலட்சியங்கள் என்று கம்யூனிஸ்டுச் சங்கம் அறிவித்தது.

கம்யூனிஸ்டுகளின் செயல்திட்டத்தை மிகவும் தெளிவான, பகிரங்கமான முறையில் உலகத்துக்கு அறிவிக்க இக்காங்கிரஸ் விரும்பியது; **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை** இயன்ற அளவு விரைவாக எழுதுகின்ற பொறுப்பை காங்கிரஸ் மார்க்ஸ், எங்கெல்சிடம் ஒப்படைத்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆவணம் இரண்டு மாதங்களில் (1847 டிசம்பர் முதல் 1848 ஜனவரிக்குள்) எழுதப்பட்டு பிப்ரவரியில் வெளியிடப்பட்டது.

விஞ்ஞான கம்யூனிசத்தைத் தன்னுடைய செயல் திட்டமாக ஏற்றுக் கொண்டு மார்க்சியத்தைத் தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இணைத்த முதல் சர்வதேசத் தொழிலாளி வர்க்க ஸ்தாபனம் கம்யூனிஸ்டுச் சங்கம். பாட்டாளி வர்க்கக் கட்சியை அமைப்பதில் மார்க்ஸ் மற்றும் எங்கெல்சுக்குக் கிடைத்த முதல் செய்முறை அனுபவம் அது.

**விஞ்ஞான கம்யூனிசத்தின் முதல் செயல்திட்ட ஆவணம் என்ற முறையில் ‘‘கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை’’.** ‘‘ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம்—கம்யூனிசம் என்னும் பூதம்’’ என்னும் பிரபல சொற்றொடருடன் **அறிக்கை** தொடங்குகிறது. கம்யூனிசம் என்பது இன்னும் தெளிவில்லாத கருத்தாக, வரையறுக்கப்படாததாக இருந்தது என்பதை இது குறிக்கிறது. கம்யூனிசம் என்ற ‘‘பூதத்



10—1184

திற்கு'' தத்துவ ரீதியான தெளிவையும் ஸ்தூலத் தன்மை யையும் கொடுப்பதற்கு, திட்டவட்டமான அரசியல் இயக்கத் தின் வடிவத்தில் அதன் பிம்பத்தை வெளியிடுவதற்கு உரிய நேரம் வந்து விட்டது. **அறிக்கை,** கம்யூனிஸ்ட் என்று நியாயமான முறையில் குறிப்பிடக் கூடிய சித் தாந்த-அரசியல் போக்கை விஞ்ஞான ரீதியாக எடுத் துரைத்தது; விஞ்ஞான ரீதியில் அமையாத கம்யூனிசம், சோஷலிசத்தின் எல்லா வடிவங்களிலிருந்தும் (கற்பனா வாத, கிறிஸ்துவ, நிலப்பிரபுத்துவ, முதலாளி வர்க்க மற் றும் குட்டி முதலாளி வர்க்க வடிவங்களிலிருந்தும்) தன் னை விலக்கிக் கொண்டது. **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** மார்க்சியத்தின், விஞ்ஞான கம்யூனிசத்தின் முதல் செயல் திட்ட ஆவணமாகும்.

**அறிக்கை** நெடுகிலும் சமூகத்தின் வளர்ச்சியைப் பற்றிய விஞ்ஞான ரீதியான, பொருள்முதல்வாதத் தெளிவு விர வியிருக்கிறது; சமூக வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வர லாறாகவும், குறிப்பாக முதலாளித்துவ சமூகத்தில், முத லாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடை யிலான போராட்டத்தின் வரலாறாகவும் முன்வைக்கப் படுகிறது.

தொடக்கத்தில் புரட்சிகரமான வர்க்கமாகத் தோன்றிய முதலாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை **அறிக் கை** வெளிப்படுத்தியது. நிலப்பிரபுத்துவம், பண்ணை யடிமை முறை, மேற்குடியினர் சலுகைகள் ஆகியவற்றுக்கு எதிரான அதனுடைய போராட்டம் முற்போக்கான தன்மை உடையது. அதே சமயத்தில் முதலாளி வர்க்கத்தின் வர லாற்றுப் பாத்திரம் முரண்பாடான இயல்பைக் கொண் டிருந்தது. அது பண்ணையடிமை முறையை ஒழித்த பிறகு மக்களுக்கு இடையில் வர்த்தக நலன்கள் மற்றும் இரக்கமற்ற லாப வேட்டையினால் தூண்டப்படுகின்றவற்

றைத் தவிர வேறு பிணைப்புகளை ஏற்படுத்தவில்லை. ''அது மனிதனது மாண்பினைப் பரிவர்த்தனை மதிப்பாய் மாற்றியிருக்கிறது. சாசனங்களில் பிரகடனம் செய்யப்பட்ட விலக்கவோ துறக்கவோ முடியாத எண்ணிலடங்காச் சுதந்திரங்களுக்குப் பதிலாய், வெட்கங்கெட்ட வாணிபச் சுதந்திரமெனும் **ஒரேயொரு** சுதந்திரத்தை ஆசனத்தில் அமர்த்தி வைத்திருக்கிறது.'' *

முதலாளி வர்க்கம் தனிப்பட்ட நாடுகளின் அறிவுத் துறைச் சாதனைகளை எல்லோருக்கும் வழங்கியதென்றாலும் அது மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோரைத் தன்னுடைய கூலித் தொழிலாளர்களாக மாற்றியது. அது பெரிய அளவுத் தொழில்துறையை, உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையில் சக்திமிக்க சாதனங்களை உருவாக்கியது, உற்பத்திச் சக்திகளைப் புரட்சிமயமாக்கியது; ஆனால் முதலாளி வர்க்க உடைமையின் வரையறைகள் படிப்படியாக இந்த உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் மீது மாட்டப்பட்ட விலங்குகளாக மாறின. பிரம்மாண்டமாக வளர்ச்சி அடைந்திருக்கின்ற உற்பத்திச் சக்திகளுக்கும் முதலாளித்துவ உடைமை உறவுகளுக்கும் இடையிலான மோதலிலிருந்து முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படையான முரண்பாடு வளர்ச்சியடைந்தது.

முதலாளிகளிடம் தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம் பல திசைகளிலும் ஒடுக்கபட்டது. முதலாளித்துவ அரசு, முதலாளிகள், மேற்பார்வையாளர்கள் மற்றும் இயந்திரங்கள் கூட—ஏனென்றால் அவர்கள் இயந்திரத்தின் மனிதத்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** தொகுதி 1, பக்கம் 195.

துணைப் பகுதிகளாக மாறிப் போயிருந்தார்கள்—அவர்களை ஒடுக்கின. பாட்டாளி வர்க்கம் துன்பமடைகின்ற வர்க்கம் மட்டுமல்ல, அது போராடுகின்ற வர்க்கம், எதிர்காலத்தின் திறவுகோல்களைக் கொண்டிருக்கின்ற மிகவும் முரணில்லாத புரட்சிகர சக்தி என்பதை முதலில் விஞ்ஞான ரீதியாக நிரூபித்தவர்கள் மார்க்சும் எங்கெல்சுமே.

தொழிலாளி வர்க்கம் முதலாளிகளுக்கு எதிராகப் போராட வேண்டிய அவசியத்தை மார்க்சும் எங்கெல்சும் நிறுவினார்கள். கம்யூனிஸ்டுகள் தலைமை தாங்கினால்தான் இந்தப் போராட்டம் வெற்றிபெற முடியும். ''பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வழிநடப்பையும் நிலைமைகளையும் பொதுவான இறுதிவிளைவுகளையும் தெளிவாய்ப் புரிந்து கொள்வது''* மற்ற எல்லா பாட்டாளி வர்க்கத்தினருடன் ஒப்பிடுகின்ற பொழுது கம்யூனிஸ்டுகளுக்கு இருந்த அனுகூலமாகும்.

**அறிக்கையின்** ஆசிரியர்கள் கம்யூனிஸ்டுகள் நிறைவேற்ற விரும்பிய ஆக்கபூர்வமான செயல்திட்டத்தை, அவர்கள் ஆதரித்த கொள்கைகளையும் கருத்துகளையும் வெளியிட்டார்கள். முதலாளித்துவத் தனியுடைமையை ஒழித்தல் செயல்திட்டத்தின் முக்கியமான அம்சமாகும். அது தனியான இயல்பையல்ல, சமூக இயல்பைக் கொண்டிருக்கிறது; ஆகவே அது தனிநபர்களுக்கு அல்ல, சமூகத்தின், பரந்த மக்கள் தொகுதியின் உடைமையாக இருக்க வேண்டும்.

முதலாளி வர்க்கச் சித்தாந்திகளால் தனியுடைமை இல்லாத சமூகத்தைக் கற்பனை செய்யக் கூட முடியவில்லை. ஆகவே அவர்கள் தனியுடைமை ஒழிப்பை, தனிநபரை ஒடுக்குவதாக தனித்தன்மை, சுதந்திரம், சுயேச்சைத் தன்

* **அதே நூல்,** பக்கம் **213.**

மையை ஒழிப்பதாக, எங்கும் சோம்பேறித்தனத்தை ஏற்படுத்துவதாக, குடும்பத்தையும் தாய்நாட்டையும் ஒழிப்பதாகக் கூட, பொது மனைவியர் முறையை ஏற்படுத்துவதாகக் கூடக் கருதுகிறார்கள். முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தக் கைக்கூலிகளால் பரப்பப்பட்ட இத்தகைய அவதூறுகளை, கற்பனைகளை மார்க்சும் எங்கெல்சும் தோலுரித்துக் காட்டினார்கள்.

தொழிலாளி வர்க்கம் ஆட்சிக்கு வர முடியும், அரசியல் அதிகாரத்தைப் பெற முடியும் என்ற கருத்தை **அறிக்கை** தெளிவாக விளக்குகிறது: "பாட்டாளி வர்க்கம் தனது அரசியல் மேலாண்மையைப் பயன்படுத்தி முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து படிப்படியாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றும்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒருசேர மையப்படுத்தும்; மற்றும் உற்பத்திச் சக்திகளது ஒட்டுமொத்தத் தொகையைச் சாத்தியமான முழு வேகத்தில் அதிகமாக்கும்."*

பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிசத்தை அமைப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, பொதுவில் வர்க்கங்கள் இருப்பதற்குரிய நிலைமைகளை ஒழிப்பதையும், ஆகவே வர்க்கம் என்ற முறையில் பாட்டாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஒழிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது. மார்க்சும் எங்கெல்சும் புரட்சிகர மாற்றங்களின் முடிவுநிலையான மனிதாபிமானக் கொள்கையையும் இலட்சியத்தையும் வகுத்தளித்தார்கள். முதலாளித்துவத்துக்கு பதிலாக, "ஒவ்வொருவரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்

* **அதே நூல்,** பக்கம் 226.

வதே எல்லோரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதற்கான நிபந்தனை''* என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சமூகம் ஏற்படும்.

குறிப்பிட்ட வர்க்கங்களின் நலன்களை வெளியிட்ட விஞ்ஞானத் தன்மையற்ற சோஷலிசத்தின் பல்வேறு போக்குகளை **அறிக்கை** விமர்சனம் செய்தது.

மார்க்சியம் உலகத்தைக் கம்யூனிச ரீதியில் மாற்றியமைக்கின்ற தர்க்க ரீதியான செயல்திட்டமாக முதலில் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்** வெளியிடப்பட்டது. **அறிக்கையின்** கருத்துகள் இன்றளவும் மெய்யாக இருக்கின்றன. பாட்டாளி வர்க்க இயக்கமும் கம்யூனிஸ்ட் இயக்கமும் 140 ஆண்டுகளுக்கு அதிகமான கால நெடுகிலும் விஞ்ஞான கம்யூனிசத்தின் இத்தலைசிறந்த நூலின் கருத்துகளை எதார்த்தத்தில் அமுலாக்கி வளர்ச்சியடைந்து வருகின்றன. மார்க்சும் எங்கெல்சும் முன்னறிவித்த பாட்டாளி வர்க்கப் புரட்சி பல நாடுகளில் மெய்யாகி விட்டது. தனியுடைமை, ஏற்றத்தாழ்வு, சுரண்டல் ஆகியவை தவிர்க்க முடியாதபடி ஒழிக்கப்படும் என்று மார்க்ஸ், எங்கெல்ஸ் முன்னறிவித்ததை சோஷலிசக் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகளின் வாழ்க்கை இன்று நிரூபித்திருக்கிறது.

## பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தலைவர்களும் தத்துவாசிரியர்களுமான மார்க்சும் எங்கெல்சும்

**1848—1849ஆம் ஆண்டுப் புரட்சியில் மார்க்ஸ், எங்கெல்சின் பங்கு. மார்க்சின் ''மூலதனம்''. கம்யூனிஸ்டுக் கட்சி**

---

* **அதே நூல்,** *பக்கம்* 228.

**அறிக்கை** வெளியிடப்பட்ட சமயத்தில் சில ஐரோப்பிய நாடுகளில் 1848—1849ஆம் ஆண்டுப் புரட்சிகள் நடைபெற்றன. 1848 பிப்ரவரியில் பிரான்சில் நடைபெற்ற புரட்சி "வங்கியதிபர்களின் அரசரான" லுயீ ஃபிலீப்பைத் தூக்கியெறிந்து குடியரசை நிறுவியது. மார்ச் மாதத்தில் புரட்சிகர எழுச்சி ஆஸ்திரியா, இத்தாலி மற்றும் ஜெர்மனிக்குப் பரவியது; பிரஷ்யாவில் மிதவாத முதலாளித்துவ அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

இப்புரட்சிகரக் காலகட்டத்தில் மார்க்சும் எங்கெல்சும் *Neue Rheinische Zeitung* ("புதிய ரைன் பத்திரிகையை") வெளியிடுவதில் பிரதானமாக ஈடுபட்டிருந்தார்கள். அப்பத்திரிகை கொலோனிலிருந்து 1848 ஏப்ரல் முதல் 1849 மே முடிய வெளியிடப்பட்டது. அதன் முதல் இதழ்களிலிருந்து அது வர்க்கப் போராட்ட உணர்ச்சியில் தோய்ந்திருந்தது. மார்க்சும் எங்கெல்சும் பல கட்டுரைகளை எழுதினார்கள்; அவற்றில் அக்கால சம்பவங்களைப் பகுத்தாராய்ந்து புரட்சிகர சக்திகளின் நடவடிக்கைத் திசைவழியை வகுத்துக் கொடுத்தார்கள், முதலாளி வர்க்க எதிரணியினரின் கோழைத்தனத்தையும் உறுதியின்மையையும் தீவிரமாக விமர்சனம் செய்தார்கள், அவர்களின் தலைவர்களுடைய ஊசலாட்டங்கள், தீர்மானமின்மை மற்றும் கொள்கையின்மையைக் கிண்டல் செய்தார்கள்.

மார்க்ஸ், எங்கெல்சின் புரட்சிகர செயல்திட்டம், பிரஷ்ய அரசமரபு அமைப்புக்கு எதிரான முதலாளி வர்க்க சக்திகள் இன்னும் அதிகமான உறுதியுடன் ஜெர்மனியை ஜனநாயக ரீதியில் ஒற்றுமைப்படுத்துவதற்கும் குடியரசை நிறுவுவதற்கும் போராடுமாறு நிர்ப்பந்திப்பதற்குப் புரட்சிகர ஜனநாயக சக்திகளைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. மார்க்சும் எங்கெல்சும் எல்லா ஜனநாயக சக்திகளின் ஒற்றுமைக்காக நின்றார்கள். அவர்

களின் பத்திரிகை புரட்சியின் குரல் என்பதைக் காட்டிலும் அதிகமாக, புரட்சிகரத் தலைமையகமாக இருந்தது. பத்திரிகையில் வெளியான கட்டுரைகள் எறிகுண்டுகள், வெடிகுண்டுகளைப் போல இருந்தன என்று எங்கெல்ஸ் கூறினார்.

1848—1849ஆம் ஆண்டுகளின் முதலாளித்துவப் புரட்சிகளின் தோல்விக்குப் பிறகு மார்க்சும் எங்கெல்சும் நாட்டை விட்டு இங்கிலாந்துக்குப் போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மார்க்ஸ் லண்டனில் வசித்தார். எங்கெல்ஸ் மான்செஸ்டரில் குடியேறினார். அங்கே அவர் தன்னுடைய தகப்பனாரது முகவராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். தான் மிகவும் வெறுத்த வர்த்தக வாழ்க்கைக்கு அவர் திரும்பினார்; அதன் மூலம் தன்னுடைய புரட்சிகர மற்றும் அறிவுத் துறை நடவடிக்கைகளுக்கு அவசியமான நிதிகளைப் பெறுவதும் மிகவும் மோசமான பொருளாதாரக் கஷ்டங்களில் சிக்கியிருந்த மார்க்சுக்கும் அவருடைய குடும்பத்துக்கும் உதவி செய்வதுமே எங்கெல்சின் நோக்கமாயிருந்தது.

மார்க்ஸ், எங்கெல்சின் அறிவுத் துறை மற்றும் புரட்சிகர நடவடிக்கைகளை எதனாலும் தடுக்க முடியவில்லை. 1848—1849ஆம் ஆண்டுப் புரட்சிகளின் அனுபவத்தைப் பெற்றிருந்த அவர்கள் விஞ்ஞான கம்யூனிசம் பற்றிய தம்முடைய தத்துவத்தை உருவாக்குவதில் தொடர்ந்து ஈடுபட்டார்கள். புரட்சியில் பங்கெடுத்தது தம்முடைய போதனையை நடைமுறையில் சோதித்துப் பார்க்கின்ற வாய்ப்பை அவர்களுக்குக் கொடுத்தது. ஐரோப்பாவின் முதலாளி வர்க்கம் தன்னுடைய புரட்சிகரத் தன்மையை ஏற்கெனவே முற்றிலும் இழந்திருந்தது, தற்பொழுது தலைமையான புரட்சிகர சக்தியாகிய பாட்டாளி வர்க்கம் வரலாற்று

ரீதியில் அதன் இடத்தைப் பிடிக்கும் என்று அவர்கள் செய்த முடிவை சம்பவங்களின் போக்கு நிரூபித்தது.

லண்டனில் மார்க்ஸ் தன்னுடைய நேரத்தில் பெரும் பகுதியை **மூலதனம்** நூலை எழுதுவதற்குப் பயன்படுத்தினார். அந்த நூலை அவர் பூர்த்தி செய்ய முடியவில்லை என்றாலும் அது அவருடைய மாபெரும் படைப்பாகும். **மூலதனத்தின்** முதல் தொகுதி 1867இல் வெளியிடப்பட்டது. எங்கெல்ஸ் தன்னுடைய மாபெரும் நண்பரின் மரணத்துக்குப் பிறகு இரண்டாவது, மூன்றாவது தொகுதிகளை வெளியிட்டார். **மூலதனம்** மெய்யாகவே ஒரு விஞ்ஞான படைப்பாகும், மனித சாதனையாகும். **மூலதனம்** முதலாளிகள், நிலவுடைமையாளர்களின் தலைகளின் மீது வீசப்பட்ட மிகவும் சக்திவாய்ந்த வெடிகுண்டு என்று மார்க்ஸ் கூறினார்.

**மூலதனத்தில்** மார்க்ஸ் தன்னுடைய போதனையின் மூன்று உட்பகுதிகளை—தத்துவஞானம் (இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம்), அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான கம்யூனிசம்—ஒன்றுசேர்த்தார். அவர் முதலாளித்துவத்தின் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய பிரச்சினைகளை எடுத்துக் கொண்டது மட்டுமன்றி, விஞ்ஞான கம்யூனிசத்தின் பல முக்கியமான அம்சங்களைப் பகுத்தாராய்ந்து அவற்றுக்கு மிகவும் ஆழமான தத்துவ ஞான, பொருளாதார, வரலாற்று நிரூபணத்தை அளித்தார்.

மார்க்ஸ் **மூலதனம்** நூலில் முதலாளித்துவ சமூக-பொருளாதார அமைப்பின் வளர்ச்சி, செயல்முறையை ஆள்கின்ற விதிகளை வெளிப்படுத்தினார், அதன் பகையியல் முரண்பாடுகளை வெளிக் கொணர்ந்தார், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலம் அதனிடத்தில் கம்யூனிச சமூகம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பதை நிரூபித்தார்.

முதலாளித்துவம் சோஷலிசத்துக்குரிய பொருளாயத முன்தேவைகளையும் பாட்டாளி வர்க்கத்தையும் படைத்தது. முதலாளி வர்க்கத்தின் ஆட்சியை ஒழித்து புதிய சமூகத்தை நிறுவுகின்ற பலத்தைக் கொண்ட புரட்சிகர சக்தி பாட்டாளி வர்க்கமாகும். மொத்தமாக எடுத்துக் கொண்டால், முதலாளித்துவத்தை ஒழிப்பதை, சமூகத்தில் வர்க்கப் பிரிவினைகளை முற்றாக ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட புரட்சியை பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்பதை **மூலதனம்** நிரூபிக்கிறது. சோஷலிசப் புரட்சி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றிய தத்துவம் அந்நூலில் உறுதியான பொருளாதார அடிப்படையின் மீது நிறுவப்பட்டது. **மூலதனம்** நூலை எழுதியதன் மூலம் உலகத்தை மாற்றியமைப்பதற்கு, சுரண்டலை ஒழிப்பதற்கு, வர்க்கமற்ற சமூகத்தை நோக்கி முன்னேறுவதற்கு ஒரு சக்தி வாய்ந்த தத்துவார்த்த ஆயுதத்தை மார்க்ஸ் தொழிலாளி வர்க்கத்துக்கு அளித்தார்.

**முதலாவது அகிலத்தின் ஸ்தாபகர்களும் தலைவர்களும்.** மார்க்ஸ், எங்கெல்சின் விஞ்ஞானப் பணியும் புரட்சிகர நடவடிக்கைகளும் பிரிக்க முடியாதபடி இணைந்திருந்ததுடன் ஒன்றுக்கொன்று துணையாக இருந்தன. 1864ஆம் ஆண்டில் **மூலதனம்** நூலின் முதல் தொகுதி அநேகமாக எழுதி முடிக்கப்பட்டிருந்த பொழுது மார்க்ஸ் எழுத்து வேலையை நிறுத்தி விட்டு முதலாவது அகிலத்தை—சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை அமைப்பதில் தன்னுடைய காலம், சக்தி அனைத்தையும் செலவிட்டார். 1864 செப்டெம்பர் 28இல் லண்டனில் சில நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர் சங்கங்கள், ஜனநாயக ஸ்தாபனங்

களின் கூட்டத்தில் அகிலம் நிறுவப்பட்டது. அக்கூட்டத்தில் பங்கேற்றவர்கள் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை நிறுவுவதென்று முடிவு செய்தார்கள், அதன் செயல்திட்டத்தையும் விதிமுறைகளையும் தயாரிப்பதற்கு ஒரு தற்காலிக கமிட்டியையும் தேர்ந்தெடுத்தார்கள்.

புதிய ஸ்தாபனத்தின் விதிமுறைகளையும் தொடக்க அறிக்கையையும் எழுதுகின்ற பொறுப்பு மார்க்சுக்கு அளிக்கப்பட்டது. அது கடினமான பொறுப்பு; ஏனென்றால் அதிகமான வர்க்க உணர்வுடைய பாட்டாளி வர்க்கக் குழுக்களை மேன்மேலும் அதிகமாகத் தன்னுடைய அணிக்குள் கொண்டு வந்து அகிலம் ஒரு வெகுஜன ஸ்தாபனமாக மாற வேண்டும். ஒன்றுசேரக் கூடிய பல்வேறு குழுக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் இலட்சியங்களையும் திசைவழியையும் வகுத்தளிக்க வேண்டும். அதே சமயத்தில் விஞ்ஞான கம்யூனிசக் கோட்பாடுகளிலிருந்து விலகிச் செல்வதை அனுமதிக்கக் கூடாது, தொழிலாளி வர்க்க இயக்கத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த குட்டி முதலாளி வர்க்க சக்திகள் அகிலத்தில் வேரூன்றுவதைத் தடுக்க வேண்டும். மார்க்ஸ் இப்பணியை மேதாவிலாசத்துடன் நிறைவேற்றினார். அவர் தயாரித்த விதிமுறைகளும் தொடக்க அறிக்கையும் ஸ்தாபனத்துக்கும் அதன் பணிக்கும் அடிப்படையாக இருந்தன.

அகிலத்துக்குப் பொதுக் குழு தலைமை தாங்கியது, அதில் மார்க்ஸ் தலைமையான இடத்தைப் பெற்றிருந்தார். மார்க்ஸ் ஓய்வின்றிச் செய்த ஸ்தாபன வேலையும் அரசியல் நடவடிக்கைகளும் இல்லாவிட்டால் அகிலம் சர்வதேச அரங்கத்தில் பெற்ற பலத்தையும் செல்வாக்கையும் ஒருபோதும் பெற்றிருக்காது. அகிலத்தின் புகழ் ஆண்டுதோறும் வளர்ச்சியடைந்தது. பல பிரிட்டிஷ் தொழிற்சங்கங்கள் அகிலத்தில் சேர்ந்தன. பிரான்ஸ், ஜெர்மனியைச் சேர்ந்த பாட்டாளி

வர்க்க இயக்கங்களும் மார்க்சியத் தாக்கத்தின் கீழ் வந்து கொண்டிருந்தன.

ஜெர்மனியில் **1869**இல் நாடு தழுவிய அளவில் முதல் பாட்டாளி வர்க்கக் கட்சி, பிரதானமாக, விஞ்ஞான கம்யூனிசக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி அமைக்கப்பட்டது. இது மார்க்ஸ், எங்கெல்சின் போதனைக்கு மற்றுமொரு வெற்றியாக, மற்ற நாடுகளில் புதிய வெகுஜனக் கட்சிகள் தோன்றிக் கொண்டிருந்த நிலையில் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றில் ஒரு புதிய கட்டத்தின் தொடக்கமாக இருந்தது. பல்வேறு நாடுகளில் தொழிலாளர்களின் அரசியல் ஸ்தாபனங்களை, அதாவது பாட்டாளி வர்க்கக் கட்சிகளை உருவாக்குவது **1871**இல் நடைபெற்ற அகிலத்தின் லண்டன் காங்கிரசிலும் **1872**இல் நடைபெற்ற ஹேக் காங்கிரசிலும் முக்கியமான விஷயமாக இருந்தது.

இதற்கிடையில் அகிலம் செயலாற்றிய நிலைமைகள் தொடர்ச்சியாக மோசமடைந்தன. பிற்போக்குச் சக்திகள் தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரான இயக்கத்தைக் கட்டவிழ்த்து விட்டன. சில நாடுகளில் அரசியல் ஒடுக்குமுறையுடன் சேர்த்து முதலாளி வர்க்கப் பத்திரிகைகள் அகிலத்தின் தலைவர்களுக்கு எதிராக உக்கிரமான அவதூறுப் பிரசாரத்தைத் தொடங்கின. பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச வெகுஜன ஸ்தாபனம் சட்டபூர்வமான முறையில் தொடர்ந்து செயலாற்றுவது இயலாததாகிக் கொண்டிருந்தது. **1873**இன் முடிவுக்குள் அகிலம் கிட்டத்தட்ட செயல்படாமல் போனது, **1876**இல் அது அதிகார பூர்வமாகக் கலைக்கப்பட்டது. ஒவ்வொரு தனிப்பட்ட நாட்டிலும் சோஷலிஸ்ட் கட்சியை நிறுவுகின்ற கடமை இப்பொழுது தொழிலாளி வர்க்கத்துக்கு முன்பாக எழுந்தது.

விஞ்ஞான கம்யூனிசக் கொள்கைகளுக்கு விசுவாசமாக

இருத்தல், பாட்டாளி வர்க்க சக்திகள் மற்றும் அதன் கூட்டாளிகளின் சர்வதேசக் கூட்டணி, பழைய உலகத்தின் ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக் கொள்கையை எதிர்த்துத் தொடர்ச்சியான போராட்டம் ஆகிய முறைகளின் மூலம் விஞ்ஞான கம்யூனிசக் கருத்துகளை எப்படி அமுலாக்க முடியும் என்பதற்கு முதலாவது அகிலம் தத்ரூபமான உதாரணமாக இருந்தது.

**பாரிஸ் கம்யூனின் படிப்பினைகளும் விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தை மேலும் விரித்துரைத்தலும்.** பாட்டாளி வர்க்க இயக்கத்தில் தங்களுடைய கருத்துகள் அமுலாக்கப்படுவதைப் பார்க்கின்ற அளவுக்கு மார்க்சும் எங்கெல்சும் உயிருடன் இருந்தார்கள். ஐரோப்பாவின் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துக்கு எதிர்ப்பாகத் தன்னுடைய பலத்தைச் சேகரித்துக் கொண்டு சமூகத்தின் மிகவும் முற்போக்கான, புரட்சிகரமான வர்க்கமாக முதிர்ச்சியடைவதை அவர்கள் கண்டார்கள். ''உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!'' என்னும் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின்** அறைகூவலை அமுலாக்கிய பாட்டாளி வர்க்க சர்வதேச ஸ்தாபனம், முதலாவது அகிலம் சுமார் பத்து ஆண்டுகள் நிலவியது. மார்க்சும் எங்கெல்சும் உலகத்தின் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியை, முதல் பாட்டாளி வர்க்க அரசை, அதாவது பாரிஸ் கம்யூனைக் கண்டார்கள்.

1871 மார்ச் 18இல் பாரிசில் புரட்சி வெடித்தது. சில நாட்களுக்குப் பிறகு பாரிஸ் கம்யூன் ஆட்சிக்கு வந்தது. முதல் புரட்சிகர நடவடிக்கைகள் முதலாளித்துவ அரசுப் பொறியமைவை அழிப்பதையும் ஆட்சியதிகாரத்தின் புதிய ரகத்தை நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. நிரந்தர இராணுவமும் அரசியல் போலீசும் ஒழிக்கப்பட்டன; தேசியக் காவலர் படை அமைக்கப்பட்டது; திருச்சபை அரசிலி

ருந்து பிரிக்கப்பட்டது; ஜனநாயக ரீதியான தேர்தல் முறையும் புதிய நிர்வாக, சட்ட அமைப்புகளும் அமுலாக்கப்பட்டன; அதிகாரிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், மக்களால் நீக்கப்பட்டார்கள்; அவர்களுடைய ஊதியங்கள் தொழிலாளர்களுடைய ஊதியங்களுக்குச் சமமாகக் குறைக்கப்பட்டன.

பாரிஸ் கம்யூன் **72** நாட்கள் மட்டுமே நீடித்தது. பாரிஸ் கம்யூன் நிறுவப்பட்ட செய்தியை மார்க்சும் எங்கெல்சும் உற்சாகத்துடன் வரவேற்றார்கள். அதன் நடவடிக்கைகளை அவர்கள் உன்னிப்பாக கவனித்தார்கள்; ஆலோசனைகள், சிபாரிசுகளை முன்வைத்ததன் மூலம் அதன் தலைவர்கள் ஆபத்தான தவறுகளைச் செய்யாமற் தடுக்க முயற்சி செய்தார்கள். கம்யூன் முறியடிக்கப்பட்ட பிறகு அவர்கள் அதன் அனுபவத்தை முற்றாக ஆராய்ந்து உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கு அதன் படிப்பினைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்தார்கள்.

முதலாளித்துவ அரசுப் பொறியமைவை அழித்துப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிறுவுதல் அவசியம் என்பதைப் பற்றிய மார்க்சின் ஆய்வுரையை பாரிஸ் கம்யூன் நடைமுறையில் நிரூபித்ததில் அதன் வரலாற்று முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது என்று மார்க்ஸ் கூறினார். அதில் கம்யூனிச எதிர்கால அரசின் கூறுகளை மார்க்ஸ் கண்டார்.

கம்யூனுடைய தலைவர்கள் உறுதியில்லாமல் நடந்துகொண்டதும் தொழிலாளி வர்க்கத்தின் சக்திகளை அமைப்பதற்கும் இயக்குவதற்கும் புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சி அதனிடம் இல்லை என்பதும் கம்யூனுடைய தோல்விக்கு முக்கியமான காரணங்கள் என்று மார்க்ஸ் கருதினார்.

எங்கெல்ஸ் **1869**இல் வர்த்தக நிறுவனத்தில் தன்னுடைய வேலையிலிருந்து விலகி லண்டனுக்குச் சென்றார். அங்கே அவரும் மார்க்சும் விஞ்ஞான, புரட்சிப் பணிக்குத்

தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அவர்கள் ஜெர்மனியில் தொழிலாளர் இயக்கம் குறித்து அதிகமான கவனம் செலுத்தினார்கள். 1875இல் கோத்தா காங்கிர சில் சமூக-ஜனநாயகக் கட்சி குட்டி முதலாளி வர்க்கப் புரட் சிக்காரரான பெர்டினண்டு லஸ்ஸால் நிறுவிய ஜெர்மானியத் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்துடன் இணைந் தது. அந்தக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட செயல்திட் டத்தில் மார்க்சியவாதிகள் லஸ்ஸால்வாதத்துக்குக் கணிச மான சலுகைகளை அளித்தார்கள், விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம், நடைமுறையில் பல முக்கியமான நிலைகளைக் கைவிட்டார்கள்.

மார்க்ஸ் 1875இல் எழுதிய **கோத்தா செயல்திட்டத்தின் விமர்சனம்** என்னும் நூலில் அந்தச் செயல்திட்டத்தின் குறைகளை விமர்சனம் செய்தார். புதிய கருத்துகள், தத் துவ ரீதியான கோட்பாடுகள் மூலம் விஞ்ஞான கம்யூனிசத் தை வளப்படுத்திய காரணத்தால் அவருடைய நூல் முக் கியமானதாகும். முதலாளித்துவ அரசு வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது, அதை மக்களுடைய அரசாகச் செய்வது சாத்தியம் ஆகிய லஸ்ஸால்வாதக் கருத்துகள் தவறானவை என்பதுடன் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கு ஆபத்தான வை; ஏனென்றால் முதலாளித்துவ அரசு பாட்டாளி வர்க் கத்துக்கு எதிரானது, புரட்சியின் மூலம் ஏற்படுகின்ற பாட் டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை அதனிடத்தில் ஏற்படுத்த வேண்டும் என்பதை மார்க்ஸ் நிரூபித்தார்.

கம்யூனிச சமூக-பொருளாதார அமைப்பைப் பற்றித் தன்னுடைய கருத்துகளை மார்க்ஸ் சுருக்கமான முறையில் **கோத்தா செயல்திட்டத்தின் விமர்சனத்தில்** எடுத்துக் கூறி னார். சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் தழுவு கின்ற நீண்டகால, ஆழமான புரட்சிகர மாற்றங்களின் விளைவாக கம்யூனிச சமூகம் தோன்றும்; முதலாளித்

துவத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையில் மாறுங்கால கட்டம் இருக்கும் என்று அவர் கூறினார். கம்யூனிச சமூக அமைப்பு தன் வளர்ச்சியில் சோஷலிசம், கம்யூனிசம் என்னும் இரண்டு கட்டங்களைக் கடந்து வர வேண்டியிருக்கும். மேற்கூறிய இரண்டு கட்டங்களில் ஒவ்வொன்றின் அடிப்படையான கூறுகளையும் கொள்கைகளையும் மார்க்ஸ் வர்ணித்தார், சோஷலிசம் கம்யூனிசமாக மாறுவதற்கு இன்றியமையாத நிபந்தனைகளை வகுத்தளித்தார்.

ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதிகளைக் கொண்ட சில குழுக்கள் மத்தியில் குட்டி முதலாளி வர்க்க, சீர்திருத்தவாத சித்தாந்தத்தைப் பற்றி சமரச அணுகுமுறை தோன்றுவதை அல்லது அக்குழுக்கள் புதுப்பாணியான முதலாளித்துவத் தத்துவங்களை மார்க்சியத்துடன் இணைப்பதற்குச் செய்த அருவருப்பான முயற்சிகளை மார்க்சும் எங்கெல்சும் அலட்சியம் செய்ய முடியவில்லை. இந்தப் போக்கு பாட்டாளி வர்க்க இயக்கத்தை அழிக்கக் கூடியதாக இருந்தது. டூரிங் என்பவர் அத்தகைய புதுப்பாணியான தத்துவாசிரியர்களில் ஒருவர். அவர் முதலாளித்துவ மற்றும் குட்டி முதலாளித்துவச் சிந்தனையின் பல்வேறு போக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட கருத்துகளைக் கொண்டு தன்னுடைய தத்துவத்தை உருவாக்கி மார்க்சியத்துக்கு பதிலாக அதை நிறுவுவதற்கு முயற்சி செய்தார்.

எங்கெல்ஸ் **டூரிங்குக்கு மறுப்பு** (1878) என்னும் தலைப்பில் எழுதிய அடிப்படையான நூலில் டூரிங்கின் கருத்தமைப்புகளைச் சாடினார், மார்க்சியத்தின் மூன்று உட்பகுதிகளை (தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான கம்யூனிசம்) பொழித்துரைத்து மேலும் வளர்த்துக் கூறினார். அந்த நூலின் கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்த்து அங்கீகரித்த மார்க்ஸ் அரசியல் பொருளாதாரத்தின் வரலாற்றைப் பற்றி ஒரு அத்தியாயத்தையும்

எழுதினார். மார்க்சியக் களஞ்சியம் என்று **டூரிங்குக்கு மறுப்பு** வர்ணிக்கப்படுவது நியாயமானதே.

இதற்கிடையில் மார்க்ஸ் **மூலதனத்தின்** இரண்டாவது, மூன்றாவது தொகுதிகளைத் தொடர்ந்து எழுதினார். இப்பணியை ஒட்டி அவர் உலக வரலாற்றையும் ருஷ்யா உள்பட பல்வேறு நாடுகளின் பொருளாதாரங்களையும் ஆராய்ந்தார். மார்க்ஸ் நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்தில், 1881இல் அவர் மனைவி மரணமடைந்தது அவருக்குப் பேரிடியாக இருந்தது. கார்ல் மார்க்ஸ் 1883 மார்ச் 14இல் மரணமடைந்தார்.

மார்க்ஸ் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக இருந்தார். மார்க்ஸ் மரணமடைந்த பிறகு எங்கெல்ஸ் அப்பணியைத் திறம்பட நிறைவேற்றினார். அவர் ஐரோப்பிய சோஷலிஸ்டுகளின் ஆலோசகராகவும் தலைவராகவும் இருந்தார், சீர்திருத்தவாதத்தை எதிர்த்தும் மார்க்சியத்தின் தூய்மையைப் பாதுகாப்பதற்கும் பல நாடுகளிலும் தோன்றியிருந்த பாட்டாளி வர்க்கக் கட்சிகள் சரியான செயல்திட்டத்தையும் செயல்தந்திரத்தையும் கடைப்பிடிப்பதற்கும் போராட்டத்தைத் தொடர்ந்தார், விஞ்ஞான ரீதியான உலக கண்ணோட்டத்தை மேலும் வளர்த்து புதிய நிலைமைகளுக்கு அதைத் தகவமைத்தார். அதே சமயத்தில் எங்கெல்ஸ் **மூலதனம்** நூலின் இரண்டாவது, மூன்றாவது தொகுதிகளைப் பிரசுரத்துக்குத் தயாரித்தார். பிரெடெரிக் எங்கெல்ஸ் 1895இல் மரணமடைந்தார்.

**தொழிலாளர் இயக்கத்தில் மார்க்சியம் பெற்ற வெற்றி.** 19ஆம் நூற்றாண்டின் முதல் மூன்றிலிரண்டு காலப்பகுதியில் தொழிலாளர் மற்றும் சோஷலிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றை லெனின் பின்வருமாறு வர்ணித்தார்: ''இது

தயாரிப்பு மற்றும் வரலாற்றின் பரிசோதனையில் வெற்றியடைந்துள்ள ஒரே சோஷலிசத் தத்துவமாகிய மார்க்சியம் பிறந்த காலகட்டம். இக்காலகட்டம் உத்தேசமாக சென்ற நூற்றாண்டின் முதல் மூன்றிலிரண்டு பகுதியாகும்; இது மார்க்சியத்தின் முழு வெற்றியுடன், மார்க்சுக்கு முந்திய சோஷலிசத்தின் எல்லா வடிவங்களின் தகர்வு (குறிப்பாக 1848ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பிறகு), குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகத்திலிருந்து தொழிலாளி வர்க்கத்தைப் பிரித்தல், சுயேச்சையான வரலாற்றுப் பாதையில் இது நுழைதலுடன் முடிவடைந்தது.'' *

மார்க்சியம் தொழிலாளர் இயக்கத்தில் வெற்றியடைந்தது ஏன்? மார்க்சும் எங்கெல்சும் செய்த மகத்தான விஞ்ஞான, புரட்சிகரப் பணியே அதற்கு முக்கியமான காரணமாகும். அவர்களுடைய புதிய போதனை பாட்டாளி வர்க்க இயக்கத்துடன் நெருக்கமான தொடர்பில் வளர்ச்சியடைந்தது. அந்தப் போதனை கூட தொழிலாளி வர்க்கம், அதன் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியுடன் முன்னேறியது. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான வர்க்கக் கட்சி மட்டுமே தன்னியல்பாகத் தோன்றுகின்ற தொழிலாளர் இயக்கத்தை விஞ்ஞான சோஷலிசத்துடன் இணைக்க முடியும் என்று ஆரம்பத்திலேயே மார்க்சும் எங்கெல்சும் முடிவு செய்தார்கள். அதனால்தான் அவர்கள் புரட்சிகரக் கட்சியை உருவாக்குவதற்கு மிகவும் கடுமையாகப் பாடுபட்டார்கள். பல நாடுகளில் கம்யூனிஸ்ட் தொடர்புக் கமிட்டிகள் நிறுவப்பட்டன, விஞ்ஞான கம்யூனிசக் கொள்கைகளின் அடிப்படையில் நேர்மையாளர் சங்கத்தை கம்யூனிஸ்டுச் சங்கமாக மாற்றியமைத்தல்—அது கம்யூனிஸ்ட் கட்சிக்கு முன்

---

* V. I. Lenin, *Collected Works,* vol. 19, Moscow, Progress Publishers, 1973, p.295.

மாதிரியாக இருந்தது—ஆகியவை பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியடைந்த பகுதியினர் மத்தியில் மார்க்சியம் பரவிய தில் குறிப்பிடத்தக்க மைல்கற்களாகும்.

பல்வேறு நாடுகளில் பெருந்திரளான பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் உருவாக்கத்துக்கு அடிப்படைகளை அமைத்த முதலாவது அகிலத்தின் செயற்பணி தொழிலாளர் இயக்கத் தினுள் மார்க்சியத்தின் வெற்றியை ஊக்குவித்தது. கற்ப னாவாத சோஷலிசம், கம்யூனிசத்தின் பல்வேறு மரபுகள், போக்குகளை மார்க்சும் எங்கெல்சும் கடுமையாக விமர்சனம் செய்ததும் பாட்டாளி வர்க்கத்தினர் மத்தியில் மார்க்சியம் பரவுவதற்கு வழிவகுத்தது.

அவர்கள் மற்ற நாடுகளில் தொழிலாளர் இயக்கங்களின் வளர்ச்சியை உன்னிப்பாக கவனித்தார்கள்; புதிதாகத் தோன்றிக் கொண்டிருந்த தொழிலாளி வர்க்க ஸ்தாபனங் களிலும் கட்சிகளிலும் மார்க்சியம் தலைமையைப் பெறுவ தை ஊக்குவிப்பதற்குத் தம்மாலியன்ற எல்லாவற்றையுமே செய்தார்கள். அவர்களுக்குப் பல சீடர்களும் ஆதரவாளர் களும் இருந்தார்கள். அவர்களில் தலைசிறந்தவர்கள் தீவிர மான பிரசாரகர்களாக, மார்க்சியத்தின் தூய்மையைப் பாது காப்பவர்களாக இருந்து அதன் வளர்ச்சியில் சிறந்த முறையில் பங்கேற்றார்கள். அவர்கள் மார்க்சியத்தை வளர்ச் சியடைந்து கொண்டிருந்த சமூக-ஜனநாயகக் கட்சிகளின் சித்தாந்த, ஸ்தாபன, செய்முறை அடிப்படையாக்கினார்கள்.

ஜெர்மானிய சமூக-ஜனநாயக இயக்கத்தின் சிறந்த தலை வர்களான ஔகுஸ்ட் பெபெல், வில்ஹெல்ம் லீப்க் னெஹ்ட், கார்ல் லீப்க்னெஹ்ட், ஃப்ரான்ஸ் மேரிங் ஜெர் மனியில் தொழிலாளர் இயக்கத்தில் மார்க்சியம் வெற்றி யடைய குறிப்பிடத்தக்க பங்காற்றினர். அன்டோனியோ லப்ரியோலா இத்தாலியில் மார்க்சியத் தத்துவாசிரியராக வும் பிரசாரகராகவும் இருந்தார். மார்க்சின் மகள் லௌரா வின் கணவரான போல் லஃபார்க் பிரான்சில் அதே பணி

யைச் செய்தார். கியோர்கி பிளெஹானவ் ருஷ்யாவில் தலை சிறந்த மார்க்சியப் பிரசாரகராக இருந்தார். அவர் 1833இல் ஜினீவாவில் உழைப்பு விடுதலைக் குழு என்னும் முதல் ருஷ்ய மார்க்சியவாதிகளின் குழுவை நிறுவினார். பல் கேரியாவைச் சேர்ந்த புரட்சிக்காரரான திமீத்ரி பிளகோ யெவ், தெஸ்னியாக்குகள் கட்சி என்னும் பல்கேரியப் புரட்சி கரக் கட்சியின் ஸ்தாபகர், தலைவர், பல்கேரியாவில் மார்க்சி யத்தைப் பரப்பிய முன்னோடியாக இருந்தார்.

இரண்டாவது அகிலத்தின் தொடக்க காங்கிரஸ் பாரிசில் நடைபெற்ற பொழுது அநேகமாக எல்லா ஐரோப்பிய நாடு களையும் அமெரிக்காவையும் அர்ஜென்டீனாவையும் சேர்ந்த தொழிலாளர் ஸ்தாபனங்களின் சங்கம் 1889இல் அமைக்கப்பட்டதானது தொழிலாளர் இயக்கத்தில் மார்க்சி யம் வெற்றியடைந்திருப்பதை சந்தேகத்துக்கு இடமில்லாத முறையில் எடுத்துக்காட்டியது. ஆரம்பத்தில் எங்கெல் சின் வழிகாட்டுதலைப் பெற்ற இரண்டாவது அகிலம் மார்க்சியக் கொள்கையைப் பின்பற்றுகின்ற பாட்டாளி வர்க்க ஸ்தாபனமாக செயலாற்றியது. அது மார்க்சியக் கருத்து கள் பரவுவதற்கு உதவியது, தொழிலாளி வர்க்க சக்தி களைத் திரட்டி தொழிலாளர் கட்சிகளுக்கு இடையில் பிணைப்புகளை நிறுவியது. இக்காலகட்டத்தில் ஐரோப்பா வில் பல நாடுகளில் சோஷலிஸ்ட் கட்சிகள் செல்வாக்குள்ள அரசியல் சக்தியாக மாறின. 1895இல் எங்கெல்ஸ் மரண மடைந்த பிறகு சந்தர்ப்பவாதிகள் இரண்டாவது அகிலத் தின் தலைமையைப் படிப்படியாகக் கைப்பற்றினார்கள். அவர்கள் மார்க்சின் புரட்சிகரப் போதனையைத் திருத்தலா னார்கள்.

மார்க்சியம் விஞ்ஞான கம்யூனிச தத்துவம் மற்றும் செய் முறையின் வளர்ச்சியில் அடுத்த கட்டம் லெனினுடைய

விஞ்ஞான, புரட்சிகர நடவடிக்கைகளுடன் இணைந் திருக்கிறது.

**லெனின் — மார்க்ஸ், எங்கெல்சினுடைய தலைசிறந்த சீடர்**

**மார்க்சியத்தின் வளர்ச்சியில் புதிய கட்டம் என்ற முறையில் லெனினியம்.** மேதாவிலாசம் நிறைந்த சிந்தனையாளரும் தலைசிறந்த புரட்சிக்காரருமான லெனின் இதை நிறு வினார். முதலில் ருஷ்யாவில் தோன்றிய லெனினியம் முற்றிலும் ருஷ்ய நிகழ்வு என்று எவ்விதத்திலும் கூற முடியாது. அது தொழிலாளி வர்க்க மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சர்வதேசப் போதனை. ஏகாதிபத்திய யுகம் அதைப் பிரசவித்தது.

புதிய காலத்தின் சாராம்சத்தை நன்கு புரிந்து கொண்டு, ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விஞ்ஞானத் தத்துவத்தை உருவாக்கி, அத்தத்துவத்திலிருந்து புதிய தத்துவார்த்த, அரசியல் முடிவுகளைப் பெற்ற ஒரே மார்க்சியவாதியாக லெனின் தன்னுடைய காலத்தில் இருந்தார். ஏகாதிபத் தியம் என்பது மரணத் தறுவாயிலிருக்கின்ற, அழிந்து கொண்டிருக்கின்ற, சுரண்டலை நம்பியிருக்கின்ற முத லாளித்துவம், சோஷலிசப் புரட்சியின் முற்பொழுது என் பது லெனின் கண்ட முடிவுகளில் முக்கியமானதாகும்.

புதிய ஏகாதிபத்திய யுகம் முன்வைத்திருக்கின்ற புதிய கடமைகளுடன் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தைச் சேர்ந்த தொழிலாளர் மற்றும் சோஷலிஸ்ட் இயக்கம் பொருந்தவில்லை என்பதை லெனின் சுட்டிக்காட்டினார். இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளுக்கு, மார்க்சியப் பிடிப்பைக் கைவிட்டு விட்ட சந்தர்ப்பவாதிகள் தலைமை தாங்கினார்கள். அக்கட்சிகள் புரட்சிகரக் கட்சிகளாக இருந்தது முடிவடைந்து சீர்திருத்தவாதக் கட்சிகளாக

மாறின. திருத்தல்வாதிகள் அக்கட்சிகளுக்கு சித்தாந்திகளானார்கள். அவர்கள் மார்க்சின் போதனையைத் திரித்துக் கூறி அதன் புரட்சிகர சாராம்சத்தை ஒன்றுமில்லாமற் செய்தார்கள். முதலாளித்துவத்தைத் தாக்குவதில் ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்குவதற்கு இக்கட்சிகள் தகுதியற்றவை என்பது வெளிப்படையாகும்.

புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சி மட்டுமே, இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளிலிருந்து அடிப்படையில் வேறுபட்டிருக்கின்ற கட்சி மட்டுமே மார்க்சியத்துக்குப் புத்துயிரூட்ட முடியும் என்ற முடிவுக்கு லெனின் வந்தார். அக்கட்சி சந்தர்ப்பவாதத்திலிருந்தும் கோஷ்டிகளிலிருந்தும் முற்றிலும் விடுபட்டிருக்க வேண்டும், விஞ்ஞான கம்யூனிசக் கொள்கையை வழிகாட்டியாகக் கொண்டிருக்க வேண்டும்.

லெனினியம் ருஷ்யாவில் தோன்றியது என்னும் உண்மை அதன் சர்வதேசத் தன்மையை நிரூபிப்பதற்கே பயன்படுகிறது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்குள் உலகப் புரட்சிகர இயக்கத்தின் மையம் ருஷ்யாவுக்கு மாறி விட்டது. அது அப்பொழுது நிலவிய ஏகாதிபத்திய அமைப்பில் மிகவும் பலவீனமான கண்ணியாக, அதன் முரண்பாடுகளின் குவிமுனையாக இருந்தது. ருஷ்யாவில் எரிந்து கொண்டிருந்த புரட்சி நெருப்பு எந்தத் தருணத்திலும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவி உலக பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முற்காட்சியாக மாறக் கூடும் என்ற நிலை நிலவியது. அதனால்தான் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டம் சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றது.

மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போல ருஷ்யாவிலும் முதலாளித்துவ வளர்ச்சி ஏகாதிபத்தியக் கட்டத்தை அடைந்தது. ஏகாதிபத்தியத்தின் குணாம்சம் தேசியரீதியானதல்ல, சர்வதேச ரீதியானது. ஆகவே, ருஷ்யாவைப்

பற்றி லெனினுடைய தத்துவக் கண்டுபிடிப்புகள் சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றிருந்ததுடன் மார்க்சியத்தின் படைப்பு ரீதியான வளர்ச்சியைக் குறித்தன.

**லெனினியத்தின் உருவாக்கமும் லெனினுடைய புரட்சிகரப் பணியின் தொடக்கமும்.** லெனினியம் ஒரு புதிய சகாப்தத்தின், ஏகாதிபத்திய சகாப்தத்தின், பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தத்தின் மார்க்சியமாக உருவெடுத்தது. அதன் ஸ்தாபகரான விளதீமிர் இலியீச் லெனின் (உலியானவ் என்பது அவருடைய இயற்பெயர்) 1870 ஏப்ரல் 22இல் சிம்பீர்ஸ்க் (இப்பொழுது உலியானவ்ஸ்க் என்று மறுபெயரிடப்பட்டிருக்கிறது) என்னும் நகரத்தில் பிறந்தார். அவருடைய தகப்பனார் இலியா நிக்கலாயெவிச் உலியானவ் ஒரு ருஷ்யப் பண்ணையடிமையின் மகன். அவர் முதலில் ஆசிரியராகவும் பிறகு, சிம்பீர்ஸ்க் குபேர்னியாவின் அரசாங்கப் பள்ளிகளின் ஆய்வாளராகவும் இயக்குநராகவும் பணியாற்றினார். அவர் சிறப்பான ஆசிரியராகவும் அறிவியக்கவாதியாகவும் இருந்தார்; பண்பாடும் உயர்ந்த ஒழுக்கமும் உடையவர். 1860க்களிலிருந்த ருஷ்யாவின் புரட்சிகர ஜனநாயகவாதிகளான செர்னிஷேவ்ஸ்கி, தப்ரலியூபவ், பீசரெவின் கருத்துகளை அவர் ஆதரித்தார். லெனினுடைய தாயாரான மரீயா அலெக்சாந்தரவ்னா உலியானவா கல்வியறிவு நிரம்பிய பெண்மணி; இசைப் பயிற்சியும் இலக்கியம், கலையில் ஆர்வமும் உடையவள். அவள் பல மொழிகளைப் பேசக் கூடியவள். அவள் ஒரு வீரப் பெண்மணி, விதியின் தாக்குதல்களை மனங்கலங்காமல் எதிர்த்தாள். 1886இல் அவளுடைய கணவர் மரணமடைந்தார். அதற்கு ஒரு ஆண்டுக்குப் பிறகு அவளுடைய மூத்த மகன் அலெக்சாந்தர் உலியானவ் ஜார் மூன்றாம் அலெக்சாந்தரைக் கொலை செய்வதற்குச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்

பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டார். அவளுடைய எல்லாக் குழந்தைகளுமே முழுநேரப் புரட்சிக்காரர்களாக இருந்தார்கள். அடுத்து வந்த ஆண்டுகளில் அவர்கள் அடிக்கடி சிறையிலடைக்கப்பட்டார்கள், நாடுகடத்தப்பட்டார்கள். மரீயா அலெக்சாந்தரவ்னா 1916இல் மரணமடைந்தாள்.

விளதீமிர் உலியானவ் பள்ளிக்கூட மாணவனாக இருந்தபொழுது, 1885இல், மார்க்ஸ் எழுதிய **மூலதனம்** நூலை முதன்முதலாகப் படிக்க ஆரம்பித்தார். அவருடைய சகோதரர் அலெக்சாந்தர் அப்புத்தகத்தை செயின்ட் பீட்டர்ஸ்பரிலிருந்து கொண்டு வந்திருந்தார். லெனின் தன்னுடைய இளம் வயதிலேயே மார்க்சியக் கருத்துகளை ஏற்றுக் கொண்டார். லெனினுக்குப் பதினேழு வயதான பொழுது, மக்கள் சித்தம் என்னும் கட்சியின்—அக்கட்சி மார்க்சியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை—உறுப்பினரான அவருடைய சகோதரர் அலெக்சாந்தர் சிரச்சேதம் செய்யப்பட்ட பொழுது, "நாம் அந்தப் பாதையைப் பின்பற்ற மாட்டோம்; அது நாம் பின்பற்ற வேண்டிய பாதை அல்ல" என்று கூறினார். லெனின் தன்னுடைய சகோதரரையும் மக்கள் சித்தக் கட்சியின் மற்ற புரட்சிக்காரர்களையும் போற்றினார்; ஆனால் அவர்கள் கடைப்பிடித்த பயங்கரவாத முறைகளையும் ஜார் உள்பட சில உயர்மட்ட அதிகாரிகளைக் கொலை செய்வதன் மூலம் எதேச்சாதிகாரத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் முடிவு கட்டுவதற்குச் செய்த முயற்சிகளையும் அவர் ஆதரிக்கவில்லை. விளதீமிர் உலியானவ் வேறு போராட்ட வழியை, மார்க்சிய வழியைத் தேர்ந்தெடுத்தார்.

விளதீமிர் உலியானவ் 1887இல் சிம்பீர்ஸ்க் பள்ளியில் மிகச் சிறந்த மதிப்பெண்களைப் பெற்று வெற்றிகரமாகத் தேர்வுபெற்றார். பிறகு கஸான் பல்கலைக்கழகத்தில் சட்டவியல் துறையில் சேர்ந்தார். சிறிது காலத்துக்குப் பிறகு மாணவர்களின் புரட்சிகர இயக்கத்தில் சேர்ந்ததற்காகக்

கைது செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திலிருந்து வெளி யேற்றப்பட்டார், கஸான் குபேர்னியாவில் கக்கூஷ்கினோ கிராமத்தில் வசிக்குமாறு தண்டிக்கப்பட்டார். 1888ஆம் ஆண்டின் இலையுதிர் பருவத்தில் அவர் கஸானுக்குத் திரும்புவதற்கு அனுமதிக்கப்பட்டார். அடுத்து வந்த இலை யுதிர் பருவத்தில் குடும்பம் சமாராவுக்கு மாறியது. லெ னின் 1891இல் வெளி மாணவர் என்ற முறையில் செ யிண்ட் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தின் சட்டத் தேர்வு களை எழுதி மிகச் சிறப்பான மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றார். 1893 ஆகஸ்டில் அவர் சமாராவை விட்டுப் புறப் பட்டு செயின்ட் பீட்டர்ஸ்பர்குக்கு வந்தார்.

லெனின் தண்டனையாக கக்கூஷ்கினோவில் வைக்கப் பட்டிருந்த பொழுது மார்க்ஸ், எங்கெல்சின் நூல்களைப் படிப்பதைத் தொடர்ந்தார். அவர் கஸானுக்குத் திரும்பிய பிறகு ஒரு மார்க்சியக் குழுவில் சேர்ந்தார். சமாராவில் இருந்த பொழுது லெனின் அங்கே ஒரு மார்க்சியக் குழுவை அமைத்தார். இளைஞரான லெனின் மார்க்சியத்தை நன்கு கற்றிருந்தார். அவர் செயின்ட் பீட்டர்ஸ்பர்குக்கு வந் தவுடனே ஸ்தல மார்க்சியவாதிகளின் தலைவரானார். அவர் அங்கே மார்க்சிய வட்டாரங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அவற்றில் உறுப்பினர்களாக இருந்த அரசி யல் வளர்ச்சியடைந்த தொழிலாளர்கள் அவரை மிகவும் மதித்தார்கள்.

நரோத்னிக்குகளை (குட்டி முதலாளி வர்க்க விவசாய சோஷலிஸ்ட் இயக்கம்) சித்தாந்த ரீதியில் முறியடிக்காமல் ருஷ்யாவின் புரட்சிகர மற்றும் தொழிலாளர் இயக்கத்தில் மார்க்சியம் வெற்றி பெற முடியாது என்பதை லெனின் மற்ற மார்க்சியவாதிகளைக் காட்டிலும் மிகவும் தெளிவாக உணர்ந்தார். லெனின் 1894இல் **''மக்களின் நண்பர்கள்'' எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் சமூக-ஜனநாயகவாதிகளை**

**எதிர்த்துப் போரிடுவது எப்படி?** என்னும் தன்னுடைய முதல் முக்கியமான புத்தகத்தை எழுதினார். அந்நூலில் அவர் மிதவாத நரோத்னிக் இயக்கத்தின் கருத்துகளைப் பிய்த்தெறிந்தார். அவர் இதே பொருளில் இன்னும் பல நூல்களையும் எழுதினார்.

மார்க்சியவாதிகள் (மற்ற எல்லோரையும் காட்டிலும் முதன்மையாக லெனினும் பிளெஹானவும்) நரோத்னிக்குகளை வெற்றிகரமாக எதிர்த்துப் போராடியதன் விளைவாக, மார்க்சியவாதிகள் என்று தம்மை அழைத்துக் கொள்கின்ற, ஆனால் மார்க்சியத்தைத் தம்முடைய சொந்த மிதவாத முதலாளி வர்க்கக் கோணத்திலிருந்து விளக்குகின்ற பல சித்தாந்திகள் தோன்றினார்கள். இவர்கள் "சட்டபூர்வமான மார்க்சியவாதிகள்" என்று சொல்லப்பட்டார்கள். லெனின் 1890க்களில் எழுதிய **நரோதியவாதத்தின் பொருளாதார சாராம்சமும் திரு. ஸ்துரூவெ எழுதிய நூலில் அதைப் பற்றிய விமர்சனமும்** என்னும் மற்றொரு முக்கியமான நூலில் இந்தப் போலி மார்க்சியத்தைக் கண்டனம் செய்தார்.

லெனின் 1899இல் நாடுகடத்தப்பட்டிருந்த பொழுது தன்னுடைய முக்கியமான நூல்களில் ஒன்றான **ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி** என்னும் நூலை எழுதினார். அந்நூலில் அவர் ஏராளமான புள்ளி விவரங்களை ஆராய்ந்து ருஷ்யா முதலாளித்துவப் பாதையில் வளர்ச்சியடையத் தொடங்கி விட்டது, ஆகவே விவசாய கம்யூன்களை அமைப்பதன் மூலம் ருஷ்யா முதலாளித்துவக் கட்டத்தினுள் நுழையாமல் சோஷலிசத்துக்கு முன்னேறக் கூடிய சாத்தியத்தைப் பற்றிய எல்லாத் தத்துவங்களும் நிறைவேற முடியாது என்பது மட்டுமன்றி இவை பிற்போக்கானவை என்பதை நிரூபித்தார்.

ருஷ்யாவின் தனித்தன்மையான, ஒப்புவமையில்லாத

வரலாற்று வளர்ச்சியைப் பற்றிக் கூறப்பட்ட பல்வேறு தத்துவங்களை லெனின் கடுமையாக விமர்சனம் செய்தார். அவருடைய முக்கியமான தத்துவ ஆய்வுரைகளும் முடிவுகளும் தேசிய அல்லது பிரதேசத் தன்மையை ஒருபோதும் பெற்றிருக்கவில்லை, அவை எப்பொழுதும் சர்வதேசத் தன்மையைக் கொண்டிருந்தன. இது இயற்கையே; ஏனென்றால் ருஷ்யா முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றிய பொழுது உலக முதலாளித்துவ அமைப்பில் சேர்ந்து விட்டது, ஆகவே அது சர்வப்பொதுவான சர்வதேச முதலாளித்துவ விதிகளுக்கு உட்பட்டிருக்கிறது.

லெனின் 1890க்களில் எழுதிய நூல்களில் சித்தாந்த எதிரிகளுக்கு எதிராக மார்க்சியத்தைத் தற்காத்ததுடன் அதன் மூன்று உட்பகுதிகளையும் படைப்பாற்றலுடன் வளர்த்தார். இக்காலகட்டத்தில், **ஏகாதிபத்திய சகாப்தத்தின், பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தத்தின் மார்க்சியம் என்ற முறையில் லெனினியம்** வரலாற்றுக் களத்தில் தோன்றியது.

**லெனின்—புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியின் ஸ்தாபகர், தலைவர்.** பாட்டாளி வர்க்கம் தன்னுடைய சொந்தக் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் மட்டுமே தன்னுடைய வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முடியும் என்பது மார்க்ஸ், எங்கெல்சின் அடிப்படையான கருத்தாகும். லெனின் தன்னுடைய புரட்சிகர நடவடிக்கைகளின் ஆரம்பத்திலிருந்தே இக்கருத்தைக் கடைப்பிடித்தார். இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த கட்சிகள் சந்தர்ப்பவாத நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தபடியால் ஒரு புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியை உருவாக்க வேண்டியிருந்தது.

லெனின் 1895இல் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் அமைத்த தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகம் அப்

படிப்பட்ட கட்சிக்கு முன்மாதிரியாக இருந்தது. ருஷ்யாவின் வரலாற்றில் முதல் தடவையாக விஞ்ஞான கம்யூனிசம் தொழிலாளர் இயக்கத்துடன் இணைக்கப்பட்டது. லெனின் தலைமை தாங்கிய செயின்ட் பீட்டர்ஸ்பர்க் மார்க்சியவாதிகள் இளம் மார்க்சியவாதிகளைக் கொண்ட தொழிலாளர் குழுக்களை ஒற்றைப் புரட்சிகர ஸ்தாபனமாக ஒன்றுசேர்த்தார்கள். அந்த ஸ்தாபனம் தொழிலாளர் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியது; பிரசுரங்களை வெளியிட்டது, அவற்றை பாக்டரிகளில் வினியோகித்தது. 1895ஆம் ஆண்டின் இறுதியில் இக்கழகத்தின் தலைவர்களில் பெரும்பான்மையானவர்கள் கைது செய்யப்பட்டார்கள். லெனின் ஒரு ஆண்டுக்கும் அதிகமான காலத்துக்கு சிறையில் இருந்தார்; பின்னர் மூன்று ஆண்டுக் காலத்துக்கு சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

லெனின் நாடுகடத்தப்பட்ட இடத்திலிருந்தபடியே புரட்சிகர நடவடிக்கைகளைத் தொடர்ந்தார். அவருடைய தண்டனைக் காலம் முடிவடைவதற்குள் புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியை நிர்மாணிப்பதற்குரிய திட்டத்தை அவர் தயாரித்தார். இப்புதிய கட்சியை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் ஒரு காங்கிரசில் ஆரம்பமாவதல்ல, நாடு தழுவிய அளவில் ஒரு மார்க்சிய நாளிதழை அமைப்பதன் விளைவாக அது ஆரம்பமாகும் என்பது அத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அப்பத்திரிகையைப் படிக்கப்போகிறவர்கள் எதிர்காலக் கட்சியின் மூலக்கருவாக இருப்பார்கள். ருஷ்யாவிலுள்ள எல்லா மார்க்சியவாதிகளையும் சித்தாந்த ரீதியில் ஒன்றுசேர்ப்பது முக்கியமான அம்சமாகும். ஆனால் ருஷ்யாவிலிருந்த அன்றைய நிலைமைகளில் ஒரு நாளிதழைத் தொடங்குவது நடைபெற இயலாததாக இருந்தது.

1900 ஜூன் மாதத்தில் லெனின் வெளிநாட்டுக்குச் சென்றார். அவர் அங்கே பிரபலமான மார்க்சியவாதி

களான பிளெஹானவ், அக்செல்ரோத், ஸசூலிச்சுடன் சேர்ந்து **இஸ்க்ரா** ("தீச்சுடர்") பத்திரிகையை நிறுவினார். அப்பத்திரிகை ருஷ்யாவில் ரகசியமான முறையில் வினியோகிக்கப்பட்டது. லெனினது **இஸ்க்ரா** சித்தாந்த ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலும் ருஷ்யாவின் சோஷலிஸ்ட் குழுக்களை ஒரு கட்சியாக ஒன்றுபடுத்துவதற்கு உதவி செய்தது. லெனின் முக்கியமான பாத்திரத்தை வகித்த **இஸ்க்ரா**வின் ஆசிரியர் குழு கட்சியின் நகல் செயல்திட்டத்தையும் விதிமுறைகளையும் தயாரித்தது.

கட்சியின் ஸ்தாபனக் கட்டமைப்பு பிரஸ்ஸல்சில், பிறகு லண்டனில் 1903 ஜூலை—ஆகஸ்டில் நடைபெற்ற ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் (ரு.ச.ஜ.தொ.க.) இரண்டாவது காங்கிரசில் உருவாக்கப்பட்டது. சந்தர்ப்பவாதிகளுடன் தீவிரமான போராட்டத்தின் விளைவாக **இஸ்க்ரா** செயல்திட்டம் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், விவசாயி வர்க்கத்துடன் தொழிலாளி வர்க்கத்துக்கு உள்ள கூட்டணி, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் ஆகிய ஷரத்துக்கள் உள்பட ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போராட்டத்துக்கு லெனின் பிரதானமாகத் தலைமை தாங்கினார்.

ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் ஒருங்கிணைந்த, ஒரே கல்லில் தயாரிக்கப்பட்ட கட்சியை உருவாக்குவதில் தோல்வியடைந்தது. கட்சி இரண்டு அணிகளாகப் பிரிந்தது. மத்திய உறுப்புகளுக்குத் தேர்தல் நடைபெற்ற பொழுது இஸ்க்ராவாதிகள் என்று சொல்லப்பட்ட இடதுசாரி, லெனினிய அணிக்குப் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன. ஆகவே அதைச் சேர்ந்தவர்கள் போல்ஷிவிக்குகள் (போல்ஷிவிக்குகள் என்னும் ருஷ்யச் சொல் பெரும்பான்மையினரைக் குறிக்கும்) என்றும் வலது, சந்தர்ப்பவாத அணி மென்ஷிவிக்குகள் (மென்ஷி

விக்குகள் என்னும் ருஷ்யச் சொல் சிறுபான்மையினரைக் குறிக்கும்) என்றும் அழைக்கப்பட்டன. 1912க்கு முன்னர் போல்ஷிவிக்குகளும் மென்ஷிவிக்குகளும் ஒரே ஸ்தாபனத் தின் இரண்டு பகுதிகளாக அதிகார பூர்வமாகக் கருதப் பட்ட போதிலும் உண்மையில் அவை இரண்டு தனிக் கட்சி களாகவே இருந்தன. மென்ஷிவிக்குகள் இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த சந்தர்ப்பவாதக் கட்சிகளுடன் அதிகமான ஒற்றுமையைக் கொண்டிருந்தனர். போல்ஷி விக்குகள் முரணில்லாத 'புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சியாக செயல்பட்டனர். ரு.ச.ஜ.தொ.க. போல்ஷி விக்குகள், மென்ஷிவிக்குகள் என்று பிரிந்தது தேசிய அளவிலான நிகழ்வு அல்ல, சர்வதேச நிகழ்வு என் பதை சர்வதேசத் தொழிலாளர் மற்றும் சோஷ லிஸ்ட் இயக்கத்தில் பிறகு நடைபெற்ற சம்பவங்கள் எடுத்துக்காட்டின. சோஷலிசப் புரட்சியை நடத்தி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஸ்தாபிப் பதை நோக்கமாகக் கொண்ட கட்சிகள் எல்லா நாடு களையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்துக்கு அவசியம். ருஷ்ய நிலைமையை அடிப்படையாகக் கொண்டு லெனின் புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியைப் பற்றி விரித் துரைத்த போதனை சர்வதேச முக்கியத்துவம் உடையதாகும்.

புதிய ரகத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கக் கட்சியின் தத்துவாசிரியராகவும் தலைவராகவும் லெனின் இருந்தார். 1905இலும் 1917 பிப்ரவரியிலும் நடைபெற்ற முதலாளித் துவ ஜனநாயகப் புரட்சிகளின் போது ருஷ்ய பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்துக்கு போல்ஷிவிக் கட்சி தலைமை தாங்கியது. மனித சமூகத்தின் வரலாற்றில் வெற்றி பெற்ற முதல் சோஷலிசப் புரட்சியாகிய 1917இல்

நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியை அது நிறைவேற்றியது.

புதிய சகாப்தத்தின் தேவைகளுக்கு எற்ப லெனின் சோஷலிசப் புரட்சியின் தத்துவத்தை உருவாக்குவதில் தன்னுடைய வாழ்க்கையில் பல ஆண்டுகளை அர்ப்பணித்தார். ருஷ்யாவில் முதலாவது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடைபெற்ற காலத்தில், அப்புரட்சி நேரடியாக சோஷலிசப் புரட்சியாக மாறுவதைப் பற்றிய அடிப்படையான தத்துவத்தை அவர் போல்ஷிவிக்குகளுக்கு அளித்தார். இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த சந்தர்ப்பவாதிகளின் காலாவதியான வறட்டுச் சூத்திரங்களை ஆதரித்த மென்ஷிவிக்குகளை எதிர்த்து நடைபெற்ற தீவிரமான தத்துவார்த்த, அரசியல் போராட்டத்துக்கு நடுவில் இத்தத்துவம் உருவாக்கப்பட்டது. முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் இடையில் கணிசமான கால இடைவெளி இருக்க வேண்டும் என்று சந்தர்ப்பவாதிகள் கூறினார்கள். முதலாளித்துவத்தின் கூடுதலான வளர்ச்சியின் போது சோஷலிசப் புரட்சிக்கு இன்றியமையாத முன்தேவைகளைப் படைப்பதற்கு அத்தகைய கால இடைவெளி அவசியம் என்பது அவர்களுடைய கருத்தாகும்.

இச்சந்தர்ப்பவாத வறட்டுச் சூத்திரம் புதிய சகாப்தத்தில் காலாவதியானது, பொருத்தமற்றது; எனென்றால் எகாதிபத்தியம் ஒரு சோஷலிசப் புரட்சிக்கு எற்கெனவே முதிர்ச்சி அடைந்து விட்டது என்பதை லெனின் நிரூபித்தார். பாட்டாளி வர்க்கத்தைக் கண்டு பீதியடைந்த முதலாளி வர்க்கம் பிற்போக்கான நிலப்பிரபுத்துவ சக்திகளின் கரங்களுக்குள் விழுந்து விட்டது, ஆகவே அது ஒரு புரட்சிகர சக்தி என்பது முடிந்து விட்டது என்று அவர் தொடர்ந்தார். இப்பொழுது புரட்சியின் தலைவன், தலைமைச் சக்தி என்ற பாத்திரத்தை

முதலாளி வர்க்கம் வகிக்கவில்லை, பாட்டாளி வர்க்கமே வகிக்கிறது. அது விவசாயி வர்க்கம் அனைத்துடனும் கூட்டணி வகுத்து முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுகின்ற சக்தியைக் கொண்டிருக்கிறது; அதன் பிறகு அது ஏழை விவசாயி வர்க்கத்துடன் கூட்டணி அமைத்து சோஷலிசப் புரட்சியை நிறைவேற்றுகின்ற சக்தியைப் பெற இயலும். முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி சோஷலிசப் புரட்சியாக மாறுவதைப் பற்றிய லெனினது ஆய்வுரை ருஷ்யாவிலும் இதர நாடுகளிலும் நடைபெற்றிருக்கின்ற புரட்சிகர சம்பவங்களினால் முழுமையாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஏகாதிபத்தியம் பற்றிய லெனினுடைய தத்துவம், அவர் சோஷலிசப் புரட்சித் தத்துவத்தைச் செழுமைப்படுத்துவதற்கு தத்துவார்த்த அடிப்படையாக விளங்கியது. சோஷலிசம் தொடக்கத்தில் சில நாடுகளில் அல்லது ஒரு நாட்டில் கூட வெற்றி பெற முடியும் என்னும் லெனினது ஆய்வுரை சோஷலிசப் புரட்சியைப் பற்றிய அவருடைய தத்துவத்தின் கேந்திரமான அம்சமாகும். இந்த ஆய்வுரை ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவ நாடுகளின் சமமில்லாத பொருளாதார அரசியல் வளர்ச்சி விதியிலிருந்து பிறந்தது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏகாதிபத்தியச் சங்கிலியில் மிகவும் பலவீனமான கண்ணி நொறுக்கப்பட்ட ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றியும் பின்னர் முதலாளித்துவ முற்றுகைச் சூழ்நிலையில் சோஷலிச சமூகத்தை வெற்றிகரமாக நிர்மாணித்ததும் லெனினுடைய முன்னறிவிப்பை நிரூபித்தன. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு பல நாடுகளில் புரட்சிகளின் வெற்றி அதை மேலும் நிரூபித்தது.

அக்டோபர் புரட்சியின் முற்பொழுதில், குறிப்பாக

1917ஆம் ஆண்டின் கோடை காலத்திலும் இலையுதிர் காலத்திலும், ருஷ்யாவில் சோஷலிச புனர் நிர்மாணத்தைப் பற்றி லெனின் பல கட்டுரைகளை எழுதினார். இவற்றில் **அரசும் புரட்சியும்** என்னும் நூல் தலைசிறந்ததாகும். அந்நூல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத் தத்துவத்தையும் பாட்டாளி வர்க்க அரசை நிறுவுவதிலடங்கிய உடனடிப் பிரச்சினைகளையும் ஆராய்கிறது.

அரசு, புரட்சியைப் பற்றிய மார்க்ஸ், எங்கெல்சின் போதனையை எண்ணற்ற எதிரிகளிடமிருந்து லெனின் பாதுகாத்தார், புதிய கருத்துகளையும் முடிவுகளையும் சேர்த்து அதை வளப்படுத்தினார்.

**சோஷலிச நிர்மாணத்துக்கு லெனினுடைய மாபெரும் தத்துவ மற்றும் செய்முறைப் பங்களிப்பு.** மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் தலைமைக்கும் சோஷலிச நிர்மாணத்தில் தலைசிறந்த தத்துவ மற்றும் செய்முறை நடவடிக்கைகளுக்கும் உலகம் லெனினைப் போற்றுகிறது.

மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் சோஷலிச நிர்மாணம் ஒப்புநோக்கில் தொலைவிலுள்ள நிகழ்வாக இருந்தது. எனவே புரட்சிகரமான முறையில் முதலாளித்துவத்தை சோஷலிசமாக மாற்றுகின்ற ஒருங்கிணைந்த தத்துவத்தை உருவாக்குவதற்கு அவசியமான வரலாற்று விவரங்கள் அவர்களிடம் இல்லை. ஆனால் லெனினுடைய நிலைமை, குறிப்பாக அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, முற்றிலும் வேறு விதமாக இருந்தது. அவர் சோஷலிச நிர்மாண விஞ்ஞானத்தையும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற காலகட்டத்தைப் பற்றிய தத்துவத்தையும் உருவாக்கினார். அது விஞ்ஞான கம்யூனிசத்தின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பாக இருந்தது.

சோஷலிசத்தை நிர்மாணிக்கும் லெனினுடைய திட்டம்

என்பது உண்மையில் சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும்—பொருளாதார, சமூக, வர்க்க, தேசிய, அரசியல் மற்றும் அன்றாட வாழ்க்கை—விஞ்ஞான கம்யூனிசத்தின் கோட்பாடுகளை ஒட்டி மாற்றுகின்ற செயல்திட்டமாகும். ருஷ்யாவில் சோஷலிச புனர் நிர்மாணத்தின் முக்கியமான திசைவழிகள்: உற்பத்தியை சோஷலிசத் தொழில்துறைமயமாக்குதல், தனிப்பட்ட விவசாயப் பண்ணைகளைக் கூட்டுறவுமயமாக்குதல், கலாசாரப் புரட்சி ஆகும். சமூக-பொருளாதாரத் துறையில் ருஷ்யாவின் பின்தங்கிய நிலைமை இதை அவசியமாக்கியது. என்றாலும் சோஷலிச நிர்மாணத்தைப் பற்றிய லெனினுடைய கருத்துகள் சர்வதேச முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன; இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு மற்ற நாடுகளில் சோஷலிச நிர்மாணப் போக்கில் அவை வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டன.

தேசியப் பொருளாதாரத்தை மீட்டமைக்க வேண்டிய சூழ்நிலையில் அதற்குத் தேவையான பொருளாதார வளங்கள் சோவியத் அரசிடம் இல்லை. ஆகவே அரசாங்கம் பொருளாதார மீட்சியை ஊக்குவிப்பதற்கு முதலாளித்துவ சக்திகளின் உதவியை நாடியது. இப்புதிய தனியார் முதலாளித்துவ சக்திகளைப் பற்றி லெனின் அஞ்சவில்லை; ஏனென்றால் அரசு அதிகாரமும் கேந்திரமான தொழில் துறைகளும் தொழிலாளி வர்க்கத்திடமும் அதன் கூட்டாளிகளிடமும் இருந்தன. தனியார் மூலதனத்தை மதிநுட்பத்துடன் பயன்படுத்தியது மெய்யாகவே சோஷலிச நிர்மாணத்தை விரைவுபடுத்தியது. இக்கொள்கை புதிய பொருளாதாரக் கொள்கை என்று கூறப்பட்டது. அது முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டத்தின் குணாம்சமாக இருந்தது.

சோவியத் ருஷ்யா மாபெரும் நெருக்கடிகளை வெற்றி

கண்டு சோஷலிசத்தை நோக்கி முன்னேறியது. லெனினுடைய முன்முயற்சியின் பேரில் நாட்டை மின்சாரமயமாக்குகின்ற திட்டம் **கொயெல்ரோ** — தேசியப் பொருளாதாரத்துக்கு முதல் நீண்டகாலத் திட்டம் — 1920இல் தயாரிக்கப்பட்டது.

லெனின் மரணமடைவதற்குச் சிறிது காலத்துக்கு முன்னர் 1922 — 1923இல் சில சிறு கட்டுரைகளை எழுதினார். அவை தத்துவ, செய்முறை மற்றும் அரசியல் நோக்குகளில் மிகவும் முக்கியமானவை. அவர் இக்கட்டுரைகளில் புரட்சிக்குப் பிந்திய சோஷலிசப் புத்தாக்கத்தைப் பொழித்துரைத்தார், சோவியத் யூனியனில் சோஷலிச நிர்மாணத்தின் வாய்ப்புகளை உருவரையாக அளித்தார், உலக விடுதலை இயக்கத்தை ஊக்குவிப்பதற்குத் திட்டம் தீட்டினார்.

லெனின் 1924 ஜனவரி 21ஆம் நாளன்று உயிர் நீத்தார். அவர் நிறுவிய போல்ஷிவிக் கட்சி ருஷ்யாவில் சோஷலிச நிர்மாணத்துக்கு லெனினுடைய திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியது.

**உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கைப் பற்றிய லெனினுடைய தத்துவம்.** லெனின் தன்னுடைய விஞ்ஞான மற்றும் புரட்சிகர வாழ்க்கை நெடுகிலும் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் கேந்திரமான தத்துவார்த்தப் பிரச்சினைகளை ஆராய்ந்தார். ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு இத்துறையில் அவருடைய நடவடிக்கைகள் விசேஷமாகத் தீவிரமடைந்தன. புரட்சியின் தேசிய, சர்வதேச விளைவுகளைப் பகுத்தாராய்ந்த தன் அடிப்படையில் லெனின் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற இன்றைய சகாப்தத்தைப் பற்றிய போதனைக்கு அடிப்படைகளை அமைத்தார்.

சோஷலிச நிர்மாணம், உலகப் புரட்சிகர நிகழ்வுப்

போக்கைப் பற்றி லெனினுடைய தத்துவங்கள் அவருடைய போதனைக்குப் புதிய பண்புகளை அளித்தன. ஆக, லெனினியம் ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் காலகட்டத்தின் மார்க்சியம் மட்டுமன்றி, அது, மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் சகாப்தத்தின் மார்க்சியமாயிற்று.

தேசிய அளவிலும் உலக அளவிலும் எல்லா புரட்சிகர சக்திகளின், பிரதானமாக தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை, உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கைப் பற்றிய லெனினுடைய கருதுகோளின் முக்கியமான அம்சமாகும். லெனின் இக்கடமையை நிறைவேற்றுவதை மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்தின் மெய்யாகவே எல்லா புரட்சிகர சக்திகளின் ஒற்றுமையுடன் இணைத்தார்.

முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளை அமைப்பதில் அக்டோபர் புரட்சி மாபெரும் தாக்கத்தைச் செலுத்தியது, கம்யூனிஸ்ட் அகிலத்தை நிறுவுவதற்கு அவசியமான நிலைமைகளை உருவாக்கியது. 1918இல் ஹங்கேரி, ஜெர்மனி, போலந்து, பின்லாந்து, ஆஸ்திரியா, அர்ஜென்டீனா, ஹாலந்து, கிரீஸ் ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் அமைக்கப்பட்டன. பல நாடுகளில் (இத்தாலி, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா, இதரவை) சோஷலிஸ்ட் கட்சிகளுக்கு உள்ளேயும் வெளியிலும் கம்யூனிஸ்ட் குழுக்கள் தோன்றி வளர்ச்சி அடைந்தன. மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதல் (தொடக்க) காங்கிரசில் (1919 மார்ச்) முப்பது நாடுகளிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிகள், குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

லெனின் நிறுவிய மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலம், சோஷலிசத்துக்கு, பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசப் போராட்டத்துக்கு சித்தாந்த அடிப்படைகளை அமைத்த முத

லாவது அகிலம் மற்றும் அதற்குப் பிந்திய காலகட்டத்தில் தொழிலாளர் இயக்கத்தில் மிகச் சிறந்த மரபுகளின் வாரிசு ஆகும். கம்யூனிஸ்ட் அகிலம் 1919 முதல் 1943 வரை இருந்தது. இக்காலகட்டத்தில் ஏழு காங்கிரசுகள் நடைபெற்றன. 1935இல் நடைபெற்ற கடைசிக் காங்கிரசில் 76 கம்யூனிஸ்ட் கட்சிகள் பங்கெடுத்தன. அவற்றில் 22 மட்டுமே சட்டபூர்வமாக இயங்கிக் கொண்டிருந்தன.

கம்யூனிஸ்ட் அகிலம் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த உழைக்கும் மக்களுக்கு இடையில் பிணைப்புகளை நிறுவி வலுப்படுத்தியது, முதலாவது உலகப் போருக்குப் பிறகு ஏற்பட்ட புதிய நிலைமைகளில் தொழிலாளர் இயக்கம் சம்பந்தப்பட்ட தத்துவார்த்தப் பிரச்சினைகளை ஆராய்ந்தது, கம்யூனிசக் கருத்துகளைப் பரப்புவதைப் பற்றிய கோட்பாடுகளை உருவரையாகக் கொடுத்தது, மார்க்சிய-லெனினியப் போதனையை சந்தர்ப்பவாதிகள் திரித்துக் கூறுவதைத் தடுத்தது, கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமைக்குப் பயிற்சி அளித்தது ஆகிய சாதனைகளில் அதன் வரலாற்று முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. இளம் கம்யூனிஸ்ட் கட்சிகள் வெகுஜனத் தொழிலாளர் கட்சிகளாக மாறுவதற்கு கம்யூனிஸ்ட் அகிலம் வழிவகுத்தது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் செயற்பணியில் லெனினுடைய தத்துவார்த்த மற்றும் செய்முறைப் பங்களிப்பு உண்மையில் பேரளவாக இருந்தது.

உதிரியாக இருந்த எல்லா புரட்சிகரப் பிரிவுகளையும் குழுக்களையும் ஒன்றுசேர்த்து ஏகாதிபத்தியத்தின் மீது தீர்மானகரமான தாக்குதலைத் தொடுக்கின்ற சக்தியுடைய, அமைப்பு ரீதியான புரட்சிகரப் படையை உருவாக்குகின்ற நோக்கத்துடன் லெனின் மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்தை நிறுவினார். பெரும்பான்மையான தொழிலாளர்களைத் தன் தரப்புக்கு வென்றெடுப்பது கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முக்கியமான கடமை, தொழிலாளர்களை தேசிய

அளவிலும் சர்வதேசிய அளவிலும் ஒன்றுசேர்ப்பது ஒரு புரட்சிகரக் கட்சியின் முக்கியமான கடமை என்று லெனின் கருதினார்.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கிற்குள் சோஷலிசப் புரட்சியை ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கத்துடன் இணைக்கின்ற கருத்தை லெனின் முன் வைத்து விரித்துரைத்தார். ஆகவேதான் "உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களினங்களே ஒன்று சேருங்கள்!" என்னும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் கோஷம் ஜீவாதாரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதாக லெனின் கருதினார். லெனினுடைய கருத்துகளைப் பின்பற்றி கம்யூனிஸ்ட் அகிலம் ஏகாதிபத்தியத்துக்கும் காலனியாதிக்கத்துக்கும் எதிரான போராட்டத்தில் புரட்சிகர சக்திகளை ஒன்றுசேர்ப்பதில் அதிகப் பணியாற்றியது.

சமூக-பொருளாதார வளர்ச்சியில் கீழ்மட்டத்தில் இருக்கின்ற நாடுகள் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தைத் தாவிக் கடந்து சோஷலிசத்துக்கு முன்னேறுகின்ற சாத்தியத்தைப் பற்றி லெனினுடைய கருத்து பின்னர் நடைபெற்ற சம்பவங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்கா, ஆசியாவைச் சேர்ந்த பல நாடுகள் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றியிருப்பது தேசிய விடுதலை இயக்கத்தின் தலையான சாதனை என்று கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசக் கூட்டம் (1969) வலியுறுத்தியது. புதிதாக விடுதலையடைந்த தேசிய அரசுகள்பல சோஷலிசத் திசைவழியைப் பின்பற்றுவதை அதிகாரபூர்வமான கொள்கையாகக் கொண்டிருக்கின்றன.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான கூட்டுப் போராட்டத்தில் புரட்சிகர சக்திகளை ஒன்றுசேர்த்தலும் இச்சக்திகளின் இடைச் செயலும் வளர்ச்சியும் வலுப்படுதலும் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கைப் பற்றிய லெனினது கருதுகோளின் அடிப்படை ஆகும். இன்றைய நிலைமைகளில் தே

சிய விடுதலை இயக்கம், உலக சோஷலிச அமைப்பு, முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கம், இதர முற்போக்குச் சக்திகளுக்கு இடையில் மேன்மேலும் உறுதியான பிணைப்புகள் ஏற்படுவதில் இக்கருதுகோள் பிரதிபலிக்கப் படுகிறது.

சமாதானத்தை ஆதரித்து, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு, போர்வெறி மற்றும் யுத்தத்தை எதிர்த்து நடைபெறுகின்ற போராட்டம் லெனினுடைய தத்துவத்திலும் கம்யூனிச இயக்கத்தின் செயல்திட்டத்திலும் விசேஷமான இடத்தைப் பெற்றிருக்கிறது. புதிய உலக யுத்தத்தைத் தடுப்பதற்குரிய வழிமுறைகளைத் தயாரித்தல் இன்று லெனினியத்தில் முக்கியப் பங்காற்றுகிறது.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கைப் பற்றியும் சர்வதேச தொழிலாளர், கம்யூனிஸ்ட் இயக்கங்களின் வளர்ச்சியைப் பற்றியும் லெனினது கருத்துகள் சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் சமாதானம், ஜனநாயகம், சோஷலிசத்துக்கு ஆதரவாகவும் இன்று கம்யூனிஸ்டுகளும் உலகத்தின் முற்போக்குச் சக்திகளும் நடத்துகின்ற போராட்டத்துக்குத் துணை புரிகின்றன.

## லெனினியமும் இன்றைய சகாப்தமும்

**இன்றைய மார்க்சியம் என்ற முறையில் லெனினியம். முதலாளி வர்க்க மற்றும் திருத்தல்வாதக் கருத்தமைப்புகளைப் பற்றிய விமர்சனம்.** லெனினியம் என்ற சொல் லெனின் எழுதிய நூல்களைக் காட்டிலும் அதிகமானவற்றை வழக்கமாகக் குறிக்கிறது. லெனின் மரணமடைந்த பிறகு கடந்த 60க்கு அதிகமான ஆண்டுகளில் பிரம்மாண்டமான, மாற்றப்படவியலாத புரட்சிகர மாற்றங்கள் உலகத்தில் நடைபெற்றிருக்கின்றன.

இன்றைய சகாப்தம் என்பது முதலாளித்துவத்தி

லிருந்து சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் மாறுகின்ற சகாப்தம், இரண்டு உலக சமூக-அரசியல் அமைப்புகளுக்கு இடையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போட்டி நடைபெறுகின்ற சகாப்தம், சோஷலிஸ்ட் மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகளின், ஏகாதிபத்திய வீழ்ச்சியின் சகாப்தம், சமூக வளர்ச்சியின் அடிப்படையான சக்திகள்—உலக சோஷலிசம், தொழிலாளர், கம்யூனிஸ்ட் இயக்கம், புதிதாக விடுதலையடைந்த அரசுகளின் மக்களினங்கள் மற்றும் பெருந்திரளான ஜனநாயக இயக்கம்—ஏகாதிபத்தியத்தையும் அதன் ஆக்கிரமிப்பு, ஒடுக்குமுறைக் கொள்கையையும் எதிர்த்து, சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றுக்கு ஆதரவாக நடத்துகின்ற போராட்டத்தின் சகாப்தமாகும்.

இன்றைய சகாப்தம் புதிய நிகழ்வுகளையும் காரணிகளையும் உருவாக்கியிருப்பதால் லெனினியத்தை மேலும் வளர்ப்பது அவசியமாகிறது. கம்யூனிஸ்ட் கட்சிகளின், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தத்துவார்த்த ஆராய்ச்சி நடவடிக்கை இதைச் செய்கிறது. இன்றைய சகாப்தத்தின் மார்க்சியம் என்ற முறையில் மொத்தத்தில் இது லெனினியத்தின் உள்ளடக்கமாக இருக்கிறது.

புரட்சிகரத் தத்துவம் இல்லாமல் புரட்சிகர நடைமுறை இருக்க முடியாது என்பதை லெனின் உணர்ந்தார். "தத்துவமற்ற நிலை ஒரு புரட்சிகரமான போக்கை வாழ உரிமையற்றதாக ஆக்கி விடுகிறது, விரைவாகவோ தாமதித்தோ அதை அரசியல் திவாலான நிலைக்குத் தவிர்க்க முடியாதபடி தண்டித்து விடுகிறது" என்று அவர் எழுதினார்.*

---

* வி. இ. லெனின், **தொழிலாளர் இயக்கத்தில் வறட்டுச் சூத்திரவாதத்துக்கும் செக்டேரியனிஸத்துக்கும் எதிராக**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1986, பக்கம் 58.

புரட்சிகரத் தத்துவத்தை விரித்துக் கூறுவதிலும் அத்தத் துவத்தைத் தொழிலாளர் இயக்கத்துடன் இணைப்பதிலும் லெனின் அக்கறை கொண்டிருந்தார். ஏனென்றால் வளர்ச் சியடைந்த கருத்துகள் பெருந்திரளான மக்களது உணர் வை எட்டுகின்ற பொழுது மாபெரும் புரட்சிகரமான சக்தி யாக மாறுகின்றன என்று அவர் கருதினார்.

ஆனால் மார்க்சிய-லெனினியத்தின் எதிரிகளும் இதை உணர்ந்திருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் பெருந் திரளான உழைக்கும் மக்கள் மத்தியில் லெனினியத்தை மா சுபடுத்திக் காட்டுவதற்கும் லெனினுடைய புரட்சிகர நடவடிக் கைகளையும் தத்துவார்த்த பாரம்பரியத்தையும் திரித்துக் கூறுவதன் மூலம் சர்வதேசத் தொழிலாளர் மற்றும் கம்யூ னிஸ்ட் இயக்கத்தைச் சித்தாந்த ரீதியில் திசைதிருப்பு வதற்கும் அதிகமாகப் பாடுபடுகிறார்கள்.

உலகம் மிக அதிகமாக மாறி விட்டபடியால் லெனினியம் காலாவதியாகி விட்டது, அது இன்றைய மார்க்சியமாக உதவ முடியாது என்று கம்யூனிச எதிர்ப்புச் சித்தாந்திகளும் பல் வகையான சந்தர்ப்பவாதிகளும் கூறுகிறார்கள். உலகம் மிகவும் மாறியிருப்பது உண்மையே. கம்யூனிஸ்டுகள் இதை அங்கீகரிப்பதுடன் நிற்கவில்லை; அவர்கள் லெனினியத்தை மேலும் வளர்ப்பதற்காக இந்த மாற்றங்களை மார்க்சியக் கோணத்திலிருந்து ஆராய்கிறார்கள். மார்க்சிய-லெனி னியத்தினால் வழிகாட்டப்படுகின்ற புரட்சிகர சக்திகள் இந்த மாற்றங்களுக்கு மிகவும் பொறுப்பாக உள்ளன.

லெனினியம் காலாவதியாக முடியாது, ஏனென்றால் புதிய நிலைமையை மிகவும் ஆழமாக ஆராய்ந்ததன் அடிப் படையில் லெனினியம் செய்த முன்னறிவிப்புகளுக்குத் தக்கபடி உலகம் வளர்ச்சியடைந்து வருகிறது. உலகத்தில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் லெனின் கண்டுபிடித்த சக்தி கள், வரலாற்று நியதிகளுடன் பொருந்துகின்றன. நவீன முதலாளித்துவத்தில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் ஏகாதி

பத்தியத்தின் இயல்பை, அதன் ஆக்கிரமிப்புத் தன்மை அல்லது லெனின் வெளிக்காட்டிய வளர்ச்சியின் பொருளாதார, சமூக-அரசியல் விதிகளைப் பாதிக்கவில்லை. ஆகவே, லெனின் வகுத்தளித்த, பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் பற்றிய விதிகளும் சோஷலிசப் புரட்சியின் மாதிரிகளை ஆள்கின்ற விதிகளும் சோஷலிச நிர்மாண விதிகளும் வடிவ மாற்றங்களுடன் நீடிக்கின்றன. இந்த மாற்றங்கள் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசத் தன்மையை, அதன் வரலாற்றுக் கடமையை பாதிக்கவில்லை. தொழிலாளர் இயக்கத்திற்குள் சந்தர்ப்பவாதத்தை உருவாக்குகின்ற பொருளாதார, சமூகக் காரணிகள் முதலாளித்துவ நாடுகளில் இன்னும் இருக்கின்றன. இக் காரணத்தினால்தான் பாட்டாளி வர்க்கக் கட்சியைப் பற்றி, எகாதிபத்தியத்திற்கு எதிராக, சோஷலிசத்திற்காக நடைபெறும் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகளைப் பற்றி, வலதுசாரி மற்றும் ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டத்தைப் பற்றி, தொழிலாளி வர்க்கத்திலும் கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் ஒற்றுமையை அடைவதற்கான வழிமுறைகளைப் பற்றி லெனினது போதனை என்றும் போல செல்தகைமையைக் கொண்டிருக்கிறது. லெனினியத்தின் அடிப்படையான கருத்துகளில் ஒன்றுகூடக் காலாவதியாகவில்லை என்று உறுதியாகக் கூற முடியும்; ஏனென்றால் லெனினியத்தைத் தோற்றுவித்த நிகழ்வுகள், சக்திகள், வர்க்கங்கள், நிலைமைகள், பொருளாதார, சமூக-அரசியல் விதிகளும் நியதிகளும் இன்னும் இருக்கின்றன, இன்றும் செல்தகைமையைக் கொண்டிருக்கின்றன.

கம்யூனிச எதிர்ப்பு, சந்தர்ப்பவாத, திருத்தல்வாதப் பிரசாரகர்கள் கையாளுகின்ற மற்றொரு முறை லெனினியத்தின் சர்வதேசியத் தன்மையை நிராகரிப்பதாகும். சர்வ

தேச முக்கியத்துவத்தைக் கொண்டிராத ஒரு போதனை இக்காலத்தின் மார்க்சியமாக இருக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. லெனினுடைய போதனை சர்வதேச இயல்பைக் கொண்டிருக்கவில்லை என்பதை நிரூபிப் பதற்கு அவர்கள் லெனினுடைய தத்துவப் பாரம்பரியத்தில் ருஷ்ய நிலைமைகளைப் பற்றிக் கூறுகின்ற பகுதிகளை மட்டுமே வலியுறுத்துகிறார்கள், புரட்சிக்கு முந்திய ருஷ்யா வின் சமூக-பொருளாதாரப் பின்தங்கிய நிலைமையைச் சுட்டிக்காட்டுகிறார்கள். இத்தகைய தவறான படைப்பு களின் மூலம் லெனினியம் ருஷ்யாவின் பின்தங்கிய நிலைமை மற்றும் அதன் பிரத்யேகமான வரலாற்று நிலைமைகளின் உற்பத்தி, அது ஒரு தேசிய நிகழ்வு, சர்வதேச நிகழ்வு அல்ல என்று எடுத்துக்காட்டுவதற்கு அவர்கள் முயல்கிறார்கள். பொருளாதார ரீதியில் பின்தங் கியிருந்த ஒரு நாட்டுக்கு மார்க்சியத்தைக் கையாண்ட திறமை லெனினுடைய பங்களிப்பாக இருக்கிறது, ஆகவே அவருடைய பாரம்பரியம் ஸ்தல அளவில் மட்டுமே முக் கியமானது, அதிலும் கூட பின்தங்கிய நாடுகளுக்கு மட்டு மே உரியது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

முதலாளித்துவ வளர்ச்சியை மேற்கொள்வதில் சார்பு நிலையில் மற்ற நாடுகளுக்குப் பின்னாலிருந்த ருஷ்யா முதலாளித்துவ உற்பத்தி முறையை ஆள்கின்ற அதே சர்வதேச விதிகளுக்கு உட்பட்டிருந்தது என்னும் உண்மை யை இவர்கள் புறக்கணிக்கிறார்கள். ருஷ்யாவின் பிரத்யேக நிலைமைகளும் பின்தங்கிய நிலைமையும் நாட்டில் வே ரூன்றி விட்ட ஏகாதிபத்தியத்தின் சர்வதேச இயல்பின் மீது எத்தகைய தாக்கத்தையும் கொண்டிருக்கவில்லை, நிலப் பிரபுத்துவ எச்சங்களை அதனுடன் சேர்த்தன என்றுதான் சொல்ல வேண்டும். மற்ற முதலாளித்துவ நாடுகளில் இருக் கின்ற அதே விதிகளின்படியே ருஷ்யாவில் பாட்டாளி வர்க்

கம் உருவாயிற்று. அதன் வர்க்கப் போராட்டமும் பொதுவான சர்வதேச விதிகளின்படியே நடைபெற்றது. ஒரே வேறுபாடு என்னவென்றால், நிலப்பிரபுத்துவ எச்சங்களும் இராணுவ நிலப்பிரபுத்துவ எகாதிபத்தியத்தின் கோட்டையான ஜாரிசமும் அதை ஒடுக்கியதே. ருஷ்யா பின்தங்கிய நாடாக இருந்த காரணத்தால் அங்கே லெனினியம் தோன்றியது என்று கூறுவது தவறு; அந்த நாடு உலகப் புரட்சிகர இயக்கத்தின் மையமாக இருந்தபடியால்தான் அங்கே லெனினியம் தோன்றிற்று. அந்த நாடு உலக எகாதிபத்தியத்தின் அடிப்படையான முரண்பாடுகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக, ஆகவே எகாதிபத்தியச் சங்கிலியின் மிகவும் பலவீனமான கண்ணியாக இருந்தது.

லெனின் தன்னுடைய தத்துவார்த்த மற்றும் புரட்சிகர செய்முறை வேலையில் பிரத்யேகமான ருஷ்ய நிலைமைகளை (அவற்றை அவர் எப்பொழுதும் அறிவார்) மட்டும் ஆராயவில்லை, பிரதானமாக எகாதிபத்திய வளர்ச்சிக் கட்டத்தில் முதலாளித்துவத்தின் பொது விதிகளை ஆராய்ந்தார். லெனினியம் ஒருபோதும் தேசிய அல்லது பிராந்தியக் கொள்கையாக இருக்கவில்லை. மனித வரலாற்றின் புதிய கட்டத்தில் வளர்க்கப்பட்ட மார்க்சியத்தின் தொடர்ச்சி அது என்ற உண்மையில் அதன் சர்வதேசியத் தன்மை வெளிப்படுகிறது. அது சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் ஜீவாதாரமான நலன்களையும் விருப்பார்வங்களையும் பிரதிபலிக்கிறது; உழைக்கின்ற மற்றும் ஒடுக்கப்பட்டிருக்கின்ற மக்களினங்களின் வாழ்க்கை மற்றும் புரட்சிகரப் போராட்டத்தின் மிகவும் அவசரமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டுபிடித்து விஞ்ஞான ரீதியாக நிறுவுகிறது.

மார்க்சியத்தின் எதிரிகள் சமீப காலத்தில் ஒரு புதிய வாதத்தை முன்வைக்கிறார்கள். இன்றைய மார்க்சியம் என்ற முறையில் லெனினியத்தின் சர்வதேசத் தன்மையை

அது ஒழிக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஒற்றை மார்க்சியப் போதனை என்பது இனிமேல் கிடையாது, ஏனென்றால் பல மார்க்சிய ரகங்கள் தோன்றியிருக் கின்றன என்னும் கருத்தை அவர்கள் ஓய்வில்லாமல் பரப்புகிறார்கள். ஆகவே மார்க்சியத்தை ஒரு விஞ்ஞான ரீதியான தத்துவமாகக் கருத முடியாது, ஏனென்றால் அது ஒரே பிரச்சினைக்கு பல விளக்கங்களைத் தருகிறது என்று வாதிடப்படுகிறது. இந்த வாதம் லெனினியத்தை மார்க்சியத்தின் பல ரகங்களில் ஒன்றாக எடுத்துக்காட்டு கிறது; இதிலும் லெனினுடைய பாரம்பரியத்துக்கும் மார்க்ஸ், எங்கெல்சுக்கும் இடையிலான உறவு திரித்துக் கூறப்படுகிறது, மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் மெய்மை மறுக்கப்படுகிறது.

பொய் பல முகங்களைக் கொண்டிருக்கிறது; ஆனால் விஞ்ஞான உண்மையின் முகம் ஒன்றே என்பது உண்மை யாகும். இக்காலத்தில் தம்மை மார்க்சிய, லெனினிய அல் லது மார்க்சிய-லெனினிய என்று சொல்லிக் கொள்கின்ற பல போக்குகள் இருக்கின்றன என்பது உண்மையே. ஆனால் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், அவர்களைப் பின்பற்றுபவர்களுடைய போதனையை மட்டுமே உண்மை யாக, விஞ்ஞான மார்க்சியமாக, புரட்சிகர சம்பவங்களால் உண்மை என்று நிரூபிக்கப்பட்ட போதனையாகக் கருத முடியும். மார்க்ஸ், எங்கெல்சின் போதனை மூன்று உட் பகுதிகளைக் கொண்டிருக்கிறது, அவற்றைத் தவறான முறையில் விளக்குவதற்கும் திரித்துக் கூறுவதற்கும் செய்யப்பட்ட பல முயற்சிகளை லெனின் எதிர்த்தார், அவற்றை வளர்த்துக் கூறினார். லெனினை மார்க்சுக்கு எதிராகவும் லெனினியத்தை மார்க்சியத்துக்கு எதிராக வும் நிறுத்துவதற்கு முதலாளிவர்க்க, திருத்தல்வாத சித் தாந்திகள் செய்த முயற்சிகள் விஞ்ஞான ரீதியில் பய

ணற்றவை; ஏனென்றால் வரலாற்று ரீதியிலும் தத்துவ ரீதியிலும் லெனினியம் மார்க்சியத்துக்கு வாரிசாகும். பொதுவாகக் கூறும் பொழுது, மார்க்சியமும் லெனினியமும் நவீன யுகத்தின் மார்க்சியமாகும்; ஏனென்றால் மார்க்ஸ், எங்கெல்சின் அடிப்படையான கருத்துகள் முன்போலவே இன்றும் செல்தகைமையைக் கொண்டிருக்கின்றன.

மார்க்சியத்துக்குப் பல்வேறு விளக்கங்கள் தோன்றியிருப்பது இத்தத்துவத்தைப் பற்றி அதிகமான அக்கறை ஏற்பட்டிருப்பதைக் குறிக்கிறதே தவிர, தத்துவத்தின் நெருக்கடியைக் குறிக்கவில்லை. புரட்சிகர இயக்கத்தில் புதிய கோடிக்கணக்கான மக்கள் ஈர்க்கப்படுகின்ற பொழுது, பொருளாதார, சமூக, வர்க்க, அரசியல் வளர்ச்சியில் ஒன்றுக்கொன்று அதிகமாக வேறுபடுகின்ற, தனித்தன்மையான வரலாற்று மரபுகளைக் கொண்டிருக்கின்ற நாடுகள் சோஷலிச வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றுகின்ற பொழுது, அவர்கள் சோஷலிசக் கருத்துகளை சமமாகவும் ஒரே மாதிரியாகவும் ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது வெகுளித்தனமாகும். எனினும் பல்வேறு நாடுகளில் இலட்சக்கணக்கான மக்கள் விஞ்ஞான சோஷலிசத்தினால் ஈர்க்கப்படுகிறார்கள் என்பது மார்க்சியத்தின் பலமும் செல்வாக்கும் அதிகரித்திருப்பதை நிரூபிக்கிறது.

கம்யூனிசத்தின் எதிரிகள் "மார்க்சியத்தின்" திருத்தல்வாத ரகங்களைத் தாக்காமல் லெனினியத்தைத் தாக்குவதற்குக் காரணமுண்டு. லெனினியத்தை ஒரு பிரதேசத்துக்குரிய தத்துவமென்றோ, மார்க்சியத்தில் ஒரு ரகமென்றோ கருதுவது மார்க்சிய-லெனினியத்தின் சர்வதேச சாராம்சத்தைத் தவறாகப் புரிந்து கொள்வதாகும். புரட்சிகரமான தொழிலாளி வர்க்கத்தின் விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்ட ஒரே உலகக் கண்ணோட்டம் அது.

லெனினால் விரித்துரைக்கப்பட்டு வளப்படுத்தப்பட்ட

மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துகள் நம் காலத்தின் தலைமையான கருத்துகளாகும். தற்பொழுது மார்க்சிய-லெனினியம் மக்களினங்களின் வாழ்க்கையில் முக்கியமான, முற்போக்கான பாத்திரத்தை வகிக்கிறது. புதிய சமூக எதார்த்தங்கள் அதை மேலும் வளர்த்து இக்காலத்துக்குப் பொருந்தும்படிச் செய்கின்றன. பல நாடுகளில் சோஷலிசத்தின் வெற்றி, உலக சோஷலிச அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும், ஏகாதிபத்தியக் காலனியாதிக்க அமைப்பின் தகர்வு, ஏகாதிபத்தியத்தின் பொது நெருக்கடி தீவிரமடைதல், 20ஆம் நூற்றாண்டின் விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சி, கல்வி, கலாசாரத் துறைகளில் ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றம் ஆகியவை மார்க்சிய-லெனினியம் மேலும் வளர்வதற்கு அடிப்படையாக இருக்கின்றன.

**மாபெரும் கம்யூனிசத் தத்துவாசிரியர் என்ற முறையில் லெனின்.** லெனின் 1890க்களில் அரசியல் களத்தில் தோன்றிய காலத்திலிருந்து ருஷ்யத் தொழிலாளர் இயக்கத்தை மட்டுமின்றி, உலகப் புரட்சிகரப் போராட்ட வரலாற்றையும் ஆராய்ந்தார். அவர் ருஷ்ய பாட்டாளி வர்க்கத்தின் தலைவராகவும் அதன் புரட்சிகரக் கட்சியின் ஸ்தாபகராகவும் இருந்தார், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தலைசிறந்த பிரமுகராக இருந்தார், வலதுசாரி, "இடதுசாரி" சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக நடைபெற்ற கடுமையான போராட்டத்துக்குத் தலைமை தாங்கினார். உலக பாட்டாளி வர்க்கத்தின் ஆசான், தலைவர் என்ற முறையில் லெனின் மிகவும் உயர்ந்த மரியாதையைப் பெற்றார்.

லெனின் **"என்ன செய்ய வேண்டும்?"**, **"ஜனநாயகப் புரட்சியில் சமூக-ஜனநாயகத்தின் இரண்டு செயல்தந்திரங்கள்"** ஆகிய நூல்களில் பெரும்பாலும் ருஷ்யத் தொ

ழிலாளி வர்க்க இயக்க அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்தின் அனுபவத்தை ஒப்பிட்டு வர்க்கப் போராட்டம், புரட்சியின் செயல்திட்டம், செயல்தந்திரத்தைப் பற்றிய மார்க்சியப் போதனையை வளர்த்தார். **''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும்'', '' 'இடதுசாரி' கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு''** ஆகிய நூல்களில் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றின் அடிப்படையில் இந்தப் போதனையின் செல்தகைமையை லெனின் நிரூபித்தார்.

ருஷ்யா முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றுவதால் அதன் வளர்ச்சி முதலாளித்துவத்தின் பொது விதிகளுக்கு உட்பட்டது என்பதை லெனின் நிரூபித்தார்; அதே சமயத்தில், ஏகாதிபத்தியம், முதலாளித்துவத்தின் மிக உயர்ந்த கட்டம் என்பதைப் பற்றி மூலச்சிறப்பான நூலை எழுதினார். அந்த நூலில் உலக வளர்ச்சியைப் பற்றிய புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய வரலாற்றுக் கட்டத்தின் பொருளாதார உறவுகளை அவர் வெளிப்படுத்தினார்.

ருஷ்யாவில் நிலவிய விவசாய உறவுகளைப் பற்றி லெனின் ஆழமான அறிவு கொண்டிருந்தார். அவர் மற்ற நாடுகளிலும் இப்பிரச்சினையை ஆராய்ந்தார்; விவசாய உறவுகளைப் பற்றிய தத்துவத்தையும் செயல்திட்டத்தையும் உருவாக்கினார்.

உண்மையான சர்வதேசியவாதியான லெனின் ஜாரிச ருஷ்யாவின் தேசிய இன இயக்கங்களை எதிரிட்ட அவசரப் பிரச்சினைகளை வேகமாகப் புரிந்து கொண்டு செயலாற்றினார். தேசிய ஒடுக்குமுறையை எதிர்க்கின்ற எல்லாப் போராட்ட வடிவங்களையும் அவர் ஆதரித்தார், தேசிய இனப் பிரச்சினையில் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டத்தைத் தயாரித்தார். லெனின் சர்வதேச உறவுகளை ஆராய்ந்து

தேசிய இன மற்றும் காலனியாதிக்கப் பிரச்சினைகளைப் பற்றி எழுதிய நூல்கள் மார்க்சியத்துக்குத் தலைசிறந்த பங்களிப்பாகும்.

லெனினுடைய நூல்கள் மூன்று ருஷ்யப் புரட்சிகள் மற்றும் ருஷ்யாவில் சோஷலிச நிர்மாணத்தின் முதல் ஆண்டுகளின் அனுபவத்தைக் கொண்டிருக்கின்றன. அது தேசிய எல்லைகளைக் கடந்து மாபெரும் சர்வதேச முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது என்பது வெளிப்படை.

லெனின் புதிய சகாப்தத்தின் கடமைகளைக் கருத்தில் கொண்டு உலக விடுதலை இயக்கம் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தின் அனுபவத்தைப் பொழித்துரைத்தார்; பாட்டாளி வர்க்கம் புரட்சிகரமான தத்துவம், புரட்சிகரமான ஸ்தாபனத்தின்—புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சியின்—வழிகாட்டுதலைப் பெற்றால் தன்னுடைய வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முடியும் என்று முடிவு செய்தார். அவர் இந்த இரண்டு கடமைகளையும் மேதாவிலாசத்துடன் நிறைவேற்றினார்.

லெனின் அதே சமயத்தில் உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அனுபவத்தையும் 19ஆம் நூற்றாண்டு, 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தின் முற்போக்கான விஞ்ஞானக் கருத்துகளையும் பொதுமைப்படுத்தினார். இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த சந்தர்ப்பவாதத் தலைவர்கள் முதலாளித்துவம் படிப்படியாக சோஷலிசமாக மாறும் என்று கூறியதுடன் புரட்சிகரப் போராட்டத்தை நிராகரித்தார்கள். லெனின் இவர்களை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் மார்க்சியத் தத்துவம், உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் செயல்திட்டத்தைப் பாதுகாத்தார், மேலும் வளர்த்தார்.

லெனினுடைய நூல்கள் விஞ்ஞான கம்யூனிசத்தை இன்றைய சகாப்தத்துக்குக் கொண்டுவந்தன, அதன்



13—1184

வளர்ச்சியின் இன்றைய கட்டமாக அமைந்துள்ளன என்பதை எடுத்துக்காட்டுவதற்கு சோஷலிசம், கம்யூனிசத்தைப் பற்றிய மார்க்சியத் தத்துவத்துக்கு லெனினுடைய பங்களிப்பைப் பற்றிய இச்சுருக்கமான வர்ணனை கூடப் போதுமானதே.

**மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினுடைய போதனையைப் படைப்பு ரீதியாக வளர்த்தல்.** இன்று கம்யூனிசப் போதனை தத்துவ ரீதியிலும் செய்முறையிலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, இதர சோஷலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் முயற்சிகளால் வளர்க்கப் படுகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் இதர சகோதரக் கட்சிகளும் மார்க்சியத்தின் மூன்று உட்பகுதிகளையும்—தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞான கம்யூனிசம்—மேலும் விரித்துரைப்பதில் தொடர்ச்சியாக அக்கறை காட்டுகின்றன. விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியின் மிகவும் சமீபத்திய சாதனைகள் தத்துவஞான முறையில் பகுத்தாராயப்படுகின்றன, இன்றைய சமூக வளர்ச்சியின் இயக்கவியல் ஆராயப்படுகிறது. சோஷலிசத்தின் அரசியல் பொருளாதாரம் மேலும் விரித்துரைக்கப்படுகிறது, அரசு-ஏகபோக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முரண்பாடுகளும் புதிய நிகழ்வுகளும் ஆராயப்படுகின்றன.

சோஷலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் சோஷலிச சமூகத்தை இயக்குகின்ற அடிப்படையான விதிகளையும் இயக்குச் சக்திகளையும் ஆராய்வதில் தலைமையான பங்களிப்புச் செய்கின்றன. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டம், சோஷலிச சமூகத்தின் பொருளாதார, கலாசார வளர்ச்சி, வர்க்கக்

கட்டமைப்பில் மாற்றங்கள், வர்க்க வேறுபாடுகளை ஒழிப்பதற்குரிய வழிமுறைகள், தொழிலாளி வர்க்கம், அதன் கட்சியின் பாத்திரம், சோஷலிசத்தை நிர்மாணித்து அபிவிருத்தி செய்கின்ற போக்கில் சோஷலிச அரசு, ஜன நாயகம் ஆகியவை பற்றிய மார்க்சிய-லெனினியக் கருத்த மைப்புகளை அவை வளர்க்கின்றன, ஸ்தூலப்படுத்து கின்றன.

கம்யூனிஸ்ட் இயக்கம் மார்க்சிய-லெனினியப் பதாகை யின் கீழ் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது, புதிய வெற்றிகளை ஈட்டிக் கொண்டிருக்கிறது. உலகத்தின் மூன்றிலொரு பகுதியில் வசிக்கின்ற இலட்சக்கணக் கான மக்களுக்கு சோஷலிசம் ஒரு வாழ்க்கை முறையாக இருக்கிறது. அது லெனினது தாய்நாட்டில், ருஷ்யாவில் முதலில் வெற்றி பெற்றது, ஆனால் இப்பொழுது பல நாடு களிலும் இருக்கிறது. சோஷலிசப் புரட்சியின் வெற்றி, சோஷலிச நிர்மாணத்தின் நியதிகளைப் பற்றிய லெனி னியக் கருத்துகள் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடு களிலும் வளர்முக நாடுகளிலும் மேன்மேலும் அதிக மான எண்ணிக்கையுள்ள, அரசியல் ரீதியில் வளர்ச்சி யடைந்த தொழிலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படு கின்றன.

லெனினியம் திருத்தல்வாதத்தையும் அதைப் போன்ற மற்ற அரசியல் போக்குகளையும் உறுதியாக எதிர்க்கிறது. அதே சமயத்தில் தத்துவார்த்த சிந்தனையில் தேக்கம் லெனினிய முறையியலுடன் பொருந்தாது. மார்க் சிய-லெனினியம் வறட்டு கோட்பாட்டுப் போதனை அல்ல; எனினும் அதை மேலும் வளர்க்கின்ற பெயரால் பல்வேறு சித்தாந்த அமைப்புகளைக் கொண்டு (முதலாளித்துவ மித வாத மற்றும் திருத்தல்வாதக் கருத்தமைப்புகள் உள்பட)

ஒட்டு வேலை செய்கின்ற எல்லா முயற்சிகளும் மிகவும் ஆபத்தானவை.

உலகத்தில் எல்லா நிகழ்வுகளையும் பற்றி முழுமையான, இறுதி நிலையான அறிவைப் பெற்றிருப்பதாக அல்லது உருப்போட்டு ஒப்பிப்பதற்கும் கையாளுவதற்கும் சுலபமான தனிமுதலான உண்மைகள் எல்லாவற்றையும் வைத்திருப்பதாக மார்க்சிய-லெனினியம் சொல்லிக் கொள்ளவில்லை. மார்க்சிய-லெனினியம் வாழ்கின்ற, வளர்ச்சியடைகின்ற போதனை. அதன் பலமும் உலக வரலாறு, மனிதகுல முன்னேற்றத்தின் மீது அதன் மாபெரும் தாக்கமும் அதன் கறாரான விஞ்ஞானத் தன்மையில் அடங்கியிருக்கின்றன; தத்துவக் கருத்துகளை சமூக எதார்த்தத்துடன் தொடர்ச்சியாகப் பொருத்துவதில், நிகழ்காலத்தைப் பற்றிச் சரியான பகுப்பாய்வில், எதார்த்த வாழ்க்கையைப் பற்றி உண்மைமான அறிவை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தை முன்னறிவிப்பதில் அடங்கியிருக்கின்றன.

அத்தியாயம் ஆறு

# சோஷலிசப் புரட்சியும் சோஷலிச நிர்மாணமும்

## புதிய ரகத்தைச் சேர்ந்த சமூகப் புரட்சி என்ற முறையில் சோஷலிசப் புரட்சி

**முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற விதி என்ற முறையில் சோஷலிசப் புரட்சி.** முதலாளித் துவம் வளர்ச்சியடைகின்ற பொழுது தன்னுடைய தகர் வுக்குரிய நிலைமைகளையும் சோஷலிச நிர்மாணத்துக்கு இன்றியமையாத முன்தேவைகளையும் படைக்கிறது. ''கம்யூனிசமானது முதலாளித்துவத்திலிருந்து **தோன்றுவ தாகும்,** வரலாற்று வழியில் முதலாளித்துவத்திலிருந்து வளர்வதாகும், முதலாளித்துவம் **பெற்றெடுத்த** ஒரு சமு தாய சக்தியின் செயலால் விளைந்த பலனாகும்...'' என்று லெனின் எழுதினார்.* சமூகம் முதலாளித்துவத் திலிருந்து கம்யூனிசத்தின் முதல் கட்டத்துக்கு, அதாவது சோஷலிசத்துக்கு முன்னேறுகிறது.

முதலாளித்துவத்தின் தகர்வு பின்வரும் காரணங் களால் தவிர்க்க முடியாததாகும்: அ) தனியார் முத லாளித்துவ உடைமையை அடிப்படையாகக் கொண்ட அதன் உற்பத்தி உறவுகள் சமூகத் தன்மையைப் பெற்று விட்ட உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் தடை செய்கின்றன;

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** தொகுதி 6, பக்கம் 130.

ஆ) முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சி சமூகத்தின் ஒரு முனையில் மூலதனக் குவிப்புக்கும், செல்வம் குவிவதற்கும் எதிர்முனையில் வேலையின்மை, துன்பம், உழைக்கும் மக்களின் நிலைமை நலிவதற்கும் இட்டுச் செல்கிறது; இ) முதலாளித்துவ உற்பத்தி அதிகரிக்கின்ற பொழுது கூலியுழைப்புக்கும் மூலதனத்துக்கும், உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் அதன் அமைப்பின் தனியார் முதலாளித்துவ வடிவத்துக்கும் வளர்ச்சியடைந்த உற்பத்திச் சக்திகளுக்கும் காலாவதியான உற்பத்தி உறவுகளுக்கும், உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையில் அதன் எல்லா உள்ளுறையான பகையியல் முரண்பாடுகளும் மேன் மேலும் தீவிரமடைகின்றன; ஈ) முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பகையியல் முரண்பாடுகள் தீவிரமடைதல் முதலாளித்துவ சமூகத்தின் மற்ற எல்லா பகை முரண்பாடுகளையும்—சமூக வர்க்க, சமூக அரசியல், சித்தாந்த முரண்நிலைகளையும்—தீவிரப்படுத்தி, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் வர்க்கப் போராட்டம் வளர்ச்சியடைந்து தீவிரமடையும்படி செய்கிறது.

முதலாளித்துவம் தானே ஏற்படுத்திய பகையியல் முரண்பாடுகளைத் தீர்க்க முடியவில்லை. அவை காலப் போக்கில் திரண்டு தீவிரமடைந்து முதலாளித்துவ சமூகத்தில் ஆழமான நெருக்கடியை ஏற்படுத்துகின்றன. முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிசத்தை ஏற்படுத்துவதே இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஒரே வழியாகும்.

முதலாளித்துவம் தன்னுடைய வளர்ச்சியின் போது இந்த மாற்றத்தை ஆள்கின்ற பின்வரும் காரணிகளை உருவாக்குகிறது: அ) முதலாளித்துவத்தினால் படைக்கப்பட்ட உற்பத்திச் சக்திகள் சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்குரிய பொருளாயத, தொழில்நுட்ப அடிப்படையாக மாறுகின்றன; ஆ) முதலாளித்துவ விஞ்ஞானம், தொழில் நுட்பவியல், கலாசாரத்தின் சாதனைகள் சோஷலிச சமூ

கத்துக்குப் பயன்படுகின்றன; இ) வங்கிகள், நிதிகள், பண்ட-பணச் செலாவணி கணக்கிடுதல், வினியோகம் ஆகிய முதலாளித்துவ அரசு அமைப்புகள் திருத்தியமைத்தலுக்குப் பிறகு சோஷலிசத்துக்குச் சேவை செய்கின்றன; ஈ) சோஷலிசப் பொருளாதாரத்தை நிறுவுவதற்கு அவசியமான தொழில் நிபுணர்களும் அலுவலர்களும் முதலாளித்துவத்தால் விட்டுச் செல்லப்படுகிறார்கள்.

உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைகின்ற பொழுது பாட்டாளி வர்க்கம் எண்ணிக்கையில் அதிகரிப்பதுடன் குண ரீதியிலும் மாற்றமடைகிறது. சோஷலிசத்திற்கு மாறுவதற்கு அப்பாட்டாளி வர்க்கம் முக்கியமான முன்தேவையாகும். முதலாளித்துவ சமூகம் சராசரி வளர்ச்சி மட்டத்தை அடைந்ததும் பாட்டாளி வர்க்கம் சோஷலிச மாற்றத்தைச் சாதிக்கக் கூடிய சக்தியாக மாறுகிறது. இந்தக் கட்டத்தில் முதலாளித்துவத்தை எதிர்த்தும் சோஷலிசத்தை ஆதரித்தும் நடைபெறுகின்ற போராட்டத்தில் மார்க்சிய-லெனினியம் அதன் சித்தாந்த வழிகாட்டியாகிறது. பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் தொழிற்சங்கங்களையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் தோற்றுவிக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி தன்னியல்பான தொழிலாளர் இயக்கத்தை விஞ்ஞான கம்யூனிசத்துடன் இணைக்கிறது. ஆக, ஒரு சித்தாந்தம் முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிசத்தைப் படைக்கின்ற பொருளாயத சக்தியாக மாறுகிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் உலக பாட்டாளிகளை வர்க்க ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட பிரம்மாண்டமான இராணுவமாக மாற்றுகிறது, பாட்டாளி வர்க்க அணியினரது ஒற்றுமையை உறுதிப்படுத்துகிறது.

முதலாளித்துவ சமூகத்தின் நெருக்கடி எவ்வளவு ஆழமாக இருந்தாலும் முதலாளித்துவம் தன்னியல்பாக, அதா

வது தன்னாலே தகர்ந்து விடாது. முதலாளிகள் தாம் அனுபவிக்கின்ற விசேஷ உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சாத்தியமான எல்லா வழிகளையும் பயன் படுத்துகிறார்கள்: அரசு அதிகாரம், அதன் அடக்குமுறைப் பொறியமைவு, சித்தாந்த ரீதியில் மூளைச்சலவை செய்யப் பட்டுள்ள இராணுவம், முதலாளித்துவ சித்தாந்தத்தின் ஆதரவாளர்கள், குற்றவாளிகள் கூட, திருச்சபை, தொழி லாளர் அதிகார வர்க்கம் இதரவை இவற்றில் அடங்கும், இத்தகைய நிலைமை முதலாளித்துவம் சோஷலிசமாகப் பரிணாம வளர்ச்சியடைவதை, அதாவது சோஷலிசப் புரட்சி இல்லாமலே சோஷலிசம் ஏற்படுவதைத் தடுக்கிறது. முத லாளித்துவ அமைப்புக்கு பதிலாக சோஷலிச அமைப்பு புரட்சியின் மூலமாக மட்டுமே ஏற்பட முடியும்.

சோஷலிசப் புரட்சி என்பது ஒரு சதித்திட்டமல்ல. அது கலகக்காரர்களடங்கிய குழுவின் திடீர்ப்புரட்சி அல்ல; அது மார்க்சிய-லெனினியக் கட்சியின் வழிகாட்டுதலில், தொழி லாளி வர்க்கத்தின் தலைமையில் இலட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் நடத்துகின்ற இயக்கம், போராட்டம்.

புரட்சிகரமான வர்க்கப் போராட்டத் தத்துவத்துக்கு பதி லாக பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் வர்க்க ஒத்துழைப்பைப் போதிப்பதற்கு வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் செய்த முயற்சிகளை விஞ்ஞான கம்யூ னிசத்தின் ஸ்தாபகர்கள் வன்மையாக எதிர்த்தார்கள்; முத லாளித்துவம் சமாதான ரீதியில் சோஷலிசமாக மாறும், முதலாளித்துவத்தின் சமூக-பொருளாதார அடிப்படை களைத் தக்க வைத்துக் கொண்டே அதன் அடிப்படையான தீமைகளைக் களைய முடியும் என்ற சீர்திருத்தவாதக் கருத்துகளை அவர்கள் அம்பலப்படுத்தினார்கள். அதே சமயத்தில் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் குட்டி முதலாளி வர்க்க "இடதுசாரி" சந்தர்ப்பவாதிகள், குறுங்குழுவாதி

களின் துர்ச்சாகச செயல்தந்திரத்தையும் போலிப் புரட்சிகரப் பேச்சுக்களையும் விமர்சனம் செய்தார்கள். எதார்த்த நிலைமையைப் பகுத்தாராயாமல் புரட்சியைத் தூண்டு வதற்குச் செய்கின்ற முயற்சிகளைப் பற்றி மார்க்சிய-லெனி னிய நூல்கள் எச்சரிக்கை செய்தன, "தீவிரமான சமூகப் புரட்சி பொருளாதார வளர்ச்சியின் திட்டவட்டமான வரலாற்று நிலைமைகளுடன் இணைந்திருக்கிறது"* என்று சுட்டிக்காட்டின.

**"இடதுசாரி" கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு** என்னும் நூலில் சமூகப் புரட்சிகளை உத்தரவு மூலம் நிறைவேற்ற முடியாது அல்லது ஒரு நாட்டிலிருந்து மற் றொரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது என்பதை லெனின் விளக்கினார். ஒரு குறிப்பிட்ட நாட்டின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்கில், தேசிய மற்றும் சர்வதேச முரண்பாடுகள் தீவிரமடைவதன் விளைவாக சமூகப் புரட்சி கள் வெடிக்கின்றன; புரட்சிகர நிலைமை நிலவுகின்ற பொழுது, அவசியமான புறவய, அகவயக் காரணிகள் இருக்கின்ற பொழுது அவை ஏற்படுகின்றன.

புரட்சியை ஏற்றுமதி செய்வதை மார்க்சிய-லெனினியக் கட்சிகள் எப்பொழுதுமே எதிர்த்து வந்திருக்கின்றன; ஏனென்றால் ஒவ்வொரு புரட்சியும் உலகு தழுவிய சோஷ லிசப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் ஒரு பகுதியாக இருப் பதுடன் அந்த நாட்டின் தொழிலாளி வர்க்கத்தாலும் பெருந்திரளான உழைக்கும் மக்களினாலும் தனியாக நிறைவேற்றப்படுகிறது. அதே சமயத்தில் மார்க்சிய-லெனி னியக் கட்சிகள் ஏகாதிபத்தியம் எதிர்ப்புரட்சியை ஏற்று மதி செய்வதை எதிர்க்கின்றன, மற்ற நாடுகளின் விவ

* K. Marx, F. Engels, *Selected Works* in three volumes, vol. 2, Moscow, Progress Publishers, 1976, p. 411.

காரங்களில் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டை உறுதியாக எதிர்க்கின்றன.

கம்யூனிச எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்புச் சித்தாந்திகள் வெற்றிகரமான சோஷலிசப் புரட்சிகளை வரலாற்று ரீதியான தவறுகளாக, வரலாற்றின் தற்செயலான நிகழ்வுகளாக, வரலாற்றின் வாடிக்கையான போக்கிலிருந்து திரிபுகளாகக் காட்டுவதற்கு முயற்சி செய்கிறார்கள். புதிய பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் தர்க்க ரீதியானவை, தவிர்க்க முடியாதவை என்பதை அவர்கள் மறுக்கிறார்கள். இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சி பொதுவில் சமூகப் புரட்சியின், குறிப்பாக சோஷலிசப் புரட்சியின் அவசியத்தை ஒழித்து விட்டது என்று நிரூபிப்பதற்கு ஏகாதிபத்திய தொழில்நுட்பவியல் கருத்தமைப்புகளின் ஆதரவாளர்கள் முயல்கிறார்கள். விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சி புதிய "தொழில்நுட்ப" நாகரிகத்தைப் படைப்பதாகவும் அது முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் இடையிலான எதிர்நிலைகளை ஒழித்து விடுமென்றும் அவர்கள் கூறுகிறார்கள். திருத்தல்வாதிகள் விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியின் தானியக்க விளைவாக சோஷலிசத்தைக் கருதுகிறார்கள்; ஆக, சோஷலிசப் புரட்சியின் மூலமாக இல்லாமல் "அபிவிருத்தியடைந்த" முதலாளித்துவத்தின் மூலமாக சோஷலிசத்தைச் சாதிக்க முடியும் என்று வலியுறுத்துகிறார்கள்.

**சோஷலிசப் புரட்சியின் அடிப்படைப் பிரச்சினை.** அரசு அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினை ஒவ்வொரு புரட்சிக்கும் அடிப்படையாகும். சோஷலிசப் புரட்சி வரலாற்றில் கடைசிச் சுரண்டல் வர்க்கமாகிய முதலாளி வர்க்கத்திடமிருந்து அதிகாரத்தைப் பறிக்கிறது. முதலாளி வர்க்கம் ஒருபோதும் தன்னுடைய அதிகாரத்தை விருப்ப பூர்வமாகக் கைவிடாது.

தொழிலாளி வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஏகபோக மூலதனத்தின் அதிகாரத்தைத் தூக்கியெறிந்து தொழி லாளி வர்க்கத்தின் அதிகாரத்தை நிறுவுவதன் மூலம் புரட்சியின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கின்றன. புரட் சியையும் அதன் சாதனைகளையும் பாதுகாப்பதற்கு, முத லாளி வர்க்கம் எதிர்ப்பதை ஒழிப்பதற்கு, முத லாளித்துவத்தை வேரோடு ஒழிப்பதற்கு, சோஷலிச சமூ கத்தை நிர்மாணிப்பதற்கு இது அவசியம்.

சோஷலிசத்துக்கு சமாதான ரீதியாக மாறுகின்ற பொ ழுது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் அல்லது வேறு வார்த் தைகளில் சொல்வதென்றால் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஆட்சி அவசியமல்ல; பாட்டாளி வர்க்கம் ஆயுத மேந்திய எழுச்சி, உள்நாட்டுப் போர், கொரில்லா யுத்தம், இதரவற்றின் மூலம் ஆட்சியதிகாரத்தைப் பெறுகின்ற பொ ழுது மட்டுமே அது அவசியம் என்று சில சமயங்களில் தவ றான முறையில் சொல்லப்படுகிறது. பாட்டாளி வர்க்கச் சர் வாதிகாரம் ஜனநாயகத்தை தவிர்க்க முடியாத முறையில் கட்டுப்படுத்துவதாக இந்த அணுகுமுறை கருதுகிறது. முத லாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற பொ ழுது ஜனநாயகத்தின் மீது விதிக்கப்படுகின்ற எவ்விதமான கட்டுப்பாடும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் உள் ளுறையான அம்சம் அல்ல, ஆனால் வர்க்கப் போராட்டம் தீவிரமடைவதின், தூக்கியெறியப்பட்ட முதலாளி வர்க்கம் உள்நாட்டுப் போரைத் தொடங்குவதின், அதன் எதிர்ப் புரட்சி நடவடிக்கைகள் மற்றும் கவிழ்ப்பு வேலையின் விளைவு ஆகும். சமூக வர்க்க சாராம்சத்தில் தொழிலாளி வர்க்க ஆட்சியதிகாரம் உழைக்கும் மக்களுக்கு, அதாவது பெரும்பான்மையினருக்கு ஜனநாயகத்தை அளிப்பதை, சுரண்டும் வர்க்கம் மற்றும் அதன் கூட்டாளிகளின் எதிர்ப் பை நசுக்குகின்ற கருவியைக் குறிக்கிறது.

சோஷலிசத்துக்கு சமாதான ரீதியாக மாறுதல், ஆயுத மேந்திப் புரட்சி செய்து மாறுதல் ஆகிய இரண்டு சந்தர்ப் பங்களிலும் அத்தகைய அதிகாரம் இன்றியமையாத நிபந் தனை ஆகும். சோஷலிசப் புரட்சிகளின் நேரடியான விளை வாக அல்லது அந்தப் போராட்டங்களின் மாறும் கட்டத்தின் போது முதலாளித்துவமல்லாத வளர்ச்சிப் பாதையின் சுற்றுவட்டத்திற்குள் அல்லது எல்லா ரகங்களையும் வடி வங்களையும் சேர்ந்த ஜனநாயகப் புரட்சிகள் சோஷலிசப் புரட்சிகளாக வளர்ச்சியடைகின்ற பொழுது அதை நிறுவ முடியும் என்பதை வரலாற்று அனுபவம் எடுத்துக்காட்டு கிறது.

தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை நிறுவு வதற்கு அரசு அதிகாரப் பொறியமைவு தகர்ந்து விழ வேண்டும். இது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கிறது: அ) முதலாளி வர்க்கத்தை ஆட்சியிலிருந்து அகற்றுதல், முதலாளித்துவ அரசாங்கத்தையும் அதன் அதிகார வர்க்க இயந்திரத்தையும் ஒழித்தல்; ஆ) பழைய இராணுவத்தைக் கலைத்தல், இராணுவ போலீஸ் மற்றும் இராணுவ அதிகார வர்க்க இயந்திரத்தைக் கலைத்தல்; இ) வர்க்கச் செயல் முறையை மாற்றுதல், வங்கிமுறை, கணக்கிடுதல், பொரு ளாதார நிர்வாகம், இதர முதலாளித்துவ நிறுவனங்களை புரட்சி மற்றும் சோஷலிச நிர்மாணத்தின் அவசியங் களுக்குத் தக்கபடி திருத்தியமைத்துத் தகவமைத்துக் கொள்ளுதல்.

முதலாளித்துவ அரசு அதிகாரப் பொறியமைவை ஒழித் தலின் அவசியம் அதை எப்படிச் செய்ய வேண்டும் என் னும் வழிமுறைகளை முன்நிர்ணயம் செய்வதில்லை. அவை குறிப்பிட்ட நாட்டில் சோஷலிசப் புரட்சியின் வடி வத்தைப் பொறுத்துள்ளன.

**சோஷலிசப் புரட்சியின் வடிவங்கள்.** சோஷலிசப் புரட்சியின் சமாதான ரீதியான அல்லது ஆயுதமேந்திய வடிவங்களைப் பற்றிய மார்க்சிய-லெனினியப் போதனையின் செல்தகைமையை வரலாற்று அனுபவம் நிரூபித்திருக்கிறது. இரண்டு வடிவங்களும் பின்னிப் பிணைந்திருக்கின்றன; சில சமயங்களில் ஒன்று மற்றொன்றாக வளர்ச்சி அடைகிறது. ருஷ்யாவில் அக்டோபர் புரட்சியிலும் மத்திய ஐரோப்பா மற்றும் தென் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த நாடுகளில் மக்கள் ஜனநாயகப் புரட்சிகளிலும் கியூபாவில் நடைபெற்ற புரட்சியிலும் சமாதான ரீதியான, சமாதானமல்லாத போராட்டத்தங்களில் பெற்ற அனுபவம் தலைமையான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

பாட்டாளி வர்க்கம் ஆயுதமேந்திய சண்டைகளில் ஈடுபடாமல் சமாதான முறையில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு நடத்துகின்ற போராட்டம்—அதில் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ நாடாளுமன்ற நிறுவனங்களை உபயோகித்துக் கொள்கிறது—மேலெழுந்தவாரியான நாடாளுமன்ற நடவடிக்கைகளுடன் அல்லது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவதற்கு வழக்கமாக நடைபெறுகின்ற போராட்டத்துடன் எத்தகைய ஒற்றுமையையும் கொண்டிருக்கவில்லை. முதலாளி வர்க்கத்தின் ஆயுதமேந்திய எதிர்ப்பு தடுக்கப்பட்ட பொழுது, இராணுவம் முதலாளி வர்க்கத்தை ஆதரிக்க மறுக்கின்ற பொழுது சமாதான ரீதியான புரட்சியைச் சாதிக்க முடியும். மேற்கூறிய உதாரணத்தில் முதலாளி வர்க்கம் தானாகவே ஆட்சியதிகாரத்தைக் கைவிடுவதைத் தவிர வேறு வழியில்லை.

நிலைமை எப்படியிருந்தாலும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இந்த இரண்டு வடிவங்களில் ஏதாவதொன்றை மட்டுமே உபயோகிப்போம் என்று முன்கூட்டியே உறுதியளிக்க இயலாது. “ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் ஸ்தூலமான நிலைமையை அதன் வளர்ச்சியின் குறிப்பிட்ட

கட்டத்தில் வைத்து ஒரு விபரமான பரிசீலனை செய்யாமல், ஒரு குறிப்பிட்ட போராட்ட முறையைப் பயன்படுத்த வேண்டும் என்கிற கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என்று விடையளிக்க முயல்வது மார்க்சிய நிலையை முற்றாகக் கை விடுவதாகும்'' என்று லெனின் இதைப் பற்றி எழுதினார். *

கம்யூனிஸ்டுகள் இராணுவ சதித்திட்டங்களையும் வன் முறையான போராட்ட முறைகளையும் மட்டுமே ஆதரிப்ப வர்கள் என்று கம்யூனிச எதிர்ப்பாளர்கள் சித்திரிக் கிறார்கள். அவர்கள் சோஷலிசப் புரட்சிகளை ஆயுதமேந்திய எழுச்சிகள், உள்நாட்டுப் போர், இரத்தக்களறியுடன் இனங் காணுகிறார்கள். கம்யூனிஸ்டுகள் இத்தகைய அவதூறுகளை உறுதியாக மறுக்கிறார்கள். அவர்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினுடைய போதனைகளைப் பின்பற்றுகிறார்கள், சோஷ லிசப் புரட்சியை நிறைவேற்றுவதற்கும் தொழிலாளி வர்க் கத்தின் அதிகாரத்தை நிறுவுவதற்கும் குறைவான சேதமேற்படுத்துகின்ற, சார்பு நிலையில் சமாதான முறையி லான வடிவங்களை ஆதரிக்கிறார்கள். ஆனால் போராட்ட வடிவங்கள் முற்றிலும் அவர்களுடைய விருப்பத்தின்படி தேர்ந்தெடுக்கப்படுகின்ற விவகாரம் அல்ல. எதிர்க்கின்ற வர்க்கங்களுக்கு இடையில் சக்திகளின் பொருத்தம், புரட் சிக்கு முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பின் வடிவம், அளவி னால் அது நிர்ணயிக்கப்படுகிறது. ருஷ்யாவின் கம்யூனிஸ்டு களும் சோஷலிசப் புரட்சிகள் நடைபெற்றிருக்கின்ற மற்ற நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளைப் போல சமாதான ரீதியான புரட்சிப் பாதையைப் பின்பற்றுவதற்கு எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தினார்கள். அதே சமயத்தில்

---

* வி. இ. லெனின், **தொழிலாளர் இயக்கத்தில் வறட்டுச் சூத்திரவாதத் துக்கும் செக்டேரியனிஸத்துக்கும் எதிராக,** பக்கம் 75.

கம்யூனிஸ்டுகள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தில் எந்தவொரு வடிவத்துக்கும் முன்னுரிமை கொடுக்கவில்லை, சோஷலிசப் புரட்சியில் குறிப்பிட்ட ஒரு வழியைத்தான் பின்பற்றுவோம் என்று முன்னதாகவே தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதில்லை.

நவீன சகாப்தத்தில் சோஷலிசத்திற்கு மாறும் வடிவங்கள் பல உள்ளன. இவற்றில் ஒன்றுதான் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையாகும். இப்பாதைக்கு வரும் நாடுகள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கணிசமான கட்டத்தைக் கடக்க வேண்டும். காலனியாட்சி முறைகளை ஒழித்துக் கட்டுவது, காலனியாதிக்கம் விட்டுச் சென்றவற்றிலிருந்து மீள்வது, முழு சுதந்திரம் பெறுவது என்பதுதான் தேசிய விடுதலை இயக்கத்தின் இறுதி இலட்சியமாகும்.

ஆட்சியைப் பற்றிய பிரச்சினைதான் புரட்சியின் அடிப்படைப் பிரச்சினையாகும். சோஷலிசப் புரட்சி பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்கிறது என்றால், தேசிய-ஜனநாயகப் புரட்சி பெரும்பாலும் குட்டி முதலாளி வர்க்க, அரைப் பாட்டாளி வர்க்கப் பிரிவினரை, ஒருசில சந்தர்ப்பங்களில், உருவாகி வரும் தொழிலாளி வர்க்கத்தின் பக்கம் சாயும் பிரிவுகளை ஆட்சியில் அமர்த்துகிறது. சோஷலிச சமூக மாற்றத்திற்கான சமூக-பொருளாதார நிலைமைகளைத் தோற்றுவிப்பதும் இதற்கான அரசியல் சக்திகளை வளர்ப்பதும்தான் தேசிய-ஜனநாயகப் புரட்சியின் செயல்திட்டக் கடமையாகும்.

இளம் விடுதலையடைந்த அரசுகளின் சமூக-பொருளாதார வளர்ச்சி நவீன தொழிலாளி வர்க்கம் உருவாகவும் அதன் எண்ணிக்கை அதிகரிப்பிற்கும் இட்டுச் செல்கிறது. சமூக வர்க்க சக்திகளின் மறு அணிதிரட்டல் தவிர்க்க இயலாது நடைபெறுகிறது. தொழிலாளி வர்க்கமும் அதன்

மார்க்சிய-லெனினியக் கட்சியும் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் தலைமையை ஏற்கின்றன. இச்சூழ்நிலைகளில் தேசிய-ஜனநாயகப் புரட்சி சோஷலிசப் புரட்சியாக வளருகிறது, இது முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையின் திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைகளுக்கேற்ற வடிவங்களில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் ஏற்படத் தவிர்க்க இயலாது இட்டுச் செல்கிறது.

### முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் கால கட்டம்—சோஷலிசப் புரட்சியின் தொடர்ச்சியும் முடிவு நிலையும்

**மாறும் காலகட்டத்தில் வர்க்கப் போராட்டம்.** கம்யூனிச சமூக அமைப்பு தோன்றி வளர்ச்சியடைகின்ற பொழுது மூன்று அடிப்படையான கட்டங்களைக் கடந்து வருகிறது: அ) முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் கால கட்டம்; ஆ) சோஷலிசம்—கம்யூனிச அமைப்பின் முதல் கட்டம்; இ) முழு கம்யூனிசம், அதன் மிக உயர்ந்த கட்டம்.

மாறும் காலகட்டத்தின் போது சோஷலிசம் (முழுமையான கம்யூனிசம் அல்ல) அமைக்கப்படுகிறது. கம்யூனிச சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி என்னும் பொதுச் சங்கிலியில் மாறும் காலகட்டத்தின் இடத்தை இது நிர்ணயிக்கிறது.

முதலாளித்துவத்தின் நிலைமறுப்பாகிய சோஷலிசத்துக்கு விஞ்ஞான கம்யூனிசத்தின் அடிப்படையில் முதலாளித்துவ சமூகத்தின் எல்லாத் துறைகளையும் புரட்சிகரமான முறையில் மாற்றியமைப்பதென்று பொருளாகும். சோஷலிசப் புரட்சி முந்திய சமூகப் புரட்சிகளைப் போன்றதல்ல, அது அரசியல் புரட்சியுடன் நின்று விடாது. அது அரசியல் புரட்சியில் ஆரம்பமாகிறது, பிரதானமாக சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்டவுடன் அது பூர்த்தியடைகிறது.

இத்தகைய மகத்தான கடமையை வர்க்கப் போராட்டத்தின் நிலைமைகளில் மட்டுமே நிறைவேற்ற முடியும்; ஏனென்றால் அதிகாரம் பறிக்கப்பட்ட முதலாளி வர்க்கம் எல்லா சோஷலிச மாற்றங்களையும் மூர்க்கமாக எதிர்க்கிறது.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் முதலாளி வர்க்கம் இன்னும் பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிலும் வலிமையாக இருக்கிறது; ஏனென்றால் அதனிடம் பணம், சில உற்பத்திச் சாதனங்கள், பரந்த பொது உறவுகளின் அமைப்பு இருக்கிறது. அரசு, இராணுவ மற்றும் பொருளாதார இயந்திரத்தை நிர்வகிப்பதில் அதன் திறமை அதனிடமுள்ள மற்றொரு சாதகமாகும்.

கீழே இறக்கப்பட்ட முதலாளி வர்க்கத்திடமிருந்து அதன் சலுகைகளையும் சாதகங்களையும் உடனடியாகப் பறித்து விட முடியாது. அதன் பலத்தின் மூல ஊற்றுகளைப் படிப்படியாக அழிக்கின்ற விடாப்பிடியான போராட்டத்தின் மூலமாக மட்டுமே இதைச் செய்ய முடியும். முதலாளி வர்க்கத்தை அதிகாரத்திலிருந்து இறக்கியவுடன் மறுபடியும் முதலாளித்துவத்தைக் கொண்டு வருவதற்கான திட்டங்களை அது வேகமாகத் தயாரிக்கிறது. சோஷலிசப் புரட்சி வேரூன்றுகின்ற பொழுது இத்திட்டங்களின் தன்மையும் உள்ளடக்கமும் அவற்றை நிறைவேற்றுகின்ற வழிமுறைகளும் மாறுகின்றன.

மாறும் காலகட்டத்தில் வர்க்கப் போராட்டம் மிகவும் அதிகமான அளவுக்குத் தீவிரமடைகிறது; ஏனென்றால் "வெற்றி யாருக்கு?", அதாவது முதலாளி வர்க்கம் முந்திய அமைப்பை மறுபடியும் ஏற்படுத்துவதில் வெற்றியடைந்து தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்துக்கு முடிவு கட்டப் போகிறதா அல்லது தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை ஒழிப்பதில் வெற்றியடைந்து சோஷலிசத்தை நிர்மாணிக்கப் போகிறதா என்னும் கேள்விக்கு



14—1184

பதில் கிடைக்கின்ற நேரம் அது. இந்த வர்க்கப் போராட்டம் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் நடைபெறுகின்ற போராட்டம் மட்டுமல்ல (முதலாளித்துவ சமூகத்தின் சுற்றுவட்டத்துக்குள் அப்படி நடைபெறும்); ஆனால் மரணத் தறுவாயில் இருக்கின்ற முதலாளித்துவத்துக்கும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற சோஷலிசத்துக்கும் இடையிலான போராட்டமாகும். முதலாளி வர்க்க ஆட்சியை ஒழித்து தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஆட்சி நிறுவப்பட்டதும் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தின் தன்மையும் உள்ளடக்கமும் அடிப்படையில் மாறுகிறது.

பாட்டாளி வர்க்கம் வர்க்கப் போராட்டத்தைப் பிரதானமாக பொருளாதாரப் புரட்சியாகவே கருதுகிறது. இப்பொருளாதாரப் புரட்சி "முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து படிப்படியாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றும்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒருசேர மையப்படுத்தும்; மற்றும் உற்பத்திச் சக்திகளது ஒட்டுமொத்தத் தொகையைச் சாத்தியமான முழு வேகத்தில் அதிகமாக்கும்" என்று மார்க்சும் எங்கெல்சும் கூறினார்கள்.*

பொருளாதாரப் புரட்சி சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் சோஷலிச முறையில் புனரமைப்புச் செய்வதை உள்ளடக்கியிருக்கிறது. அந்த நிகழ்வுப் போக்கு வர்க்கப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துகிறது; எல்லா வர்க்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி 1, பக்கம் 226.

கங்கள், சமூகக் குழுக்கள், அடுக்குகளையும் தழுவியிருக்கிறது; சிலவற்றை வளர்க்கிறது, மற்றவற்றை ஒழிக்கிறது.

முதலாளி வர்க்கம் புதிய நிலைமைகளிலும் வர்க்கப் போராட்டத்தை நடத்துகிறது. அரசியல் அதிகாரம், தனிச் சலுகைகள் பறிக்கப்பட்டு, வர்க்கம் என்ற முறையில் தன்னுடைய வாழ்க்கைக்கே ஆபத்தேற்பட்டுள்ள முதலாளி வர்க்கம் வன்முறையான எதிர்ப்பில் ஈடுபட்டு வர்க்கப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துகிறது.

புதிய ஆட்சியதிகாரம் தன்னுடைய நிர்மாணப் பணியின் நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற பொழுது, முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிசத்தை வெற்றிகரமாக நிர்மாணிக்கின்ற பொழுது நாட்டிற்குள் சக்திகளின் சமநிலை சோஷலிசத்துக்கு சாதகமாக மாறுகிறது. வர்க்கப் போராட்டம் மொத்த அளவில் (அதன் ரகங்களிலும்) படிப் படியாகக் குறைகிறது. ஆனால் இது இமு ுறியான புரட்சிகர மாற்றங்களின் விளைவாக நடைபெறுகிறது. "பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமானது வர்க்கப் போராட்டம் முடிவுற்று விட்டதைக் குறிப்பதல்ல, மாறாகப் புதிய வடிவில், புதிய ஆயுதங்களைக் கொண்டு தொடர்ந்து அது நடைபெறுவதைக் குறிப்பதாகும்" என்று லெனின் எழுதினார்.*

சோவியத் யூனியனிலும் மக்கள் ஜனநாயக நாடுகளிலும் சோஷலிச நிர்மாணத்தின் அனுபவம் (மாறும் காலகட்டத்தின் அரசியல் ஆட்சியதிகாரம்) பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பது புதிய வடிவங்களில் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்தின் தொடர்ச்சி என்னும் லெனினுடைய போதனையின் செல்தகைமையை நிரூபித்திருக்கிறது.

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** தொகுதி 12, பக்கம் 20.

**பாட்டாளி வர்க்க அரசின் வர்க்க சாராம்சம்.** எந்த சமூகத்திலும் ஆட்சியதிகாரத்தின் சாராம்சம் அதன் வர்க்க உள்ளடக்கம், வரலாற்று நோக்கம், அடிப்படைக் கடமைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. மாறும் காலகட்ட சமூகத்தை இன்னும் சோஷலிச சமூகம் என்று சொல்ல முடியாது; ஏனென்றால் முதலாளி வர்க்கத்திடமிருந்து அரசியல் ஆட்சியதிகாரம் பறிக்கப்பட்டிருப்பது அல்லது பெரிய அளவு முதலாளித்துவ உடைமை பறிமுதல் செய்யப்பட்டிருப்பது கூட முதலாளி வர்க்கம் ஒழிக்கப்பட்டு விட்டது என்று இன்னும் குறிக்காது. அதே சமயத்தில் இந்த மாறும் காலகட்ட சமூகத்தை முதலாளித்துவ சமூகம் என்று கூற முடியாது; ஏனென்றால் பழைய சமூக அமைப்பை ஒழிக்கின்ற நிகழ்வுப் போக்கு ஆரம்பமாகி விட்டது.

முதலாளித்துவத்தை ஒழித்து, புதிய சோஷலிச சமூகத்தை நிர்மாணிக்கின்ற சக்தி தொழிலாளி வர்க்க அரசிடம் மட்டுமே இருக்கிறது. இது அரசின் புதிய ரகம்; ஏனென்றால் வரலாற்றில் முதல் தடவையாக ஆட்சியதிகாரம் முன்பு சுரண்டப்பட்ட வர்க்கத்திடம், பாட்டாளி வர்க்கத்திடம் இருக்கிறது.

இந்த அரசுக்கு முன் பின்வரும் உள்நாட்டு மற்றும் சர்வதேசியக் கடமைகள் இருக்கின்றன:

— நாட்டிற்குள் சுரண்டும் வர்க்கங்களின் எதிர்ப்பை நசுக்குதல், சோஷலிசப் புரட்சியின் சாதனைகளையும் புதிய அரசையும் ஏகாதிபத்திய அரசுகளின் தாக்குதல்களுக்கு எதிராகப் பாதுகாத்தல்;

— பொருளாதாரத்திலும் சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சோஷலிச மாற்றங்களைக் கொண்டு வருதல், உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்தல்;

– விவசாயி வர்க்கம், இதர பெருந்திரளான உழைக்

கும் மக்களை சோஷலிச நிர்மாணப் பணியில் ஈடுபடுத்து கின்ற நோக்கத்துடன் தொழிலாளி வர்க்கம் அவர்களுக்கு வழிகாட்டுதல்;

— உலகத் தொழிலாளி வர்க்கத்துடனும் தேசிய விடு தலை இயக்கத்துடனும் சர்வதேசிய பிணைப்புகளை வலுப்படுத்திக் கொள்ளுதல்; மற்ற நாடுகளில் புரட்சிகர சக்திகளின் போராட்டத்தை ஆதரித்தல்.

தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியில் சோஷலிச நிர் மாணம் உறுதிப்படுத்தப்படுகிறது; ஏனென்றால் இலட்சக் கணக்கான உழைக்கும் மக்கள் நாட்டின் அரசியல் வாழ்க் கையில் பங்கெடுப்பதற்கு, அரசையும் பொருளாதாரத்தை யும் நிர்வாகம் செய்வதைக் கற்றுக் கொள்வதற்குத் தொடங்குகிறார்கள். ''நாம் தவறுகளைச் செய்வது தவிர்க்க முடியாதது; ஆனால் இப்பொழுது ஒவ்வொரு தவறும் அரசு நிர்வாகத் தத்துவப் படிப்பில் ஈடுபட்டிருக்கின்ற ஒரு சில மாணவர்களுக்குப் படிப்பினையைக் கற்பிக்காது, இலட் சக்கணக்கான உழைக்கும் மக்கள் ஒவ்வொரு தவற்றின் விளைவுகளையும் சொந்தமாக அனுபவிப்பார்கள். உற்பத் திப் பொருட்களைப் பதிவு செய்து வினியோகித்தல், உழைப் பின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துதல் என்னும் அவ சரமான கடமைகள் தமக்கு முன்பிருப்பதை அவர்களே பார்ப்பார்கள்; அதிகாரம் தங்களிடம் இருக்கிறது, தங் களுக்குத் தாங்களே உதவி செய்யாவிட்டால் வேறு எவரும் உதவி செய்ய மாட்டார்கள் என்பதை அவர்கள் அனுபவத் திலிருந்து அறிந்து கொள்வார்கள்'' என்று லெனின் எழுதினார்.*

பாட்டாளி வர்க்க அரசு தொழிலாளர், விவசாயிகளுக்கு

* V. I. Lenin, *Collected Works*, vol. 28, p. 427.

சோஷலிச உணர்ச்சியில் மறுபயிற்சி அளிக்கிறது; அவர்களு டைய உணர்வையும் நடத்தையையும் தனியார் உடைமை யாளர் மனோபாவத்திலிருந்தும் முதலாளித்துவ சமூகத் தின் எச்சங்களாகிய அகம்பாவம், தனிமனிதவாதம், பண வேட்டை ஆகியவற்றிலிருந்தும் விடுவிக்கிறது. அது சோஷ லிஸ்ட் மனநிலையை உருவாக்குகிறது, தங்களுடைய நாட் டின் உண்மையான எசமானர்கள் தாங்களே என்று அவர் கள் உணரும்படி செய்கிறது. பாட்டாளி வர்க்க அரசு மக்கள் மத்தியில் ஸ்தாபனத் திறமையுள்ள நபர்களைத் தேடிக் கண்டுபிடித்து ஊக்குவிக்கிறது, அதைச் செய்யவில்லை என் றால் சோஷலிசத்தை நிர்மாணிக்க முடியாது.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஆட்சியதிகாரத் தைச் செயல்படுத்துகின்ற ஒரே உறுப்பு என்று அரசைக் கூற முடியாது. இக்குறிப்பிட்ட நோக்கத்துக்காக அரசு மற்றும் பொது ஸ்தாபனங்களைக் கொண்ட மொத்த அரசியல் அமைப்பு உருவாக்கப்படுகிறது. இந்த அமைப்பு வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமாக இருந்தாலும் இன்றிய மையாத பொது அம்சங்கள் இருக்கின்றன: பாட்டாளி வர்க்க அரசு, மார்க்சிய-லெனினியக் கட்சி, தொழிற்சங்கங்கள், இளைஞர் ஸ்தாபனங்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், கலைத் துறை ஊழியர்களின் சங்கங்கள் அத்தகைய பொது அம் சங்களாகும். அரசியல் அமைப்பில் பிரத்யேகமான கடமை களைக் கொண்டு, சொந்த முறைகளைப் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு ஸ்தாபனமும் புதிய ஆட்சியதிகாரம் செயல் படுவதற்கு உதவுகிறது. மார்க்சிய-லெனினியக் கட்சி இந்த அமைப்புக்கு வழிகாட்டுகிறது.

பாட்டாளி வர்க்க அரசு என்பது ஆட்சியதிகாரத்தின் புதிய ரகம்; ஏனென்றால் அது தொழிலாளி வர்க்கத்தின், தான் வழிகாட்டுகின்ற உழைக்கும் விவசாயி வர்க்கத்தின், நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற பெருந்திரளான மக்களின்

புரட்சிகரமான படைப்பு நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பது உழைக்கும் மக்களின் முன்னணிப் படையாகிய பாட்டாளி வர்க்கத்துக்கும் உழைக்கும் மக்களின் பாட்டாளி வர்க்கம் அல்லாத எண்ணற்ற அடுக்குகளுக்கும் (குட்டி முதலாளி வர்க்கம், சிறு உடைமையாளர்கள், விவசாயி வர்க்கம், அறிவுப் பகுதியினர், இதரர்கள்) அல்லது இந்த அடுக்குகளில் பெரும்பான்மைக்கும் இடையில் வர்க்கக் கூட்டணியின் பிரத்யேகமான வடிவம்'' என்று லெனின் எழுதினார். *

லெனின் இந்தக் கூட்டணியில் உறுப்பினர்களை விவசாயி வர்க்கத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் எல்லா இடைநிலை அடுக்குகளையும் சேர்த்துக் கொண்டார் என்பது தத்துவக் கோணத்திலும் செய்முறைக் கோணத்திலும் இன்றுவரை மிகவும் முக்கியமானதாகும். ஆக, கூட்டணியைப் பற்றி லெனினுடைய கருத்தமைப்பு தொழில் துறை முதலாளித்துவ நாடுகளுக்குப் பொருந்துகிறது; அங்கே தற்பொழுது விவசாயி வர்க்கம் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் எண்ணற்ற, பெரும்பாலும் நகர்ப்புற மத்திய அடுக்குகள் இருக்கின்றன. இந்த அடுக்குகளைப் பாட்டாளி வர்க்கத்தின் தரப்புக்கு இழுக்காவிட்டால் சோஷலிசத்துக்கு மாறிச் செல்வது இயலாது. விவசாயி வர்க்கம் பெரிய அளவில் இருக்கின்ற நாடுகளில் அதனுடன் கூட்டணி அமைப்பது தலைமையான முக்கியத்துவத்தைப் பெறுதல் இயற்கையே. பாட்டாளி வர்க்கம் இந்தக் கூட்டணி

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 29, p. 381.

யில் பாட்டாளி வர்க்கம் அல்லாத உழைக்கின்ற பெருந்திர ளான மக்களை ஒன்றுசேர்த்து இந்தக் கூட்டணியை அமைக்கிறது, வழிகாட்டுகிறது.

## முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழித்தலும் சோஷலிச உற்பத்தி முறையைப் படைத்தலும்

**பல அடுக்குப் பொருளாதாரத்தை சோஷலிச பொருளா தாரமாக மாற்றியமைத்தல்.** சோஷலிசத்துக்கு மாறு வதற்கு இன்றியமையாத முன்தேவைகளையும் நிலைமை களையும் முதலாளித்துவம் படைக்கிறது. ஆனால் முத லாளித்துவத்திற்குள்ளேயிருந்து பொது உடைமையை அடிப்படையாகக் கொண்ட சோஷலிசப் பொருளாதார அமைப்பு தோன்ற முடியாது. சோஷலிசத்தின் பொருளா தார அடிப்படை முதலாளித்துவ சுற்றுவட்டத்திற்குள் உருவாவதில்லை. முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழித்தலும் சோஷலிச உற்பத்தி முறையைப் படைத்தலும் மாறும் காலகட்டத்தின் போது நடைபெறுகின்றன.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறு கின்ற காலகட்டத்தில் பல அடுக்குப் பொருளாதாரம் குணாம் சமாக இருக்கிறது. பொருளாதார அடுக்குகள் எனப்படு பவை உடைமையின் ஏதாவதொரு வடிவத்தை அடிப்ப டையாகக் கொண்ட உற்பத்தி உறவுகளின் ரகங்களாகும். இவை பகையியல் சமூகங்களிலும் முதலாளித்துவத் திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற சமூகத்திலும் நிலவுகின்றன.

சோஷலிசப் புரட்சியின் தொடக்கத்திலிருந்தே அரசியல் மாற்றங்கள் பொருளாதார மாற்றங்களுடன் நெருக்கமாகப் பிணைந்திருக்கின்றன. பாட்டாளி வர்க்கம் ஆட்சியதிகாரத் தைப் பெற்ற உடனே சோஷலிசப் பொருளாதாரத்தை உரு வாக்க முனைகிறது. பொருளாதாரத்தின் கேந்திரமான

துறைகளான கனரகத் தொழில்துறை, வங்கிகள், போக்கு வரத்து, தகவல் தொடர்பு, அந்நிய வர்த்தகம் ஆகியவை பொது உடைமை ஆக்கப்படுகின்றன, அவை பாட்டாளி வர்க்க அரசுக்குச் சொந்தமானவையாக, அதன் பொருளாதார அடிப்படையாக மாறியிருக்கின்றன. முதலில் இந்த அடிப் படை சோஷலிசப் பொருளாதார அடுக்காக இருக்கிறது, ஏனென்றால் அது நாட்டின் மொத்தப் பொருளாதாரத் தையும் தழுவவில்லை.

மாறும் காலகட்டத்தைச் சேர்ந்த பல அடுக்குப் பொரு ளாதாரம் பல காரணிகளின் விளைவு எனலாம். முத லாளித்துவ உடைமையை முற்றிலும் நாட்டுடைமை ஆக்கு வதற்கும் போதிய காலம் அவசியம் என்பதுடன் அதற்கு இன்றியமையாத நிபந்தனைகளும் இருக்க வேண்டும். புதிய அரசு சில முதலாளித்துவக் கூறுகளை (உதாரண மாக, சிறு அளவிலான தனியார் உடைமையை) கட்டுப் படுத்துகின்ற பொழுதே நாட்டில் சோஷலிச நிர்மாணத் தின் நலன்களுக்குப் பயன்படுத்த இயலும். ஆக, மாறும் காலகட்டத்தில் முதலாளித்துவ கூறுகளும் சோஷலிசக் கூறுகளும் இருக்கின்றன.

பல அடுக்குப் பொருளாதாரம் முதலாளித்துவத் திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற எல்லா நாடு களுக்கும் குறியடையாளமாகும். பல அடுக்குக் கூறுகளின் விகிதாச்சாரம் வெவ்வேறு விதமாக இருக்கலாம்; ஆனால் சோஷலிசக் கூறுகள் எப்பொழுதுமே தலைமையான இடத் தை வகிக்கும்.

முதலாளித்துவ உடைமையை ஒழித்தல், சோஷலிச உடைமையை உருவாக்குதல், அதை அரசு (மக்கள்) உடை மையாக மாற்றுதல் அடிப்படையான உற்பத்திச் சாதனங் களை (பெரிய தொழில்துறை மற்றும் விவசாய நிறு வனங்கள், போக்குவரத்து, வங்கிகள், உள்நாட்டு வர்த்த

கம், அந்நிய வர்த்தகம், இதரவை) சோஷலிச முறையில் நாட்டுடைமையாக்கலின் மூலம் நிறைவேற்றப்படுகிறது. குறிப்பிட்ட நிலைமைகளைப் பொறுத்து சோஷலிச நாட்டுடைமையாக்கல் பின்வரும் மூன்று வழிகளில் நிறைவேற்றப்பட முடியும் என்பதை இத்துறையில் சோவியத் யூனியன், இதர சோஷலிச நாடுகளின் அனுபவம் எடுத்துக்காட்டுகிறது: அ) பெரிய முதலாளிகளின் உடைமையைப் பறிமுதல் செய்தல்; ஆ) பெரிய முதலாளித்துவ நிறுவனங்களைப் பகுதியளவுக்கு அல்லது முழுமையாக நட்ட ஈடு கொடுத்துக் கட்டாயமாக எடுத்துக் கொள்ளுதல்; இ) நடுத்தர மற்றும் குட்டி முதலாளி வர்க்க உடைமையை அரசு முதலாளித்துவத்தின் பல்வேறு வடிவங்களின் மூலம் சோஷலிச முறையில் மாற்றுதல்.

ருஷ்யாவிலும் மங்கோலியாவிலும் நிலமனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்பட்டது. மக்கள் ஜனநாயக நாடுகளில் காடுகள், நீர்ப்பாசன அமைப்புகள், தரிசு நிலம் ஆகியவை நாட்டுடைமை ஆக்கப்பட்டன, விவசாயம் செய்யப்படக் கூடிய நிலங்களில் பெரும்பான்மை விவசாயிகளுக்குத் தரப்பட்டன.

சோஷலிச நாட்டுடைமையாக்கல் முதலாளித்துவ நாட்டுடைமையாக்கலிலிருந்து தீவிரமாக வேறுபடுகிறது; ஏனென்றால் அது முதலாளித்துவத்தின் அடிப்படையை — தனியார் முதலாளித்துவ சுவீகரிப்பு மற்றும் உழைப்புச் சக்தியை விற்பனை செய்தலும் வாங்குதலும் — தகர்க்கிறது. அரசு அதிகாரம் அனைத்தும் உழைக்கும் மக்களுக்குச் சொந்தம் என்பதால் நாட்டுடைமை ஆக்கப்பட்ட சொத்து மக்களுடைய உடைமை ஆகிறது; ஆனால் அரைகுறை முதலாளித்துவ நாட்டுடைமையாக்கல் — அது ஏகபோக மூலதனத்தின் நலன்களுக்காகவே எப்பொழுதும் செய்யப்படு

கிறது — தனியார் முதலாளித்துவ உடைமைக்கு பதிலாக அரசு ஏகபோக உடைமையை ஏற்படுத்துகிறது.

**தொழில்துறைமயமாக்கலும் விவசாயக் கூட்டுறவுமயமாக்கலும்.** சராசரி முதலாளித்துவ வளர்ச்சியுள்ள நாட்டில் சோஷலிசப் புரட்சி ஏற்படுகின்ற பொழுது அதன் உற்பத்திச் சக்திகள் சமூக தன்மையைப் பெறுகின்றன. எனினும் அவை, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ அரசுகளின் உற்பத்திச் சக்திகளுக்குப் பின்தங்கி இருக்கின்றன. ஆகவே அவை முழுமையான முறையில் சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுட்ப அடிப்படையாக இருக்க முடியாது. அத்தகைய உதாரணங்களில் சோஷலிசத் தொழில்துறைமயமாக்கல் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையை ஒழிப்பதற்கும் ஒரு சாதனமாகிறது. சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்ட எல்லா நாடுகளும் (சோஷலிசப் புரட்சியின் முற்பொழுதில் உயர்ந்த தொழில்துறை வளர்ச்சி மட்டத்தை அடைந்திருந்த செக்கோஸ்லோவாக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு தவிர) தொழில்துறைமயமாக்கக் காலகட்டத்தைக் கடந்து வந்தன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ருஷ்யாவின் உற்பத்திச் சக்திகள் பிரிட்டனைப் போலக் கால் பங்காக, ஜெர்மனியைப் போல ஐந்திலொரு பங்காக, அமெரிக்காவைப் போலப் பத்திலொரு பங்காக மட்டுமே இருந்தன. ருஷ்யாவின் பொருளாதாரம் முதல் உலகப் போரின் மூன்று ஆண்டுகள், உள்நாட்டுப் போரின் நான்கு ஆண்டுகளில் படுநாசமடைந்திருந்தது. ருஷ்யா பொருளாதாரக் கோணத்தில் சில பத்தாண்டுகளுக்கு பின்னே தள்ளப்பட்டிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியினால் வழிகாட்டப்பட்ட சோவியத் யூனியனது உழைக்கும் மக்கள் சோஷலிசத் தொழில்துறைமய

மாக்கலை நிறைவேற்றி சோவியத் யூனியனை உலகத்தில் நன்கு வளர்ச்சியடைந்த தொழில்துறை அரசுகளில் ஒன்றாக ஆக்கினார்கள்.

சோஷலிசத் தொழில்துறைமயமாக்கல் பொருளாதாரத்தின் சோஷலிச அடுக்கை சோஷலிச உற்பத்தி முறையாக மாற்றுவதற்கு அவசியமான சமூக-பொருளாதார, பொருளாயத-தொழில்நுட்ப முன்நிபந்தனைகளை உருவாக்கியது. விவசாயத் துறையில் சோஷலிச மாற்றங்களின் விளைவாக இது சாத்தியமாயிற்று.

தொழிலாளி வர்க்கம் தன்னுடைய சொந்த பலத்தை மட்டுமே நம்பி சோஷலிசத்தை நிர்மாணிக்க முடியாது. விவசாயி வர்க்கத்துடன் கூட்டணி அமைத்துத்தான் அதை நிறைவேற்ற முடியும். இக்கூட்டணி ஸ்திரமாக இருக்க வேண்டுமென்றால் தொழிலாளர்கள் மட்டுமன்றி விவசாயிகளும் சோஷலிச உடைமைக்காரர்களாக இருக்க வேண்டும். சோஷலிச உடைமையின் பிரத்யேகமான வடிவமாகிய கூட்டுறவு உடைமை விவசாயிகளின் ஒத்துழைப்பின் அடிப்படையில் தோன்றுகிறது. விவசாயிகளின் விருப்ப பூர்வமான ஒத்துழைப்பும் கூட்டுறவுப் பண்ணைகள் அமைக்கப்படுதலும் கிராமப்புறத்தில் சோஷலிசப் புரட்சியைப் பூர்த்தி செய்கின்றன.

அரசு (பொதுமக்கள்) உடைமை, கூட்டுறவு உடைமை ஆகிய இரண்டு வடிவங்களில் உற்பத்திச் சாதனங்களில் சோஷலிச உடைமையை நிறுவுதல் தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் ஆட்சியதிகாரத்தின் பொருளாதார அடிப்படையாக இருக்கிறது. இவ்வாறாக, நேச உறவுள்ள இரண்டு வர்க்கங்களும் சோஷலிச உற்பத்தி முறையைச் சேர்ந்திருக்கின்றன. பல அடுக்குப் பொருளாதாரம் இப்படி ஒழிக்கப்படுகிறது; முதலாளித்துவக் கட்டமைப்பு அழிக்கப்படுகிறது; சிறு பண்டக் கட்டமைப்பு கூட்டுறவின் மூலம் மாற்றப்படு

கிறது; சோஷலிசக் கட்டமைப்பு சோஷலிச உற்பத்தி முறை யாக வளர்ச்சியடைகிறது.

## வர்க்க மற்றும் தேசிய இன உறவுகளை மாற்றியமைத்தல்

**வர்க்கக் கட்டமைப்பை மாற்றுதல்.** அரசியல், பொருளா தார, கலாசார மற்றும் சித்தாந்த மாற்றங்களின் தொகுதி என்ற முறையில் சோஷலிசப் புரட்சி சுரண்டும் வர்க்கங் களை ஒழிக்கிறது. கம்யூனிஸ்டுகள் எல்லா முதலாளிகளை யும் நிலவுடைமையாளர்களையும் கொன்று குவிக்க விரும் புகிறார்கள் என்ற கம்யூனிச எதிர்ப்புப் பிரசாரம் அவ தூறானது. கீழே இறக்கப்பட்ட சுரண்டும் வர்க்கங்கள் உள் நாட்டுப் போரை ஆரம்பித்து புரட்சியை ஆதரிப்பவர்களை எதிர்த்து பயங்கரவாதத்தை உபயோகித்தால் அல்லது ஆயுதமேந்திய சதிகளிலும் கலகங்களிலும் அவர்கள் ஈடு பட்டால் அது இரு தரப்பிலும் பலர் உயிரிழப்பதில் முடியும் என்பது மெய்யே.

அரசியல் புரட்சியின் விளைவாக முதலாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரம் பறிக்கப்படுகிறது; அது ஆளும் வர்க்க மாக இருப்பது முடிந்து விடுகிறது. முதலாளித்துவத் தனி யார் உடைமையை நாட்டுடைமை ஆக்குதல் உள்பட பொரு ளாதாரத்தில் நடைபெறுகின்ற புரட்சி முதலாளி வர்க்கத் திடமிருந்து அதன் உடைமையை, அதன் அடிப்படையான வர்க்கக் கூறை அகற்றுகிறது. கலாசாரப் புரட்சி சமூகத் திலிருந்து முதலாளி வர்க்க சித்தாந்தத்தை ஒழிக்கிறது; முதலாளி வர்க்கப் பத்திரிகைகள், பதிப்பகங்கள் மூடப்படு கின்றன, முதலாளி வர்க்க அரசியல் கட்சிகள் தடை செய் யப்படுகின்றன.

ஆகவே முதலாளிகள் தம்முடைய பொருளாதார, அரசி

யல் அதிகாரத்தை இழந்து, முதலாளி வர்க்க அரசியல் கட்சிகளுடன் தம்முடைய அரசியல் ஆதரவாளர்களை இழந்து, முதலாளி வர்க்கச் செய்திச் சாதனங்களுடன் தம் முடைய சித்தாந்த ஆதரவாளர்களை இழந்து விடுவ தால், ஒரு வர்க்கம் என்ற முறையில் அவர்களுடைய வாழ்க்கை முடிந்து விடுகிறது.

கூட்டுறவு இயக்கச் செயல்முறையில் கிராமப்புற முத லாளி வர்க்கம் கலைந்து விடுகிறது. இந்த வர்க்கத்தை ஒழிப்பதற்குரிய வடிவங்களும் வழிமுறைகளும் புரட்சி, புதிய ஆட்சியதிகாரம், சோஷலிசக் கூட்டுறவுகளைப் பற்றி அதன் அணுகுமுறையைப் பொறுத்திருக்கின்றன. ருஷ் யாவில் குலாக்குகள் (பணக்கார விவசாயிகள்) உள்நாட்டுப் போரில் நிலவுடைமையாளர்கள், முதலாளிகளின் தரப்பில் தீவிரமாகப் பங்கெடுத்தார்கள். அவர்கள் கூட்டுப்பண்ணை முறைக்கு எதிராக ஆயுதமேந்திய கலகங்களைத் தூண்டி னார்கள், புதிதாக அமைக்கப்பட்ட கூட்டுப்பண்ணைகளை ரகசியமாகவும் பகிரங்கமாகவும் ஒழிக்க முயன்றார்கள், கூட்டுப்பண்ணைகளின் உடைமைகளுக்கு நெருப்பு வைத் தார்கள், கூட்டுப்பண்ணை ஊழியர்கள், கட்சி மற்றும் சோவியத்துகளின் அதிகாரிகளைக் கொலை செய்தார்கள். இத்தகைய நிலைமைகளில் கூட்டுப்பண்ணைகளில் குலாக்கு களை உறுப்பினர்களாக சேர்க்க மறுக்கின்ற, அவர்களு டைய உடைமைகளைப் பறிமுதல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு ஏற்பட்டது. ஐரோப்பிய மக்கள் ஜனநாயக அரசுகளில் சிறு அளவி லான கிராம முதலாளிகள் விருப்ப பூர்வமாகக் கூட்டுறவு களில் சேர்ந்து புரட்சிக்கும் புதிய ஆட்சியதிகாரத்துக்கும் கூட்டுறவு இயக்கத்துக்கும் விசுவாசமாக நடந்து கொண் டார்கள்.

அரசியல் புரட்சி வெற்றியடைந்து தொழிலாளி வர்க்க

அதிகாரம் நிறுவப்பட்டவுடன் சோஷலிசத் தொழிலாளி வர்க்கத்தின் உருவாக்கம் ஆரம்பமாகிறது. தொழிலாளி வர்க்கம் சமூகத்தின் ஆளும் வர்க்கமாகிறது. அது கம்யூனிச இலட்சியங்களை நிறைவேற்றத் தொடங்குகிறது, சோஷலிச நிர்மாணத்துக்கு ஒன்றுசேர்ந்துள்ள நகர மற்றும் நாட்டுப் புற உழைக்கும் மக்கள் அனைவருடைய கூட்டணிக்கும் தலைமை தாங்குகிறது. அரசு (பொதுமக்கள்) உடைமை யுடனும் பெரிய அளவு இயந்திர உற்பத்தியுடனும் இணைந் திருக்கின்ற, அரசு அதிகாரத்தைச் செயல்படுத்துகின்ற சோஷ லிசத் தொழிலாளி வர்க்கம் பொருளாதாரத்துக்குத் தலை மை தாங்குகிறது, சமூகத்தின் தலைமையான சக்தியாக வளர்ச்சியடைகிறது. விஞ்ஞான கம்யூனிசக் கொள்கையைப் பின்பற்றுகின்ற அதன் கட்சி, சோஷலிசத்தை நிர்மாணிக் கின்ற மக்களின் தலைமை சக்தியாக, வழிகாட்டும் சக்தியாக இருக்கிறது. விவசாயி வர்க்கம் கூட்டுறவுமயமாக்கலின் மூலம் சோஷலிச வர்க்கமாக வளர்ச்சியடைகிறது. அது கூட்டு, கூட்டுறவு உடைமையை அடிப்படையாகக் கொண்ட சோஷ லிச உற்பத்தி உறவுகளைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. கூட்டுறவு விவசாயி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தின் சோஷலிச இலட்சியங்களைப் பகிர்ந்து கொள்கிறது, தொழி லாளி வர்க்கத்துடன் ஒன்றாக, அதன் வழிகாட்டுதலின் கீழ் அரசு அதிகாரத்தைச் செயற்படுத்துவதில் பங்கெடுக்கிறது.

புதிய சோஷலிச அறிவுப்பகுதியினர் சோஷலிச நிர் மாணத்தின் போது உருவாக்கப்படுகின்றனர். அவர்கள் தொழிலாளி அல்லது விவசாயிக் குடும்பத்திலிருந்து வரு கிறார்கள்; மார்க்சிய-லெனினியத்தைத் தங்களுடைய சித் தாந்தமாக அங்கீகரிக்கிறார்கள், தொழிலாளி வர்க்கத்தின் இலட்சியத்துக்கு விசுவாசமாக இருக்கிறார்கள். தொழிலா ளர்கள், கூட்டுப்பண்ணை விவசாயிகளுடன் சேர்ந்து அறிவுப் பகுதியினர் சமூக, அரசு விவகாரங்களை நடத்துகிறார்கள்.

சோஷலிசத்தின் சமூக வர்க்கக் கட்டமைப்பு இப்படி உருவாக்கப்படுகிறது. அது அரசு (பொதுமக்கள்) உடைமை, கூட்டுறவு உடைமை என்னும் இரண்டு சோஷலிச உடைமை வடிவங்களைத் தனது பொருளாதார அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. தொழிலாளி வர்க்கமும் கூட்டுப் பண்ணை விவசாயிகளும் பாட்டாளி வர்க்க அரசின் சமூக அடிப்படையாக இருக்கிறார்கள்.

**தேசிய இன உறவுகளை மாற்றியமைத்தல்.** முதலாளித் துவம் வளர்ச்சி அடைகின்ற பொழுது முதலாளித்துவ தேசிய இனங்களைத் தோற்றுவிக்கிறது. முதலாளி களுக்கும் பாட்டாளி வர்க்கத்தினருக்கும் இடையில் நடை பெறுகின்ற வர்க்கப் போராட்டத்தில் அவை சிக்கிச் சீரழி கின்றன.

காலனி சகாப்தத்தின் ஆரம்பம் தேசிய இனப் பிரச்சினை யைத் தீவிரப்படுத்தி காலனியாதிக்கப் பிரச்சினையாகவும் மாற்றியது. ஏகாதிபத்தியக் காலனியாதிக்கவாதிகள் பிரித் தாளும் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள், ஒடுக்கப்பட் டிருந்த தேசிய இனங்களின் வளர்ச்சியைத் தடை செய் தார்கள். தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த முதலாளி வர்க்கத்தின் தேசிய வாதம் வரையறுக்கப்பட்ட, குறிப்பிட்ட அளவுக்கு முற் போக்குத் தன்மையைக் கொண்டிருக்கிறது.

லெனின் ஏகாதிபத்தியத்தை ஆராய்ந்த பொழுது, முத லாளித்துவத்தினால் படைக்கப்பட்ட தேசிய இனங்களின் வளர்ச்சியிலும் தேசிய இன உறவுகளிலும் இரண்டு வர லாற்றுப் போக்குகளைச் சுட்டிக்காட்டினார்: ''வளர்ந்து செல்லும் முதலாளித்துவமானது, தேசிய இனப் பிரச்சி னையில் இரண்டு வரலாற்றுப் போக்குகளை அறிந்திருக் கிறது. ஒன்று: தேசிய வாழக்கையும் தேசிய இயக்கங்களும்

துயிலெழுதலும்; எல்லா விதமான தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராய் போராட்டம் மூளுதலும்; தேசிய அரசுகள் அமைக்கப்படுதலும். இரண்டாவது: எல்லா வடிவங்களிலும் தேசங்களிடையே ஒட்டுறவு வளர்தலும், மேலும் மேலும் துரிதமாதலும்; தேசியப் பிரிவினைச் சுவர்கள் தகர்க்கப்படுதலும்; மூலதனத்தின், பொதுவாகப் பொருளாதார வாழ்வின், அரசியல், விஞ்ஞானம் முதலானவற்றின் சர்வதேச ஒற்றுமை உண்டாக்கப்படுதலும்.

''இவ்விரு போக்குகளும் முதலாளித்துவத்துக்குரிய உலகு தழுவிய விதியாகும். முன்னது முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்பத்தில் ஆதிக்க நிலையில் உள்ளது. பின்னது முதிர்ச்சியடைந்து சோஷலிச சமுதாயமாக உருமாற்றம் பெறுவதை நோக்கிச் செல்லுகின்ற முதலாளித்துவத்தின் இயல்பினை வெளிப்படுத்துவதாகும்.''*

முதலாளித்துவத்தின் சுற்றுவட்டத்துக்குள் இப்புறவயப் போக்குகளின் வளர்ச்சி பகையியலாக மாறுகிறது. காலனியாதிக்க அமைப்பை ஆதரிக்கின்ற ஏகாதிபத்தியம் சுதந்திரமான தேசிய அரசுகள் அமைவதை எதிர்க்கிறது, காலனி மற்றும் சார்பு நாடுகளின் மக்களினங்களைச் சுரண்டுவதற்கும் பொருளாதாரத்திலும் அரசியலிலும் பலவீனமான அரசுகளுக்கு எதிராக வலிமையான ஏகாதிபத்திய அரசுகளின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் மூலதனம் மற்றும் பொருளாதார வாழ்க்கையின் வளர்ந்து வருகின்ற சர்வதேசிய ஒற்றுமையைப் பயன்படுத்துகிறது.

ருஷ்யாவில் ஜாரிசம் பல மக்களினங்களை (அவை வெவ்வேறு முறைகளில் ருஷ்யப் பேரரசின் பகுதியாகி

* வி. இ. லெனின், **தேசிய இனப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்,** மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1979, பக்கம் 19.



15—1184

இருந்தன) அரைக் காலனிச் சார்பு நிலையில் வைத்திருந்தது. இந்த தேசிய இனங்களைப் பொறுத்தமட்டில் ருஷ்ய முதலாளிகளும் நிலக்கிழார்களும் பெரிய இன தேசியவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள், ஆனால் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த, வளர்ச்சியடைந்து கொண்டிருந்த முதலாளி வர்க்கம் ஸ்தல தேசியவாத உணர்ச்சிகளை ஊக்குவித்தது. பிற்போக்கான தேசியவாதக் கருத்துகளைப் பரப்பி, தேசியப் பகைமையையும் வேற்றுமையையும் விதைத்து தொழிலாளர், விவசாயிகள், இதர உழைக்கும் மக்களின் மனங்களில் விஷத்தை ஊட்டுவதற்கு முந்தியவர்களும் பிந்தியவர்களும் முயன்றார்கள்.

இந்த தேசிய இனங்களின் எதிர்காலத்தைப் பற்றிய பிரச்சினைக்குச் சரியான தீர்வைக் கண்டுபிடித்திராவிட்டால் ருஷ்யாவில் சோஷலிசப் புரட்சி வெற்றி அடைந்திருக்க முடியாது. புரட்சிக்கு முன்பு லெனின் கம்யூனிஸ்டுகளின் தேசிய இன செயல்திட்டத்தை உருவரையாக வெளியிட்டார். லெனினுடைய செயல்திட்டம் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசியவாதத் தன்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. தொழிலாளி வர்க்கம் தேசியவாதத்தின் எவ்விதமான வெளிப்பாடுகளையும் எதிர்க்கும். வெவ்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த அகில ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்துக்கு லெனின் பாட்டாளி வர்க்கச் சர்வதேசிய வாதத்தை, வர்க்க ஒருமைப்பாட்டு சித்தாந்தத்தைக் கொடுத்தார். அவர் சர்வதேசியவாதக் கொள்கையை உயர்த்திப் பிடித்தார், பாட்டாளி வர்க்கத்திடம் முதலாளி வர்க்க தேசிய வாத நோயைப் பரப்புவதை சமரசமின்றி எதிர்த்தார். லெனினுடைய தேசிய இன செயல்திட்டம், சில தேசிய இனங்களுக்கு விசேஷ உரிமைகளைக் கொடுப்பதை நிராகரித்தது; எல்லா தேசிய இனங்களும் மொழிகளும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று கோரியது, பிரிந்து செல்லுதல், சுதந்திரமான தேசிய இன அரசை அமைத்துக்

கொள்ளுதல் உள்பட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தது.

இக்கோரிக்கைகளின் ஈடேற்றத்தை லெனின் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் வெற்றியுடன், ஒவ்வொரு தேசிய இனத்தையும் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் அரசியல் ரீதியிலும் சித்தாந்த ரீதியிலும் தேசிய முதலாளி வர்க்கத்தைத் தனிமைப்படுத்துவதுடன், உழைக்கின்ற பெருந்திரளான மக்களுக்குத் தலைமை தாங்கி தேசிய இன வேறுபாடுகளைக் கடந்து பாட்டாளி வர்க்கத்தின் சர்வ தேசிய ஒற்றுமையை அமைப்பதுடன் இணைத்தார். ருஷ்யாவின் எல்லா தேசிய இனங்களைப் பற்றிய பிரச்சினை, அதன் தீர்வு சோஷலிசப் புரட்சியின் உட்பகுதி என்று லெனின் கருதினார். ருஷ்யாவின் ஜாரிசத்தினால் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கங்கள் சோஷலிசப் புரட்சியாக வளர்ச்சியடையும் என்று லெனின் கூறினார். லெனினுடைய இந்த முன்னறிவிப்பு பிற்காலத்தில் சரியென்று நிரூபிக்கப்பட்டது.

சோஷலிசப் புரட்சியின் ஆரம்பத்திலிருந்தே, லெனின் தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பாடுபட்டது. லெனினால் தயாரிக்கப்பட்டு, சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்ய காங்கிரசில் (1917 அக்டோபர் 25) நிறைவேற்றப்பட்ட "தொழிலாளர்கள், படைவீரர்கள் மற்றும் விவசாயிகளுக்கு" என்னும் அறைகூவல் சோவியத் ஆட்சியதிகாரத்தின் முதல் வரலாற்று ஆவணமாகும். சோவியத் ஆட்சியதிகாரம் "ருஷ்யாவில் வசிக்கின்ற எல்லா தேசிய இனங்களுக்கும் உண்மையான சுயநிர்ணய உரிமையை உத்தரவாதமளிக்கும்" என்று அது அறிவித்தது. சிறிது காலத்துக்குப் பிறகு, 1917 நவம்பர் 15இல், மக்கள் கமிசார்களின் கவுன்சில் (சோவியத் அரசாங்கம்) "மக்களினங்களின் உரிமைகளைப் பற்றிய பிர

கடனத்தை'' நிறைவேற்றியது. இந்த ஆவணம் தேசிய ஒடுக்குமுறையை ஒழித்து ருஷ்யாவில் மக்களினங்களின் முழு சமத்துவத்தையும் அவற்றின் சுதந்திரமான வளர்ச்சியையும் சட்டபூர்வமாக நிறுவியது. இந்த ஆவணம் அரசியல் சட்ட முக்கியத்துவம் உடையது. 1922 டிசம்பர் 30இல் சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியன் அமைக்கப்பட்டது பல தேசிய இன சோஷலிச அரசைப் பற்றி லெனினுடைய போதனையை நடைமுறையில் அமுலாக்கியது.

நாட்டின் பொருளாயத வளங்களை ஒன்றுதிரட்டி எல்லா மக்களினங்களையும் சோஷலிச நிர்மாணத்தில் ஈடுபடுத்தி அவற்றுக்கு இடையில் நட்புறவை வலுப்படுத்தியதன் மூலம் ருஷ்யாவின் முந்திய வளர்ச்சி குன்றிய பிரதேசங்களின் பொருளாதார, சமூக, கலாசாரப் பின்தங்கிய நிலைமையை ஒழிக்க முடிந்தது. சோஷலிசப் புரட்சி தேசிய இனங்கள் மற்றும் மக்களினங்களுக்கு சட்டபூர்வமாக அளித்த சமத்துவம் மெய்யான சமத்துவத்தினால் வலுப்படுத்தப்பட்டது.

சோஷலிச தேசிய இனங்களின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் ஒற்றை தேசியப் பொருளாதார இணையத்தின் வடிவத்தில் உள்ள சோஷலிசப் பொருளாதாரத்தைப் புறவய அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன; எல்லா தேசிய இனங்களின் பொருளாதாரங்களிலும் ஒரே மாதிரியான சோஷலிச உற்பத்தி உறவுகள் இருக்கின்றன, அவற்றில் மனிதனை மனிதன் சுரண்டலுக்கும் ஒரு தேசிய இனம் மற்றொரு தேசிய இனத்தைச் சுரண்டலுக்கும் இடமில்லை, ஒரே மாதிரியான சமூக வர்க்கக் கட்டமைப்புகள் உழைக்கும் மக்களை மட்டுமே கொண்டிருக்கின்றன. மார்க்சிய-லெனினியமும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதமும் எல்லா சோஷலிச தேசிய இனங்கள் மற்றும் மக்களினங்களின் சித்தாந்த அடிப்படையாக இருக்கின்றன.

## நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும், அறிவு உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான வேறுபாடுகளை ஒழித்தல்

**நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான எதிர் நிலை.** பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பிலிருந்து அடிமை உடைமை அமைப்புக்கு மாறும் போக்கில் மக்கள் குடியிருப்பின் வரலாற்று ரகங்கள் என்ற முறையில் நகரங்களும் கிராமங்களும் தோன்றின. அடிமை உடைமை, நிலப் பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ அமைப்புகளில் நகரங்களும் கிராமங்களும் பகை முரணியல்பான நிலைமைகளில் வளர்ச்சியடைந்தன; நகரத்தைச் சேர்ந்த சுரண்டும் வர்க்கங்கள் நாட்டுப்புறத்தைச் சுரண்டின, அதன் சமூக-பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார வளர்ச்சியைத் தடை செய்தன. இரண்டுக்கும் இடையிலான முரணியல் வேறுபாடுகள் முதலாளித்துவ அமைப்பில் உச்சத்தை அடைந்தன. ''பண்ட உற்பத்தி மற்றும் முதலாளித்துவம் இருக்கின்ற எல்லா நாடுகளிலும் பொருளாதார, அரசியல், அறிவு சார்ந்த துறை, இதர எல்லா அம்சங்களிலும் நாட்டுப்புறத்தின் மீது நகரத்தின் ஆதிக்கம் சர்வப்பொதுவானது, தவிர்க்க முடியாதது'' என்று லெனின் எழுதினார்.*

சோஷலிசப் புரட்சியின் பொழுதும் சோஷலிச நிர்மாணத்தின் பொழுதும் நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலுள்ள எதிர்நிலை மறைகிறது. முதலாவதாக, தனியுடைமையை ஒழித்து சோஷலிசப் பொருளாதாரக் கட்டமைப்பைப் படைத்து சோஷலிச உற்பத்தி உறவுகளை நிறுவு

---

* V.I. Lenin, *Collected Works,* vol. 2, p. 229.

வதன் மூலம் இது நிறைவேற்றப்படுகிறது. சோஷலிசப் புரட்சி, தொழில்துறை, வர்த்தகம் ஆகியவை நாட்டுடைமை ஆக்கப்படுதல் இந்த எதிர்நிலையின் அடித்தளத்தை அரித் தழிக்கின்றன. கிராமத்தில் விவசாயிகளைக் கூட்டுறவுமய மாக்கலின் மூலமாகவே வர்க்க அடுக்கையும் வறுமையை யும் ஒழித்து சோஷலிச விவசாயி வர்க்கத்தைப் படைக்க முடியும். அதுவே நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடை யிலுள்ள அடிப்படையான வேறுபாடுகளை முழுமையாக வும் முடிவாகவும் ஒழிக்கும். பெரிய அளவு அரசு விவசாய நிறுவனங்களும் உற்பத்திக் கூட்டுறவுகளும் கிராமங்களின் பொருளாதார, கலாசார வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. நகர மற்றும் நாட்டுப்புற உழைக்கும் மக்களுக்கு இடையில் சமத்துவம், சகோதரத்துவம் பரஸ்பர உதவியை அடிப்ப டையாகக் கொண்ட புதிய உறவுகள் வளர்ச்சியடைகின்றன.

நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான எதிர் நிலையை ஒழிப்பதில் கேந்திரமான பாத்திரத்தை வகிக் கின்ற சோஷலிச மாற்றம் நகரத்தின் வழிகாட்டுதலில் நடைபெறுகிறது. சோஷலிசத் தொழில்துறைமயமாக்கல் புதிய நகரங்கள் தோன்றுவதையும் நகர மக்கள்தொகை வளர்ச்சியடைவதையும் ஊக்குவிக்கிறது, உற்பத்திச் சக்தி களை அதிக சமமாக வினியோகிப்பதை சாத்தியமாக்கு கிறது, கிராம மக்களின் பொருளாதார, கலாசார வாழ்க்கையில் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துகிறது.

கிராம மற்றும் நகரப் பிரதேசங்களுக்கு இடையில் எதிர்நிலையை ஒழிப்பதில் கலாசாரப் புரட்சி முக்கிய மான காரணியாக இருக்கிறது. அது கிராம மக்களின் கல்வித் தரத்தை உயர்த்துகிறது, அவர்களுடைய அன் றாட வாழ்க்கையை, ஆன்மிக வாழ்க்கையை மாற்றுகிறது, வேளாண்மை நிபுணர்களைப் பயிற்றுவிக்கிறது, கிராமங்

களுக்கு ஆசிரியர்களையும் டாக்டர்களையும் அளிக்கிறது.

சோவியத் ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கம் விவசாயி வர்க்கத்துக்கு நிபுணர்கள், விவசாய இயந்திரங்கள், சரக்குகளைக் கொடுத்து கூட்டுறவு இயக்கத்தில் உதவி செய்து நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையிலான எதிர்நிலையை ஒழிப்பதில் முக்கியமான பாத்திரத்தை வகித்தது. இந்த எதிர்நிலை வர்க்கப் போராட்ட நிலைமைகளின் கீழ் மறைந்தது. விவசாயி வர்க்கத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையிலான கூட்டணி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் காரணமாக விவசாயிகள் சோஷலிச எதிர்ப்புச் சக்திகளின் எதிர்ப்பை முறியடித்து சோஷலிசப் பாதையில் உறுதியாக முன்னேற முடிந்தது.

அதே சமயத்தில் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையில் உற்பத்தி, உழைப்பு, அன்றாட வாழ்க்கை, கலாசாரம் ஆகிய துறைகளில் சில அடிப்படையான வேறுபாடுகள் இன்னும் இருக்கின்றன. ஆனால் அவை பகை முரணியல்பு இல்லாத தன்மையைக் கொண்டவை. இந்த வேறுபாடுகள் சோஷலிச வளர்ச்சிச் செயல்முறையில் படிப்படியாக ஒழிக்கப்படுகின்றன.

**அறிவு உழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையிலான எதிர்நிலையை அகற்றுதல்.** அறிவு உழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையில் எதிர்நிலை வர்க்க பகை முரணியல்புச் சமூகங்கள் எல்லாவற்றிலும் உள்ளுறையான அம்சமாகும். அந்த எதிர்நிலையை ஒழிக்கக் கூடிய நிகழ்வுப் போக்கை சோஷலிசப் புரட்சி துவங்குகிறது. இந்த எதிர்நிலை வர்க்க பகை முரணியல்பின் பிரத்யேகமான வடிவமாகும். ஏனென்றால் எப்பொழுதுமே அறிவு உழைப்பு

சுரண்டுகின்ற வர்க்கங்களின் தனி உரிமையாக, உட லுழைப்பைச் சுரண்டுகின்ற சாதனமாக இருந்தது.

சோஷலிசப் புரட்சி நிறைவேற்றப்பட்டு பாட்டாளி வர்க் கம் ஆளும் வர்க்கம் ஆன பிறகு அறிவுஜீவிகள் சோஷ லிச நிர்மாணத்தில் பங்கெடுக்கத் தொடங்குகிறார்கள்.

சோஷலிச நிர்மாணத்தின் ஆரம்பக் கட்டங்களில் தொழி லாளி வர்க்கத்திடம் சொந்த அறிவுஜீவிகள் இல்லாதி ருந்த பொழுது அது முதலாளித்துவக் காலத்தைச் சேர்ந்த நிபுணர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டி யிருந்தது. ''ஒரு புதிய, கடினமான, மிகவும் பலனளிக் கின்ற பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். சுரண்டும் வர்க் கங்களைச் சேர்ந்த இந்த உறுப்பினர்கள் திரட்டியிருக்கின்ற எல்லா அறிவையும் அனுபவத்தையும் பெருந்திரளான உழைக்கும் மக்களின் முன்முயற்சி, ஆற்றல், உழைப்புடன் ஒருங்கிணைப்பதே அப்பிரச்சினையாகும். இத்தகைய ஒருங் கிணைப்பின் மூலமாக மட்டுமே பழைய முதலாளித்துவ சமூகத்திலிருந்து புதிய சோஷலிச சமூகத்துக்குச் செல் வதற்குப் பாலத்தைக் கட்ட முடியும்'' என்று லெனின் எழுதினார்.* ஆகவே அறிவு உழைப்புக்கும் உடலுழைப் புக்கும் இடையில் எதிர்நிலை, சமூக வாழ்க்கையில் பழைய அறிவுப் பகுதியின் பாத்திரத்தை மாற்றி புதிய அறிவுப் பகுதியை உருவாக்கும் பொழுது ஒழிக்கப்படுகிறது.

சோஷலிச அமைப்பில் அறிவு உழைப்பு தனிப்பட்ட வர்க்கம் அல்லது சமூக அடுக்கின் தனியுரிமையாக இருந்த நிலை முடிந்து விடுகிறது. அது சமூகத்தின் எல்லா உறுப் பினர்களுக்கும் உரியதாகிறது. உடலுழைப்பில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களும் கூட்டுப்பண்ணை விவசாயிகளும் மூளை

---

* V. I. Lenin, *Collected Works,* vol. 42, pp. 77—78.

உழைப்பின் வெவ்வேறு வடிவங்களுக்குள் இழுக்கப் படுகிறார்கள் (உதாரணமாக, உற்பத்தியில் அபிவிருத்திகள் சம்பந்தமாக ஆலோசனைகளைக் கூறுதல், அதை நிர் வகிப்பதில் பங்கெடுத்தல்). தொழிலாளர்களும் விவசாயி களும் பல்வேறு சோஷலிச ஜனநாயக உறுப்புகளின் மூல மாக அரசு மற்றும் சமூக விவகாரங்களை நிர்வகிப்பதில் பங்கெடுக்கிறார்கள். விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற் றத்தின் விளைவாக உடலுழைப்பில் அறிவின் பங்கும் தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

சோஷலிச அமைப்பில் தொழிலாளர்கள், கூட்டுறவில் கொண்டு வரப்பட்டுள்ள விவசாயிகள், அவர்களுடைய குழந் தைகள், ஆகியோருக்கு எல்லா மட்டங்களிலும் ஜனநாயக ரீதியான இலவசக் கல்வி அளிக்கப்படுவதன் மூலம் அவர் களின் அறிவு வளர்ச்சிக்கு உத்தரவாதமளிக்கப்படுகிறது. மேலும், அறிவு சார்ந்த எத்தகைய உழைப்பிலும் தேர்ச்சி பெறுவதில் எத்தகைய சமூகக் கட்டுப்பாடுகளும் விதிக்கப் படுவதில்லை.

அறிவு உழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையிலான எதிர்நிலை ஒழிக்கப்படுதல் உடலுழைப்பைச் சுரண்டுவதில் அறிவுஜீவிகள் பங்கெடுத்தல் முடிந்து விட்டதைக் குறிக் கிறது. புதிய அறிவுப் பகுதியினர் தம் பிறப்பாலும் பொது வான சோஷலிச இலட்சியங்கள், ஜீவாதாரமான நலன் களாலும் இரண்டு நேச வர்க்கங்களுடனும் (தொழிலாளர் மற்றும் விவசாயிகளுடனும்) இணைக்கப்பட்டிருக்கிறார்கள். அறிவுஜீவிகள் தனிச்சலுகைகளைக் கொண்ட சமூக அடுக்கு அல்ல, தொழிலாளர்களையும் விவசாயிகளையும் போன்று அதே ரகத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்களே.

தனிச்சொத்தையும் மொத்த சுரண்டல் அமைப்பையும் ஒழித்தல் அறிவு உழைப்பு மற்றும் உடலுழைப்பில் ஈடு படுபவர்களுக்கு இடையில் பகையியல் உறவுகளுக்கான பொருளாதார அடிப்படையை ஒழிக்கிறது. வரலாற்றில்

முதல் தடவையாக அறிவு உழைப்பாளிகள், உடல் உழைப் பாளிகளின் நடவடிக்கைகள் சோஷலிச இலட்சியங்களால் உத்வேகமூட்டப்பட்டு ஒற்றை படைப்பு நிகழ்வுப் போக்காக அமைகின்றன.

**கலாசாரப் புரட்சி**

**கலாசாரமும் கல்வியும்.** லெனின் வகுத்தளித்த கலாசாரப் புரட்சித் தத்துவம் சோஷலிச நிர்மாணத்துக்கு அவருடைய திட்டத்தின் உட்பகுதியாகும். அது முதலில் சோவியத் யூனியனிலும் பின்னர் மற்ற சோஷலிச நாடுகளிலும் அமுலாக்கப்பட்டது. சோஷலிசத்துக்கு மாறுகின்ற ஒவ்வொரு நாட்டுக்கும் அது இன்றியமையாதது, ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் அதன் முற்போக்கான தேசிய கலாசார மரபு களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பிரத்யேகமான முறை யில் அமுலாக்கப்படுகிறது. கலாசாரப் புரட்சி இரண்டு அம் சங்களைக் கொண்டிருக்கிறது: ஒரு பக்கத்தில அது கடந்த கால கலாசார மரபை விமர்சன ரீதியாகப் பகுத்தாராய்ந்து சுரண்டும் வர்க்கத்தின் சித்தாந்தத்தை அகற்றுகிறது; மறு பக்கத்தில், அது புதிய, சோஷலிசக் கலாசாரத்தை நிறுவு கிறது. ஆனால் கலாசாரப் புரட்சியின் உள்ளடக்கம் இன் னும் விரிவானது.

கலாசாரப் புரட்சி மூன்று தொகுதியான பிரச்சினை களைத் தீர்க்கிறது. முதல் தொகுதியில் கேந்திரமான பிரச்சினை உழைக்கும் மக்களுடைய சித்தாந்த, அரசியல் கல்விச் சாதனம் என்ற முறையில் அவர்கள் மத்தியில் மார்க்சிய-லெனினியத்தைப் பரப்புதலாகும். அதே சமயத் தில் மக்கள் மத்தியில் கல்லாமை ஒழிக்கப்படுகிறது, சோஷ லிசத் தொழில்துறை, விவசாயத் துறையில் வேலை செய் வதற்குரிய அறிவையும் திறமையையும் உழைக்கும் மக்

கள் பெறுகிறார்கள். சோஷலிச இலவச, பொதுக் கல்வி அமைப்பு நிறுவப்படுகிறது.

இரண்டாவது தொகுதியைச் சேர்ந்த கடமைகளின் நோக்கத்தை லெனின் பின்வருமாறு வர்ணித்தார்: ''வெற்றிகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சியை, இதுவரை ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்து வந்திருக்கின்ற முதலாளித்துவக் கலாசாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பவியலுடன் இணைத்தல்.'' *

பதிப்பகங்கள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள், கலையரங்குகள், வானொலி, இதரவற்றை நாட்டுடைமையாக்கல் இதை உறுதிப்படுத்துகிறது. அவை எல்லா உழைக்கும் மக்களின் கலாசாரக் கல்விக்குச் சாதனமாகப் பயன்படத் தொடங்குகின்றன.

மூன்றாவது தொகுதியைச் சேர்ந்த கடமைகள் சோஷலிசக் கலாசாரம், தொழிலாளி, விவசாயி பின்னணியைச் சேர்ந்த புதிய அறிவுப் பகுதியை உருவாக்குதலுடனும் பெருந்திரளான மக்களை சுறுசுறுப்பான படைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி, கலாசார சாதனைகள் மூலம் அவர்களுடைய அக உலகத்தை வளப்படுத்துதலுடனும் சம்பந்தப்பட்டவையாகும். எல்லா வர்க்கங்கள், சமூக அடுக்குகளுக்குப் பொதுவான ஒற்றைக் கலாசாரம் சோஷலிச அமைப்பில் மட்டுமே தோன்றுகிறது.

## முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டத்தின் விளைவுகள்

முதலாளித்துவத்தைப் புரட்சிகரமான முறையில் சோஷலிசமாக மாற்றுதல் மாறும் காலகட்டத்தின் சாராம்

* V.I. Lenin, *Collected Works*, vol. 29, p. 74.

சமாகும். சோஷலிச மாற்றங்களின் கால அளவும் வேக விகிதமும் ஒரு குறிப்பிட்ட நாட்டிலுள்ள உள்நாட்டு, வெளி நாட்டு நிலைமைகளைப் பொறுத்திருக்கின்றன. எல்லா நாடுகளிலும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத் துக்கு மாறுவது சார்புநிலையில் நீண்ட காலகட்டத்தில் நடைபெறுகிறது.

சோவியத் யூனியனில் இந்த மாற்றத்தை நிறைவேற்ற கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் தேவைப்பட்டன என்றால் அக்காலத்தில் இருந்த ஒரே சோஷலிச நாட்டின் மீது சுற்றியிருந்த முதலாளித்துவ உலகம் காட்டிய பகைமையே அதற்குக் காரணமாகும். அத்துடன் சோவியத் ருஷ்யாவில் வர்க்கப் போராட்டம் ஆயுதமேந்திய கலகம், உள்நாட்டுப் போர் ஆகிய தீவிரமான வடிவங்களை அடைந்தது. அதன் விளைவாக அங்கே சோஷலிச நிர்மாணக் கடமைகளை உடனே எடுத்துக் கொள்ள முடியவில்லை. ருஷ்யாவின் பொருளாதாரம் சார்புநிலையில் பலவீனமாக இருந்த படியால், முதல் உலக போர் நடைபெற்ற பொழுது மூன்று ஆண்டுகளும் உள்நாட்டுப் போர் நடைபெற்ற பொழுது நான்கு ஆண்டுகளும் பேரழிவுக்கு உள்ளானபடியால் மாறும் காலகட்டம் மிகவும் நீண்டதாக இருந்தது.

மத்திய ஐரோப்பா, தென் கிழக்கு ஐரோப்பாவில் மக் கள் ஜனநாயக நாடுகளில் மாறும் காலகட்டம் 10முதல் 15 ஆண்டுகள் வரை நீடித்தது. நாஜி ஜெர்மனியும் இராணுவ வெறி பிடித்த ஜப்பானும் தோற்கடிக்கப்பட்டதன் விளை வாகத் தோன்றிய சாதகமான சர்வதேச நிலைமை பல வழிகளிலும் இதற்கு உதவியது. இந்த நாடுகள் சோஷலிச நிர்மாணத்தில் ஈடுபட்டிருந்த பொழுது சோவியத் யூனியன் அவற்றுக்கு ஆதரவும் உதவியும் அளித்தது.

இந்த சகாப்தத்தில் சோஷலிச நிர்மாணப் பாதையைப் பின்பற்றுகின்ற நாடுகளில் மாறும் காலகட்டத்தின் கால

அளவு, சர்வதேச அரங்கத்தில் சக்திகளின் சமநிலை சோஷலிசத்துக்கு சாதகமான முறையில் தீவிரமாக மாற்றமடைந்திருத்தல், சோஷலிச மாற்றங்களை நிறைவேற்றுகின்ற நாடுகளுக்கு சோஷலிசக் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகள் அளிக்கின்ற உதவி, ஆதரவு ஆகிய சர்வதேசக் காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது, அவ்விதமே தொடர்ந்து நிர்ணயிக்கப்படும்.

தொழில்துறையில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ அரசுகளிலும் பொருளாதார ரீதியில் குறைவான வளர்ச்சியைக் கொண்ட நாடுகளிலும் மாறும் காலகட்டத்தின் கால அளவு வேறுபட்டிருக்கும்; ஏனென்றால் இந்த நாடுகளில் சோஷலிசத்துக்கு மாறுகின்ற பொருளாயத முன்தேவைகள் வேறுபடுகின்றன; அவற்றில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர உணர்வும் ஸ்தாபன மட்டமும் வேறுபடுகிறது.

மார்க்சிய-லெனினியக் கட்சியின் நடவடிக்கை இக்கால அளவை நிர்ணயிக்கின்ற முக்கியமான அகவயக் காரணியாக இருக்கிறது. விஞ்ஞானத் தத்துவத்தின் அடிப்படையில் மக்களுக்கு வழிகாட்டுகின்ற கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிச நிர்மாணக் கடமைகளைத் தீர்ப்பதற்கு மிகவும் சிறந்த, செயல்திறமுடைய வழிமுறைகளைக் கண்டுபிடித்துக் கையாளக் கூடிய கம்யூனிஸ்ட் கட்சி முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் கால அளவைக் குறைக்க முடியும். அதே சமயத்தில் கட்சி மற்றும் அரசுத் தலைமை செய்கின்ற தவறுகளும் தப்புக் கணக்குகளும் சோஷலிச நிர்மாணத்தின் வேகத்தைக் குறைத்து விடும்; ஆக, மாறும் காலகட்டம் நீடிக்க நேரலாம்.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டத்தின் சாராம்சம், கால அளவை வலதுசாரி, ''இடது

சாரி'' சந்தர்ப்பவாதிகள் திரித்துக் கூறுகிறார்கள். சமூக சீர்திருத்தவாதிகளால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற வலதுசாரி சந்தர்ப்பவாதம் சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் குண ரீதியான எல்லைக் கோடு இல்லையென்று கூறுகிறது. சமூக சீர்திருத்தவாதிகள் ''ஜனநாயக சோஷலிசம்'', அதைப் போன்ற பல்வேறு கருதுகோள்களை முன்வைக்கிறார்கள், சோஷலிசத்தின் மூல வேர்கள் முதலாளித்துவத்திலிருந்து தோன்றி வளர்ச்சி அடையும் என்று கூறுகிறார்கள். இத்தவறான கருத்து, சோஷலிசப் புரட்சி இல்லாமலே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு வளர்ச்சி அடைய முடியும் என்னும் முடிவுக்கு இட்டுச் செல்கிறது. இது, முதலாளித்துவத்தைப் புரட்சிகரமான முறையில் சோஷலிசமாக மாறுகின்ற நிகழ்வுப் போக்கு என்ற முறையில் மாறும் காலகட்டத்துக்கு அவசியமில்லாமற் செய்கிறது. ''ஜனநாயக சோஷலிசம்'' முதலாளித்துவத்தின் அடிப்படைகளை—உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமை, முதலாளித்துவ அரசியல் ''பன்மைவாதத்தை'' (அதில் தொழிலாளி வர்க்கத்துக்கு முதலாளித்துவ சமூக அமைப்பில் ''சமத்துவமான'' பங்குதாரர் என்னும் பாத்திரம் மட்டுமே அளிக்கப்படுகிறது)—அப்படியே விட்டு வைக்கிறது. சமூக சீர்திருத்தவாதிகளின் ''ஜனநாயக சோஷலிசம்'' உண்மையில் சிறிதளவு சீர்திருத்தம் செய்யப்பட்ட, ஜனநாயகப்படுத்தப்பட்ட முதலாளித்துவமே.

குட்டி முதலாளி வர்க்கக் கருத்துகளை வெளியிடுகின்ற ''இடதுசாரிகளும்'' மாறும் காலகட்டத்தின் சாராம்சத்தையும் கால அளவையும் திரித்துக் கூறுகிறார்கள். அவர்கள் புறவய நிலைமைகளையும் சமூக வளர்ச்சி விதிகளையும் புறக்கணித்து சோஷலிசப் புரட்சியை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கோருகிறார்கள். ஆனால் சோஷ

லிசப் புரட்சியின் ஆரம்பக் கட்டங்களை ஏற்கெனவே கடந்து வந்திருக்கின்ற நாடுகளில் சோஷலிசம் நிர்மாணிக்கப்படு இன்ற சாத்தியத்தைப் பற்றி அவர்களுக்கு நம்பிக்கை கிடை யாது.

மாறும் காலகட்டம் முடிந்த பிறகும் சோஷலிசம் இன் னும் முதிர்ச்சி இல்லாமலிருக்கிறது. ஆகவே புதிய சமூகத் தின் பொருளாதார, அரசியல், சமூக, ஆன்மிக அடிப் படைகளை வலுப்படுத்துவது அவசியமாகிறது. அன்றாட வாழ்க்கையில் சோஷலிச வரையளவுகளையும் கோட் பாடுகளையும் உறுதிப்படுத்த வேண்டும். இந்தக் கட்டத் தில் சோஷலிச சமூகத்தின் சில துறைகள் இன்னும் பூர்த் தியடையவில்லை. ஆக, கலாசாரப் புரட்சியை முழுமை யாக நிறைவேற்றுதல், புதிய சோஷலிச மனிதன், சோஷ லிச வாழ்க்கை முறையைப் பூரணமாக்குதல் மாறும் கால கட்டம் முடிவடைந்த பிறகும் நடைபெறுகின்றன.

முதலாளித்துவத்திடமிருந்து சமூக வாழ்க்கையில் சரி வர வளர்ச்சியடையாத துறைகளை சோஷலிசம் பெறு கிறது. உதாரணமாக, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் வலிமையான பொருளாதாரம் உழைக்கின்ற பெருந்திரளான மக்களின் கலாசாரப் பின்தங்கிய நிலை மையுடன் சேர்ந்து இருக்க முடியும். இத்தகைய சமமற்ற நிலையின் விளைவாக, மாறும் காலகட்டம் முடிவடை கின்ற பொழுது சமூக வாழ்க்கையின் பல்வேறு துறைகள் சோஷலிச முதிர்ச்சியில் வெவ்வேறு மட்டங்களில் இருக் கின்றன.

மாறும் காலகட்டத்தின் முடிவில் ஏற்படுகின்ற சோஷ லிச சமூகம் பல்தொகுதியான அமைப்பு ஆகும். "ஒவ் வொருவரிடமிருந்தும் அவருடைய திறமைக்கு ஏற்ப, ஒவ் வொருவருக்கும் அவருடைய உழைப்புக்கு ஏற்ப" என்பது அதன் அடிப்படைக் கோட்பாடாகும்.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டத்தில் வர்க்கப் போராட்டமும் பகையியல் முரண் பாடுகளும் சமூக வளர்ச்சியின் இயக்கு சக்திகளாகப் பயன் படுகின்றன. சுரண்டும் வர்க்கங்களை ஒழித்த பிறகு இந்த சக்திகள் முடிந்து விடுகின்றன. சோஷலிச நிர்மாண நிகழ்வுப் போக்கின் போது சமூக வளர்ச்சியின் புதிய இயக்கு சக்திகள் தோன்றி செயல்படத் தொடங்குகின்றன. பகை யியல் அல்லாத முரண்பாடுகள், விமர்சனம் மற்றும் சுய விமர்சனம், மக்களினங்களுக்கு இடையில் நட்புறவு, சோஷலிச நாட்டுப்பற்று, தார்மிக, சமூக-அரசியல் ஒற்றுமை ஆகியவை அத்தகைய இயக்கு சக்திகளாகும்.

எந்த சமூகமும் மக்களின் பொருளாயத மற்றும் அறிவு சார்ந்த நடவடிக்கைகளின் மூலமாக செயல்படுகிறது, வளர்ச்சியடைகிறது. சமூக வளர்ச்சி விதிகள் மக்களுடைய செய்முறை நடவடிக்கையின் மூலமாக மட்டுமே செல்தகை மையை அடைகின்றன. வெவ்வேறு வரலாற்றுக் கட்டங் களில் சமூகத்துக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவு வெவ்வேறு வடிவங்களை அடைந்தது. மனிதனுக்கும் சமூ கத்திற்கும் இடையில் ஒத்திசைவான ஒற்றுமையை, வளர்ச்சி யை ஏற்படுத்துகின்ற முதல் சமூக அமைப்பு சோஷலிசமே.

அத்தியாயம் ஏழு

# சோஷலிசம்—
# புதிய ரகத்தைச் சேர்ந்த சமூகம்

## உழைக்கும் மக்களின் சமூகம்

**எல்லோருக்கும் உழைப்பு.** மக்கள் அனைவரும் சுதந்திர மாக உழைக்கின்ற, தமது சொந்த உழைப்பின் விளை பொருட்களைக் கொண்டு வாழ்கின்ற நீதியான சமூகத் தைப் பற்றிப் பேரறிஞர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கனவு கணடார்கள். இக்கனவு சோஷலிச சமூகத்தில் நன வாகியது. கம்யூனிசத்தை நிர்மாணிப்பது அந்த சமூகத்தின் மகத்தான, மேன்மையான இலட்சியமாகும்.

முதலாளித்துவத்தினால் திடகாத்திரமான உடலுடைய எல்லோருக்கும் வேலை தர முடியவில்லை. வேலையில் லாத் திண்டாட்டம் முதலாளித்துவ வளர்ச்சியின் உள் ளுறையான அம்சமாக இருக்கிறது. வேலை உள்ளவர்களும் கூட வேலை இல்லாதவர்களைக் காட்டிலும் நல்ல நிலை மையில் இல்லை; ஏனென்றால் அவர்கள் தங்களுக்காக உழைக்கவில்லை, உற்பத்திச் சாதனங்களை உடைமையாக வைத்திருக்கின்ற முதலாளிகளுக்காக அவர்கள் உழைக் கிறார்கள். முதலாளிகள் மேன்மேலும் அதிகமான லா பங்களைப் பெறுவதற்காக அவர்களை ஈவிரக்கமில்லாமல் சுரண்டுகிறார்கள்.

சுரண்டும் வர்க்கங்களை ஒழித்து தனியுடைமைக்கு பதி லாக பொதுமக்கள் உடைமையை ஏற்படுத்திய பிறகு மனி



16—1184

தனை மனிதன் சுரண்டுதல் முடிந்து விடுகிறது. "உழைக் காதவர்களுக்கு உணவு கிடையாது" என்னும் சோஷலிசத் தின் நியாயமான குறிக்கோள் அமுலாக்கப்படுகிறது. திட காத்திரமான உடலுடைய ஒவ்வொரு நபரும் உழைக்க வேண்டும், ஏனென்றால் உழைப்பு அவருடைய உரிமை யாகவும் கடமையாகவும் இருக்கிறது. உழைக்க மறுப்பவர் களைப் பற்றி உழைக்கும் மக்கள் அலட்சியமாக இருக்க முடியாது. சோஷலிச சமூகத்தில் திடகாத்திரமான உடலு டைய ஒவ்வொருவருக்கும் சுரண்டல் இல்லாத உழைப்பு தரப்படுகின்ற நிலைமையில் சமூகத்தின் நன்மையை மறந்து உழைக்க மறுப்பது புதிய சமூக அமைப்பின் பொருளாதார, தார்மிகக் கோட்பாடுகளுடன் பொருந்தாது.

எந்த சமூகத்திலும் உழைப்பு என்பது வாழ்க்கைக்கு, இருத்தலுக்கு அடிப்படையாக இருக்கிறது. சோஷலிச அமைப்பில் உழைப்பு கட்டாயம்; ஆனால் அரசு தன் குடி மக்களை உழைக்குமாறு கட்டாயப்படுத்துகிறது என்பது இதன் அர்த்தமல்ல. சமூகம், தனிமனிதர்களின் சுபிட்சத் துக்கு உழைப்புதான் தோற்றுவாய் என்ற உண்மையை அங்கீகரிப்பதை இது குறிக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் மக்கள் பசியைக் கண்டு அஞ்சி வேலை செய்கிறார் கள்; ஆனால் சோஷலிசத்தின் கீழ் கூட்டு உழைப்பின் பலன்களைப் பகிர்ந்து கொள்ளாமல் ஒருவரும் வாழ முடி யாது என்பதை அவர்கள் உணர்கிறார்கள். இந்தப் பொதுக் கருவூலத்துக்கு ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்ய வேண் டும் என்பது நியாயமே.

சோஷலிசத்தின் கீழ் ஒரு நபருடைய சமூக அந்தஸ்து அவருடைய உழைப்பின் பலன்களினால் நிர்ணயிக்கப் படுகிறது. சோவியத் யூனியன் அரசியலமைப்புச் சட்டத்தின் 14வது ஷரத்தில் இதைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. சுரண்டலில்லாத சோவியத் மக்களுடைய உழைப்புதான்

சமூகச் செல்வத்திற்கு, ஒவ்வொரு தனிநபருடைய நல் வாழ்க்கைக்கு ஆதாரம்.

முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்திச் செயல்முறையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு இடையிலான உறவுகள் ஆதிக்கம், கீழ்ப்படிதலை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன; ஆனால் சோஷலிசத்தின் கீழ் அவை, சம அந்தஸ்தைக் கொண்ட உறுப்பினர்கள் மத்தியில் கூட்டாண்மை, நட்புறவான ஒத்துழைப்பு, பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

சோஷலிசத்தின் கீழ் உடலுழைப்புக்கும் அறிவு உழைப்புக்கும் இடையே எதிர்நிலைக்கு இடமில்லை என்றாலும் அவற்றுக்கு இடையிலும் விவசாய உழைப்புக்கும் தொழில் துறை உழைப்புக்கும், தேர்ச்சியுள்ள உழைப்புக்கும் தேர்ச்சி யில்லாத உழைப்புக்கும் இடையிலும் இன்னும் கணிசமான வேறுபாடுகள் இருக்கின்றன. அதிகமான உடலுழைப்பைப் பயன்படுத்த வேண்டிய தேர்ச்சியில்லாத உழைப்பு ரகங்களை ஒழிப்பதைப் பற்றி சோஷலிச சமூகம் அக்கறையுடன் இருக்கிறது.

உழைப்பு, உற்பத்தி, தொழில்நுட்பக் கட்டுப்பாட்டின் வரையளவுகளைக் கண்டிப்பாகவும் உணர்வு பூர்வமாகவும் கடைப்பிடித்து சோஷலிச உழைப்பு அமைக்கப்படுகிறது.

உழைப்பாளிகளின் உயர்ந்த படைப்புத் திறமை சோஷலிச சமூகத்தின் குணாம்சமாகும். அது விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சியுடன், புதிய தொழில்நுட்பவியலை ஆள்வதுடன், உற்பத்தியை நிர்வகிப்பதில் கூட்டாகப் பங்கெடுப்பதுடன் இணைந்திருக்கிறது. படைப்பு நடவடிக்கை பொருளாயத ரீதியிலும் தார்மிக ரீதியிலும் ஊக்குவிக்கப் படுகிறது; அது ஒவ்வொரு உழைப்பாளிக்கும் மொத்தமாக சமூகத்துக்கும் பரஸ்பரம் அனுகூலமாக இருக்கிறது.

**சோஷலிசத்தின் கீழ் உழைப்புக்கு ஊதியம்.** சோஷலிச சமூகம் உழைக்கும் மக்களைச் சுரண்டலிலிருந்து விடுவிக்கிறது; வேலைக்கான உரிமையையும் ஒரு நபர் தன்னுடைய தொழிலை சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் உத்தரவாதம் செய்கிறது. சோஷலிசத்தின் கீழ் உழைப்புக்கு ஊதியம் எப்படி அளிக்கப்படுகிறது? உழைக்கும் மக்களுடைய தேவைகள் எப்படி பூர்த்தி செய்யப்படுகின்றன?

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டம் அபரிமிதமான அளவில் நுகர்வுப் பொருட்களை இன்னும் உற்பத்தி செய்யவில்லை. ஆகவே மக்களுடைய தேவைகளுக்குத் தக்கபடி அவற்றை வினியோகிக்க முடியாது. மேலும், உழைப்பு சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஜீவாதாரமான தேவையாக இன்னும் மாறவில்லை. ஆகவே ஒரு நபருடைய உழைப்பின் அளவுக்கும் தரத்துக்கும் தக்கபடி வினியோகம் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது; அது ஒன்றே சமூக சமத்துவத்தின் சரியான, நியாயமான வெளியீடாகும்.

உழைப்பின் அளவு உழைத்த நேரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. உழைப்பின் சிக்கலான தன்மை, அவசியமான தேர்ச்சி, அதில் உள்ள பொறுப்பு, இதரவற்றைக் கொண்டு உழைப்பின் தரம் முடிவு செய்யப்படுகிறது.

சமூக உற்பத்தியில் ஒவ்வொரு உழைப்பாளியும் செய்த உழைப்பின் அளவைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் சமமான வினியோகம் (சோஷலிச நிர்மாணத்தின் போது சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிச நாடுகளிலும் இதற்கு உதாரணங்கள் உண்டு) செய்வது தவறானது என்று நிரூபிக்கப்பட்டது. கூலியைச் சமப்படுத்துவது அநீதியானது; ஏனென்றால் திறமையுள்ள தொழிலாளிக்கும்

திறமை அதிகமில்லாத தொழிலாளிக்கும் சமமான ஊதியம் அளித்தால் உழைப்பின் தரத்தை மேம்படுத்துகின்ற பொருளாயத ஊக்கம் இல்லாமற் போய் விடுகிறது.

வினியோகத்தைப் பற்றிய சோஷலிசக் கோட்பாடு உழைப்பு, நுகர்வின் அளவின் மீதான அரசுக் கட்டுப்பாட்டின் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. ஆகவே தொழிலாளர்கள் அல்லது உழைப்புக் கூட்டுகளுக்கு அவற்றின் உழைப்பின் அளவுகளைக் கணக்கிட்டு ஊதியம் அளிக்கப்படுகிறது. கூலி குறித்து அரசுக் கட்டுப்பாடு, எல்லா உழைப்பாளிகளுக்கும் ஊதியம் கிடைத்தல், பால், வயது அல்லது தேசிய இன வேறுபாடின்றி சமமான உழைப்புக்கு சமமான ஊதியம், குறைந்தபட்சக் கூலி, உழைப்பு மற்றும் கூலியின் அளவுகளை நிர்ணயிப்பதில் தொழிற்சங்கங்கள் பங்கெடுத்தல் ஆகியவற்றை உத்தரவாதம் செய்கிறது. திறமையான உழைப்புக்கு போனஸ் தருவதைப் போன்ற பொருளாயத ஊக்க நிதிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

விவசாயக் கூட்டுறவுகளில் உழைப்பும் ''ஒவ்வொருவருக்கும் அவருடைய உழைப்புக்கு ஏற்ப'' என்னும் சோஷலிசக் கோட்பாட்டின்படி ஊதியம் அளிக்கப்படுகிறது. அரசு நிறுவனங்களைப் போல இங்கும் கூலிகள், போனஸ்கள், பொருளாயத ஊக்க நிதிகள் ஆகியவை உத்தரவாதமளிக்கப்படுகின்றன. கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த விவசாயிக்கு அவருடைய ஊதியத்தில் பெரும் பகுதி பணமாகவும் சிறு பகுதி விவசாயப் பொருளாகவும் அளிக்கப்படுகிறது.

சோஷலிச அரசு பொருளாயத ஊக்க நிதிகளைத் தார்மிக ஊக்கமளிக்கின்ற பாராட்டு முறைகளுடன், ஒரு தொழிலாளி அல்லது உழைப்புக் கூட்டின் உழைப்புச் சாதனைகளுக்கு அரசு முறையிலான பாராட்டுடன் இணைக்கிறது.

உழைப்புக்குத் தகுந்த வினியோகம் பண வடிவத்தில் எடுத்துரைக்கப்படுகின்ற ஊதிய முறையின் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. உழைப்பின் பலன்கள், அதன் உற்பத்தித் திறன் மற்றும் நிலைமைகளுடன் கூலி கறாராகப் பொருந்தும்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வினியோகத்தில் சில சமயங்களில் ஏற்படுகின்ற குறைகள் (உழைப்பின் உற்பத்தித் திறனைக் காட்டிலும் கூலி உயர்வு அதிகமாக இருப்பது அல்லது மாறாக, உழைப்பில் சிறந்த சாதனைகள் இருந்தாலும் அதற்குத் தக்கபடி ஊதியம் அளிக்கப்படாதிருத்தல்) அகற்றப்பட்டு வருகின்றன. கூலியை நிர்ணயம் செய்வதில் புதிய நடவடிக்கைகள் உழைப்பாளிகள் தம்முடைய உழைப்பில் அதிகமான அக்கறை எடுத்துக் கொள்வதைத் தூண்டுகின்ற முறையில் செய்யப்படுகின்றன.

உழைப்பின் அளவுக்கும் தரத்துக்கும் தக்கபடி ஊதியம் என்னும் சோஷலிசக் கோட்பாடு சமூக நீதியின் வெளியீடாகும். சமூக நலன்களும் சொந்த நலன்களும் ஒத்திசைவான முறையில் ஒன்றுசேருவதை அது உறுதிப்படுத்துகிறது. உயர்ந்த தரமுடைய உழைப்பு உழைப்பாளியின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது, நாட்டின் தேசியச் செல்வத்தை அதிகப்படுத்துகிறது. எல்லோரும் சுபிட்சமடைவதற்கு சாத்தியமான ஒரே வழியாக சோஷலிச உழைப்பு இருக்கிறது.

**சோஷலிச உடைமை.** பொருளாயத செல்வத்தின் சமூக உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வின் அமைப்பில் வர்க்கங்கள், சமூக அடுக்குகளின் நிலை, உடைமையைப் பற்றி அவற்றின் உறவுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது.

உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமை சோஷலிசப் பொருளாதார' அமைப்புக்கு அடிப்படையாக இருக்கிறது.

சோவியத் யூனியனில் அரசு (பொதுமக்கள்) உடைமை, கூட்டுப்பண்ணை-கூட்டுறவு உடைமை என்னும் இரு வடிவங்களில் இது இருக்கிறது. தொழிற்சங்கங்கள், இதர வெகுஜன ஸ்தாபனங்களின் உடைமையும் சோஷலிச உடைமையில் அடங்கும்.

அரசு உடைமை, அதாவது சோவியத் மக்களின் பொது உடைமை சோஷலிச உடைமையின் முக்கியமான வடிவமாகும். உற்பத்திச் சாதனங்களின் கூட்டு உடைமையாளர்கள் என்ற முறையில் சோஷலிச சமூகத்தின் உறுப்பினர்களுக்கு இடையிலான உறவை அது வெளியிடுகிறது. நிலம், கனிப்பொருட்கள், தண்ணீர், காடுகள் ஆகியவை முற்றிலும் அரசுடைமை ஆகும். தொழில்துறை, கட்டுமானம், விவசாயத்தில் அடிப்படையான உற்பத்திச் சாதனங்கள், போக்குவரத்து, செய்தித் தொடர்புச் சாதனங்கள், வங்கிகள், அரசு வர்த்தக ஸ்தாபனங்களின் உடைமை, இதரவை அரசு உடைமை ஆகும். சோஷலிச சமூகத்தின் இயக்குச் சக்தியான தொழிலாளி வர்க்கம் அரசு உடைமையின் அடிப்படையில் செயல்படுகிறது.

கூட்டுப்பண்ணை-கூட்டுறவு உடைமை சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களின் உடைமையாக இருக்கிறது. கூட்டுப்பண்ணைகள் விவசாய இயந்திரங்கள், கருவிகள், போக்குவரத்து சாதனங்கள், பல்வேறு கட்டிடங்கள், நீர்ப்பாசன அமைப்புகள், கால்நடை, உற்பத்திப் பொருள், நிதிகள் ஆகியவற்றை உடைமையாகக் கொண்டிருக்கின்றன. மீன் பிடிக்கின்ற கூட்டுப்பண்ணைகள் மீன் பிடிக்கும் படகுகளை உடைமையாக வைத்திருக்கின்றன. இந்த உடைமை வடிவத்தின் வளர்ச்சிக்கு கூட்டுப்பண்ணை விவசாயிகளின் உழைப்பு முக்கியமான தோற்றுவாயாக இருக்கிறது.

உடைமையின் இவ்வடிவம் சமூகமயமாக்கலின் அளவில் அரசு உடைமையிலிருந்து வேறுபடுகிறது. அரசு நிறுவ

ணங்களின் உற்பத்திப் பொருள் அனைத்து மக்களின் உடைமையாகும்; ஆனால் கூட்டுப்பண்ணையின் உற்பத்திப் பொருள் அதன் உறுப்பினர்களுக்கு மட்டுமே சொந்தமாகும். கூட்டுப்பண்ணையின் உறுப்பினர்களின் பேரவைக் கூட்டமும் அது தேர்ந்தெடுக்கின்ற நிர்வாகமும் உடைமையையும் உற்பத்திப் பொருளையும் வினியோகம் செய்கிறது. கூட்டுப்பண்ணையின் விதிமுறைகள், கூட்டுப்பண்ணையின் உற்பத்திப் பொருளை வாங்குவதற்கு அரசின் திட்டத்தின்படி அவை வருமானத்தைச் செலவிடுகின்ற நோக்கத்தையும் தொகையையும் முடிவு செய்கின்றன.

சோஷலிச அமைப்பு குடிமக்கள் சொந்த உடைமை வைத்துக் கொள்வதை அனுமதிக்கிறது. தனிநபருடைய அல்லது குடும்ப நுகர்வுப் பொருட்கள் அதிலடங்கும். அது உழைப்பின் விளைவாகக் கிடைக்கும் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒரு நபருடைய உழைப்புக்குத் தக்கபடி வினியோகம் என்னும் சோஷலிசக் கோட்பாடு செயல்படுகின்ற பொழுது, ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படுகின்ற நுகர்வு நிதிப் பங்கை உபயோகிக்கின்ற சாதனமாக சொந்த உடைமை பயன்படுகிறது. சொந்த உடைமை வைத்துக் கொள்கின்ற உரிமைக்கு சோவியத் யூனியன் அரசியல் சட்டம் உத்தரவாதமளிக்கிறது. குடிமக்கள் சொந்த உடைமையை வைத்துக் கொள்கின்ற உரிமையும் வாரிசு அதைப் பெற்றுக் கொள்கின்ற உரிமையும் அரசினால் பாதுகாக்கப்படுகின்றன.

சொந்த உடைமை பற்றிய கம்யூனிஸ்ட் நிலையைப் பற்றி முதலாளித்துவப் பிரசாரம் விஞ்ஞான கம்யூனிசம் நிறுவப்பட்ட காலத்திலிருந்து பொய்களைப் பரப்பி வருகிறது. அதனால்தான் மார்க்சும் எங்கெல்சும் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்** பின்வருமாறு எழுதினார்கள்: "ஒருவர் தமது சொந்த உழைப்பின் பயனாய்ப் பெறுவதைத் தமது

தனிச் சொத்தாக்கிக் கொள்ளும் உரிமையைக் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஒழிக்க விரும்புவதாய் எங்களை ஏசுகிறார்கள்; இந்தத் தனிச் சொத்துதான் தனியாளின் சுதந்திரம், செயற்பாடு, சுயேச்சை வாழ்வு ஆகியவற்றுக்கு எல்லாம் அடிநிலை என்கிறார்கள்...

"சமுதாயத்தின் உற்பத்திப் பொருள்களைச் சுவீகரித்துக் கொள்வதற்கான வாய்ப்பைக் கம்யூனிசம் எம் மனிதனிடமிருந்தும் பறிக்கவில்லை; இப்படிச் சுவீகரித்துக் கொள்வதன் மூலம் அவன் ஏனையோரது உழைப்பை அடிமைப்படுத்துகிறவனாகும் வாய்ப்பைத்தான் அது அவனிடமிருந்து பறிக்கிறது." *

சோஷலிசத்தின் கீழ் சொந்த உழைப்பின் மூலம் கிடைக்கின்ற உடைமையின் நோக்கம் தனிநபர் மற்றும் குடும்பத்தின் சர்வாம்ச, ஒத்திசைவான வளர்ச்சியை ஊக்குவிப்பதும் குழந்தைகளை வளர்ப்பதுமே. சொந்த உடைமை உழைக்கும் மக்களுடைய நியாயமான பொருளாயத, கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களுக்குப் பொழுதுபோக்கு வசதியை அளிக்க வேண்டும்.

### உழைக்கும் மக்களுக்கான சமூகம்

**சோஷலிசத்தில் சுரண்டல் கிடையாது.** சோஷலிச சமூகத்தில் சுரண்டல் இல்லை என்பதால் ஒரு நபர் தன்னுடைய உழைப்புக்கு முழு அளவில் ஊதியம் பெறுவதாகக் கருத முடியுமா? வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால்,

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** தொகுதி 1, பக்கங்கள் 215, 218.

அவர் தன்னுடைய உழைப்பினால் உற்பத்தி செய்த பொருளின் முழு விலையைப் பெறுகிறாரா? சுரண்டல் இல்லை என்பதை இப்படிப் புரிந்து கொள்ளக் கூடாது.

சமூகம் மற்றும் அதன் ஒவ்வொரு உறுப்பினருடைய வாழ்க்கையும் பொருளாயத உற்பத்தியுடன் பிணைக்கப் பட்டிருக்கிறது, அங்கே மொத்த சமூக உற்பத்திப் பொருள், அதாவது தேசியப் பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப் படும் பொருளாயதச் செல்வம் (உற்பத்திச் சாதனங்களும் நுகர்வுப் பொருட்களும்) படைக்கப்படுகிறது. தேசிய வருமானம் என்பது மொத்த சமூக உற்பத்திப் பொருளின் ஒரு பகுதியாகும். பொருளாயத உற்பத்தித் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்த பொருளின் முழு விலையும் தரப்பட்டால் பொருள் உற்பத்தி அல்லாத துறைகளை (சுகாதாரம், கல்வி, இதரவை) பராமரிக்க முடியாது.

இப்பிரச்சினைக்கு மற்றொரு அம்சமும் இருக்கிறது. மக்கள்தொகை வளர்ச்சி, புதிய உற்பத்தி, தனிப்பட்ட தேவைகள் ஆகியவை புதிய சமூக கலாசார வசதிகளைக் கோருகின்றன. ஏகாதிபத்தியம் இருக்கின்ற வரை சோஷலிச நாடுகள் பாதுகாப்புத் துறையில் கட்டாயமாக அதிக முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. மேலும் சமூகத்துக்கு சமூக சேமிப்பு, சமூக நுகர்வு நிதி (ஓய்வூதியங்கள், உதவித் தொகைகள், இதரவை) அவசியம். ஆகவே தேசிய வருமானத்தை முழுமையாக நுகர்வு செய்து விட முடியாது. அதிலிருந்து தனியாக சேமிப்பு நிதி ஒதுக்க வேண்டும்; பொருளாயத உற்பத்தித் துறைகளைச் சேர்ந்தவர்கள் தாங்கள் புதிதாகப் படைத்த மதிப்பு முழுவதையும் தமக்குச் செலவழித்து விட்டால் அத்தகைய நிதியை உருவாக்க முடியாது.

பொருள் உற்பத்தி அல்லாத துறையை வளர்த்தல் மற்றும் சேமிப்பு நிதியை உருவாக்க வேண்டிய தேவையின்

விளைவாக, சோஷலிச சமூகத்தில் உற்பத்தியில் ஈடு பட்டிருக்கின்ற மக்களின் உழைப்பு அவசியமான உழைப்பு என்றும் உபரி உழைப்பு என்றும் பிரிக்கப்படுகிறது.

உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு வாழ்க் கைச் சாதனங்களை (அவசியமான பொருளை) படைக்கின்ற உழைப்பு அவசியமான உழைப்பு எனப்படும். சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற உபரிப் பொருளை உபரி உழைப்பு படைக்கிறது.

சோஷலிசத்தின் கீழ் பொருளாயத உற்பத்தியில் படைக் கப்பட்ட பொருள் அவசியமான பொருள், உபரிப் பொருள் என்று பிரிக்கப்படுதல் சுரண்டல் உறவுகளினால் அல்ல, அது சமூக வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற தேவையின் விளைவு. அத்தகைய நிலைமையில் சுரண்டல் உறவுகள் தோன்ற முடியாது; ஏனென்றால் உழைக்கும் மக்கள் ஒரே சமயத்தில் உற்பத்திச் சாதனங்களின் உடைமை யாளர்களாகவும் பொருளாயத செல்வத்தை நேரடியாகப் படைப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இத்தகைய நிலை மையில், உற்பத்திச் சாதனத்தை மூலதனமாக, சுரண்டல் கருவியாக மாற்றுகின்ற, உழைப்புச் சக்தியைப் பண்டமாக, அதாவது சுரண்டல் இலக்குப் பொருளாகச் செய்கின்ற எவ்விதமான சாத்தியமும் விலக்கப்படுகிறது. உழைக்கும் மக்கள் இப்படி சுரண்டலிலிருந்து விடுதலை அடைந்திருத் தல் சோஷலிச அமைப்பில் மக்களின் உண்மையான, பொருளாதார சமத்துவத்தைப் பிரதிபலிக்கிறது.

சோஷலிச அமைப்பில் உழைக்கும் மனிதன் மிகவும் அதிகமாக மதிக்கப்படுகிறான். அவன் பொருளாயத செல் வத்தைப் படைப்பவன் என்பதாக மட்டுமன்றி தனிநபர் என்ற முறையில் மதிக்கப்படுகிறான். அவன் படைக்கின்ற அவசியமான பொருளின் அளவு உழைப்புச் சக்திச் செல வின் ஈடுகட்டலினால் மட்டும் நிர்ணயிக்கப்படவில்லை, அவ

னுடைய ஆளுமையின் அகல்விரிவான வளர்ச்சியினால் நிர்ணயிக்கப்படுகிறது. இது முதலாளித்துவ அமைப்பில் நடைபெற முடியாது.

**ஊதியமும் சமூக நுகர்வு நிதிகளும்.** தேசிய வருமானம் வினியோகிக்கப்படுகின்ற முறை சோஷலிச அமைப்பில் சுரண்டல் இல்லாதிருப்பதைப் பிரதிபலிக்கிறது. சோவியத் யூனியனில் தேசிய வருமானத்தில் சுமார் $^3/_4$ பகுதி நுகர்வுக்கும் $^1/_4$ பகுதி சேமிப்புக்கும் செலவிடப்படுகிறது. நுகர்வு நிதி தனியார் நிதி, சமூக நிதி என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கிறது. தனியார் நுகர்வு நிதியில் பொருளாயத உற்பத்தித் துறைகளைச் சேர்ந்தவர்களின் ஊதிய நிதி, பொருள் உற்பத்தி அல்லாத துறைகளைச் சேர்ந்தவர்கள் மத்தியில் உழைப்புக்கு ஏற்ப வினியோகிக்கப்படுகின்ற நிதி, சமூகப் பாதுகாப்பு நிதி (ஓய்வூதியங்கள், உதவித் தொகைகள், மானியங்கள்) ஆகியவை உள்ளன.

சோஷலிசத்தின் கீழ் நுகர்வு நிதிகள் தனிப்பட்ட நுகர்வை மட்டும் குறிக்கவில்லை. உழைக்கும் மக்களுடைய நலன்களை முன்னிட்டு நிர்வாக, பாதுகாப்பு உறுப்புகளுக்கும் (தேசிய வருமானத்தைப் படைப்பதில் அவை பங்கெடுப்பதில்லை) விஞ்ஞானம், கலாசாரம், இதர வற்றுக்கும் அதிகமான முதலீடு செய்யப்படுகிறது. உழைக்கும் மக்கள் அனைவரும் இச்செலவுகளில் அக்கறை கொண்டிருக்கின்றனர்.

எனினும், உழைப்புக்கு ஏற்ப ஊதியம் என்னும் சோஷலிச வினியோக முறை உழைக்கும் மக்கள் குடும்பங்களுக்கு இடையில் வருமானங்களில் சமத்துவமின்மையை இன்னும் அகற்றவில்லை என்பதை மறக்கக் கூடாது. உழைப்புக்குத் தகுந்த வினியோகம் என்பது நியாயமான கொள்கை;

ஏனென்றால் கூலி ஒரு நபருடைய உழைப்பின் அளவை யும் தரத்தையும் மட்டுமே பொறுத்திருக்கிறது. ஆனால் மக்களுக்கு இடையில் திறமை, தேர்ச்சி, உடல் பலம், மூளை ஆற்றலில் வேறுபாடுகள் இருக்கின்றன. ஆகவே அவர் களுடைய உழைப்பின் அளவும் தரமும் வேறுபடுகின்றன, ஊதியத்தில் வேறுபாடு ஏற்படுகிறது. சோஷலிச சமூகத்தில் உழைக்கும் மக்களுக்கு இடையில் வருமானத்தில் வேறு பாடு இருப்பதற்கு முக்கியமான காரணங்களில் இது ஒன் றாகும். அடுத்த காரணம் குடும்பத்தின் அளவாகும். வேலை செய்பவர்களும் வேலை செய்யாத குடும்பத் தினரும் குடும்பங்களில் அடங்கியிருப்பார்கள்; குடும்பத் தில் ஒரு நபர் வருமானத்தின் அளவு குடும்பத்தின் மொத்த வருமானத்தைப் பொறுத்திருக்கும்.

சோஷலிசக் கட்டத்தில் உழைப்புக்கு ஏற்ப ஊதியம் என் னும் கோட்பாடு வினியோகத்தின் பிரதான வடிவமாகும், ஏனென்றால் அதுதான் நேரடியாகவும் சுறுசுறுப்பாகவும் சமூக உற்பத்தியின் மீது தாக்கம் செலுத்துகிறது. உழைப் பின் அளவு, தரத்துக்கு ஏற்ப ஊதியம் என்னும் கோட்பாடு சோஷலிச பொருளாதாரத்தின் பயன்தன்மையை அதிகப் படுத்துவதிலும் படைத்த பொருட்களின் தரத்தை உயர்த்து வதிலும் உழைக்கும் மக்களின் அக்கறையை ஊக்குவிக் கிறது.

உழைப்புக்குத் தகுந்த கூலியைத் தவிர, சோஷலிச சமூகத்தில் இலவச சமூக சேவைகளை (கல்வி, பயிற்சி வகுப்புகள், மருத்துவ வசதி, ஓய்வு ஸ்தலங்களில் இலவச விடுமுறைகள், இதரவை) அளிப்பதற்குப் பொது நுகர்வு நிதிகளின் அமைப்பு இருக்கிறது. வெவ்வேறு சமூக அடுக்கு களின் பொருளாயத நிலையை சமநிலைப்படுத்துவதற்கு பொது நுகர்வு நிதிகள் உதவுகின்றன, எல்லாக் குடிமக்

களும் இலவசக் கல்வியைப் பெறுவதற்கு சம வாய்ப்புகளை அளிக்கின்றன. உதாரணமாக, சோவியத் யூனியனில் பொதுக் கல்விப் பள்ளிக்கூடங்களில் அரசு ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டுதோறும் 200 ரூபிள்களுக்கும் அதிகமாக செலவிடுகிறது, செகண்டரித் தொழிற் பள்ளிகளில் 750 ரூபிள்களுக்கும் அதிகமாக, உயர் கல்வி நிலையங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் 1,100 ரூபிள்களுக்கும் அதிகமாக செலவிடுகிறது.

மழலையர் பள்ளியில் ஒரு குழந்தைக்கு அரசாங்கம் ஆண்டுக்கு 600 ரூபிள்களுக்கும் அதிகமாகச் செலவிடுகிறது; கிண்டர் கார்டனில் 500 ரூபிள்களுக்கும் அதிகமாக செலவிடுகிறது; இச்செலவில் 80 சதவிகிதத்துக்கும் அதிகமான தொகை பொது நுகர்வு நிதிகளிலிருந்து செலவிடப்படுகிறது. சமீப ஆண்டுகளில் அனாதை இல்லங்கள், போர்டிங் பள்ளிகளில் உணவுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. பொதுக் கல்வி கற்கின்ற எல்லா மாணவர்களுக்கும் பாடபுத்தகங்கள் இலவசமாகத் தரப்படுகின்றன. 1983இல் அமுலாக்கப்பட்ட புதிய முறையின்படி இளம் பயனீர் முகாம்களில் கோடை விடுமுறைகளைக் கழிக்கின்ற குழந்தைகளில் 50 சதவிகிதத்தினருக்குக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை, எஞ்சிய குழந்தைகளிடமிருந்து செலவில் 20 சதவிகிதம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

பொது நுகர்வு நிதிகளில் கணிசமான பகுதி இலவச மருத்துவ உதவிக்கு ஒதுக்கப்படுகிறது. கடந்த காலத்தில் அதிகமான அழிவை ஏற்படுத்திய ஆபத்தான நோய்களான அம்மை, டைபாய்டு, பிளேக் இப்பொழுது சோவியத் யூனியனில் ஒழிக்கப்பட்டு விட்டன. மலேரியா, இளம்பிள்ளை வாதம், டிப்தீரியா பெரிதும் குறைந்துள்ளன. பிற தொற்று நோய்கள் தொடர்ச்சியாகக் குறைந்து வருகின்றன.

சோஷலிச சமூகத்தில் எல்லா குடிமக்களுக்கும் வயோதிக காலத்தில், நோய்க் காலத்தில் அல்லது குடும்பத்தில் ஊதியம் பெற்றவர் இறந்து விடுகின்ற பொழுது பராமரிப்புக்குப் பொது நுகர்வு நிதிகள் உத்தரவாதமளிக்கின்றன. சோவியத் யூனியனில் பெண்களுக்கு 55 வயதுக்குப் பிறகும் ஆண்களுக்கு 60 வயதுக்குப் பிறகும் ஓய்வூதியம் தரப்படுகிறது. ஓய்வுக்கு முன்னர் அவர்களுடைய ஊதியத்திலிருந்து பணம் பிடிக்கப்படுவதில்லை. கடுமையான வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் இதற்கு 5 முதல் 10 ஆண்டுகளுக்கு முன்பே ஓய்வூதியம் பெறுவது அனுமதிக்கப்படுகிறது.

சோவியத் யூனியனில் வீடு இல்லாதவர்கள் அல்லது சேரிகளில் வசிப்பவர்கள் ஒருவருமில்லை. அரசு மக்களுக்கு இலவச வீடு வசதி செய்கிறது. வீட்டுப் பராமரிப்பு மற்றும் பொது வசதிகளுக்கு அரசு செலவிடுகிறது. வீடு மற்றும் பொது வசதிகளுக்கு ஒருவர் தன்னுடைய குடும்ப வருமானத்தில் 3 சதவிகிதத்தை மட்டுமே செலவிடுகிறார்.

சோஷலிசம் உழைக்கும் மக்களுக்குத் தருகின்ற நலன்களில் சிலவற்றைக் குறிப்பிட்டோம். ‘‘எல்லாம் மனிதனுக்காக, மனிதனுடைய நன்மைக்காக’’ என்னும் அடிப்படையான கொள்கையை சோஷலிச சமூகம் பின்பற்றி வருவதை இவை எடுத்துக்காட்டும்.

### உழைக்கும் மக்களால் நிர்வகிக்கப்படுகின்ற சமூகம்

**சோஷலிச சுயநிர்வாகம்.** சோஷலிச சுயநிர்வாகம் என்பது சமூகம் மற்றும் அரசின் விவகாரங்களை நிர்வாகம் செய்கின்ற ஜனநாயக அமைப்பாகும். அது உழைக்கும் மக்களுக்காக இருப்பது மட்டுமன்றி, அவர்களால் நிறைவேற்றப்

படுகிறது. ஒவ்வொரு குடிமகனும் சமூகம் மற்றும் அரசின் விவகாரங்களின் நிர்வாகத்தில் நேரடியாகப் பங்கெடுப்பதை சோஷலிச அரசியல் அமைப்பு சாத்தியமாக்குகிறது. சமூகம் மற்றும் அரசின் நிர்வாகத்தில் பங்கெடுக்கின்ற உரிமைக்கு வரையறைகள் அல்லது விதிவிலக்குகள் கிடையாது.

முதலாளித்துவ அமைப்பில் முக்கியமான முடிவுகள் மக்களுக்கு சம்பந்தமில்லாமல் இரகசியமான முறையில் எடுக்கப்படும்; சோஷலிசம் அதை மாற்றி அரசு விவகாரங் களில் மக்களின் அக்கறையைத் தூண்டுகிறது.

மக்கள் நிர்வாகத்தில் பங்கெடுப்பதுதான் சமூகம் மற்றும் அரசின் சகஜமான வளர்ச்சியை ஊக்குவிக்கும். சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஆரம்ப ஆண்டுகளில் லெனின் இந்தக் கடமையை கல்லாமையை ஒழித்தல், மக்கள் அரசை நிர்வகிப்பதற்கு போதித்தல் என்னும் இரண்டு முக்கியமான சந்தர்ப்பங்களுடன் இணைத்தார்.

எழுதப் படிக்கத் தெரியாத நபர் அரசியலை விட்டு ஒதுங்கியிருப்பார் என்பதை லெனின் அடிக்கடி வலியுறுத் தினார். அவரை எளிதில் ஏமாற்ற முடியும், ஊசலாடும்படி செய்ய முடியும், தன்னுடைய நலன்களுக்கு மாறான கொள்கையை ஆதரிக்கும்படி செய்ய முடியும். உழைக் கும் மக்கள் புதிய வாழ்க்கையை உணர்வு பூர்வமாக நிர்மாணிப்பவர்களாக மாறுவதற்கு கல்வி முக்கியமான நிபந்தனையாக இருந்தது. சோவியத் யூனியனில் நடை பெற்ற கலாசாரப் புரட்சி நாடு முழுவதிலும் கல்லாமையை ஒழித்தது. சோவியத் யூனியனில் செகண்டரி பள்ளிக் கல்வி தற்பொழுது கட்டாயமாக இருக்கிறது.

இலட்சக்கணக்கான உழைக்கும் மக்களுக்கு சமூக மற் றும் அரசு விவகாரங்களை நிர்வகிக்க கற்றுத் தருவது எப் படி? முதலாவதாக, அவர்கள் புதிய முறையில் சிந்திப்ப தற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட

சிலர் மட்டுமே அரசை நிர்வகிப்பதற்குத் தகுதி உடையவர்கள் என்னும் முதலாளித்துவத் தப்பெண்ணத்திலிருந்து மாற வேண்டும். உழைக்கும் மக்களுடைய, உழைக்கும் மக்களுக்கான சமூகத்தில் அவர்கள் சமூகத்தை நிர்வகிக்க முடியும், நிர்வகிக்க வேண்டும் என்பது புதிய சிந்தனையின் அர்த்தமாகும். உழைக்கும் மக்களுக்கு நிர்வாகக் கலையைக் கற்பித்தல் ஒரு விசேஷமான கலை. புத்தகங்கள், பத்திரிகைகள், சொற்பொழிவுகள், பிரசுரங்கள் மட்டும் போதாது. மக்கள் நடைமுறையில் கற்றுக் கொள்ள வேண்டும், அரசு விவகாரங்களை நிர்வகிப்பதற்குத் தம்முடைய திறமையைச் சோதிக்க வேண்டும். லெனின் இந்தக் கடமையை இப்படிப் பார்த்தார்.

சோஷலிச அரசியல் அமைப்பு என்பது மக்கள் சோஷலிச சுயநிர்வாகத்தை நிறைவேற்றுகின்ற பொறியமைவு ஆகும். கம்யூனிஸ்ட் கட்சி, அரசு, எண்ணற்ற மக்கள் ஸ்தாபனங்கள், உழைப்புக் கூட்டுகள் இந்த அமைப்பில் அடங்கும். இச்சிக்கலான நிர்வாகப் பொறியமைவு சோஷலிச ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளின்படி செயல்படுகிறது.

**சோஷலிச ஜனநாயகம்.** "ஜனநாயகம்" என்ற சொல் தன்னுடைய மெய்யான பொருளை சோஷலிச சமூகத்தில்—அங்கே மக்கள் ஆட்சியதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள்—மட்டுமே அடைகிறது. சோஷலிசம் இல்லாமல் உண்மையான ஜனநாயகம் சாத்தியமல்ல; ஜனநாயகத்தைத் தொடர்ச்சியாக ஊக்குவிக்காமல் சோஷலிசம் சாத்தியமல்ல.

சோஷலிசத்தின் சித்தாந்த எதிரிகள் சோஷலிச அரசு சட்டம், ஒழுங்குமுறையை வலுப்படுத்துவதற்குச் செய்கின்ற நடவடிக்கைகளைப் பெரும்பாலும் திரித்துக் கூறுகிறார்கள்.

சமூகத்தின் பால் அதிகமான கட்டுப்பாட்டையும் பொறுப் புணர்ச்சியையும் மக்களிடம் தூண்டுவதை ஜனநாயக மீறல் என்று அவர்கள் சித்திரிக்கிறார்கள். உண்மையில், ஒவ் வொரு குடிமகனும் சமூகத்தின் உணர்வு பூர்வமான தொழிலாளியாக, ஆக்கபூர்வமான உறுப்பினராக இருக்க வேண்டுமென்னும் பொறுப்பும் கடமையும் சோஷலிச ஜன நாயகத்தின் கோட்பாடுகளை முழுமையாக அமுல்நடத்து வதற்கு நம்பகமான அடிப்படையை உருவாக்குகின்றன.

முக்கியமான மசோதாக்களும் பிரச்சினைகளும் நாடு தழுவிய அளவில் விவாதிக்கப்படுதல் ஜனநாயக சுயநிர்வா கத்தில் குடிமக்கள் நேரடியாகப் பங்கெடுக்கின்ற வடிவ மாகும். உதாரணமாக, சோவியத் யூனியனில் 1977இல் நகல் அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றிய விவாதத்தில் 140 மில்லியன் மக்கள் பங்கெடுத்தார்கள். உழைப்புக் கூட்டுகளை பற்றிய நகல் சட்டத்தை விவாதித்ததில் 110 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பங்கெடுத்தார்கள். பொதுக் கல்வி, தொழிற்கல்வி சீர்திருத்த நகலும் பொது மக்களால் நன்கு விவாதிக்கப்பட்டது.

சோஷலிச ஜனநாயகம் பொருளாதாரத் துறை உள்பட சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் தழுவியிருக் கிறது. ஆக, இலட்சக்கணக்கான மக்கள் உற்பத்தி, அரசு மற்றும் சமூக விவகாரங்களை நிர்வாகம் செய்வதில் இழுக் கப்படுகிறார்கள். உற்பத்தி சம்பந்தமாக உழைக்கும் மக்களின் உரிமைகள் விஸ்தரிக்கப்படுகின்றன. உழைக்கும் மக்கள் உற்பத்தி, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சமூக வளர்ச்சியைப் பற்றி திட்டம் தீட்டுவதில், ஊழியர் பயிற்சி, பணியமர்த்தலில், நிறுவனங்களின் நிர்வாகத்தைப் பற்றிய விவகாரங்களை விவாதிப்பதில், உழைப்பு, வாழ்க்கை நிலை மைகளை அபிவிருத்தி செய்வதில், உற்பத்தி வளர்ச்சி, சமூக, கலாசார சேவைகள், பொருளாயத ஊக்

கம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளை உபயோகிப்பதில் பங்கெடுக்கிறார்கள். இந்த உரிமைகளுக்கு சோவியத் அரசியலமைப்புச் சட்டமும் உழைப்புக் கூட்டுகளைப் பற்றிய சட்டமும் உத்தரவாதமளிக்கின்றன.

ஜனநாயக மத்தியத்துவம் சோஷலிச ஜனநாயகத்தின் தலையான ஸ்தாபனக் கோட்பாடாகும், மத்தியத்துவம் என்பது இலட்சக்கணக்கான மக்களின் ஒன்றுதிரட்டல், ஒற்றுமை, திட்டமிட்ட நடவடிக்கைகளைக் குறிக்கிறது. மத்தியத்துவம் மட்டுமே சமூகத்தின் பல்வேறு துறைகள், உட்பகுதிகளை ஒருங்கிணைந்த, ஒத்திசைவான அமைப்பாக செயல்படுமாறு செய்ய முடியும்.

ஜனநாயக மத்தியத்துவம், அதிகார வர்க்க மத்தியத்துவம் என்று இரண்டு ரகங்கள் இருக்கின்றன. பிந்தியது மேலேயிருந்து கறாரான வரம்புகளை நிர்ணயிக்கிறது, ஸ்தல முன்முயற்சியை நசுக்குகிறது, நிலைமைகளில் வேறுபாட்டைப் புறக்கணிக்கிறது. தவறே செய்யாத, எங்கும் நிறைந்திருக்கின்ற, எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகின்ற மையம் அதிகார வர்க்கத்தின் இலட்சியம்—அது சோஷலிசத்துக்கு அந்நியமாகும். மையம் மிகவும் முக்கியமான கடமைகளை, இறுதி நோக்கங்களை, நடவடிக்கைகளின் ஒற்றை செயல்திட்டத்தை நிர்ணயிக்கின்ற, எல்லா நிர்வாக உறுப்புகளையும் ஒருங்கிணைக்கின்ற உரிமையை ஜனநாயக மத்தியத்துவம் அனுமதிக்கிறது; அதே சமயத்தில் எல்லா வழிகளிலும் ஸ்தல முன்முயற்சியை ஊக்குவிக்கிறது, நிர்வாகத்திலுள்ள ஒவ்வொரு கண்ணியும் தன்னுடைய உரிமைகளையும் வாய்ப்புகளையும் பொதுவான இலட்சியத்துக்கு, ஒருங்கிணைந்த மொத்தத்தின் சுற்றுவட்டத்திற்குள் உபயோகிக்குமாறு ஊக்குவிக்கிறது. ஜனநாயக மத்தியத்துவம் ஸ்தல சுயநலத்தை, தேசியவாதத் தனிமையை, குறுகிய நோக்கை நிராகரிக்கிறது. அது அராஜகவாதத்தை

எதிர்க்கிறது; அராஜகவாதத்தின் விளைவான தான்தோன்றித்தனமும் கட்டுப்பாடின்மையும் சோஷலிச அரசுக்கு ஊறு செய்யும்.

கீழேயிருந்து உச்சிவரை எல்லா நிர்வாக உறுப்புகளும் தேர்ந்தெடுக்கப்படுதல், அவை மக்களுக்குப் பொறுப்பைக் கொண்டிருத்தல் ஜனநாயக மத்தியத்துவம் ஆகும். அதே சமயத்தில் அது ஒற்றைக் கொள்கையை, கீழ்க் கமிட்டிகள் மேல் கமிட்டிகளின் முடிவுக்குக் கட்டுப்படுவதை, சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்குக் கீழ்ப்படுதலைக் குறிக்கும்.

**மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகள்—சோஷலிச சுய நிர்வாகத்தின் அடிப்படை.** சோஷலிசத்தின் கீழ் எல்லா அதிகாரமும் மக்களுக்கு சொந்தம், மக்கள் தமது நலன்களுக்கு அதைப் பயன்படுத்துகிறார்கள். இதுதான் சோஷலிச ஜனநாயகத்தின் சாராம்சம். சோவியத் யூனியனில் மக்கள், மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் மூலமாக அரசு அதிகாரத்தைச் செயற்படுத்துகிறார்கள்.

மற்ற அரசு உறுப்புகளை (செயற்பணி, நிர்வாக, மேற்பார்வை, கண்காணிப்பு, இதர உறுப்புகளை) அமைப்பதற்கு சோவியத்துகள் தனி உரிமை பெற்றிருப்பது அவற்றின் முழு அதிகாரத்தை வெளியிடுகிறது. எல்லா அரசு உறுப்புகளும் சோவியத்துகளிடமிருந்து அதிகாரத்தைப் பெறுகின்றன, அவற்றுக்குப் பொறுப்பைக் கொண்டிருக்கின்றன, அவற்றினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

அரசு அதிகாரத்தின் தலைமை உறுப்பாகிய சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் சட்டங்களை நிறைவேற்றுகிறது, உயர்மட்ட அரசு உறுப்புகளை அமைக்கிறது, நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சியைப் பற்றிய முக்கியமான

விவகாரங்களை முடிவு செய்கிறது, கீழ்மட்ட அரசு உறுப்பு களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகிறது.

மக்கள் எல்லா சோவியத்துகளுக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மக்கள் இரகசிய வாக்கு முறையின் மூலம் சமத்துவ, நேரடியான, பொது வாக்குரிமையின் அடிப்படையில் தம்முடைய சுதந்திர சித்தத்தை வெளியிடு கிறார்கள். அவர்கள் ம்க்களின் விசேஷ உரிமை படைத்த பிரதிநிதிகள்.

சோவியத்துகளுக்கு ஒவ்வொரு தேர்தலின் போதும் சுமார் பாதியளவுக்குப் புதிய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இதன் மூலம் இலட்சக்கணக்கானவர்கள் ‘‘அரசு நிர்வாகப் பள்ளியில்’’ பயிற்சி பெறுகிறார்கள்.

சட்டம் எல்லா மட்டங்களையும் சேர்ந்த மக்கள் பிரதி நிதிகளுக்கு அதிகமான உரிமைகளை அளிக்கிறது. சட்டம் அவர்களுக்கு அதிகமான கடமைகளையும் அளிக்கிறது, தேர்ந்தெடுத்த மக்களுடன் அவர்களுடைய உறவை நிறுவு கிறது. பிரதிநிதிகள் வாக்காளர்களின் கட்டளைகளை நிறை வேற்ற வேண்டும், அவர்களுக்கு முறைப்படி அறிக்கை யளிக்க வேண்டும். வாக்காளர்களின் நம்பிக்கையை இழந்த பிரதிநிதிகள் எந்த சமயத்திலும் திருப்பியழைக்கப்படு வதற்கு சோவியத் யூனியன் அரசியல் சட்டம் வகை செய் கிறது. லெனின் இந்த உரிமையை மிகவும் முக்கியமான தென்று கூறினார்: ‘‘தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் திருப் பியழைப்பதற்கு வாக்காளர்களுடைய உரிமையை ஏற்றுக் கொண்டு செயற்படுத்தாவிட்டால் தேர்தல் முறையைக் கடைப்பிடிக்கின்ற எந்த நிறுவனம் அல்லது பிரதிநிதி களின் சபை மெய்யான ஜனநாயகத் தன்மை கொண்ட தாக, மக்கள் சித்தத்தை உண்மையில் பிரதிநிதித் துவம் செய்வதாகக் கருத முடியாது. உண்மையான ஜன நாயகத்தின் இந்த அடிப்படையான கோட்பாடு அரசியல்

நிர்ணய சபை உள்பட எல்லா பிரதிநிதித்துவ சபைகளுக்கும் விதிவிலக்கின்றிப் பொருந்தும்'' என்று லெனின் எழுதினார். *

உதாரணமாக, சோவியத் யூனியனில் இருபதுக்கும் அதிக மான ஆண்டுகளில் வாக்காளர்களின் நம்பிக்கையை இழந்த எண்ணாயிரத்துக்கும் அதிகமான பிரதிநிதிகள் திருப்பிய ழைக்கப்பட்டார்கள்.

சோவியத் யூனியனில் முழுநேர நாடாளுமன்றவாதிகள் கிடையாது. மக்கள் பிரதிநிதிகள், தங்கள் வேலைகளில் நீடித்துக் கொண்டே அரசுக் கடமைகளை நிறைவேற்று கிறார்கள். சோஷலிச எதிரிகள் சோவியத் ஆட்சியதிகார உறுப்புகளைக் குறை சொல்வதற்கு இதையும் ஒரு சாக்காகப் பயன்படுத்துகிறார்கள். பிரதிநிதிகளிடம் ''தொழில் முறைப் பண்புகள்'' இல்லையென்று அவர்கள் கூறு கிறார்கள். மக்கள் பிரதிநிதி என்னும் பணியைத் தொழி லாக மாற்றுவதுதான் அவர்கள் கூறுகின்ற ''தொழில் முறைப் பண்பு'' என்றால் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் பிரதிநிதிகளிடம் அத்தகைய பண்பு மெய்யாகவே இல்லை, அதைப் பெறுவதற்கு அவர்கள் உத்தேசிக்க வில்லை. அவர்களிடம் இதைக் காட்டிலும் முக்கியமான பண்புகள் இருக்கின்றன. அவர்கள் பல்வேறு சிக்கலான அரசுப் பிரச்சினைகளை நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள், அவற்றை திறமையுடன் தீர்க்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அநேகமாக வாழ்க்கையின் எல்லாத் துறை களையும் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் தன்னுடைய கூட் டத் தொடர்களில் மட்டுமன்றி சம உரிமைகளைக் கொண்ட யூனியன் சோவியத், தேசிய இனங்களின் சோவியத்

* V. I. Lenin, *Collected Works,* vol. 26, p. 336.

என்னும் இரண்டு சபைகளின் நிரந்தரக் கமிஷன்களின் மூலம் ஆண்டு முழுவதும் தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுகிறது. மக்கள் பிரதிநிதிகள் சோவியத்துகளில் தம்முடைய பணிகளை நிறைவேற்றுகின்ற பொழுதே தொடர்ந்து வேலையில் நீடிக்கின்றபடியால் தாங்கள் பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்களுடன் நேரடியான தொடர்பில் இருக்கிறார்கள், அவர்களுடைய அக்கறைகளையும் தேவைகளையும் நன்றாக அறிவார்கள்.

**கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரம்.** மக்களின் சோஷலிச சுயநிர்வாகத்தை நிறைவேற்றுவதில் கம்யூனிஸ்ட் கட்சி மூலசக்தியாகவும் தலைமையான வழிகாட்டும் சக்தியாகவும் இருக்கிறது. அது சோஷலிச ஜனநாயகக் கொள்கைகளை அமுலாக்குகிறது, அவற்றின் கூடுதலான வளர்ச்சிக்கு உத்தரவாதமளிக்கிறது. கட்சியின் நடவடிக்கைகள் உண்மையான ஜனநாயகத்தை முரணில்லாமல் அமுலாக்குவதற்கு உதாரணமாகும். கட்சி சமூக வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் ஈடுபட்டிருக்கின்ற இலட்சக் கணக்கான உழைக்கும் மக்களின் படைப்பு நடவடிக்கையை ஒன்றிணைக்கிறது, பொது இலட்சியங்களை நோக்கி அவர்களுக்கு வழிகாட்டுகிறது.

கட்சி சோஷலிச சமூகத்தின், அதன் அரசு, மத்திய மற்றும் ஸ்தல உறுப்புகளின், எல்லா வெகுஜன ஸ்தாபனங்களின் (தொழிற்சங்கங்கள், கம்ஸமோல், கூட்டுறவு ஸ்தாபனங்கள், கலைத் துறையிலுள்ள ஸ்தாபனங்கள், இதரவை), அனைத்து மக்களின் படைப்பு நடவடிக்கைகளின் அரசியல் தலைவனாக இருக்கிறது. அது அவற்றின் முயற்சிகளை ஒன்றுசேர்த்து ஒருங்கிணைக்கிறது. எல்லா அரசு மற்றும் வெகுஜன ஸ்தாபனங்களும் பெருந்திரளான உழைக்கும் மக்கள் நிர்வாகத்தில் சுறுசுறுப்பாக

பங்கெடுப்பதை ஊக்குவிக்குமாறு கம்யூனிஸ்ட் கட்சி பாடு படுகிறது. அவை நெருக்கமாக ஒத்துழைக்க வேண்டும், அதே சமயத்தில் தம்முடைய விசேஷ பணிகளை நிறை வேற்ற வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சி வெகுஜன ஸ்தாபனங்களுக்கு வழி காட்டுவதில் பரஸ்பரத் தொடர்புடைய கோட்பாடுகள், வடிவங்கள், முறைகளின் ஒத்திசைவான அமைப்பைப் பயன் படுத்துகிறது, படைப்பு ரீதியில் வளர்க்கிறது. கட்சி விஞ்ஞான ரீதியில் ஆதாரப்படுத்தப்பட்ட அரசியல் கொள்கையை உருவாக்குதல், வெகுஜன ஸ்தாபனங்கள் கட்சிக் கொள்கையை அமுலாக்குவதை முறைப்படியாகக் கண்காணித்தல், கட்சி, அரசு, இதர உறுப்புகளின் செயற்பணிகளைத் துல்லியமாக வரையறுத்தல், அவற்றின் கூட்டு நடவடிக்கைகளைத் திறமையுடன் ஒருங்கிணைத்தல், சமூக முன்னேற்றத்தின் எல்லாத் துறைகளுக்கும் அவற்றின் தாக்கத்தை விஸ்தரித்து ஆழப்படுத்துதல், வெகுஜன ஸ்தாபனங்களை ஸ்தாபன ரீதியிலும் அரசியல் ரீதியிலும் வலுப்படுத்துதல், இந்த ஸ்தாபனங்களின் நிர்வாக ஊழியர்களைத் தேர்ந்தெடுத்தல், பணியிலமர்த்தல், பயிற்றுவித்தல், இந்த ஸ்தாபனங்களில் பணியாற்றுகின்ற கம்யூனிஸ்டுகளின் தலைமைப் பாத்திரத்தை அதிகப்படுத்துதல், வெகுஜன ஸ்தாபனங்களில் கட்சிப் பணியின் மிக சிறந்த அனுபவத்தைத் தொடர்ச்சியாக ஆராய்தல், பொழித்துரைத்தல், பரப்புதல் ஆகியவை இந்த அமைப்பில் உள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சி அரசு மற்றும் வெகுஜன ஸ்தாபனங்களின் பொறுப்புகளைத் தானே எடுத்துக் கொள்வதில்லை, ஆனால் சோவியத்துகள், இதர உறுப்புகளில் பங்கெடுக்கின்ற கம்யூனிஸ்டுகளின் மூலம் அவற்றின் நடவடிக்கையை இயக்குகிறது. கட்சிக் கொள்கை உத்தரவு மூலமல்ல, கட்சி, அரசு மற்றும் வெகுஜன ஸ்தாபனங்

களின் நெருங்கிய ஒத்துழைப்பின் மூலம் நிறைவேற்றப் படுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சி விஞ்ஞான சோஷலிசத்தின் இலட்சியங் களை நிறைவேற்றுவதற்காக, தொழிலாளி வர்க்கம் மற் றும் உழைக்கும் மக்களின் நன்மைக்காக தன்னலமின்றி நடத்திய போராட்டத்தின் மூலம் சமூகத்தில் தன்னுடைய தலைமையான நிலையைப் பெற்றிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியினால் வழிகாட்டப்படுகின்ற பொழுதுதான் புதிய சமூக அமைப்பு வெற்றிகரமாக இயங்க முடியும் என்பதை உலக சோஷலிசத்தின் வரலாறு நிரூபித்திருக்கிறது. சோஷலிச சமூகத்தின் வளர்ச்சியின் ஒவ்வொரு புதிய வரலாற்றுக் கட்டத்திலும் கட்சியின் தலைமைப் பாத்திரம் அதிகரிக் கிறது. கட்சி பொருளாதார, சமூகக் கொள்கைகளின் வழி காட்டும் நெறிகளைத் தயாரித்து, சோஷலிச நிர்மாணத் தின் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டிருக்கின்ற தன்னுடைய ஊழியர்கள், கம்யூனிஸ்டுகளின் மூலம் இக்கொள்கை களை அமுலாக்குவதன் மூலம் கட்சி தன்னுடைய தலை மைப் பாத்திரத்தை நிறைவேற்றுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சி சமூகத்தின் எல்லா வர்க்கங்கள், சமூகக் குழுக்களின் நலன்கள் ஒன்றுசேர்வதை உறுதிப்படுத்து கிறது, மக்களின் முன்முயற்சிக்கும் படைப்பு நடவடிக்கை களுக்கும் மாபெரும் வாய்ப்புகளைத் திறந்து விடுகிறது, அரசு மற்றும் சமூகத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதில் ஒவ்வொரு குடிமகனும் நேரடியாகப் பங்கெடுப்பதற்கு இட மளிக்கிறது.

### சோஷலிசத்தின் சர்வதேச சாராம்சம்

**சோஷலிசத்தை நிறுவுகின்ற, வளர்க்கின்ற வடிவங்கள்.** அறியப்பட்ட புறவய விதிகளின் அடிப்படையில் சோஷலிசம்



18—1184

நிர்மாணிக்கப்படுகிறது. அது தானாக வளர்வதில்லை, விஞ் ஞானத் தத்துவத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைகிறது. புரட்சிகரமான முறையில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறியுள்ள பல்வேறு நாடுகளின் அனு பவம் இதை நிரூபிக்கிறது. இந்த மாற்றத்தை ஆள்கின்ற விதிகளும் சோஷலிசக் கொள்கைகளும் அதன் கேந்திர மான சமூக, பொருளாதார, அரசியல், சித்தாந்த அம்சங் களும் புறவயமானவை, சர்வப்பொதுவானவை. சோஷ லிசத்தின் அடிப்படையான கொள்கைகள் சர்வதேசத் தன்மையைக் கொண்டிருக்கின்றன, பிரதேச அல்லது தேசிய எல்லைகள் அவற்றை வரையறுக்கவில்லை.

விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம், நடைமுறையினால் வழிகாட்டப்படுகின்ற சோஷலிச நாடுகள் கம்யூனிசத்தை நோக்கித் தமது முன்னேற்றத்தில் பொதுவான, சர்வதேசக் கூறுகளைப் பிரத்யேகமான, தேசியக் கூறுகளுடன் சரி யான முறையில் ஒன்றிணைக்கின்றன. அந்த நாடுகளின் வலிமை, ஒருமைப்பாடு, ஒற்றுமையின் தோற்றுவாய் இதுவே.

நாடுகள், பொருளாதார வளர்ச்சியில், சோஷலிசத்துக்கு மாறுவதற்குத் தயாராக இருக்கின்ற அளவில், சமூக வர்க்கக் கட்டமைப்பு, தேசிய மரபுகள், கலாசாரம், கல்வி நிலை யில் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தாலும் சோஷலிச வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. சில நாடுகளில் தொழிலாளி வர்க்கம் முதிர்ச்சியடைந்து அவை முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு நேர டியாக முன்னேறுகின்றன; மற்ற நாடுகள் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தைத் தாவிக் கடந்திருக்கின்றன. ஜாரிச ருஷ்யாவின் எல்லைப் பிரதேசங்களில் வசித்த மக் களினங்களும் மங்கோலியாவும் இதற்கு உதாரணமாகும். பல வளர்முக நாடுகள் சோஷலிச திசையமைவைக்

கொண்ட, முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதை யைப் பின்பற்றுகின்றன.

சோஷலிச வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றியுள்ள நாடு கள் பூகோள அமைப்பு, இயற்கை வளங்கள், மரபுவழிப் பட்ட பொருளாதார, கலாசாரப் பிணைப்புகள், வாழ்க்கை முறையில் வேறுபடுகின்றன. சில நாடுகள் சோஷலிசத்துக்கு மாறிய காலத்திற்குள் அங்கே மார்க்சிய-லெனினியம் ஆழ மாக வேரூன்றியிருந்தது, அனுபவம் மிகுந்த, புடம் போட் டெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் இருந்தன. மற்ற நாடுகளில் குட்டி முதலாளி வர்க்க சோஷலிசம், அராஜக வாதத்தின் பல்வேறு போக்குகள் மார்க்சிய-லெனினியத் தைப் பரப்புவதை எதிர்த்தன. அங்கே கம்யூனிஸ்ட் கட்சி களில் விவசாயிகளும் குட்டி முதலாளி வர்க்க அறிவுஜீவி களும் அதிகமாக இருந்தார்கள், ஆகவே அவை முற்றிலும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளாக இன்னும் வளரவில்லை.

சில நாடுகளில் சோஷலிச நிர்மாணத்தின் போது தேசிய ரீதியில் பிரத்யேகமான மற்றும் சர்வதேசியக் கூறுகளின் ஒருமை மீறப்பட்டது ஏன், விஞ்ஞான கம்யூனிசத்தின் பொதுக் கொள்கைகளும் விதிகளும் தேசியவாதப் போக்கு களால் திரித்துரைக்கப்பட்டது ஏன் என்பதைப் புரிந்து கொள்வதற்கு மேற்கூறிய விவரங்கள் உதவுகின்றன.

வேறு சில நாடுகளில் சோஷலிச நிர்மாணத்தில் மார்க் சிய-லெனினியத்தைப் பின்பற்றிய பொழுது "சொந்த" தேசிய சோஷலிசத்தைப் படைப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. அதன் விளைவாக தோன்றிக் கொண் டிருந்த சோஷலிச சமூகம் சிதைவுக்கு உள்ளாயிற்று.

சில சமயங்களில் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைப் பயிலுபவர் கள் சோஷலிசத்தின் பொதுவான கொள்கைகளையும் விதி களையும் ஏற்றுக் கொள்கின்ற பொழுது ஒரு நாட்டின்

சொந்த வரலாறும் வளர்ச்சியும் புறக்கணிக்கப்படுகிறது என்னும் சந்தேகத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

இக்கருத்து சரியல்ல. சோஷலிச நிர்மாணத்தைப் பற்றிய விதிகளும் சோஷலிச சமூகத்தைப் பற்றிய அமைப்புக் கோட்பாடுகளும் ஒரு குறிப்பிட்ட நாட்டின் மீது சுமத்தப் படுவதில்லை; புரட்சிகரமான மாற்றங்கள் நடைபெறுகின்ற பொழுது அவை உள்ளேயிருந்து தோன்றுகின்றன. இந்தப் பொது விதிகள், கொள்கைகளைக் கடைப்பிடிக்காமல் சோஷலிசத்தை நிர்மாணிக்க முடியாது. அவை மக்களிட மிருந்து சுயேச்சையாகச் செயல்படுகின்ற, மனித சக்திக்கு மீறிய விதிகளல்ல, மக்களுடைய செய்முறை நடவடிக்கையை ஆள்கின்ற விதிகளே. ஆகவே புதிய சமூகத்தை நிர்மாணிப்பவர்கள் இந்த விதிகளையும் கொள்கைகளையும் அறிய முடிவது மட்டுமன்றி, அவற்றை அமுலாக்குவதற்கு ஒரு குறிப்பிட்ட நாட்டின் நிலைமைகளுடன் முழுமையாகப் பொருந்துகின்ற ஸ்தூலமான வரலாற்று வடிவங்களையும் கண்டுபிடிக்கிறார்கள். வெவ்வேறு நாடுகளில் சோஷலிச நிர்மாணத்தின் விதிகளின் வெவ்வேறு வடிவங்களுக்கு மெய்யான சோஷலிசம் பல உதாரணங்களைத் தருகிறது. ஒவ்வொரு குறிப்பிட்ட நாட்டிலும் விஞ்ஞான கம்யூனிசத்தின் சர்வதேச உள்ளடக்கம் நடைமுறையில் பிரத்யேகமான தேசிய அம்சங்களைப் பெறுகிறது.

சோஷலிச நிர்மாணத்தின் பொது விதிகள், சோஷலிச சமூகத்தை அமைப்பதைப் பற்றிய கொள்கைகளை அறிந்திருப்பதனால் மட்டும் சோஷலிச சமூகத்தை வெற்றிகரமாக அமைத்து விட முடியாது. சோஷலிச நிர்மாணப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒவ்வொரு நாட்டின் பிரத்யேகமான கூறுகளையும் கணக்கிலெடுத்துக் கொண்ட சரியான வடிவங்களையும் வழிமுறைகளையும் கண்டுபிடிப்பது முக்கியம். சோஷலிச சமூகத்தை அமைக்கின்ற ஸ்தூலமான

வரலாற்று வடிவங்களின் மூலமாக சோஷலிசத்தின் சர்வ தேச சாராம்சம் நிறைவேற்றப்படுகிறது என்பதை அனுபவம் எடுத்துக்காட்டிருக்கிறது. இந்த வடிவங்கள் சோஷலிசப் பாதையைப் பின்பற்றுகின்ற நாடுகளின் தேசியத் தனித் தன்மைகளைப் பிரதிபலிக்கின்றன.

*அத்தியாயம் எட்டு*

# சோஷலிசத்திலிருந்து கம்யூனிசத்துக்கு

**சோஷலிசமும் கம்யூனிசமும்.** கம்யூனிச சமூக அமைப்பு சோஷலிசம், கம்யூனிசம் என்னும் இரண்டு கட்டங்களைக் கொண்டிருக்கிறது என்பதை முன்பே குறிப்பிட்டோம். அவற்றுக்குச் சில அம்சங்கள் பொதுவாக இருக்கின்றன; ஏனென்றால் அவை ஒரே சமூக அமைப்பின் இரண்டு கட்டங்கள். அதே சமயத்தில் பல முக்கியமான வேறுபாடுகளும் இருக்கின்றன, ஏனென்றால் அவை அதன் வளர்ச்சியின் கீழ்நிலை, உயர்நிலை மட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

சோஷலிசத்திற்கும் கம்யூனிசத்திற்கும் பொதுவான அம்சங்கள் பின்வருவன:

— இரண்டு கட்டங்களிலும் பொருளாயத மதிப்புகளின் உற்பத்தி முறை உற்பத்திச் சாதனங்களின் மீதான பொது உடைமையையும் சுரண்டலிலிருந்து விடுதலையடைந்த உழைக்கும் மக்களுக்கு இடையில் நட்புறவான ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி உறவுகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது;

— சுரண்டும் வர்க்கங்கள் இல்லை, மனிதனை மனிதன்

சுரண்டுவது இல்லை, சமூக, இன அல்லது தேசிய இன ஒடுக்குமுறையின் எந்த வடிவமும் இல்லை;

—சமூக உற்பத்தி உழைக்கும் மக்களுடைய நலன்களுக்கு உட்பட்டிருக்கிறது, அவர்களுடைய வளர்கின்ற பொருளாயத, கலாசார தேவைகளைப் பூர்த்தி செய்கிறது, அவர்களுடைய ஆற்றலையும் திறமைகளையும் வளர்க்கிறது. உழைக்கும் மக்கள் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தின் அடிப்படையில் சமூக உற்பத்தியைத் தொடர்ச்சியாக வளர்த்துக் கொள்வதன் மூலம் இதை சாதிக்கிறார்கள்;

— எல்லோரும் திறமைக்குத் தக்கபடி உழைக்கிறார்கள், இது பிறரை உறிஞ்சி வாழ்வதையும் பண வேட்டையையும் ஒழிக்கிறது. ஒரு நபருடைய உணர்வு பூர்வமான, நேர்மையான உழைப்பு சமூகத்தில் அவருடைய தகுதிக்கும் அந்தஸ்துக்கும் ஒரே அளவுகோலாக இருக்கிறது;

— சமூக உற்பத்தி, சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளும் திட்டமிட்ட முறையில் வளர்ச்சியடைகின்றன;

— உழைக்கும் மக்கள் அரசு மற்றும் சமூக விவகாரங்களை நிர்வகிப்பதில் பரந்த அளவில் பங்கெடுக்கிறார்கள்;

— ஒருங்கிணைந்த சமூக அமைப்பில் பகையியல் முரண்பாடுகள், சண்டைகளுக்கு இடமில்லை;

— சமூகத்தின் ஆன்மிக வாழ்க்கை விஞ்ஞான உலகக் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது;

— சமூக முன்னேற்றம் ஊக்குவிக்கப்படுகிறது; மக்களினங்களுக்கு மத்தியில் சமாதானமும் நட்புறவும் தொடர்ச்சியாக உறுதிப்படுத்தப்படுகின்றன.

இப்போது அம்சங்கள் ஒவ்வொரு கட்டத்திலும் தமக்கே உரிய குண ரீதியான தனித்தன்மைகளைக் கொண்டிருக்

கின்றன. அத்துடன், ஒவ்வொரு கட்டமும் தனக்கே உரிய தனியான அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

சோஷலிசத்தில் பின்வரும் குணாம்சங்களைக் காண முடியும்:

— சோஷலிச உடைமையின் இரண்டு ஆதார வடிவங்கள் சோஷலிசப் பொருளாதார அமைப்புக்கு அடிப்படையாக இருக்கின்றன: அரசு (பொதுமக்கள்) உடைமை மற்றும் கூட்டுபண்ணை-கூட்டுறவு உடைமை;

— சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுட்ப அடிப் படை உற்பத்திச் சக்திகளை மிகவும் உயர்ந்த அளவுக்கு வளர்க்க உதவுவதால் ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவரு டைய திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய உழைப்புக்கு ஏற்ப'' என்னும் சோஷலிச சமூகத்தின் அடிப் படையான கோட்பாட்டை நிறைவேற்ற முடிகிறது;

— சோஷலிசத்தின் கீழ் பண்ட உற்பத்தியும் பண உறவு களும் இன்னும் இருக்கின்றன;

— தொழிலாளி வர்க்கம், கூட்டுறவுமயமாக்கப்பட்ட விவ சாயிகள் என்னும் இரண்டு நேச வர்க்கங்களும் அறிவுப் பகுதி என்னும் சமூக அடுக்கும் இருக்கின்றன. இவர்களு டைய பிரிக்க முடியாத ஒற்றுமை சமூக அடிப்படையாக இருக்கிறது;

— சமூகத்தின் அரசியல் அமைப்பின் அடிப்படையான உறுப்புகள் பின்வருவன: அரசு, சமூகத்தின் வழிகாட்டு கின்ற, இயக்குகின்ற சக்தியான மார்க்சிய-லெனினியக் கட்சி, வெகுஜன ஸ்தாபனங்கள், உழைப்புக் கூட்டுகள்;

— மக்களுடைய சமூக உணர்வில் மார்க்சிய-லெனினிய சித்தாந்தம் மேலோங்கியிருத்தல், சோஷலிசக் கலாசாரம், மக்கள் கம்யூனிச நெறியில் பயிற்றுவிக்கப்படுதல், புதிய மனிதன் உருவாக்கம்;

— நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலும் அறிவு

உழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையிலும் முக்கிய மான வேறுபாடுகள் இன்னும் இருக்கின்றன;

— சோஷலிசம் இன்னும் முழுமையான சமூக சமத் துவத்தை ஏற்படுத்தவில்லை, குடும்பங்களுக்கு இடையில் உடைமை வேறுபாடு இன்னும் ஓரளவுக்கு இருக்கிறது;

— சமூகத்திலிருந்து முதலாளித்துவ எச்சங்கள் இன் னும் முழுமையாக ஒழிக்கப்படவில்லை, தனியுடைமை மனோபாவம் மக்களுடைய மனங்களிலிருந்தும் நடத் தையிலிருந்தும் முழுமையாக அகற்றப்படவில்லை.

கம்யூனிச சமூகத்தில் பின்வரும் குணாம்சங்களைக் காண முடியும்:

— கம்யூனிச உற்பத்தி முறையில் உற்பத்திச் சாதனங் களின் ஒற்றை உடைமை வடிவம், அதாவது பொதுமக்கள் உடைமை இருக்கும்;

— சமூகம் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியடைகின்ற பொழுது "ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய திற மைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப" என்னும் மகத்தான கோட்பாட்டை நிறைவேற்ற முடியும்;

— மக்கள் கம்யூனிச உழைப்பில் ஈடுபடுவார்கள், அவர் கள் கூலி பெற மாட்டார்கள்; அவர்கள் சமூகத்தின் முன் னேற்றத்துக்குப் பாடுபட வேண்டும், ஒவ்வொருவருடைய திறமையையும் அதிகமான அளவில் மக்களுக்குப் பயன் படுத்த வேண்டும் என்ற உணர்ச்சியினால் தூண்டப்படுவார் கள், உழைப்பு அவர்களுடைய ஜீவாதாரமான தேவை யாகும்;

— சமூகத்தில் வர்க்கங்கள் மறைந்து விடுவதனால் எல் லா உறுப்பினர்களுக்கு இடையிலும் முழுமையான சமூக சமத்துவம் இருக்கும்;

— மக்கள் சுயநிர்வாகம் என்பது சுதந்திரமான, சமூக

உணர்வுடைய உழைக்கும் மக்களை சமூகத்தின் எல்லா விவகாரங்களையும் நிர்வாகம் செய்வதில் ஈடுபடுத்துவதைக் குறிக்கும்;

— மக்கள் நலம் மற்றும் மக்களின் சர்வாம்ச, ஒத்திசைவான வளர்ச்சி கம்யூனிச சமூக வளர்ச்சியின் குறிக்கோளாக இருக்கும்.

ஆக, முழுமையான கம்யூனிச அமைப்பில் சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்கும் பொதுவான கூறுகள் மேலும் முதிர்ச்சி அடையும். அதே சமயத்தில் சோஷலிச சமூகத்துக்கு மட்டுமே உள்ளுறையான சில அம்சங்கள் கம்யூனிச சமூகத்தை நிர்மாணிக்கின்ற பொழுது இயற்கையாகவே மறைந்து விடும். முடிவில், அரசு மற்றும் கூட்டுறவு என்னும் இரண்டு உடைமை வடிவங்களுக்கு பதிலாக எல்லா மக்களுக்கும் சொந்தமான ஒற்றை உடைமை அமைக்கப்படும். பண்ட-பண உறவுகள் இனிமேல் இல்லை. சமூகத்தில் வர்க்கங்கள் இல்லை, நகரத்துக்கும் கிராமத்துக்கும், அறிவு உழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையில் முக்கியமான வேறுபாடுகள் மக்களிடையில் சமூக ஏற்றத்தாழ்வின் எச்சங்களுடன் மறைந்து விடும். மக்களுடைய சமூக உணர்வு, நடத்தை மற்றும் வாழ்க்கை முறையிலிருந்து கடந்த காலத்தின் தப்பெண்ணங்கள் முற்றிலும் மறைந்து விடும். கம்யூனிசம் சர்வதேச அளவில் வெற்றியடைகின்ற பொழுது அரசு உலர்ந்து உதிரும்.

கம்யூனிச சமூகத்தின் பொதுமைப்படுத்தப்பட்ட வர்ணனை கம்யூனிசத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினியப் போதனையின் இன்றைய நிலையைப் பிரதிபலிக்கிறது. அதன் அடிப்படையான கட்டங்கள் பின்வருவன: அ) கம்யூனிச சமூக அமைப்பு, அதன் வளர்ச்சியைப் பற்றிய மார்க்ஸ், எங்கெல்சின் போதனை நிறுவப்பட்டு வளர்ச்சியடைதல்; ஆ) லெனின் புதிய முடிவுகள், கருத்துகளின் மூலம்

இந்தப் பாரம்பரியத்தை வளர்த்து வளப்படுத்துதல்; இ) சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, மற்ற கம்யூனிஸ்ட் கட்சிகள், மொத்த கம்யூனிஸ்ட் இயக்கம் கம்யூனிச சமூக அமைப்பைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கருதுகோளுக்கு இன்று செய்துள்ள பங்களிப்பு. இதுதான் விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தின் குவிமுனை; ஏனென்றால் கம்யூனிசத்துக்கு மாறுதலே நம் காலத்தில் மனித சமூகத்தின் வளர்ச்சிப் பாதையாகும்.

**மனித சமூகத்தின் முன்னேற்றத்தின் விளைவு.** மனித குலத்தின் வரலாறு என்பது ஏறுமுக வளர்ச்சி என்பதை மார்க்ஸ், எங்கெல்ஸ் நிரூபித்தார்கள். வரலாற்று முன்னேற்றம் என்பது சமூகத்தின் முன்னேறுகின்ற இயக்கம்; பழமையிலிருந்து புதுமைக்கு, எளிமையிலிருந்து பல் தொகுதியானவற்றுக்கு, சமூக அமைப்பின் கீழ் வடிவங்களிலிருந்து உயர் வடிவங்களுக்கு குண ரீதியான மாற்றம்.

சமூக வரலாறு பரிபூரணமான, இலட்சிய நிலையில் முடிவுற முடியாது. “இதற்கு மாறாக, அடுத்தடுத்து வருகின்ற வரலாற்று அமைப்புகள் அனைத்தும் கீழ்நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு மனித சமூகத்தின் முடிவில்லாத வளர்ச்சிப் பாதையில் மாறும் கட்டங்களாக மட்டுமே இருக்கின்றன. ஒவ்வொரு கட்டமும் அவசியமானதே; ஆகவே அது தோன்றியிருக்கின்ற காலத்தையும் நிலைமைகளையும் பொறுத்தவரை நியாயமானதே. ஆனால் அதன் கருப்பையில் படிப்படியாக வளர்ச்சியடைகின்ற புதிய, உயர்ந்த நிலைமைகளுக்கு முன்னால் அது உறுதிப்பாட்டையும் நியாயத்தையும் இழந்து விடுகிறது. அது இன்

னும் உயர்ந்த கட்டத்துக்கு இடமளிக்க வேண்டும்; அதுவும் பின்னர் நலிவுற்று மறையும்.''*

மனித சமூகத்தின் ஏறுமுக வளர்ச்சி முன்னரே நிர்ணயிக்கப்பட்ட (தெய்விகத்) திட்டத்தின் அடிப்படையில் நடைபெறவில்லை; சமூக-பொருளாதார அமைப்புகள் மாறுவதைப் பற்றிய புறநிலையான விதிகளின் அடிப்படையில் நடைபெறுகிறது. உற்பத்திச் சக்திகள் வளர்ச்சி அடைகின்ற பொழுது, காலாவதியான உற்பத்தி உறவுகளுக்கு முரண்பட்ட பொழுது புதிய உற்பத்தி உறவுகள் வளர்ச்சி அடைகின்றன; சமூக-பொருளாதார அமைப்புகள் ஒன்று மற்றொன்றுக்கு பதிலாக ஏற்படுகின்றன. ஒவ்வொரு புதிய அமைப்பும் முந்திய அமைப்புடன் ஒப்பிடுகின்ற பொழுது சமூக வளர்ச்சியில் உயர்ந்த கட்டமாக இருக்கிறது. பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பு மனித சமூகத்தின் முற்போக்கான வளர்ச்சியில் முதல் கட்டமாக இருந்தது. அதன் பின்னர் அடிமை உடைமை அமைப்பு ஏற்பட்டது. நிலப்பிரபுத்துவம் அதை ஒழித்தது. அதன் பிறகு முதலாளித்துவம் வந்தது. கம்யூனிச சமூக-பொருளாதார அமைப்பு அடுத்த கட்டமாகும். கம்யூனிசம் சமூக-பொருளாதார அமைப்புகளின் மாற்றத்தின் வழியாக மனித சமூகத்தின் ஏறுமுக வளர்ச்சியின் விளைவாகும்.

கம்யூனிச சமூகம்தான் கடைசிச் சமூக-பொருளாதார அமைப்பு என்று வரலாற்றுப் பொருள்முதல்வாதம் சுட்டிக்காட்டுகிறது. இனிமேல் எல்லா வளர்ச்சியும் அதன் சுற்றுவட்டத்திற்குள் நடைபெறும். அது வளர்ச்சியின் ஒரு கட்டத்திலிருந்து மறு கட்டத்துக்கு முன்னேறும்; தன்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்,** தொகுதி 10, பக்கம் 208.

னுடைய அடிப்படையான அம்சங்கள், கொள்கைகள், விதிகளைப் பாதுகாத்துக் கொண்டு தன்னுடைய முடிவில்லாத முன்னேற்றத்தில் பரிபூரணத்துவத்தை மேன்மேலும் அடையும்.

கம்யூனிசம் சமூக முன்னேற்றத்தின் மிக உயர்ந்த ரகம். அது எல்லா மக்களின் நன்மைக்காக சமூகத்தின் எல்லையற்ற சுயபூரணத்துவத்துக்கு வழி ஏற்படுத்துகிறது.

# முடிவுரை

கம்யூனிசம் என்றால் என்ன? என்ற கேள்விக்குச் சரியான விடையைக் கண்டுபிடிக்கின்ற நமது முயற்சியில், பூமியில் இலட்சியவடிவான, நீதியான சமூகத்தைத் தேடி மனித குலத்தின் மாமேதைகள் கடந்து வந்த பாதைகளில் நாம் ஒரு சுருக்கமான வரலாற்றுப் பயணத்தை மேற்கொண்டோம். அடிமை முறையில் இத்தேடல், மறைந்து போன ''பொற்காலத்தைப்'' பற்றிய ஏக்கமாக, செல்வர்களும் ஏழைகளும் இல்லாத, ஒவ்வொரு மனிதனுக்கும் தன் வாழ்நாளில் உரிய மகிழ்ச்சியைத் தருகின்ற நியாயமான சமூக அமைப்பைப் பற்றிய தெளிவற்ற கனவாக இருந்தது. நிலப்பிரபுத்துவ சகாப்தத்தில் இத்தேடல் முரண் சமயக் கருத்துகளின் உடைகளை அணிந்திருந்தது. சில சமயங்களில் இக்கருத்துகள், பண்ணை அடிமை முறைக்கு எதிராக விவசாயி வர்க்கம் புரட்சிகரமாகக் கிளர்ந்தெழ வேண்டுமென்னும் சித்தாந்த அறைகூவலாயின. நுகர்வோர் கம்யூனிச ரகத்தைச் சேர்ந்த பல்வேறு மத சமூகங்களை நிறுவுவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. அடிமை முறை மற்றும் நிலப்பிரபுத்துவத்தின் போது நீதியான சமூக அமைப்பைப் பற்றி எண்ணற்ற கருதுகோள்கள் தோன்றின.

அவை எவ்வளவு வெகுளித்தனமாக, விசித்திரப் புனை வாக, வீண் முயற்சியாக இருந்தாலும் ஒடுக்கப்பட்டு சுரண் டப்பட்ட அடிமைகள், பண்ணையடிமைகளின் பரிதாபகர மான வாழ்க்கை நிலைமைகளுக்கு எதிரான மறுப்பாக இருந்தபடியால் தமக்கே உரிய பங்களிப்பைச் செய்தன.

முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த பொழுது நீதியான சமூக அமைப்பைப் பற்றிய இலட்சியம் கம்யூனிச மற்றும் சோஷலிசக் கற்பனைத் தத்துவங்களின் இயல்பை அடைந் தது. மூலதன ஆதித்திரட்சிச் சகாப்தத்தில், எல்லோருக் கும் மகிழ்ச்சி, நல்வாழ்க்கையைத் தரக் கூடிய இலட்சிய சமூகங்களைப் பற்றிய விசித்திரப் புனைவான, நுணுக்க மான வர்ணனைகளின் வடிவத்தில் தோன்றிய 18ஆம் நூற்றாண்டின் கம்யூனிசக் கருத்துகள் ஏற்கெனவே பல் வேறு தத்துவங்களாக வளர்ச்சியடைந்திருந்தன. உண் மையில், கம்யூன் அமைப்பை (கம்யூனிசத்தை) ஏற் படுத்துவது இயற்கையானது என்பதை அவை தர்க்க ரீதி யாகவும் மனித வாழ்க்கையைப் பற்றிய வரலாற்று கருத்த மைப்புகளின் அடிப்படையிலும் நிரூபிக்க முயன்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் முப்ப தாண்டுகளில் சான்-சிமோன், ஃபூரியே, ஓவனுடைய நூல் களில் கற்பனாவாத சோஷலிசம் அதன் சிகரத்தை எட்டி யது. இந்த மாபெரும் கற்பனாவாதிகள் முதலாளித்து வத்தை நுணுக்கமான முறையில் விமர்சனம் செய்தார்கள், எதிர்கால கம்யூனிச சமூகத்தின் பல கூறுகளை மேதாவி லாசத்துடன் முன்னறிவித்தார்கள். ஆனால் அவர்களு டைய தத்துவங்கள் விஞ்ஞான ரீதியாக இருக்கவில்லை, அப்படியே இருக்க முடியாது, ஏனென்றால் சமூக வளர்ச்சி யின் விதிகள், முதலாளித்துவத்தின் பொருளாதார விதி கள், வர்க்கப் போராட்டத்தை ஆள்கின்ற விதிகள் அப் பொழுது கண்டுபிடிக்கப்படவில்லை. மார்க்சியத்தின் முன்

னோடிகள் வரலாறு மற்றும் மனிதனுடைய சமூக இயல்பைப் பற்றி கருத்துமுதல்வாத நோக்கைக் கொண்டிருந்தார்கள். அந்த மாபெரும் கற்பனாவாதிகளால் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் மனிதகுலத்தின் சார்பில் பேசினார்கள், சூக்குமமான மனிதனுடைய சூக்குமமான இயல்புக்கு வேண்டுகோள் விடுத்தார்கள், மக்களின் வர்க்க இயல்பு எப்படியிருந்தாலும் அவர்களுடைய தார்மிகப் பண்பில் சோஷலிசத்துக்குப் பாதையைத் தேடினார்கள். அதே சமயத்தில் நூற்றாண்டுப் பழமையான கம்யூனிச மற்றும் சோஷலிசச் சிந்தனையின் பாரம்பரியம் விஞ்ஞான கம்யூனிசத்தைப் படைப்பதற்கு ஆன்மிக அடிப்படையாக இருந்தது; சான்-சிமோன், ஃபூரியே, ஓவனுடைய விமர்சனக் கற்பனாவாத சோஷலிசம் அதற்கு நேரடியான தத்துவத் தோற்றுவாயாக இருந்தது.

மார்க்சும் எங்கெல்சும் சோஷலிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானமாக மாற்றினார்கள், அவர்கள் விஞ்ஞான கம்யூனிசத்தைப் படைத்தார்கள். லெனின் புதிய வரலாற்று நிலைமைகளில் அவர்களுடைய சிறப்புமிக்க போதனையை வளர்த்து வளப்படுத்தினார்.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் பாட்டாளி வர்க்க சோஷலிசத்தைப் படைத்தார்கள், முதலாளித்துவத்துக்கு சாவுக் குழி தோண்டுவோன் மற்றும் சோஷலிசத்தின் படைப்பாளி என்ற முறையில் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையை வெளிப்படுத்தினார்கள். விஞ்ஞான கம்யூனிசம் அதன் வர்க்கத் தன்மையினால் புரட்சிகரத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தத்துவமாக, முதலாளித்துவத்தை எதிர்த்தும் சோஷலிசத்தை ஆதரித்தும் பாட்டாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்டத் தத்துவமாக இருக்கிறது. இத்தத்துவம் பாட்டாளி வர்க்கத்துக்கு சித்தாந்த ஆயுதத்

தைக் கொடுக்கிறது, கம்யூனிசத் தத்துவம் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தில் பொருளாயத சக்தியாக இருக்கிறது. விஞ்ஞான கம்யூனிசத்தின் பாட்டாளி வர்க்கத் தன்மை, தன்னியல்பான தொழிலாளி வர்க்க இயக்கத்தை விஞ்ஞான சோஷலிசத்துடன் இணைத்த கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாக்கத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினுடைய சோஷலிசம் விஞ்ஞான மற்றும் பாட்டாளி வர்க்க இயல்பைக் கொண்டிருந்தது மட்டுமின்றி அரசியல் இயல்பையும் கொண்டிருந்தது. வர்க்கப் போராட்டத்தின் மூலமாகவே சோஷலிசத்தை அடைய முடியும்; பொருளாதார, அரசியல், சித்தாந்த வடிவங்களில் இப்போராட்டம் நடைபெறுகிறது என்பதை மார்க்சிய-லெனினியத்தின் மூலவர்கள் நிரூபித்தார்கள். இம்மூன்றில் அரசியல் போராட்டம் தலைமையானது, ஏனென்றால் அதில் மற்றும் அதன் மூலமாகவே வர்க்கப் போராட்டத்தின் தலைமையான பிரச்சினையை, அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையைத் தீர்க்க முடியும். வர்க்கப் போராட்டத்தின் சிகரம் என்ற முறையில் சோஷலிசப் புரட்சி, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் புரட்சிகரமான மாற்றத்தின் தொடக்க நிலையாக இருக்கிறது.

ருஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி கம்யூனிசத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தை அமுலாக்குவதன் தொடக்கத்தைக் குறித்தது. விஞ்ஞான கம்யூனிசக் கொள்கைகளை அமுலாக்கிய மனிதகுலத்தின் முதல் சோஷலிச சமூகம் சோவியத் யூனியனில் நிர்மாணிக்கப்பட்டது. பிறகு, இன்னும் சில நாடுகளிலும் சோஷலிசம் வெற்றி பெற்றது. இன்று மனிதகுலத்தின் மூன்றிலொரு பகுதியை உள்ளடக்கிய உலக சோஷலிச அமைப்பு இருக்கிறது.



19—1184

வரலாறு பலவிதமான சோஷலிச, கம்யூனிசப் போதனைகளைக் கண்டுள்ளது. இவற்றில் கம்யூனிசத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவம் மட்டுமே எதார்த்தமானது. அதன் விஞ்ஞான மற்றும் பாட்டாளி வர்க்கத் தன்மைதான் இதை சாத்தியமாக்கிறது.

சோஷலிச, கம்யூனிச செயல்திட்டங்களைப் பிரகடனம் செய்த அரசியல் கட்சிகளில் விஞ்ஞானக் கம்யூனிசக் கொள்கைகளைப் பின்பற்றிய மார்க்சிய-லெனினியக் கட்சிகளால் மட்டுமே பல சோஷலிசப் புரட்சிகளுக்கு வெற்றிகரமாகத் தலைமை தாங்க முடிந்தது. அதன் விளைவாக சோஷலிச சமூகங்கள் படைக்கப்பட்டன; முதலில் குறிப்பிட்ட சில நாடுகளிலும் பிறகு உலகம் முழுவதிலும் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதற்குரிய தொலைக்காட்சிகள் தோன்றின.

பழைய உலகத்தின் எல்லாச் சக்திகளுக்கும் எதிரான புரட்சிகர, வர்க்கச் சண்டைகளில் சோஷலிச உலகம் பிறந்தது. சோஷலிசத்தை நிர்மாணித்தவர்கள் கடக்க முடியாத தடைகளைக் கடந்தார்கள், அவர்கள் வெற்றியின் ஆனந்தத்தையும் தோல்வியின், தற்காலிகமான முறியடிப்புகளின் துயரத்தையும் அனுபவித்தார்கள். புதிய சமூகத்தின் படைப்பாளிகள் அவசியம் ஏற்பட்ட பொழுது துன்பங்களையும் தியாகங்களையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் தவறு செய்ததுண்டு. தனியுடைமை, சுரண்டல், தேசிய மற்றும் சமூக ஒடுக்குமுறையின் பல்வேறு வடிவங்களை அடிப்படையாகக் கொண்ட கடந்த நூற்றாண்டுகளின் நாகரிகத்திலிருந்து அடிப்படையில் வேறுபட்டிருக்கின்ற புதிய சமூக அமைப்பை அவர்கள் படைத்தார்கள் என்பதை நாம் நினைவில் கொண்டால் அது ஆச்சரியப்படக் கூடியதல்ல.

எதார்த்த சோஷலிசத்தின் வரலாற்றனுபவம் கம்யூனிச சமூக-பொருளாதார அமைப்பின் கட்டங்களைப் பற்றி மார்க்சிய-லெனினிய முன்னறிவிப்பை முழுமையாக நிரூபிக்கிறது.

# சொற்றொடர் விளக்கம்

**அரசு**—வர்க்க சமூகத்தில் அரசியல் அதிகாரத்தின் அமைப்பு முறை.

**சோஷலிச அரசு**—சோஷலிசப் புரட்சியின் விளைவாக தொழிலாளி வர்க்கத்தின் அரசாகத் தோன்றுகிறது; தூக்கி யெறியப்பட்ட சுரண்டல்காரர்கள் மீது தொழிலாளி வர்க்க ஆதிக்கத்தின் அரசியல் அமைப்பு; சோஷலிசத்தை நிர் மாணிப்பதற்கும் அதன் சாதனைகளைப் பாதுகாப்பதற்கும் ஒரு சாதனம். சோஷலிசம் முழுமையாகவும் முடிவாகவும் வெற்றியடைகின்ற பொழுது பாட்டாளி வர்க்க அரசு பொது மக்கள் சோஷலிச அரசாக மாறும்.

**பொதுமக்கள் அரசு**—சோஷலிச அரசின் ஒரு வடிவம்; தொழிலாளி வர்க்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் அனைத்து மக்களின் அரசியல் ஸ்தாபனம். சோஷலிசம் முழுமையாக வும் முடிவாகவும் வெற்றி பெற்ற பின்னர் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு அனைத்து மக்களின் அரசாக மாறுகிறது. சோவியத் யூனியன் அனைத்து மக்களின் சோஷலிச அரசு; நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுப் பகுதி யினர், எல்லா தேசிய இனங்கள் மற்றும் மக்களினங்களின்,

உழைக்கும் மக்களின் சித்தம் மற்றும் நலன்களை வெளியிடுகிறது என்று சோவியத் யூனியன் அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.

**முதலாளித்துவ அரசு**—முதலாளிகளுடைய அரசியல் ஆதிக்கத்தின் கருவி; முதலாளித்துவப் பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தை வலுப்படுத்துகின்ற நோக்கத்துடன் வர்க்க எதிரிகளை—முதலில் பாட்டாளி வர்க்கத்தை—நசுக்குவதற்கு உபயோகிக்கப்படுகிறது.

**அவசியமான உழைப்பு**—பொருளாயத உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அவசியமான உற்பத்திப் பொருளைப் படைப்பதற்குச் செலவிடுகின்ற உழைப்பு.

**அவசியமான உற்பத்திப் பொருள்**—பொருளாயத உற்பத்தித் துறையைச் சேர்ந்தவர்களால் புதிதாக உற்பத்தி செய்யப்படுகின்ற மதிப்பின் ஒரு பகுதி; நிலவுகின்ற சமூக-பொருளாதார நிலைமைகளைப் பொறுத்து உழைப்புச் சக்தியின் சகஜமான புனருற்பத்திக்கு அவசியமானது.

**இயற்கையான சட்டம்**—சமூக நிலைமைகளிலிருந்து சுதந்திரமான முறையில் இருப்பதாக, மனிதனுடைய இயல்பிலிருந்து பெறப்படுவதாகச் சொல்லப்படுகின்ற கோட்பாடுகள், உரிமைகளின் மொத்தத்தைக் குறிக்கின்ற அரசியல் மற்றும் சட்டவியல் கருதுகோள். இயற்கையான சட்டக் கருத்துகள் பண்டைக்கால உலகில் (கிரீஸ், ரோம்) முன்வைக்கப்பட்டன. 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து முதலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்தில் இக்கருதுகோள் சித்தாந்த சாதனமாகப் பயன்படுத்தப்பட்டது.

**உபரி உழைப்பு**—பொருளாயத உற்பத்தித் துறையைச்

சேர்ந்தவர்கள் உபரிப் பொருளை உற்பத்தி செய்வதற்குச் செலவிடும் உழைப்பு.

**உபரி உற்பத்திப் பொருள்**—பொருளாயத உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் பராமரிப்பதற்கும் புதிய ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கும் பயன்படுகின்ற அவசியமான உற்பத்திப் பொருளுடன் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த சமூக உற்பத்திப் பொருளின் பகுதி; சுரண்டல் முறை நிலவுகின்ற சமூக அமைப்புகளில் உபரி உற்பத்திப் பொருள் சுரண்டல்காரர்களால் மொத்தமாக சுவீகரிக்கப்படுகிறது, ஆனால் சோஷலிச அமைப்பில் அது உழைக்கும் மக்களுடைய சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுகிறது.

**உற்பத்தி உறவுகள்**—பொருளாயத செல்வத்தின் உற்பத்தி, பரிவர்த்தனை மற்றும் வினியோக நிகழ்வுப் போக்கின் போது மக்களிடையே நிலவுகின்ற உறவுகள். உற்பத்தி உறவுகளின் தன்மை உற்பத்திச் சாதனங்களின் பால் மக்களுக்கு உள்ள உறவைப் பொறுத்தது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டத்துக்கும் தன்மைக்கும் ஏற்ப உற்பத்தி உறவுகள் உருவாகி வளர்ச்சி அடைகின்றன.

**உற்பத்திச் சக்திகள்**—உற்பத்திச் சாதனங்கள், அவற்றைப் பயன்படுத்துகின்ற மக்கள். உழைக்கும் மக்கள் உற்பத்திச் சக்திகளில் மிகவும் முக்கியமான பகுதியாக இருக்கிறார்கள். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் ஒவ்வொரு கட்டமும் அதற்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளைக் கொண்டிருக்கிறது.

**உற்பத்தி முறை**—பொருளாயத மதிப்புகளை உற்பத்தி செய்வதற்கு வரலாற்று ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட முறை;

உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகளின் ஒருமை; சமூக-பொருளாதார அமைப்பின் அடிப்படை. வரலாற்று வளர்ச்சியில் பூர்விகக் கூட்டு வாழ்க்கை, அடிமை உடைமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ, கம்யூனிச உற்பத்தி முறைகள் அடுத்தடுத்து ஏற்படுகின்றன.

**கம்யூனிச மக்கள் சுயநிர்வாகம்**—கம்யூனிசத்தின் கீழ் சமூக அமைப்புக் கோட்பாடு; குடிமக்கள் தமது கடமைகளை விருப்பபூர்வமாக நிறைவேற்றுவதையும் சமூக விவகாரங்களில் சுறுசுறுப்பாகப் பங்கெடுப்பதையும் அடிப்படையாகக் கொண்டு சமூக விவகாரங்களை நிர்வகிக்கின்ற முறை; வர்க்கங்கள் இல்லாத சமூகத்தில் அரசு உலர்ந்து உதிர்கின்ற பொழுது அதனிடத்தில் ஏற்படுகின்ற முறை.

**கம்யூனிசம்**—முதலாளித்துவத்துக்குப் பிறகு ஏற்படுகின்ற சமூக-பொருளாதார அமைப்பு, உற்பத்திச் சாதனங்களின் பொது உடைமையை அடிப்படையாகக் கொண்டது; குறுகிய பொருளில், கம்யூனிச அமைப்பின் வளர்ச்சியில் இரண்டாவது, (சோஷலிசத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது) உயர்ந்த கட்டம். கம்யூனிசத்தின் பொருளாயத-தொழில் நுட்ப அடிப்படை அபரிமிதமான பொருளாயத, ஆன்மிக மதிப்புகளைப் படைக்கிறது; உற்பத்தியின் திட்டமிட்ட இயல்பும் உழைப்பின் உற்பத்தித் திறனும் உச்ச அளவை அடையும்; உழைப்புக்குத் தகுந்த வினியோகத்துக்கு பதிலாக தேவைக்கு ஏற்ற வினியோகம் ஏற்படும்; ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப'' என்னும் கம்யூனிசத்தின் அடிப்படைக் கோட்பாடு அமுலாக்கப்படும். மக்களின் முழுமையான சமூக சமத்துவத்துடன் வர்க்கங்கள் முற்றாக ஒழிந்து விடும்.

**கற்பனாவாத சோஷலிசம்**—பொது உடைமை, கட்டாய உழைப்பு, நீதியான வினியோகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இலட்சிய சமூகத்தைப் பற்றிய போதனை; சோஷலிசத்தைக் கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானமாக மாற்றுகின்ற விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலத் தோற்றுவாய்களில் ஒன்று.

**கூட்டு சமூகம்**—மக்கள் ஒன்றுகூடும் வடிவம், பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பின் குணாம்சமாகும். கூட்டு சமூகத்தில் உற்பத்திச் சாதனங்கள் பொது உடைமையாக இருக்கின்றன; எல்லா விவகாரங்களும் முழுமையான அல்லது பகுதியளவு சுயநிர்வாக முறையில் நிர்வகிக்கப்படுகின்றன.

**சமூக உழைப்பு**—சமூக உழைப்புப் பிரிவினையினால் இணைக்கப்பட்டுள்ள மக்களின் நடவடிக்கை. பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பில் சமூக உழைப்பு அதன் நேரடியான வடிவத்தில் (கூட்டு சமூகத்தின் சுற்றுவட்டத்துக்குள் கூட்டான உழைப்பு) நிலவுகிறது. தனியுடைமையை அடிப்படையாகக் கொண்ட பண்ட உற்பத்தி நிலைமைகளில் அது தனிப்பட்ட உழைப்பின் வடிவத்தை அடைகிறது, அதன் சமூக இயல்பு பண்டப் பரிவர்த்தனையின் மூலம் மறைமுகமாக வெளிப்படுகிறது. சோஷலிச அமைப்பில் அது நேரடியான சமூக உழைப்பாக இருக்கிறது, தேசிய அளவில் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

**சமூக உறவுகள்**—பொருளாதார, சமூக, அரசியல், கலாசார நடவடிக்கைகளின் போது சமூகக் குழுக்கள், வர்க்கங்கள், தேசிய இனங்களுக்கு மத்தியில், அவற்றுக்கு இடையில் ஏற்படுகின்ற பன்முக உறவுகள். சோஷலிசம், புதிய ரகத்தைச் சேர்ந்த, பகையியல் இல்லாத சமூக உறவுகளை

நிறுவுகிறது, அவை உணர்வுபூர்வமாக, திட்டமிட்ட அடிப்படையில் வளர்க்கப்படுகின்றன.

**சமூக நுகர்வு நிதிகள்**—உழைப்புக்கு ஊதியங்களைத் தவிர சோஷலிச அரசு மக்களுக்கு இலவசமாக அளிக்கின்ற வசதிகள் அல்லது சலுகைகள் (இலவசக் கல்வி, மருத்துவப் பராமரிப்பு, வயோதிகர்களின் ஓய்வூதியங்கள், உதவித் தொகைகள், ஆண்டு விடுமுறை வழங்கீடுகள், மழலையர்களைப் பராமரிப்பு நிலையங்களில் வைத்திருத்தல், இதரவை).

**சமூக-பொருளாதார அமைப்பு**—வரலாற்று வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் உள்ள சமூகம்; வரலாற்று ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட சமூகத்தின் ஒரு ரகம். ஒவ்வொரு அமைப்பும் குறிப்பிட்ட உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது, அதன் உற்பத்தி உறவுகள் அதன் சாரமாக இருக்கின்றன. பூர்விகக் கூட்டு வாழ்க்கை, அடிமை உடைமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ, கம்யூனிச என்னும் ஐந்து சமூக-பொருளாதார அமைப்புகள் வரலாற்றில் வரிசைக்கிரமமாக ஏற்பட்டுள்ளன.

**சமூகம்**—மக்களுடைய கூட்டு நடவடிக்கைகளின் வரலாற்று வடிவங்களின் மொத்தம்; சமூக அமைப்பின் குறிப்பிட்ட வரலாற்று ரகம் (உதாரணமாக, முதலாளித்துவ சமூகம்) அல்லது சமூக உறவுகளின் குறிப்பிட்ட வடிவம். சமூகத்தைப் பற்றிய மெய்யான விஞ்ஞானத் தத்துவம் மார்க்சிய-லெனினிய மூலவர்களால் உருவாக்கப்பட்டது.

**சேமிப்பு நிதி**—சோஷலிச நாடுகளில், உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கென்று தனியாக ஒதுக்கப்படுகின்ற தேசிய வருமானத்தின் ஒரு பகுதி.

**சோஷலிசம்**—கம்யூனிசத்தின் முதல் அல்லது கீழ்க் கட்டம். உற்பத்திச் சாதனங்களின் சோஷலிச உடைமை அதன் பொருளாதார அடிப்படை. சோஷலிசம் தனியுடைமை, மனிதனை மனிதன் சுரண்டல், பொருளாதார நெருக்கடிகள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை ஒழித்து உற்பத்திச் சக்திகளின் சமநிலையான வளர்ச்சிக்கும் உற்பத்தி உறவுகளை முழுநிறைவாக்குவதற்கும் பரந்த வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. மக்களின் நல் வாழ்க்கையை அபிவிருத்தி செய்வதும் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினருடைய சர்வாம்ச வளர்ச்சியை ஊக்குவிப்பதும் சோஷலிச அமைப்பில் சமூக உற்பத்தியின் நோக்கமாகும். ‘‘ஒவ்வொருவரிடமும் அவருடைய திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய உழைப்புக்கு ஏற்ப’’ என்பது சோஷலிசத்தின் அடிப்படைக் கோட்பாடு ஆகும்.

**தந்தையுரிமை**—குலம் மற்றும் குடும்பத்தில் தகப்பனார் தலைமை அதிகாரத்தைக் கொண்டிருக்கின்ற குலமரபு அமைப்பின் ஒரு கட்டம்; அதில் மனைவியரும் குழந்தைகளும் சட்ட ரீதியில் அவரைச் சார்ந்திருக்கிறார்கள், மரபுரிமையும் சொத்துரிமையும் ஆண்வழியில் கணக்கிடப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு, விவசாயம், உலோகத் தொழில் வளர்ச்சியடைந்ததன் விளைவாகத் தந்தையுரிமை தோன்றியது. அது பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பு தகர்ந்த காலகட்டம் ஆகும்.

**தாயுரிமை**—பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பின் ஆரம்பக் கட்டம்; பெண்கள் பொருளாதாரம், சமூகம் மற்றும் குடும்பத்தில் தலைமையான நிலையைப் பெற்றிருந்த காலகட்டம். மரபும் சொத்துரிமையும் பெண்வழியாக மட்

டுமே அங்கீகரிக்கப்பட்டது. புதுக் கற்காலத்தில் தாயுரிமை அதன் உச்ச வளர்ச்சியை அடைந்தது.

**தேசிய வருமானம்**—பொருளாயத உற்பத்தித் துறையில் ஒரு ஆண்டில் புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பு அல்லது அதனுடன் பொருந்துகின்ற, இயற்கை வடிவிலான மொத்த சமூக உற்பத்திப் பொருளின் ஒரு பகுதி (உற்பத்திக்கு ஆன எல்லாச் செலவுகளை நீக்கி பாக்கி). இயற்கை ரீதியில் தேசிய வருமானத்தில் உற்பத்திச் சாதனங்களும், நுகர்வுப் பொருட்களும் அடங்கும். தேசிய வருமானம் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பொதுமைப்படுத்துகின்ற குறியீடாகும். சோஷலிச அமைப்பில் தேசிய வருமானம் பொதுமக்களுக்குச் சொந்தமாக இருக்கிறது, சமூக நலன்களுக்குத் திட்டமிட்ட முறையில் உபயோகிக்கப்படுகிறது. அது சேமிப்பு நிதி, நுகர்வு நிதி என்று பிரிக்கப்படும்.

**நுகர்வு நிதி**—சோஷலிச நாடுகளில் உழைக்கும் மக்களின் சமூக மற்றும் தனிநபர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற தேசிய வருமானத்தின் ஒரு பகுதி.

**பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்**—சோஷலிசப் புரட்சியின் போது நிறுவப்படுகின்ற தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரம்; சமூகத்தைப் புரட்சிகரமான முறையில் புனரமைத்தல், முதலாளித்துவத்தை ஒழித்தல், சோஷலிசத்தை நிர்மாணித்தல் ஆகியவை அதன் இறுதி நோக்கங்கள் ஆகும்.

**பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்பு**—மனித சமூகத்தின் வரலாற்றில் தோன்றிய முதல் சமூக-பொருளாதார அமைப்பு. மனிதர்களின் தோற்றத்திலிருந்து வர்க்க சமூ

கத்தின் தோற்றம் வரையிலான காலகட்டத்தில் நிலவியது. உற்பத்திச் சாதனங்கள் பொது உடைமையாக வைக்கப்பட்டிருத்தல், கூட்டு உழைப்பு மற்றும் கூட்டு நுகர்வு இந்த அமைப்பின் குணாம்சங்கள். இவை உற்பத்திச் சக்திகளின் தாழ்வான வளர்ச்சி நிலையின் விளைவு ஆகும்.

**பொற்காலம்**—பண்டைக்கால மக்களினங்கள் மத்தியில் நிலவிய கட்டுக்கதை; மனித சமூகத்தின் ஆதிக் கட்டத்தில் மக்கள் பிணியின்றி, மூப்பின்றி தேவர்களைப் போல வாழ்ந்தனர், மரணம் ஒரு இனிமையான கனவாக வந்தது என்று சொல்லப்பட்டது.

**மார்க்சிய-லெனினியம்**—மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினுடைய புரட்சிகரமான போதனை, தொழிலாளி வர்க்கத்தின் உலகக் கண்ணோட்டத்தை எடுத்துரைக்கின்ற தத்துவ ஞான, பொருளாதார, சமூக-அரசியல் கருத்துகளின் ஒருங்கிணைந்த, விஞ்ஞான ரீதியான அமைப்பு; உலகத்தை அறிதல், புரட்சிகரமாக மாற்றியமைத்தலைப் பற்றிய, சமூகம், இயற்கை மற்றும் மனித சிந்தனையின் வளர்ச்சியை ஆள்கின்ற விதிகளைப் பற்றிய விஞ்ஞானம்.

**மூலதனத்தின் ஆதித்திரட்சி**—நேரடி உற்பத்தியாளர்களில் பெரும்பான்மையினர் (குறிப்பாக விவசாயிகள்) உற்பத்திச் சாதனங்களிலிருந்து பிரிக்கப்பட்டு கூலித் தொழிலாளர்களாக மாற்றப்பட்ட வரலாற்று நிகழ்வுப் போக்கு; அதே சமயத்தில் உற்பத்திச் சாதனங்களும் பணக் குவியல்களும் மூலதனமாக மாற்றப்பட்டன; முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு முந்தியது, அதன் தோற்றத்தைத் துரிதப்படுத்தியது. மூலதனத்தின் ஆதித்திரட்சியின் விளைவாக முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் என்னும் வர்க்கங்கள் தோன்றின.

**மொத்த சமூக உற்பத்திப் பொருள்**—குறிப்பிட்ட கால அளவில் (வழக்கமாக ஒரு ஆண்டில்) சமூகத்தினால் படைக்கப்பட்ட பொருளாயத மதிப்புகளின் மொத்தம். அதன் இயற்கையான வடிவத்தில், உற்பத்தி செய்யப் பட்ட உற்பத்திச் சாதனங்களும் நுகர்வுப் பொருட் களும் அடங்கும். அதன் பணவியல் வெளியீடு பொருளா யதச் செலவின் மதிப்பு (இது ஈடுசெய்யப்படும்) என்றும் புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பு (சமூகம் இதை மக்களின் நுகர்வுக்கும் விரிவடைந்த புனருற்பத் திக்கும் ஒதுக்குகிறது) என்றும் பிரிக்கப்படுகிறது.

**லும்பன் பாட்டாளி வர்க்கம்**—பகையியல் முரண்பாட்டு சமூகத்தில் வர்க்கத்திலிருந்து கீழே இறங்கிய அடுக்குகள் (ஊர்சுற்றிகள், பிச்சைக்காரர்கள், குற்றவாளித்தனமான சக்திகள், இதரர்கள்). முதலாளித்துவ சமூகத்தில் அவர்கள் அதிகமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள்; பல வர்க்கங் களைச் சேர்ந்தவர்கள் கலந்திருப்பதால் அமைப்பு ரீதியான அரசியல் போராட்டத்தை நடத்துவதற்கு சக்தியில்லாதவர் கள்.

**விஞ்ஞான கம்யூனிசம்**—மார்க்சிய-லெனினியத்தின் மூன்று உட்பகுதிகளில் ஒன்று. பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம், சோஷலிசப் புரட்சி, சோஷலிச, கம்யூ னிச நிர்மாணத்தின் சமூக-அரசியல் விதிகள், மொத்தத் தில் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கைப் பற்றிய விஞ் ஞானம்.

**ஜனநாயகம்**—குடிமக்களின் ஆட்சியதிகாரம், சுதந் திரம், சமத்துவம் ஆகிய கோட்பாடுகளை அங்கீகரிக்கின்ற சமூகத்தின் அரசியல் அமைப்பின் வடிவம்; ஜனநாயகம் வர்க்க இயல்பைக் கொண்டிருக்கிறது.

**சோஷலிச ஜனநாயகம்**—அரசியல் ஜனநாயகத்தின் உயர்ந்த ரகம்; குடிமக்களுக்கு உண்மையான அரசியல் உரிமைகள், சுதந்திரம், சமத்துவமான உரிமைகள், கடமைகளை உத்தரவாதம் செய்கிறது, மக்களின் சோஷலிச சுயநிர்வாகத்தை அமைக்கிறது; அரசு மற்றும் சமூக விவகாரங்களை நிர்வகிப்பதில் எல்லா உழைக்கும் மக்களும் பங்கெடுப்பதைத் தூண்டுகிறது. சோஷலிச ஜனநாயகம் எல்லா அம்சங்களிலும் பூரணத்துவம் பெறுவதன் விளைவாக கம்யூனிசத்தில் அரசின் இடத்தில் கம்யூனிச சுயநிர்வாகம் ஏற்படும்.

**முதலாளித்துவ ஜனநாயகம்**—முதலாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்தின் வடிவம்; சுரண்டுகின்ற சிறுபான்மையினருடைய ஜனநாயகம்; முதலாளிகளுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற கருவியாகப் பயன்படுகிறது.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**விற்பனையாளர்கள்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098

**ஷோ-ரூம்**

136, அண்ணாசாலை, சென்னை—600002

**கிளைகள்**

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

**விற்பனை நிலையங்கள்**

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்—627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001

நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001